# வரலாறு



இடைமலைப்பட்டிப் புதூர் நினைவுக் கல்

*With best compliments from :*

**GEM LABORATORY**

**&**

**GENERAL LABS**

STOCKIST

**M/s. SASTHA PHARMA**

1, ELEVENTH CROSS,
WESTERN EXTENSION,
**Thillainagar, TIRUCHIRAPALLI - 620 018.**

# வரலாறு

இதழ் 2

அரையாண்டு
ஆய்விதழ்

பிப்ருவரி 1994

வெளியிடுவோர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம்
48, புத்தூர் நெடுஞ்சாலை, திருச்சிராப்பள்ளி - 620 017.

*"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்."*


<u>இதழ் உருவாக்கம்</u>

இரா. கலைக்கோவன்
பொறுப்பாசிரியர்

மு. நளினி
அர. அகிலா
உதவி ஆசிரியர்கள்

இரா. கண்ணையன்
மேலாளர்


*"பெரிதினும் பெரிது கேள்"*

# எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும்

வரலாறு இரண்டாம் இதழை உரிய காலத்தில் உங்கள் கைகளில் தவழவிட முடிந்தமைக்காக மகிழ்கிறோம். வரலாறு இதழுக்கு எழுதும், எழுத விரும்பும் அன்பர்களுக்கு ஓர் அன்பு வேண்டுகோள். புதிய தரவுகளைத் தாருங்கள். ஆய்வுகளும் புதிய கோணத்தில் புதிய பார்வைகளோடு இருந்தால் நல்லது. இந்த இதழில் வெளியாகி யிருக்கும் நான்கு கட்டுரைகளும் கள ஆய்வுகளின், இலக்கியங்களின் இன்றியமையாமையை உணர்த்துமாறு அமைந்துள்ளன. இது போன்ற கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

தமிழகக் கோயிற் கட்டடக்கலை பற்றித் தொடர் ஆய்வுக் கட்டுரையொன்று அடுத்த இதழில் தொடங்குகின்றது. இதற்கான அடித்தளப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மையத்தின் கட்டடக் கலை ஆய்வாளர் அர. அகிலா, வரலாற்றின் வாழ்நாள் உறுப்பினர் ஸ்தபதி வே. இராமன் இருவரும் இத்தொடரை அனைவர்க்கும் பயனுள்ள முறையில் அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அதுபோலவே கல்வெட்டு படிக்க விரும்புவோர்க்கு அப்பணியை எளி தாக்கும் வழியாகத் தமிழகக் கல்வெட்டுகள் பற்றிய தொடரொன்றும் அடுத்த இதழில் தொடங்குகின்றது. உதவி ஆசிரியரும் மையத்தின் கல்வெட்டாய்வருமான மு. நளினி இப்பொறுப்பை ஏற்றுள்ளார்.

கோயில்களைப் பற்றியும் தமிழக வரலாற்றைப் பற்றியும் ஆர்வ முள்ள அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமே அவை தொடர்பான தகவல்களை எவ்வளவு எளிமைப்படுத்த முடியுமோ அவ்வளவு எளிமைப்படுத்தித் தரும் முயற்சிகளில் எங்களை ஈடுபடுத்தி யுள்ளது. இதனால், தகவல்களின் தரம் சற்றும் குறைந்துவிடாமல் பார்த்துக்கொள்வதிலும் கவனமாக இருக்கிறோம். சென்ற இதழுக்குக் கிடைத்திருக்கும் பரவலான வரவேற்பு எங்கள் நம்பிக்கையை வளர்த் துள்ளது. அந்த வரவேற்பில் இரண்டு துளிகளை அன்புள்ள உங்களுக் குப் பகுதியில் பார்க்கலாம்.

தமிழகமெங்குமுள்ள வரலாறு, கோயிற்கலைகள், இலக்கியம், கல்வெட்டுத் துறைகளில் ஈடுபாடுள்ள ஆர்வலர்கள் ஒன்றுபடுவது இன்றைக்கு மிகத் தேவையான நிலையாகும். கூடிப் பேசிக் கலை வதைவிட, தொலைவில் நின்றாலும் கருத்தால் ஒருமித்து ஓர் இயக்க மாக உருவானால் இத்துறைகளின் வளர்ச்சியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதனால், தரம் குறைந்த ஆய்வுகளும், போலிச் செய்திகளும், பயனற்ற கருத்தரங்குகளும், பிழை மலிந்த கட்டுரைகளும் நூல்களும் தாமாகவே குறைந்தகலும். வரலாறு இதற்கான பணியில் முதலடி எடுத்து வைத்துள்ளது. இந்நோக்குடன் வருவோர் அனை வர்க்கும் வரவேற்பும் ஒத்துழைப்பும் தர வரலாறு காத்திருக்கிறது.

அன்புடன்,

இரா. கலைக்கோவன்.

# இந்த இதழில்...


## 1. புதிய கல்வெட்டுகள் — பக்கம்

1. திருநெடுங்களம் கல்வெட்டுகள் — 1
2. திருமங்கலம் கல்வெட்டுகள் — 2
3. உருவச் சிற்பக் கல்வெட்டுகள் — 5
4. அடைக்கலம் காத்தோர் ஊருணிக்கரைக் கல்வெட்டு — 6
5. தான்தோன்றீசுவரம் கல்வெட்டுகள் — 7
6. லாசன்சு சாலைக் கல்வெட்டுகள் — 14
7. திருவானைக்கா கல்வெட்டுகள் — 16
8. ஆதிகுடி கல்வெட்டு — 20
9. குரங்கணில் முட்டம் குடைவரைக் கல்வெட்டுகள் — 21
10. திருச்செந்துறைக் கல்வெட்டு — 24
11. பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் தகட்டுப் பொறிப்பு — 27
12. பிள்ளையார் சிற்பக் கல்வெட்டு — 27
13. இடைமலைப்பட்டி புதூர்க் கல்வெட்டு — 28
14. இடையாற்று மங்கலம் கல்வெட்டுகள் — 29
15. உய்யக்கொண்டான் திருமலை கல்வெட்டுகள் — 31
16. புள்ளமங்கைக் கல்வெட்டுகள் — 34
17. கீழப் பழுவூர்க் கல்வெட்டுகள் — 36

## 2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

1. திருச்செந்துறைக் கல்வெட்டுகள் — 42

## 3. ஆய்வுக் கட்டுரைகள்

1. கீழப்பாவூர் கள ஆய்வும் கண்டு பிடிப்புகளும் — 46
2. குடிகாட்டின் தொல்பொருள்கள் — 51
3. குன்றக்குடி குடைவரைகளும் கல்வெட்டுகளும் — 56
4. அப்பரும் அவிநயமும் — 107

## 4. பொதுப்பகுதி

1. பெருமைச் சுவடுகள் - பம்மல் விசயரங்கனார் — 131
2. நூல் மதிப்புரை — 152
3. யாவரும் கேளிர் — 154
4. அன்புள்ள உங்களுக்கு — 159
5. கட்டுரையாளர்கள் — 161

## வரலாற்றறிஞர் முனைவர் ச. முத்துக்குமரனார்க்கு டாக்டர் மா. இராசமாணிக்கனார் விருது

டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் வரலாற்றின் பன்முகங்களிலும் ஆய்வு செய்துவரும் அறிஞர் பெருமக்களுள் தக்காரைத் தெரிவு செய்து அவர்தம் உழைப்பையும் உணர்வையும் போற்றும் வகையில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் விருதினை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. 1990-91 ஆம் ஆண்டில் முதன் முறையாகத் தொடங்கப்பட்ட இவ்விருது தொல்லியல் மேதை பேராசிரியர் கூ. ரா. சீனிவாசன் அவர்கட்கு வழங்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டிற்கான விருது கல்வெட்டறிஞர் முனைவர் இரா. நாகசாமி அவர்களுக்கு வழங்கப்பட்டது. 1992-93ஆம் ஆண்டிற்கான விருதிற்கு உரியவராக அறிஞர் வெ. நாராயணசாமி அவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார். மிக முயன்றும் அப்பெரியாரின் சரியான முகவரியைப் பெற முடியாமையால் 1992-93 ஆம் ஆண்டு விருது வழங்கப் பெறவில்லை. 1993-94 ஆம் ஆண்டிற்கான டாக்டர் மா. இராசமாணிக்கனார் விருது சிறந்த வரலாற்றறிஞரும் பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணை வேந்தருமான பேராசிரியர் முனைவர் ச. முத்துக்குமரனார்க்கு வரலாற்றாய்வு மையம் ஏற்பாடு செய்திருந்த சிறப்பு விழாவொன்றில் வழங்கப்பட்டது.



பாரதிதாசன் புல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பொறுப்பிலிருந்த ஆறாண்டுக் காலத்தில் முனைவர் ச. முத்துக்குமரனார் வரலாற்றுலகிற்கு ஆற்றிய அரும்பணிகள் போற்றற்குரியவை. தம் பல்கலையில் வரலாற்றுக்குத் தனித் துறை தொடங்கத் துணை வேந்தரவர்கள் ஏடுத்துக்கொண்ட முயற்சிகள் மறக்க முடியாதவை.

வரலாற்றின் அருமையையும் வாழ்க்கைக்கு அதன் தேவையையும் உணர்ந்த இப்பெருமகனார் வரலாற்றுக் கருத்தரங்கமொன்றைப் பல் கலையின் ஆதரவில் தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் கல்லூரியில் நடத்தினார். இரண்டு நாட்கள் நிகழ்ந்த இந்தக் கருத்தரங்கின் பொதுத் தலைப்பு இன்றைக்கும் நாளைக்கும் வரலாறு.

கல்வெட்டுகள் பற்றிய அடிப்படை விழிப்புணர்வைத் தம் பல்கலை சார்ந்த வரலாற்றுத் துறையினர் பெறவேண்டுமென்பதற்காகவே அகில இந்தியக் கல்வெட்டுக் கழகத்தின் ஆண்டுக் கூட்டத்தை இரண்டு நாட்கள் ஒரு மாநாடாகவே பல்கலைக் கழக வளாகத்தில் நடத்தினார். இதனால் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்ட வரலாற்றுலகம் பெரும் பயன் பெற்றது.

துணைவேந்தராகப் பலருக்கும் பயன்படும் வரலாற்றுப் பணிகளை ஆற்றிய இப்பெருமகனார் ஆய்வாளராகப் பல அரிய வரலாற்று நோக்குடைய கட்டுரைகளைப் படைத்திருக்கிறார். ஆஸ்திரேலிய நாட்டில் நடந்த மாநாடொன்றிற்காக இவர் எழுதிய கட்டுரை நாட்டு வரலாறு, வட்டார வரலாறு என்பன எப்படி எழுதப்பட வேண்டு மென்பதை அடிக்கோடிட்டுக் காட்டியது. பல நாடுகளிலும் கருத்தரங்கு களிலும் பங்கேற்று இவர் ஆற்றிய உரைகளுள் சில தொகுக்கப் பெற்று இரண்டு நூல்களாக வெளிவந்துள்ளன. இவற்றிலுள்ள பல கட்டுரை கள் வரலாற்று நோக்கும் ஆய்வு நுணுக்கமும் கொண்டமைந்தவை.

எதிர்காலவியல் என்று பாரதிதாசன் பல்கலையில் தனித் துறை யமைத்த நிலையொன்றே இவரது புதுமைச் சிந்தனைகளுக்குப் போதுமான சான்றாகும். மரபுகளை மறந்துவிடாது அதே நேரம் பழமைகளிலும் புதுமை காணும் இவரது பாங்கு தனித் தன்மையது. லெமூரியா கண்டம், குமரிமுனை, ஆரிய திராவிடர் கொள்கை போன்ற வற்றில் இவருடைய கருத்துக்கள் புதிய நோக்குடையவை.

துணைவேந்தராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில் இப்பெரு மகனார் பல்வேறு பணிகளுக்கிடையில் களஆய்வுப் பணிகளும் மேற் கொண்டிருக்கிறார். பழையாறைப் பஞ்சவன் மாதேவீசுவரம், புள்ள மங்கை திரு ஆலந்துறையார் திருக்கோயில், இடிந்து கிடக்கும் சேந்த மங்கலம் சிவன் கோயில், திருவாய்மூர், தஞ்சாவூர் ராஜராஜீசுவரம் போன்ற கோயில்கள் இவருடைய பொறியியல் பார்வைக்கு இலக் காகியதால் கோயிற் கட்டடக்கலை நுணுக்கங்கள் பற்றிச் சில தெளிவு கள் பிறந்தன.

உள்ளத்தாலும் உணர்வாலும் உழைப்பாலும் வரலாற்றுலகிற்குத் தொடர்ந்து தொண்டாற்றி வரும் இப்பெருமகனார் மேன்மேலும் பல பெருமைகளையடைய ‘வரலாறு’ நெஞ்சார வாழ்த்துகிறது.

# 1. புதிய கல்வெட்டுகள்

## 1. திருநெடுங்களம் கல்வெட்டுகள்

மு. நளினி

திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் மண்டலப் பொறியியல் கல்லூரியை அடுத்துத் திரும்பும் இடப்பிரிவில் ஏறத்தாழ ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் திருநெடுங்களம் அமைந்துள்ளது. பழமையான சோழர் கோயில். இங்குள்ள எழுவர் அன்னையர், வாயிற் காவலர் சிற்பங்கள் சோழர் காலத்தவை. அற்புதமான வேலைப்பாடுகளுடன் கூடிய உரலொன்று இங்குள்ளது. இத்திருக்கோயிலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டுகள் சில இங்கு இடம் பெறுகின்றன.

அ. உத்திரக் கல்வெட்டு

இடம் : சோமாஸ்கந்தர் திருமுன் வாயில் உத்திரம்.

செய்தி : சோமாஸ்கந்தர் திருமுன்னுக்கு முன்னாலுள்ள மண்டபத்தை முதலாம் குலோத்துங்கனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டில் ஆதித்தன் உலகனான விசயாலய முத்தரையன் என்பார் எடுப்பித்திருக்கிறார். இவரது தந்தையார் பெயர் அரையன். ஊர் கிளியூர் நாட்டுக் கள்ளிக்குடி.

காலம் : கி. பி. 1082.

1 ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 12ஆவது இத்திருமண்டபஞ் செய்வித்தான் பாண்டி கு

2 லாசநி வ[ள நாட்டு] கிளியூர் நாட்டுக் கள்ளிக்குடி அரைய மகந் ஆதித்தந் உலகநான விசையாலய முத்தரை[யன்*]

ஆ. தூண் கல்வெட்டுகள்

இடம் : திருச்சுற்று மாளிகையின் மேற்குத் தூண்கள்.

செய்தி : தூண்களை நிறுவியவர்களின் பெயர்களும் அவர்தம் ஊர்ப் பெயர்களும்.

i) மடந்தைபாகன் குருகுலராயன் — மாத்தூர்
ii) வாசிதேவன் காலிங்கராயன் — கீரனூர்
iii) சுருதிமான் அணஞ்சா ஆனைவிடப்பாடி — நுணாங்குறிச்சி
iv) செங்கனிவாயன் — ஊர்ப் பெயர் இல்லை

மூன்றாம் கல்வெட்டில் தூணை நிறுவியவரின் முழுப்பெயரைப் பெற முடியாதபடி இரண்டு எழுத்துக்கள் சிதைந்துள்ளன. இவர் பெயருக்கு முன்னாலுள்ள சுருதிமான் என்னும் சொல் அக்காலத்தில் வாழ்ந்த ஓரினத்தவரைக் குறிக்கும். இச்சொல் பல கல்வெட்டுகளில் பயின்று வருகிறது.

காலம் : பன்னிரண்டாம் நூற்றாண்டு.

i) 1 மாத்தூரு
2 டையான்
3 மடந்தை
4 பாகன் குரு
5 குலராய
6 ன் கால்

ii) 1 கீர
2 னூ[ர்*]
3 உடையா[ன்*]
4 வாசிதேவ
5 ந் காலிங்க
6 ராயன் கால்

iii) 1 நுணாங்கு
2 றுச்சி சுருதி
3 மான் அண
4 ஞ்சா ஆனை
5 விடப் பாடி
6 . . [றி]னான்
7 கால்

iv) 1 செங்கனி
2 வாயன்

---

## 2. திருமங்கலம் கல்வெட்டுகள்

அர. அகிலா

திருச்சிராப்பள்ளி லால்குடிப் பெருவழியில், லால்குடிக்கு இரண்டு கிலோ மீட்டர் முன்னதாக இடப்புறம் பிரியும் சாலையில் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் திருமங்கலம் அமைந்துள்ளது. இங்குள்ள சாமவேதீசுவரர் திருக்கோயில் முதலாம் இராசராசன் காலத்துப் பழமையது. இக்கோயிலின் துணைத்தள மற்றும் தாங்குதளச் சிற்றுருவச் சிற்பத் தொகுதிகள் குறிப்பிடத்தக்கவை. சுவர்த் தூண் களின் ஓமப் பகுதிகளில் கூட சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இக் கோயிலில் மேற்கொண்ட கள ஆய்வுப் பணிகளின் போது கண்டுபிடிக் கப்பட்ட புதிய கல்வெட்டுகள் இங்கு இடம் பெறுகின்றன.

### முதற் கல்வெட்டு

இடம் : மையக் கோயில் முக மண்டப மேற்கு மற்றும் தெற்குத் தாங்குதளக் குமுதம், ஜகதி.

செய்தி : நில விற்பனை பற்றிய சிதைவுற்ற கல்வெட்டு; தொடர்ச்சியில்லை. பெருங்குறி மகாசபை உறுப்பினர்கள் பலருடைய பெயர்கள் கிடைக்கின்றன. இவர்களுள் சிலர் தற்குறிகளாக இருந்தனர்.

காலம் : பன்னிரண்டாம் நூற்றாண்டு.

1 கெயமாணிக்க வளநாட்டு . . . . . . . . நகளகுடையாந் நலையன் திருமழபாடி உடையா(ன்)னாந திருச்சிற்றம்பல மூவேந்தவே(ள்)ளான் விலைக்கு கொண்டு திருச்சிற்றம்பல மசக்க

2 குமாரஸ்வாமி ஆலபிராந் . . . . . [கா]லாவாந் வாஸுதேவந் அளைந்த கோளரி பக்கல் விலை கொண்டு உடைய நிலம் . . காணி அரைக்காணியும் காலாவாந் மாதவன் நா[ரா*]யணந் பக்கல்

3 — — வாள பட்டந் பக்கல் [விலை] கொண்டுடைய நிலம் . மா அரை மாவும் நாராயணந் கோவிந்தன் பக்கல் விலை கொண்டு டைய நிலம் . காணியும் காலாவ

4 — — பட்டக் கி . . . . . . . . லும் நாரி அலகும் எழுந்தும் பயிரி செய்ய ஒண்ணாது பாழாய் கிடந்தமையில் இந்நிலம் இத்தேவற்கு

5 — — டையாந் [ஸ்ரீ]ராமந் . . . . . . . வ்வூர் ஊர்க் கணரந்[1] ஏகவீரமங்கலமுடையாந் நா[நூ]ற்றுவந் அளைந்த கோளரியே நம் என் எழுத்து

6 — — கு இவை காலாவா[ந்] . . . . . . . . த நாராயண பட்டந் எழுத்து ஸ்ரீதே . . ஞ்யந் நாகபிரான் ஸஹஸ்ரந் ஸயி[ஞ்ஜெ] ஆநமைக்கு [நோகும்] இவை காலாவாந் ந[ந்தீ]ச்₀வ

7 ரந் அழகிய மணவாள பட்டந் எழுத்து இது [ஆ]த்ரயந் நாரசிங்க தேவந் ஸயிஞைஆநமைக்கு காலாவந் ஸ்ரீகாரிமாறன் ரா[ஜ*] ரா[ஜ*] பட்டந் எழுத்து இப்படி அறிவேந்

8 காலாவந் திருவரங்க தேவந் எழுத்து இப்படி அறிவேந் ஆயந் சிங்கந் பிரான் பட்ட[ந்*] எழுத்து இப்படிக்கு இவை ஆச்₀ரயந் சீராமந் ஸுப்₂ரஹ்மண்[ய*]ந் . . . .

9 இப்ப — — வந் ஆத்ரயந் திருச்சிற்றம்பலமுடையாந் ஸேசவராக ஸஹஸ்ரநென் எழுத்[து] இது காலாவாந் திருவரங்க தேவந் சிங்க பிராந் ச்₀யஞ்யநா[ன*]மை

10 . . . . . . . . திருசிற்றம்பலமுடையான் வராக ஸஹஸ்ரநெ[ந்*] எ[ழு*]த்து இத்து பெருங்குறி மஹா ஸபை₄யார் ரக்ஷை பந்மாஹேச்₀வர ரக்ஷை

---

1. கரணன் என்று படிக்கவும்.

### இரண்டாம் கல்வெட்டு

இடம்: திருச்சுற்று மாளிகையின் வடமேற்குத் திருமுன் உத்திரம்.

செய்தி: இக்கோயில் திருச்சுற்று மாளிகை வளாகத்திலுள்ள முருகன் கோயிலைத் திருவிடைமருதூரைச் சேர்ந்த வணிகப் பெருமகனார் தாழைக்குடையான் ஆண்டபிள்ளையார் திருப்பணி செய்தார்.

காலம்: பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருமழுவுடைய நாயனார் கோயில் இளைய பிள்ளை
2 யார் கோயில் திருப்பணி செய்வித்தான் திருவிடை மரு
3 [தி]ல் வியாபாரி தாழைக்குடையான் ஆண்ட பிள்ளையார்

### மூன்றாம் கல்வெட்டு

இடம்: மையக் கோயில் முக மண்டபத் தெற்குச் சுவர்.

செய்தி: இத்திருக்கோயிலில் திருப்பணி செய்தவரின் ஊரும் பெயரும்.

காலம்: பதினாறாம் நூற்றாண்டு.

1 காஞ்சிபுரம் ஆதியாண்
2 டி திருப்பணிக்கு பணம்[1] 25

### நான்காம் கல்வெட்டு

இடம்: ஆடவல்லான் திருமுன்னுக்கு முன்னாலுள்ள தரைப்பகுதி.

செய்தி: இறைவனுக்குத் திருநாள் நடத்த வாய்ப்பாகக் கட்டணய்ய நாயக்கர் என்பவர் வென்றான் தோப்பு என்ற பெயரில் அமைந்த தோப்பொன்றைக் கொடையளித்தார்.

காலம்: ஸ்ரீமுக ஆண்டு ஆனி மாதம்; பதினெட்டாம் நூற்றாண்டு.

1 [ஸ்ரீ] முக ஸூ ஆநிபு .
2 திருமங்கலம் தி
3 ருமழுவுடைய நாய
4 [ந]ாற்கு திருநாள்
5 [ந]டத்தும்படிக்கு
6 விட்ட வென்[றா]ன் தே
7 தாப்பு கட்டண
8 [ய்]ய நாயக்க
9 தந்மம் இந்த [த]
10 ந்மத்துக்கு அ[கி]
11 தம் நினைத்தவ
12 [ந்] கெங்கை க[ரை]
13 காராம் பசுவை செ
14 [கா]ன்ற பாவத்திலே
15 போக கடவத[ாகவும்]

### ஐந்தாம் கல்வெட்டு

இடம்: இரண்டாம் கோபுரவாசலின் உட்பகுதி, வடபுறச் சுவர்.

1. பணம் குறியீட்டால் காட்டப்பட்டுள்ளது.

செய்தி: கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் வடகரை இராசராச வளநாட்டின் கீழ்பலாற்று கீழைமுறி கலார்க் கூற்றத்தின் ஒரு பகுதியாகத் திருமங்கலம் அமைந்திருந்தது. கோயிலுக்குத் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த கூத்தப் பெருமாளான புசபல நாயக்கர் செய்த அறம் பற்றிய கல்வெட்டு. சிதைந்துள்ளதால் முழுச் செய்தியையும் பெற முடியவில்லை.

காலம்: கி. பி. 1632.

1 — — 1554ன் மேல் செல்லா — —
2 வற்சரத்து தனசு நாயற்று பூறுவ பக்ஷத்து பிறதமையும் புணர் பூ
3 சமும் பெற்ற சுக்கர வாரத்து நாள் வடகரை இராச இராச வள நாட்டு
4 கீழ்பலாற்று கீழைமுறி கலாற் கூற்றத்து [தேசமான திருமங்]
5 கலத்து உடையார் திருமழுவுடைய நாயனார் கோயில் ஆதி[சண்]
6 டேசுவர தேவற்க்கு தொண்டை மண்டலத்து . . . . கோட்ட . . . .
7 . . . . . . [கூத்தப்] பெருமாளான புசபல நாயக்கர் . . . யார்
8 . . . துக்கு கடவார் தொண்டை மண்டலத்து புலியூர் கோட்டத்து[1]

---

## 3. உருவச் சிற்பக் கல்வெட்டுகள்

### எஸ். இராமச்சந்திரன்

அ. செயங்கொண்டம் உருவச் சிற்பக் கல்வெட்டு

இடம்: திருச்சிராப்பள்ளி மாவட்டம், செயங்கொண்டம் பேருந்து நிலையத்துக்கு அருகிலுள்ள கழுமலையீசுவரர் கோயிலின் திருச்சுற்றில் மேற்குப்புறத் தூணில் உள்ளது. அருகில் புடைப்புச் சிற்பம் ஒன்றும் உள்ளது.

காலம்: கி. பி. 1745.

1 சாலிவாகனம் 1667 கலியுகம் [4846] செல்லாநின்ற
2 சுக்ல[2] வருஷம் பெருந்தாயி சதா சேவை

---

1. இறுதி நான்கு வரிகள் மிகவும் சிதைந்துள்ளன.
2. குரோதன வருடம் என்று இருக்கவேண்டும். சுக்ல வருடம் எனில் கல்வெட்டின் காலம் 1749 ஆகும்.

### ஆ. திருநள்ளாறு உருவச் சிற்பக் கல்வெட்டு

இடம் : புதுச்சேரி மாநிலம் காரைக்காலுக்கு அருகில் உள்ள திருநள்ளாறு தர்ப்பாரண்யேசுவரர் கோயில் திருச்சுற்றில் மேற்புறம் இரண்டரை அடி உயரமுள்ள உருவச் சிற்பத்தின் தளத்தில் பொறிக் கப்பட்டுள்ளது.

காலம் : பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டு.

1 ராயஸ்ரீ பாவாடை நாயக்கரவர்கள்

## 4. அடைக்கலம் காத்தோர் ஊருணிக் கரைக் கல்வெட்டு

*ஏஸ். இராமச்சந்திரன்*

இடம் : புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம் அரிமழத் துக்கு அருகில் ஓணாங்குடி. இவ்வூரினையொட்டி வனத்துறைக்குரிய காட்டுப் பகுதியில் அடைக்கலம் காத்த அய்யனார் கோயிலும் ஊருணி யும் உள்ளன. ஊருணிக் கரையில் வீரபாண்டியன் கல்வெட்டு பொறிக் கப்பட்ட பாளக்கல் கிடக்கிறது. இக்கல்வெட்டு பற்றித் தகவல் தந்தவர் திரு. கே. ஆர். கண்ணப்பன்.

செய்தி: பொய்சளதேவன் (அல்லது சேனை) வெட்டுவித்த அமுதாண்ட ஊருணிக்குக் குடித்தனமாக ஓணங்காரிக்குடி சீராமன் என்பவர் நிலக்கொடை அளித்துள்ளார்.

காலம் : பதினான்காம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்
2 கு யாண்டு 3 ஆவது ஓணங்காரிக்கு
3 டி சீராமன் பொய்சள [தைவன்][1] க
4 ல்லின அமுதாண்ட ஊருணிக்கு [குடுத்த]
5 னமாக நான் விலை கொண்டு நிலையாயிட்ட
6 தத்தான்றி வட்டமும் பெருஞ் சோவனார்[2] [வ]
7 யல் நாற்றங்காலும் பாடிஷை வாக்கா
8 ல் நடுவில் ஆலந்துடவையும் இம்மூ

---

1. சைனை என்றும் இருக்கலாம். தெளிவாகப் படிக்க இயலா வண் ணம் பொரிந்துள்ளது.
2. சோவன் என்பது சேவகன் (வீரன்) என்பதன் மலையாளத் திரி பாகும் (ஈழவர்களின் பட்டம்).

9 ன்றுங் குளப்புரமாக விட்டேன் அ
10 ழிவு செய்வார் நாட்டை அழிவு செத்தார
11 ாகவும்[3] . . . .

## 5. தான்தோன்றீசுவரம் கல்வெட்டுகள்

அ. அப்துல் மஜீது, மு. நளினி

திருச்சிராப்பள்ளி நகரில் உறையூர் சாலை வீதியில், இருக்குமிடம் தெரியாமல் உள்ளடங்கியிருக்கிறது தான்தோன்றீசுவரம். தனியார் பொறுப்பிலுள்ள இக்கோயிலில் திருப்பணிகள் காரணமாகக் கல்வெட்டுகள் சிதறியும், சிதைந்தும் காணப்படுகின்றன. இங்குள்ள வாயிற்காப்போர், அம்மையப்பர் சிற்பங்கள் காலப் பழமையன.

முதற் கல்வெட்டு

இடம்: உள்மண்டப நுழைவாயில் நிலையின் இருபுறமும். தொடக்கம் சிதைந்துள்ளது.

செய்தி: நந்திவர்ம மங்கலத்துப் பெருங்குறி சபையார் தங்கள் பிடாகையான வரகூரைத் திருத்தான்தோன்றி மகாதேவர்க்கு விற்றுத் தந்தனர். இந்த ஊருக்குரிய விலைப் பொருளும் இறைக்காவலும் பெறப்பட்ட முறை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

கோமாறன் சடையனான வரகுண மகாராசன் தம்முடைய பதின் மூன்றாம் ஆட்சியாண்டில் இக்கோயில் இறைவர்க்காக அண்ட நாட்டு வேளானிடம் பழங்காசுகள் நூற்றி இருபது தந்திருந்தார். நந்திவர்ம மங்கலத்துப் பெருங்குறி சபையார் இதை வைப்புத் தொகையாகக் கொண்டு இதன் வட்டியில் இக்கோயிலில் திருவிளக்கு எரித்து வந்தனர். இவ்வட்டி 'திருவிளக்குப் பலிசை' எனப்பட்டது. வரகூர் விற்கப்பட்டபோது பெருங்குறி சபையார் இந்த வைப்புத் தொகையையும், இதன் வட்டியையும் மேலும் பதினைந்து கழஞ்சு பொன்னையும் சேர்த்து மூன்று கூறிட்டு இரண்டு கூறு தொகையை விலைப் பொருளாகவும், ஒரு கூறு தொகையை இறைகாவலாகவும் கொண்டு வரகூரை விற்றுத் தந்தனர். பதினைந்து கழஞ்சு பொன் எப்படி வந்ததென்பதை அறிய முடியாதபடி கல்வெட்டு வரிகள் சிதைந்துள்ளன.

காலம்: பத்தாம் நூற்றாண்டு.

3. செய்தாராகவும் என்று படிக்கவும்.

வடபுற நிலை

1 — — கு
2 — — துகளௌல
3 — — ஞ் சென்று
4 . . . . . . . . திருக்கோ[யி*]லு
5 ம் குளமும் நந்தவானத்துக்கு
6 மாக முன் தேவருடைய வே
7 லியும் இதற்கு தெற்க்கு. இ
8 ப்பெருமாளுக்கு அக மனையா
9 க [குடு]த்தது குடுத்த வேலியு
10 [மாக] இரு வேலியு நீக்கி இ நா[ன்*] கெ
11 ல்லையிலு மகப்பட்ட உண்ணி
12 ல மொழிவின்றி இந்நிலமு
13 ம் எங்கள் படாகை வரகூ
14 ரு மென்செயும் புன்செயு
15 ம் குளமும் குளவாயும் புற்
16 றும் தெற்றியும் ஊர் நத்தமு[ம்]
17 உடும்போடு ஆமை தவழ்ந்
18 தது வரகூர் தன் பெருநான்
19 கெல்லையிலு மகப்பட்டது உ
20 ண்ணில மொழிவின்றி பல்
21 லுருவிற் பயன் மரமும் மற்று
22 மெ[ப்*]பேர் பட்டதும் இவ்விரண்
23 டு கிட[க்*]கை நிலமும் திருத்தா
24 ன்தோன்றி மஹாதே$_3$வற்கு விற்
25 று குடுத்[தோம்] இந்நிலத்தால் ஸ
26 பை$_4$யோ[ம் ெ]காண்ட விலைப்
27 பொருளும் இறைப் பொருளு
28 மாவது கோமாற சடைய

தென்புறநிலை

29 ற்க்கு யாண்டு 4 ஆவதற் கெ
30 திர் ஒன்பதாமாண்டு த$_4$நு நா
31 யிற்று வ்யாழ கிழமை [பெ]ற்ற மூல மு
32 தலாக நந்திபந்ம்ம மங்கலத்து
33 திருத்தான்தோன்றி பெருமானடி
34 களுக்கு கோமாறஞ் சடையனாயின
35 பாண்ட்$_3$யதி$_4$பதி வரகுண மஹா

36 ராஜ னண்ட நாட்டு வேளான்
37 கையில் விழுந்த பழங்காசு
38 120 இ நூற்றிருபதுக்கும்
39 இதன் பலிசையும் . [அபிந்மே]
40 ந விஷ்ணு க்ரமார . [ரப் பேதப$_4$]
41 தி$_3$ ஸோமயாஜி[யா]ரு . . . . .
42 ர நம்பியும் தே$_3$வகந்மிகளும் . .
43 ன ஸபை$_4$யோம் . . . . . வ
44 ரகூரு ஒற்றி ஆள்கின்றானே ஊர்[கழ]
45 ஞ்சொன்றி[நால்] பொன் 15 இப்பொ
46 ன் பதினைங் கழஞ்சுக்கும் . . . . .
47 ர் பூமி — — க்கும் ஸ
48 பை$_4$யோம் கோப்பரகேஸரிப
49 ந்மற்க்கு யாண்டு 4 ஆவதின் கீ[ழ்]
50 நாங்கள் இறுத்த இறைய் எப்
51 பேர்பட்டதும் நாங்கள் மு[ன்பு] இ
52 க்காசு கொண்டு கட[வ] திருவிள
53 க்கு பலிசையிலே . . . . . கொ
54 ண்டு நின்ற பலிசை . . . . . .
55 தற காசு 120 . . . . . [கி]
56 றை பொன் பதினைங் கழஞ்
57 சும் ஆக இப்பொன்னும்
58 இக்காசும் இப்பலிசையு
59 ம் ஏற்றி மூன்று கூறிட்டு இ
60 ரண்டு கூறும் விலைப் பொ
61 ருளாவதாகவும் ஒரு கூறு இ
62 றை காவலாவதாகவும் இப்பரி
63 சொட்டி வரகூர் விலைக்கற விற்
64 று இதுவேய் பொருள் சில
65 வுமாக ஒட்டி விற்று குடுத்தோ
66 ம் நந்திவர்ம மங்கலத்து பெ
67 ருங்குறி சபையோம் ஸ
68 பை$_4$ பணிக்க எழுதினேன் மத்$_4$யஸ்த
69 ன்

## இரண்டாம் கல்வெட்டு

இடம்: முன் மண்டபத் தெற்குச் சுவர்.

செய்தி: குறுநாக நாட்டு பிரமதேயமான வலிவத மங்கலத்து நக்கன் சிங்க கோவிந்த சிகாமணி கடம்பதேவி, இக்கோயில் இறைவர்

உச்சம் போது அமுது செய்தருளுகையில் வேதம் வல்ல அந்தணர்க்கு உணவிடக் கொடையளித்ததாகக் கொள்ளலாம். கல்வெட்டு சிதைந்துள்ளது. தொடர்ச்சி கிடைக்கவில்லை.

காலம்: முதற் பராந்தகனாக இருக்கலாம். கி. பி. 911.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மற்கு யாண்டு 4 ஆவது குறுநாக நாட்டு பிரம்மதே
2 யம் வலிவத மங்கலத்து . . ழதோமுக்கத்து படசுர நக்க[ன்*]ச் சிங்கங் கோவிந்த
3 [சி]காமணி கடம்பதேவியேன் தெந்கரை பிரம்மதேயம் நந்திவர்ம மங்கலத்து . . .
4 — — பரமேச்ᵥவரர்க்கு உச்சம் போதமுது செயும் போது [வே]தம் வல் . . .

மூன்றாம் கல்வெட்டு

இடம்: உள் மண்டபத் தென் சுவர். இரண்டு கல்வெட்டுப் பகுதிகள் உள்ளன. இவை ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகலாம்.

செய்தி: மெய்யெழுத்துக்கள் புள்ளியிடப்பட்டுள்ளன. கல்வெட்டின் பொருளைத் தெளிவாக அறியக்கூடவில்லை. வேதம் ஓதும் திறன் குறித்து வழங்கப்பட்ட சிறப்புகளைப் பேசுவதாகக் கருதலாம். ஆய்வுக்குரிய கல்வெட்டு. தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி பதின்மூன்றில் 250 ஆம் எண்ணிட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ள கல்வெட்டுச் செய்தியுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

காலம்: பத்தாம் நூற்றாண்டு.

முதற் பகுதி

1 — — பத்துமா ப்₃ரம
2 — — னுக்கு பத்துமா
3 — — ன்றன சட்ட[ழி] . . . .
4 — — த்துக்குத் திருவிழா . .
5 — — ன மேக்காட்டி

இரண்டாம் பகுதி

1 — — டுப்பட ஓதும் பரி . . . . .
2 னால் பூசி[னை] பெறுவதாகவும் இவ்வூர் ச்ᵥராவணை ப₄ாக₃ா [ளா]னாரு[ம்] இந்நாளால் இப்பரிசே
3 மேக்காட்டிப் படி ஓதி அரைக் கழஞ்சு பொன்னால் பூசினை பெ . . ப்₃ரஹ்மரம் . பெறுவரா[கவு]

4 ம் இப்படியே இரண்டு வேத[த்*]தால் படியோதினார் கழஞ்சினாற் பூசினை[யு]ம் பிரமர(த)மும் பெறுவாரா

5 கவு [ெ]மான்று வல்லார் முரன்றினாலும் ப[டி]யோதி கழஞ்சரை யும் பி[ரம]ரமும் பெறுவாராகவும்

6 ரும் வல்லாரும் ஓரோ ப$_4$ாஷ்யத்தால் அரைக் கழஞ்சு பொன் பூசினை பெறு — —

7 ல்லி . பிரம வல்லார் பிரமர(த)ம் பெறுவாராகவும் . . . . ணக்கும் பெ . . . . . . . ம் திருவிழா வா

நான்காம் கல்வெட்டு

இடம்: உள் மண்டபத் தென்புறச் சுவர்.

செய்தி: இளங்கோவேளார் மறவம் பூதியாரின் தேவியார் அனந்தஞ் சந்திரமதியார் இக்கோயில் இறைவர்க்குப் பொற் கொடை அளித்து அந்த முதல் கெடாமல் அதன் வட்டி கொண்டு சில அறங்களை நிறைவேற்ற வகை செய்தார். நாலாயிரவன் என்னும் பெயரில் அமைந்த முகத்தலளவை குறிக்கப்படுகிறது. கல்வெட்டு சிதைந்துள்ளது.

காலம்: முதற் பராந்தகனாக இருக்கலாம். கி. பி. 911.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேஸரிபந்மற்கு யாண்டு 4 ஆவது திருத்தான்தோன்றிப் பெருமானடி — —

2 . . . ளிளங்கோவேளார் மறவம் பூதியாற் தேவியார் அனந்தஞ் சந்த்ரமதியார்

3 — — வுக்கும் இ முப்பத்தொன் கழஞ்சு முதல் கெடாமே சந்த்ராதி$_3$த்யவத் குளம் தி . .

4 — — கல நெல் நாலாயிரவனால் பலிசையாவதாகவும் பத்துப் பொன்னால் பதின் க

5 ல நெல்லு திருமஞ்சண குள மாண்டு தோறும் கல்லிவிதாகவும் நி[ந்ற] ,28 கலம் நெல் ஸங்க்ராந்தி

6 யால் 2 கலம் இ நெ[ல்*]லில் இ . . . . டி அ[ரு]ளு நெ[ய்*]க்கு கலனே இரு தூணி உரி எண்ணைக்கு . . திருவமுதரிசி[1]

ஐந்தாம் கல்வெட்டு

இடம்: கருவறையின் தென்புறச் சுவர். கல்வெட்டு இரண்டு பகுதிகளாக உள்ளது.

செய்தி: முதலாம் இராசராசன் காலத்தில் கோயில் இருந்த இடம் இராசாச்$_0$ரய சதுர்வேதிமங்கலமென்று அழைக்கப்பட்டது. இக்

1. இறுதி மூன்று வரிகள் மிகவும் சிதைந்துள்ளன.

கோயிலில் தைத் திங்கள் சதையத் திருநாள் விழா ஒன்பது நாள் நடந்தது. இராசராசவிடங்கர் என்னும் பெயரில் இங்கிருந்த இறைத் திருமேனியை இவ்விழா நாட்களில் எழுந்தருளுவித்து பெருந்திருவமுது படைக்கப்பட்டது. இத்திருநாளுக்கு வேண்டுவன செய்ய இவ்வூர் தண்டல் பணிமகன் திரைமூர் உடையான் தீரன் காளி கண்காணியும், ஸ்ரீகாரியம் கௌசியனும் பொறுப்பேற்றனர். இவ்வூர் பல சேரிக ளாகப் (குடியிருப்புப் பகுதிகளாக) பிரிக்கப்பட்டிருந்தது. கல்வெட்டு முழுமையாகக் கிடைக்காமையால் முழுச்செய்தியையும் அறியக் கூட வில்லை.

காலம்: முதலாம் இராசராசன், கி. பி. 985 – 1014.

முதற்பகுதி

1 ஸ்வஸ்தி ஸ்ரீ திருமகள் போல
2 லச் செல்வியுந் தனக்கேயுரிமை பூ
3 க்கொளக் காந்தளூர் சாலை கலம
4 வேங்கை நாடும் கெங்கபாடியுந் தடி

இரண்டாம் பகுதி

1 வளநாட்டு உறையூர் கூற்றத்து கல ப்ꠂரமதேꠂய
2 ஆன ஸ்ரீஇராஜாச்ꠂரய சதுர்வ்வேதிமங்கலத்
3 திருத்தான்தோன்றி மகாதேவர் தைய்த் திங்
4 கள் சதையத் திருநாளால் ஒன்பது நாளும் இ
5 ராஜராஜவிடங்கரைத் திருவிழா எழுந்தருளுவித்து இ
6 தேவர்க்கு இ திருநாளில் நிசதம் கல அரிசியாக நாற்க
7 ல அரிசியால் நாலு நாள் பெருந்திரு அமுது இத்திரு
8 நாளுக்கு வேண்டுதெல்லாம் குறைவுபடாமல் இ
9 வ்வாண்டு இவ்வூர் தண்டல்லுடைய புணிமகன் திரைந்
10 மூர் உடையான் தீரன் காளி கண்காணியா(ல்)லும் இத்தேꠂவர்
11 க்கு ஸப₄ாநியோகத்தினால் ஸ்ரீகார்ய்ய வாரியஞ் செ
12 ய்கின்ற இவ்வூர் இருபத்து நாலாஞ்சேரிக் கவிசியன்

ஆறாம் கல்வெட்டு

இடம்: கருவறையின் மேற்குச் சுவர். கல்வெட்டு இரண்டு பகுதிகளாகக் காணப்படுகிறது. இரண்டாம் பகுதி பெரிதும் சிதைந் துள்ளது.

செய்தி: காச்சுவன் நக்கன் பொந்நநை உடையான் இக்கோயில் இறைவர்க்குத் திருமஞ்சணம் ஆடி அருளவும் திரு அமுது செய்தருள வும் கொடையளித்தார். அய்ப்பசி விசுத் திருநாள் குறிக்கப்படுகிறது.

காலம் : முதலாம் இராசேந்திரன், கி. பி. 1018.

முதற் பகுதி

1 ஸ்ரீ திருமன்னி வளர இரு நில
2 ன் பெருந்தேவியராகி யின்புற
3 ச் சுள்ளிச் சூழ் மதிட் கொள்ளி பா

இரண்டாம் பகுதி

1–5 மெய்க்கீர்த்தியின் தொடர்ச்சி
6 — — ஸரிபம்மரான ஸ்ரீ இராஜேந்த்₃ர சோழ தே₃வர்க்கு யாண்டு ஆறாவது தெ
7 — — க் கூற்றத்து பிரம்மதேயம் ஸ்ரீராஜாச்₀ரைய சதுர்வேதி
8 — — ருபதி நாலாஞ் சேரி காச்சுவன் நக்கன் பொந்நறை உடை
9 — — நம் ஆடி அருளவும் அப்பிகை விஷு᳚வும் ஆகத் திரும
10 — — நாழியும் தே[ன்*] நாநாழியும் உள்ளிட்டு வேண்டும் தி
11 — — செய்தருள தூணிப் பதக்கரிசியும் கறியமுதும் . . . . .

ஏழாம் கல்வெட்டு

இடம் : கருவறையின் வடபுறச் சுவர். துண்டுக் கல்வெட்டு.

செய்தி : இக்கோயிலில் திருப்பதியம் பாடுவார் பயன்பாட்டிற்காகக் கோயிலுக்கு நில விற்பனை.

காலம் : பதினோராம் நூற்றாண்டாகலாம்.

1 ச்₀வரற்க்கு விற்றுக் குடுத்த நில விலையாவணம் எங்கள் . . .
2 . யன் ஆதி[த்]தந் நக்கன் இவ்வூர் 4 ஞ்சேரி பா[லா*]சிரியன் சாத்தம்
3 ஷோத்தமன் பக்கல் ஒற்றியுடைய நிலம் திகைத்திறல் வ
4 லுக்கு வடக்கு சங்கண வாய்க்கு மேக்கு முதற் கண்ணாற்று
5 மா வகையில் மேக்கடைந்த ஒரு மாவரையும் இவ்வெழுப
6 ய கிழக்கடைந்த இரண்டு மாக்காணியில் தெற்கடைய ஒ
7 ரைக் காணியுமாக இவ்வரைக்காலே அரைக்காணி செய்
8 கணம்பி ஒ . . . . டைய பொன் இருபதின் கழஞ்சும்
9 [ஸோ]மச்₀வரற்கு[த் திருப்ப]தியம் பாடுவாற்காக இப்பரே
10 ட்டினமையி . . . . யமாக விற்று குடுத்த நிலம்

## 6. லாசன்சு சாலைக் கல்வெட்டுகள்

கோ. வேணிதேவி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பல இடங்களில் இங்கிலாந்து அரசாட்சியின் போது நிறுவப்பட்ட சின்னங்களும், பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் பார்வைக்குக் கிடைக்கின்றன. இவற்றுள் மிகச் சிலவே வரலாற்று வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

திருச்சிராப்பள்ளி நகரில் லாசன்ஸ் சாலையில் உள்ள கே. ஆர். சி. பெட்ரோல் நிலையத்திற்கு அருகில் ஆங்கில ஆட்சியின்போது நிறுவப் பட்ட குடிநீர்க்குழாய் அமைப்பொன்று அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டது. இந்தக் கட்டட அமைப்பின் இரு புறமும் இரண்டு கல்வெட்டு கள் உள்ளன. இவற்றின் தலைப்பில் மலைக்கோட்டை வடிவம் காணப்படுகிறது. தென்புறக் கல்வெட்டில் புடைப்புச் சிற்பமாகவும், வடபுறக் கல்வெட்டில் வரைகோட்டுச் செதுக்கலாகவும் உள்ள மலைக் கோட்டையின் தோற்றம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இதுவரை கிடைத்துள்ள எந்தக் கல்வெட்டிலும் இடம் பெறவில்லை என்பது குறிப் பிடத்தக்கது. இக்கல்வெட்டுகளில் வெட்டப்பட்டுள்ள ஃப்ரீ மேசான்ரி யின் (Free Masonry) சின்னம் அடையாறு பிரும்மஞான சபைக் கூடத் திலும் காணப்படுகிறது.

1911 டிசம்பர்த் திங்கள் பன்னிரண்டாம் நாள் தில்லியில் நிகழ்ந்த இங்கிலாந்து பேரரசர் ஐந்தாம் ஜார்ஜின் முடிசூட்டுவிழா தர்பாரைப் பற்றிய செய்தியை ஒரு பக்கக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது. வரலாற் றறிஞர்கள் இவ்விழா பற்றி விரிவான தகவல்களைத் தருகிறார்கள்.

1910 இல் இங்கிலாந்து மன்னராக இருந்த ஏழாம் எட்வர்டு இறந்ததும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னராகப் பொறுப்பேற்றார். இவரும் இவருடைய துணைவியார் அரசி மேரியும் 1911 இல் தில்லிக்கு வந்தார் கள். இந்தியா விடுதலை அடைவதற்கு முன் இங்கிலாந்தை ஆண்ட மன்னர்களில் பேரரசராக இருந்தபோது இந்தியாவிற்கு வந்தவர் இவர் ஒருவரே என்பது குறிப்பிடத்தக்கது.

தில்லியில் நடந்த முடிசூட்டு விழா மிகப் பெரிய அளவில் கொண் டாடப்பட்டது. இந்திய வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு இமயம் முதல் குமரிவரை ஆண்ட இருநூறுக்கும் மேற்பட்ட அரசர்கள் மற்றும் அனைத்து அரசுகளின் தலைவர்கள் தில்லியில் குழுமியிருக்க மிக வியக்கத்தக்க வகையில் இவ்வைபவம் நடைபெற்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நிகழ்ச்சியின் போதுதான் இந்தியத் தலை நகரம் கல்கத்தாவிலிருந்து தில்லிக்கு மாற்றப்பட்டதாக மன்னர்

அறிவித்தார். இதற்கான அடித்தளக் கல்லும், கல்வெட்டும் தில்லியில் பதிக்கப்பட்டன.[1]

தில்லியில் நடந்த இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடி சூட்டு விழாக் கொண்டாட்டத்தை ஒட்டித் திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த லாட்ஜ் ஆஃப் ராக் என்ற சங்கத்தார் திருச்சிராப்பள்ளி மக்களுக்குக் குடிநீர்க்குழாய் அமைப்பொன்றை உருவாக்கித் தந்தார்கள். இவ்வமைப்பை 1912 டிசம்பர்த் திங்கள் பதினான்காம் நாள் எல். இ. பக்லி என்னும் ஆங்கிலேய உயர் அலுவலர் திறந்து வைத்தார்.

இப்போது இவ்வமைப்பில் தண்ணீர்க் குழாய் இல்லையென்றாலும் குழாய் இருந்த அடையாளங்கள், கல்வெட்டுகள் பதிக்கப்பட்டுள்ள நிலையின் பக்கப் பகுதியில் உள்ளன.

முதற்கல்வெட்டு

செய்தி: தில்லியில் நிகழ்ந்த இங்கிலாந்தின் பேரரசர் ஐந்தாம் ஜார்ஜ், அரசி மேரி முடிசூட்டு விழா தர்பாரின் நினைவாக லாட்ஜ் ஆஃப் ராக் என்ற அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள், திருச்சிராப்பள்ளிப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகச் செய்தமைத்த குடிநீர்க் குழாய் நிலை. தில்லியில் நடந்த விழாவிற்குத் திருச்சிராப்பள்ளியில் நினைவுச் சின்னம் எடுத்திருக்கிறார்கள்.

காலம்: 11.12.1911.

IN COMMEMORATION OF<br>THE CORONATION DURBAR<br>OF<br>THEIR IMPERIAL MAJESTIES<br>KING GEORGE V AND QUEEN MARY<br>HELD AT DELHI ON 12$^{\underline{TH}}$ DEC; 1911<br>PRESENTED TO<br>THE PUBLIC OF TRICHINOPOLY<br>BY THE<br>MEMBERS OF 'LODGE OF ROCK'<br>No. 260 E. D.

இரண்டாம் கல்வெட்டு

செய்தி: திறந்து வைத்தவர் எல். இ. பக்லி.

1. R. S. Majumdar, Struggle for Freedom, Bharatiya Vidya Bhavan, Bombay, 1978, P. 168 - 169.

காலம்: 14.12.1912.

OPENED
BY
L. E. BUCKLEY ESQUIRE
I. C. I.
14TH DECEMBER 1912

மூன்றாம் கல்வெட்டு

இந்தக் குடிநீர்க் குழாய் அமைப்பருகே பெட்ரோல் நிலைய மதிற் சுவரையொட்டி சுமைதாங்கிக் கல்லொன்று உள்ளது. இதன் படுக்கைக் கல் முகப்பில் கல்வெட்டொன்று காணப்படுகிறது.

செய்தி: சின்ன மிளகுப் பாறையைச் சேர்ந்த கருப்பாயி அம்மாள் நினைவாக எடுக்கப்பட்டது. சின்ன மிளகுப் பாறை என்னும் நகர்ப் பகுதி இச்சுமைதாங்கிக் கல் காணப்படும் இடத்திற்குச் சற்றுத் தொலைவிலுள்ள இடமாகும்.

காலம்: பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதி அல்லது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலம்.

1 சின்ன மிளகு பாறை கருப்பாயி அம்மாள் நினைவாக

---

## 7. திருவானைக்கா கல்வெட்டுகள்

மு. நளினி

திருச்சிராப்பள்ளிக்கும் திருவரங்கத்திற்கும் இடையிலுள்ள திருவானைக்காவில் அமைந்திருக்கும் சம்புகேசுவரர் கோயில், கல்வெட்டுகளில் திருவானைக்கா உடைய நாயனார் கோயிலென்று அழைக்கப் படுகிறது. இத்திருக்கோயிலில் இருந்து கல்வெட்டுத்துறை பல கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது. முனைவர் ஆய்வுக்கும் இக்கோயில் ஆட்பட்டிருக்கிறது. மையக் களப் பணிகளின் போது இக்கோயிலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட, இது வரையிலும் படியெடுக்கப்படாத கல்வெட்டுகளுள் சில இங்குத் தரப்பட்டுள்ளன.

முதற் கல்வெட்டு

இடம்: இரண்டாம் திருச்சுற்று, வடக்குச் சுவர்.

செய்தி : கல்வெட்டு வரிகளின் தொடக்கப் பகுதி இல்லை. திருவானைக்கா உடைய நாயனார் கோயில் ஆதிசண்டேசுவர தேவ கன்மிகளுக்கும் நடராஜராஜீசுவரமுடையார் கோயில் தேவகன்மி களுக்கும் இடையில் நிகழ்ந்த ஒப்பந்தத்தைக் கல்வெட்டு கூறுகிறது. நடராஜராஜீசுவரத்து இறைவன் பெயரிலான ஒன்பது மாவரை அரைக் காணி நிலத்தைத் திருவானைக்கா உடைய நாயனார்க்குரிய காணி யுடன் இணைத்துக் கொண்டு, அதற்குத் திருப்பாக நடராஜராஜீசு வரத்து இறைவனுக்குப் படையல்கள், பரிவட்டம், விளக்கெரிக்க எண்ணெய் ஆகியன வழங்க திருவானைக்கா கோயிலார் ஒப்புதலளித் துள்ளனர். இந்த ஒப்பந்தப் பத்திரம் 'இசைவுத்தீட்டு' என்ற அழகு தமிழ்ச் சொல்லால் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. வடக்குத் திரு வீதியில் இருந்த கீழை மடத்து முதலியார், கொட்டூர் வணிகர் ஆலங் குடையான் சோறன் உய்யக்கொண்டான் ஆகியோர் குறிக்கப்படுகின் றனர். கல்வெட்டின் முன்பகுதி இல்லாமலிருப்பதால் இசைவுத் தீட்டோடு இவர்களுக்குள்ள தொடர்பை அறிந்துகொள்ள முடிய வில்லை. 'திருநீறு இட்டார் திருமாளிகை' என்ற பெயரில் கட்டட மொன்று சுட்டப்படுகிறது. கோயில் கணக்கரான சிற்றம்பூருடையாரின் முழுப்பெயர் கிடைக்கவில்லை. நடராஜராஜீசுவரம் என்ற பெயரில் திருக்கோயில் அமைந்திருந்த செய்தி புதியது.

காலம் : சுந்தரபாண்டிய தேவர், ஐந்தாம் ஆட்சியாண்டு.

1 ன திருபுவன சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு ஐஞ்ஞாவது

2 ஞ்சமியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற புணர்பூசத்து நாள் தென்கரை பாண்டி

3 டயார் திருவானைக்காவுடைய நாயனார் கோயில் திருவெண் ணாவல் திருனிழல்க் கீழ்

4 ப்$_4$ருத்யராகிய ஆதிசண்டேசுர தேவர்கன்மிகளோம் திருநீறு இட்டார் திருமாளிகைக்குள்ளு

5 ரு வீதியில் வடக்கில்(த்) திருவீதியில் வடக்கில்(க்) கீழ் துண்டத்து கீழை மடத்து முதலியார்

6 ட்டு நகராம் கொட்டூர் வியாபாரிகளில் ஆலங்குடையான் சோறன் உய்ய கொண்டான்

7 ட ராஜராஜீச்$_{\circ}$வரமுடையார் கோயில் ஆதிசண்டேசுர தேவர் கன்மிகளுக்கு இசைவு தீட்டு குடுத்த

8 ஜீசுரமுடையார் திருநாமத்தால் உள்ளூரில் திருப்புதியுது விளாகத்துக் காணியாள[ர் ப]லர் பக்கலும் கி

9 லத்து இவர் காணியான நிலம் இருமாவரைக்கு பேர்(க்) கொ[ல்*] லைப் படியாலும் புன்செய் நிலத்து [செ]தங்கும் இந்நா

10 ம் ஆறினாலும் நிலம்[1] . . . . இந்நிலம் ஒன்பது மாவரையே அரைக் காணியும் உடையார் திருவானைக்கா

11 ணி[யுட]னே நாங்களே கூட்டிக் கொண்டு இந்நாள் முதல் இந்த நடராஜராஜீச்ᵒவரமுடையாற்கு அமுதுப

12 வெண்ணாவல் தெ . . . . . . . . . றுக்கு நானாழி அரிசியும் நாற்பலக் கறி அமுதும் வேண்டும் விறகு . . .

13 [அ]முது பாக்கு ஐஞ் . . . . . . . . ல் பத்தும் மாதம் ஒன்றுக்கு திருவிளக்கெண்ணை இரு நாழியும் சனி

14 ம் உப்பு நானா [ழியும்] மிளகு [உரியும் ஓர் ஆ]ட்டைக்கு திருப் பரியட்டம் உரு ஒன்றும் ஆக இப்படிகளால் வந்தன

15 [ம்] விடக் கடவே[ாமாக]வும் இப்[படி] ச[ம்*]மதித்து இந்நாள் முதல் சந்திராதித்தவரையும் செல்வதாகவும் இ[ப்*]

16 படி ஸ[ம்*]மதித்து இ[சைவு தீ]ட்டுக் குடுத்தோம் இந்த நட ராஜராஜீசுரமுடையார் கோயிலில் ஆதிசண்டேசுர

17 னைக்காவுடைய நாயனார் ஆதிசண்டேசுர தேவர்கள் கன்மிக ளோம் அருளாலே கோயில் கணக்கு சிற்றம்பூருடை

18 பிரியன் எழுத்து இப்படிக்கு இவை திருவெண்ணாவல் பட்ட னெழுத்து இப்படிக்கு இவை திருச்சாலகத்

19 ய உடையார் திருவானைக்கா உடையாரைப் பூஜிக்கும் . . தலையூர் தென்றி திருவெண்கா

20 திருக்கட்டலூர் வாச்சியன் தக்ஷிணாமூர்த்தி பட்டனெழுத்து [இப்]படிக்கு இவை கோயில் நாயகம்

21 து இப்படிக்கு இவை மருத மாணிக்க நம்பி எழுத்து இப்படிக்கு இவை திருவம்பல நம்பிக்கு

22 இப்படிக்கு இவை சமைய மந்திரி எழுத்து இப்படிக்கு இவை திருவெண்ணாவலுடையார் எழுத்து

---

1. நிலம் குறியீட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கல்வெட்டு

இடம் : இரண்டாம் திருச்சுற்று மேற்குச் சுவர்.

செய்தி : கல்வெட்டு தொடர்ச்சியின்றிக் கிடைத்துள்ளது. தம் பெயரால் இத்திருக்கோயிலில் அமைந்திருந்த சந்தி வழிபாட்டிற்குத் தேவதான இறையிலியாக புவனேகவீரன் நிலக்கொடை. கடமை, உறைநாழி, தண்டாள்ப்பேறு, வெட்டி, பரிவாரம், ஊர் கணக்கர் ஜீவிதம், இறையிலி மாக்கலம் என்னும் பல வரியினங்களின் பெயர் களும், அணிலை, சிபிராந்தக நல்லூர் போன்ற ஊர்களின் பெயர்களும் கிடைக்கின்றன. இப்புவனேகவீரன் இரண்டாம் மாறவர்மன் விக்கிரம பாண்டியனாவான்.

காலம் : பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 உடையார் திருவானைக்கா உடையார் கோயில் [ப]ாத மூலபருடை பஞ்சாசாரியர் தேவகன்மிகளுக்கு தே[த]வ உடையார்க்கு பிள்ளை களில்

2 கம்பீர வளநாட்டு உறையூர் கூற்றத்து அணிலை நான்கெல் லைக்குட்பட்ட க[ார்] மறுவும் ஒரு பூவும் வம்பும் புன் பயிரும் அகவாற்று புன்

3 முதலான உறைநாழி தண்டாளர் பேறும் வெட்டி பரிவாரம் ஊர் கணக்கர் ஜீவிதம் இறையிலி மாக்கலம் மற்றும் எப்பேர்பட்டினவும் உட்பட

4 ருமா[ா]ள் இடைத்தூபத்துக்கு பின்பாக தம் பேரால் கண்ட புவ[ே]னக வீரன் சந்திக்கு திருப்படி மாற்று உள்ளிட்டு வேண்டும் நிவந்தங்களுக்கு இராச கம்பீர

5 ார் மறு[வும்] ஒரு பூவும் வம்பும் புன் பயிரும் அகவ[ாற்று] புன் பயிரும் நத்தமும் [தோ]ட்டமும் உட்பட்ட நிலத்தில் பழந் தேவ தானம் பள்ளிச் சந்தம் நீக்கி நின்ற நிலத்துக்கு ஒட்டுப்படி கடமை யும் அந்தராயங்களால் முதலான உறைநாழி தண்டாள்ப் பேறு வெட்டி பரிவாரம் ஊர் கண

6 னவும் உட்பட்டு இவ்வாண்டு கார் முதல் தேவதான இறையிலி யாய் இறுப்பதாக இடுவதென்றும் இப்படி சந்திராதித்தவற் செல்வதாக[க்] கல்லிலும் செம்பிலும் வெட்டித்து கொள்க இவை மிழலைக் கூற்றத்து நடுவிற் கூற்றத்து சிபிராந்தக நல்லூர்

7 ராயன் எழுத்து

மூன்றாம் கல்வெட்டு

இடம் : மேலது.

செய்தி : இறைவனுக்குரிய பூமாலைகளுக்காக அத்தாணி என்னும் சிற்றூரில் ஒரு வேலி நிலம் கொடையாகத் தரப்பட்டுள்ளது. இந்நிலம் இராஜவிபாடன் என்னும் கோலால் அளக்கப்பட்டது.

காலம் : பதினாறாம் நூற்றாண்டு.

1 இராஜராஜ வளநாடு மழை நாடு மேலை முறி அத்தாணியில்
2 இராஜவிபாடனால் நிலம்[1] [வே*]லி இந்நிலம் வேலியும் அனுபவி
3 த்து கொண்டு திருப்ப[ள்*]ளித்தாமம் தாழ அற ஸேவித்துப் போ
4 கவும் இப்படிக்கு . . . .[2]

---

## 8. ஆதிகுடி கல்வெட்டு

*இரா. சுஜாதா*

இலால்குடியிலிருந்து அன்பில் செல்லும் சாலையில் உள்ள ஆதிகுடி கயிலாசநாதர் திருக்கோயிலில் நான்கு கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன. அவற்றுள் காலத்தால் பழமையானது முதலாம் பராந்தகருடையது. கள ஆய்வு மேற்கொண்டபோது இதுவரை படியெடுக்கப் படாத இரண்டு புதிய கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

முதற் கல்வெட்டு

இடம்: முன் மண்டபக் கிழக்குச் சுவர்.

செய்தி: மதிணவை என்பவர் இத்திருமண்டபத்திற்குத் தட்டோடு இடும் திருப்பணிக்கு உதவியுள்ளார்.

காலம்: பதின்மூன்றாம் நூற்றாண்டு.

1 இத்திருமண்டபம் தட்டோடு இடுவித்தான் மதிணவை.

---

1. நிலம் குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளது.
2. எழுத்துக்கள் விளங்கவில்லை.

இரண்டாம் கல்வெட்டு

இடம்: கருவறையின் தெற்குக் குமுதம்.

செய்தி: கல்வெட்டின் இடைப்பகுதி, தெற்குத் தேவ கோட்டத்தி லுள்ள ஆலமர் கடவுளுக்குக் கட்டப்பட்டிருக்கும் பிற்காலக் கட்டட அமைப்பால் மறைக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் உள்ள 'மதுரை வழங்கி' என்ற சொல்லாட்சி சிறப்புக்குரியது. இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட மூன்றாம் குலோத்துங்கனின் கல்வெட்டுகள் எதுவும் அவன் மதுரையை வழங்கிய செய்தியைக் குறிப்பிடவில்லை.இது புதிய செய்தியாக உள்ளது. கல்வெட்டின் இடைப்பகுதி கிடைத்தால் இது குறித்து மேலும் சில தகவல்களைப் பெறமுடியும்.

காலம்: மூன்றாம் குலோத்துங்கன், கி. பி. 1178–1218.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ மதுரை வழங்கி ஈழமும் பாண்டிய — — — — வள நாட்

2 டு கலார்க் கூற்றத்து திருவாதிகுடி மாதேவற்க்கு உள்ளூற்கள் தேவதானம் சிவநாம — — — — 7வது நாள்[1]

---

## 9. குரங்கணில் முட்டம் குடைவரைக் கல்வெட்டுகள்

*அர. அகிலா*

காஞ்சிபுரம் வந்தவாசி சாலையில் தூசிக்கு அருகே இடப்புறம் பிரியும் மண் சாலையில் இரண்டு கிலோ மீட்டர் பயணித்தால் குரங்கணில் முட்டத்தை அடையலாம். இங்குச் சம்பந்தர் பாடல் பெற்ற கொய்யா மலர் சூடுவார் கோயிலும், பல்லவர் காலக் குடைவரை யொன்றும் உள்ளன. குடைவரை எளிய அமைப்பில் கிழக்கு முகமாய்க் குடையப்பட்டுள்ளது. ஏழு கருவறைகளைக் கொண்டுள்ள குடைவரை தமிழகத்தில் இது ஒன்றுதான். இக்குடைவரையில் படியெடுக்கப் படாத இரண்டு முழுமையான கல்வெட்டுகளும் மூன்று துணுக்குக் கல்வெட்டுகளும் கிடைத்தன.[2] துணுக்குக் கல்வெட்டுகளில் இரண்டு

---

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

2. திரு. கூ. ரா. சீனிவாசன் தம்முடைய பல்லவர் குடைவரைகள் நூலில் இங்குப் படியெடுக்கப்பட்ட கன்னர தேவனின் இருபத்து நான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தவிர மேலும் நான்கு கல்வெட்டு கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் கல்வெட்டுகளைப் பதிப்பிக்கவில்லை. இக்கல்வெட்டுகளிலுள்ள செய்திகளைப் பற்றியும் குறிப்பிடவில்லை.

இங்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆய்வின்போது உதவிய திரு. சூடாமணி அம்மையார் நன்றிக்குரியவர்.

முதற் கல்வெட்டு

இடம்: உள் மண்டப, முக மண்டபத் தூண்களின் கீழ்ச்சதுரங்கள்.

செய்தி : இக்குடைவரை இருக்குமிடம் பத்தாம் நூற்றாண்டில் பல்லவபுரம் என்று அழைக்கப்பட்டது. இப்பல்லவபுரம் காலியூர்க் கோட்டத்தைச் சேர்ந்த எரிகீழ் நாட்டின் கீழ் இருந்தது. பல்லவபுரத்து ஊரவையார் இறைவனுக்கு மூன்று போதும் திருவமுது படைக்க வாய்ப்பாகக் கோயிலுக்கு நிலம் வழங்கினர். குண்டியாறு என்னும் ஆற்றின் பெயர் கிடைக்கிறது. கல்வெட்டில் குடைவரை கல் மண்டகம் என்றழைக்கப்படுகிறது. அக்காலத்தில் மண்டபத்தை மண்டகம் என்று அழைத்தமைக்கு இதுவும் ஒரு சான்றாகும். திருக் கழுக்குன்ற மலையின் இடைப் பகுதியிலுள்ள குடைவரை ஒருகல் மண்டகம் என்று அழைக்கப்படுகிறது. முதலாம் மகேந்திரரின் வரலாற்றுப் புகழ்மிக்க கல்வெட்டைப் பெற்றிருக்கும் மண்டகப்பட்டு குடைவரையின் பெயரிலும் மண்டகம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

காலம் : இராட்டிரகூட மன்னனான மூன்றாம் கிருஷ்ணனின் இருபத்துநான்காம் ஆட்சியாண்டு, கி. பி. 964.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கச்சியுந்
2 தஞ்சையுங் கொண்ட ஸ்ரீ
3 கன்னர தேவ[ர்]க்கு யா
4 ண்டு இ[ரு*]பத்து நாலாவ
5 து காலியூர் கோட்ட
6 [த்து எரிகீழ் நா]ட்டுப் ப
7 [ல்ல]வபுரத்து ஊ
8 ரோம் எங்க(ள்)ளூர் கல் ம
9 ண்(ட்)டகத்து திருவடி
10 க(ள்)ளு[க்]கு முக்காலு
11 ம் திரு[வ]முதுக்கு [வை*]வ
12 த்த நிலம் கீ[ழ்*]பார்க் கெல்லை
13 வா[ன]வந் மல்லடி ந[ம்]
14 சே[1] பூமிக்கு மேக்கும் தெ

1. நஞ்சை என்று படிக்கவும்.

15 ன்பாற் கெல்லை குண்

16 டியாற்று வடக்கும் மே

17 ல்பாற் கெல்லை பலி

18 ப் பட்டிக்கு கிழக்கும்

19 வடபாற் கெல்லை நீர்கா

20 டு வாக்காலு தெற்க்கு [இறிந்த][1]

21 . . . . . எல்லையிலு[ம்]

22 — —

23 ஒன்பதரை மா நில

24 மும் இறையும் எச்சோ

25 று கட . . . . . . .

26 . னோம் இ த$_4$ம்மம் ரக்ஷி

27 ப்பான் — —[2]

## இரண்டாம் கல்வெட்டு

இடம் : முகமண்டபத் தூண் மேற்சதுரம்.

செய்தி : பல்லவபுரத்தைச் சேர்ந்த வைகானசன் பட்டன் என் பார்க்கு ஊரவையார் நிலக்கொடை.

காலம் : பத்தாம் நூற்றாண்டு.

1 — —

2 இவூர் வை

3 [காந]ஸந் க

4 [ண்*]ணன் பட்

5 டந்நுக்கு கா

6 ணியாக . .

7 . க் காணி

8 ய . . கு

9 டுத்தோம்

10 ஊரோம்

## மூன்றாம் கல்வெட்டு

இடம் : முகமண்டபத் தூண் கீழ்ச் சதுரம்.

செய்தி : கல்வெட்டின் தொடர்ச்சி கிடைக்கவில்லை. கோயிலின் பெயரும், ஊரின் பெயரும் உள்ளன.

---

1. இசைந்த என்று படிக்கவும்.
2. 28, 29 ஆம் வரிகள் சிதைந்துள்ளன.

காலம் : பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ கச்சியுந் தஞ்சை
2 [யு]ங் கொண்ட ஸ்ரீகன்னர
3 தேவர்க்கு யாண்டு இருபத்த
4 ஞ்சாவது காலியூர்க் கோட்ட
5 த்து எரிகீழ் நாட்டுப் பல்ல
6 வபுரத்து கல் மண்டக[த்து]
7 — —[1]

நான்காம் கல்வெட்டு

இடம் : உள் மண்டபத் தூண் கீழ்ச்சதுரம்.

செய்தி : கோயிலின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலம் : பத்தாம் நூற்றாண்டு.

1 எங்க(ள்)ளூர் கல்
2 மண்ட[கத்]து திருவ
3 டி

---

## 10. திருச்செந்துறைக் கல்வெட்டு

*மு. நளினி*

திருச்சிராப்பள்ளி கரூர் நெடுஞ்சாலையில் சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து சரியாகப் பத்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது திருச்செந்துறை. தற்போது ஜீயபுரத்தின் ஒரு பகுதியாக விளங்கும் இவ்வூர் சோழர்கள் காலத்தில் ஈசான மங்கலத்து பிரமதேயமாக விளங்கியது. இங்குள்ள சந்திரசேகரர் திருக்கோயில் கொடும்பாளூர் குலக் கொழுந்தான பூதி ஆதித்த பிடாரியால் கட்டப்பட்டது. அரிஞ்சய சோழரின் வாழ்வரசியாரான இப்பெருமாட்டி கண்ணாய்ப் போற்றிக் கட்டிக் காத்த இத்திருக்கோயில் கோபுரத்தில்தான் மிக அரிய சக்தி சதுஷ்காவின் சுதைத் திருமேனி இடம் பெற்றுள்ளது. இங்குப் படியெடுக்கப்படாத சில புதிய கல்வெட்டுகளும் அளவு கோல்களும் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றுள் மிக அரிய செய்தியைக் கொண்டிருக்கும் கல்வெட்டொன்றும், அளவு கோல்களும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன.

---

1. கல்வெட்டு முற்றுப் பெறவில்லை.

பழுதுபட்டிருந்த இக்கோயில் கோபுரம் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் மேனாள் ஆட்சியர் திருமிகு. க. செ. கிருஷ்ணசாமி அவர்களின் தொடர் முயற்சியால் இன்று நன்னிலை எய்தியுள்ளது. மண்ணுக்குள் மறைந்து போன கட்டடப் பகுதிகளும் வெளியுலகப் பார்வைக்கு வந்துள்ளன.

1. கல்வெட்டு

இடம் : கருவறை, உள் மண்டப ஜகதி. கல்வெட்டின் தொடக்க எழுத்துக்கள் சில தவிர எஞ்சிய முதற் பகுதி ஆல்மர் அண்ணலின் கட்டடப் பகுதியில் சிக்கியுள்ளன.

செய்தி: கொடும்பாளூர் ஆதித்தம் பூதி, தம் மகன் பூதி பராந்தகன் அன்னபிராயம் செய்த நாளில் திருச்செந்துறைத் திருக்கோயில் இறைவனுக்கும், பிள்ளையார்க்கும் படையல்கள் மற்றும் வழிபாட்டிற்காகத் தேவதான இறையிலியாக நிலக்கொடையளித்தார். குழந்தைகட்கு முதன் முதல் சோறூட்டும் போது இன்றும் கூட நல்லநாள் பார்த்து, இறைவனுக்குப் படையலிட்டுச் செய்வது பல குடும்பங்களில் பழக்கமாக உள்ளது. இச்சமுதாயப் பழக்கத்தின் வேர் ஆயிரம் ஆண்டுப் பழமையானதென்பதை இப்புதிய கல்வெட்டின் கண்டுபிடிப்பு உணர்த்துகிறது.

காலம் : முதற் பராந்தகன் காலம்.

1 ஸ்வஸ்தி — — — — ஆதித்தம் பூதியேன் என் மகன் பூதி பராந்தகன் அந்நப்ராயஞ் செ[ய்*]கின்ற இடத்து தக்ஷிணையாக பிரமதேயம் ஈசான ம

2 ங்கலத்து — — — — ம் உடும்போடி ஆமை தவழ்ந்தது எப்பேர்ப் பட்ட நிலமு முண்ணிலம் ஒழிவின்றி குடி நீக்கிய தேவதானமாக நீரோடு அட்டி இறையி

3 லி சந்திராதி — — — — படி திருவமிதுக்கு பதக்காறு குத்தல் பழவரிசி சிறுகாலைக்கும் உச்சம் போதைக்கும் ஆக சூல நாழியால் பதின[ா*]று நாழிக்கு நிசதி நெல் ஐங்குறுணி இருநாழி உரியா

4 ழாக்கான ப[டி] — — — — கலனே இரு தூணிப் பதக்கினால் நிலம் ஒன்றரையே யொருமா முக்காணி அரைக் காணி முந்திரி கையும் தூப்பருப்பு நாழிக்கு நெல் நானாழியும் நெய்யமிது

5 முழ(ா)க்கி — — — — க்கு நெல் அறு நாழியும் காயத்துக்கும் உப்புக்கும் புளிக்கும் நெல் முன்னாழியும் தயிரமிது போது நாழி யானபடி முன்னாழியால் நெல் குறுணி ஒரு நாழியும் ஆக

6 நிசதி — — — — னே முக்குறுணியால் நிலம் இரண்டேய் ஒரு மாக்காணியும் கணவதியார்க்கு நிசதிப்படி அப்பம் அமிது செய்ய

அரிசிக்கு நெல் முன்னாழியும் நெய் யாழாக்குக்கு நெல் முன்னாழியும் சர்க்கரை இரு பலத்துக்கு நெல் இருநாழியும் ஆ[க*] இப் பரமேச்ₒவரருடைய கணவதியார்க்கு நிசதி குறுணியானபடி ஆண்டுவரை முப்பதின் கலத்தா

7 . . . . — — — — ம் முக்காணி முன்திரிகையால் நெல் நால்க் கலனே அறு நாழியுமாக நெல் நானூற்றுக் கலத்துக்கும் நிலம் நால் வேலியும் சூல காலால் வேலி நூற்றுக் கல வரிசையால் என் மகன் பூதி பராந்தகன் அன்ன பிராயஞ் செய்த நான்று இ[1]

**2. அளவு கோல்கள்**

இத்திருக்கோயிலில் இருந்து இரண்டு அளவு கோல்கள் அவற்றின் பெயருடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**அ. குழிக்கோல்**

இடம்: மையக்கோயில் கருவறைத் தெற்குச் சுவர். ஆலமர் அண்ணல் கோட்டத்துக்கு இடப்புறம் பிரதிவரிக்கு மேலுள்ள கம்பின் முகப்பு.

செய்தி: 90 செ. மீ. இடைவெளி விட்டு வெட்டப்பட்டிருக்கும் இரண்டு கூட்டல் குறிகளால் குறிக்கப்பட்டிருக்கும் இவ் அளவுகோல் குழிக்கோலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

காலம்: பத்தாம் நூற்றாண்டு.

\+ 90 செ. மீ. + இது குழி கோல்

**ஆ. நிலமளந்த கோல்**

இடம்: மையக் கோயில் உள்மண்டபத் தெற்குச் சுவர். பிரதி வரிக்கு மேலுள்ள கம்பின் முகப்பு.

செய்தி: நான்கு மீட்டர் இடைவெளி விட்டு வெட்டப்பட்டிருக்கும் இரண்டு கூட்டல் குறிகளால் குறிக்கப்பட்டிருக்கும் இந்த அளவுகோல் நிலமளந்த கோலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தநல்லூர் வட தீர்த்தநாதர் திருக்கோயிலில் உள்ள முதலாம் இராசராசரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் இக்கோல் குறிக்கப்பட்டிருக்கிறது.[2] ‘திருச்செந்துறை ஸ்ரீவிமானத்து வெட்டிக் கிடக்கும் பெருங்கோலால் நிலன் மூன்று மாவும்.’

காலம்: பத்தாம் நூற்றாண்டு.

\+ 4 மீட்டர் + நிலமளந்த கோல்

---

1. கல்வெட்டின் இறுதிவரி முழுமையும் கட்டடப் பகுதியில் சிக்கியுள்ளது.
2. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 8, க. எண். 660.

## 11. பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயில் தகட்டுப் பொறிப்பு

### எஸ். இராமச்சந்திரன்

இடம்: தஞ்சாவூர் அரண்மனை வளாகம், நாலுகால் மண்டபத் தெருவிலுள்ள பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் கோயிலில் உள் மண்டபப் படியின் மீது போர்த்திருக்கும் பித்தளைத் தகட்டின் மீது பொறிக்கப்பட்டுள்ளது.

செய்தி: செகன்னாதய்யன் செங்கம்மாள் தம்பதியரின் மகன் தேப்பெருமாள் என்பவர் கோயில் உள்மண்டபப் படியின் மீது பித்த ளைத் தகடு போட உதவினார்.

காலம்: கி. பி. 1819 பிப்ரவரியாக இருக்கலாம்.

1 வெகுதானிய ஹு பங்குனி மீ" உ செகன்னாதய்யன் செங்கம்மாள்
2 யிவாள் குமாறன் தேப்பெருமா சதா சேவை படி சேற் . . . . .

---

## 12. பிள்ளையார் சிற்பக் கல்வெட்டு

### எஸ். இராமச்சந்திரன்

இடம்: தஞ்சாவூர் அரண்மனை வளாகத்தில் வேளாண்மைத் துறையால் கிடங்காகப் பயன்படுத்தப்பட்ட அறையில் சிதைந்த நிலை யில் வினாயகர் திருமுன் ஒன்று உள்ளது. இதிலிருந்த வினாயகர் புடைப்புச் சிற்பத்தை வெளிக் கொணர்ந்து தூய்மை செய்த போது கி. பி. பதினான்காம் நூற்றாண்டு எழுத்தமைதியுடன் கல்வெட்டொன்று சிற்பத்தில் பொறிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

செய்தி: காரிக்குடியைச் சேர்ந்த சீராள தேவர் இத்திருமேனியை எழுந்தருளுவித்தார். காரிக்குடி என்ற ஊர் திருவையாற்றுக்கு அருகிலுள்ள காருகுடியாக இருக்கலாம்.

காலம்: பதினான்காம் நூற்றாண்டு.

1 காரிகுடைய
2 ரார் சீராள தேவ
3 ர் எழுந்தருளு
4 வித்த பிள்ளை
5 யார்

---

# 13. இடமலைப்பட்டி புதூர்க் கல்வெட்டு

பி. தமிழகன், மு. நளினி

இடம்: திருச்சிராப்பள்ளி மேலூர் சாலையில் திருச்சிராப்பள்ளியி லிருந்து ஆறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள இடமலைப்பட்டி புதூரில் இருக்கும் இரட்டை மலையை ஒட்டியுள்ள பாழ் வெளியில் புதர்களை யொட்டி உள்ளது.

செய்தி: சோமரசம் பேட்டை அரசு மேனிலைப் பள்ளியைச் சேர்ந்த இடும்பன், ராஜலிங்கம் என்னும் மாணவர்களால் கண்டுபிடிக் கப்பட்ட இக்கல்வெட்டு சீரமைக்கப்பெற்ற கற்பலகையின் ஒரு பக் கத்தே பொறிக்கப்பட்டுள்ளது. மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இதன் மேற்பகுதியில் பதினோரு கருவிகள் செதுக்கப்பட்டுள்ளன. இடமிருந்து வலமாகக் கோடாரி, அங்குசம், அம்பு, கொடுவாள், அரி வாள், ஈட்டி, சிறு தடி, கத்தி, சங்கு, மழு என்னும் கருவிகள் காணப் படுகின்றன. வலக் கோடியிலுள்ள கருவி சிதைந்துள்ளதால் அடை யாளம் காண முடியவில்லை. இக்கருவிகள் அனைத்தும் போரோடு தொடர்புடையனவாகத் தெரிகின்றன.

இரண்டாம் பிரிவின் வலப்புறம் வலிமையான குதிரையொன்று நிற்கிறது. இதன் கழுத்தைப் பிணைத்திருக்கும் கயிற்றைத் தன் இரு கைகளாலும் பிடித்திழுத்தபடி ஓர் ஆடவர் உருவம் செதுக்கப்பட்டுள் ளது. மடித்துக் கட்டப்பட்ட இடையாடையுடன் காட்சியளிக்கும் இவர், குதிரையை இழுக்க முடியாமல் இழுப்பது போன்ற நிலையில், தலை யைச் சற்றுப் பின்னே இடப்புறமாகச் சாய்த்த நிலையில் காணப்படு கிறார். கைகளிலிருந்து நழுவும் கயிறு சுருளாய்க் காட்டப்பட்டுள்ளது. இவருக்குப் பக்கத்தில் வெட்டரிவாள் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டின் இறுதிப் பகுதியில் ஏழு வரிகளில் செய்தி காணப் படுகிறது. பனையூர் வாழ்க்கை என்னும் இடத்தில் அமைந்த கன்றாப் பில் ஊரைச் சேர்ந்த வேட்டன் மதிரை என்பார் காவு இட்டு அதைக் காப்பார் காலடிகளைத் தம் தலைமேற் கொள்வதாகக் குறிப்பிட்டுள் ளார். பனையூர் வாழ்க்கை என்னும் இடம் திருச்செந்துறை சந்திர சேகரர் திருக்கோயிலில் உள்ள முதலாம் பராந்தக சோழரின் கல்வெட் டொன்றிலும் இடம்பெறுகிறது.[1]

'காலமுக்கியங் குழுவாணை, நாட்டார் அடைக்கலம்' என்ற வரிகளுடன் கல்வெட்டு முடிகிறது. காலமுக்கியங் குழு என்ற

1. தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி 8, க. எண். 624.

பெயரில் அமைந்திருந்த ஒரு குழுவினரின் ஆணைப்படி இக்காவு இடப்பட்டிருக்கலாம். இந்த அறம் நாட்டாருக்கு அடைக்கலமாக்கப்பட்டுள்ளது. காவு என்ற சொல்லுக்கு அகராதியில் சிறு தெய்வங்களுக்குத் தரப்படும் பலி என்று பொருள் தரப்பட்டுள்ளது.[1] இந்நினைவுக் கல்லில் குதிரையின் வடிவமும் அதையொட்டி வெட்டரிவாளும் காட்டப்பட்டிருப்பதால் வேட்டன் மதிரை காவு கொடுத்தது குதிரையாக இருக்கலாமென்று கருத இடமுள்ளது.

இதுபோன்ற போர்க் கருவிகள் மற்றும் குதிரைச் செதுக்கலுடன் கூடிய காவுக் கல்வெட்டு தமிழகத்தின் வேறெந்தப் பகுதியிலும் இது வரை கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை.

காலம்: பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ பனையூர் வாழ்
2 கை கன்றாப்பிலுடையா
3 ன் வேட்டன் மதிரை இட்ட கா
4 வூ ரக்ஷித்தார் அடி என் த
5 லை மேலன காலமுக்கி
6 யங் குழுவாணை நாட்டா[ர்*] அடை
7 க்கலம்

---

## 14. இடையாற்று மங்கலம் கல்வெட்டுகள்

மதிமலர் சுகுமார்

இலால்குடிக்கு அருகிலுள்ள இடையாற்று மங்கலத்தில் மாங்கலீசுவரர் திருக்கோயில் புதிய மெருகுடன் அமைந்துள்ளது. சோழர் திருப்பணியான இக்கோயிலில் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த சில கல்வெட்டுகள் உள்ளன. இவை பிற்காலத்தைச் சேர்ந்தவையாக இருந்தபோதும் வரலாற்று முக்கியத்துவம் கருதி படியெடுக்கப்பட்டன.

முதற் கல்வெட்டு

இடம்: வெளி மண்டபத் தென்புறத் தூண் நடுச் சதுரம்.

செய்தி: இடையாற்று மங்கலத்தைச் சேர்ந்த பஞ்சுவய்யர் ஆணையிட அவரது மகனார் கிருஷ்ணய்யர், பிள்ளையார்க்கு மண்டபம் கட்டினார்.

---

1. *மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இரண்டாம் பாகம்,*
இ, மா. கோபாலகிருஷ்ணக்கோன் வெளியீடு, பக்- 498.

காலம்: கி. பி. 1893.

1 1893 ஸு திற்கு நந்தன ஸு
2 த்தில் இடையாற்று ம
3 ங்கலம் மகாரா[ஜ*]ரா[ஜ*] ஸ்ரீ
4 பஞ்சுவய்யர் உத்திர
5 வுப்படி குமாரர் கிரு
6 ஷ்ணய்யர் விக்கி
7 னேசுவர மண்டபம்
8 கட்டி வைத்தார்
9 சுபமஸ்து

## இரண்டாம் கல்வெட்டு

இடம்: வெளி மண்டபக் கிழக்குத் தூண் கீழ்ச்சதுரம்.

செய்தி: இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்ட காலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலம்: கி. பி. 1876, ஆனி 27.

1 கலியுகாதி
2 4977 த
3 ாது ஸு ஆ
4 னி மீ 27 உ
5 கும்பாபிஷே
6 க மாச்சு உ

## மூன்றாம் கல்வெட்டு

இடம்: பைரவர் திருமுன்னுக்கு அருகிலுள்ள ஆடவல்லான் மண்டபத் தூண்.

செய்தி: இராவ்பகதூர் அய்யாசாமி சாஸ்திரியாரின் அன்னையார் திருமதி மீனாட்சியம்மாள் திருமுன் கட்டுவித்து ஆடவல்லானை எழுந்தருளுவித்தார்.

காலம்: கி. பி. 1890.

1 1890 வருஷத்திற்கு
2 விகிருதி வருஷத்தில்
3 பகு சுருதம் ராய்பக
4 தூர் அய்யாசாமி
5 சாஸ்த்திரியளிட புண்
6 ய மாதா மீனாட்சியம்
7 மாளிட ஸ்ரீ நடராஜா
8 பிரதிஷ்டையும்
9 ஆலயமும்

---

## 15. உய்யக்கொண்டான் திருமலை கல்வெட்டுகள்

மு. நளினி

திருச்சிராப்பள்ளி சோமரசம்பேட்டை சாலையில் திருச்சிராப்பள்ளியிலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவில், சாலையின் வலப்புறத்தே அமைந்துள்ள உய்யக்கொண்டான் திருமலை திருக்கோயில் சோழர் காலக் கலைக்கோயிலாகும். இங்குள்ள பிச்சையேற்கும் அண்ணலின் சிற்பம் அற்புதமானது.

இத்திருக்கோயிலில் இருந்து மையம் படியெடுத்த புதிய கல்வெட்டுகளுள் சில வரலாறு முதல் இதழில் வெளியாகியுள்ளன. மேலும் இரண்டு கல்வெட்டுகள் இந்த இதழில் வெளியாகின்றன.

முதற் கல்வெட்டு

இடம்: இரண்டாம் திருச்சுற்று வடக்குச் சுவர்.

செய்தி: வங்கிபுறத்தைச் சேர்ந்த அக்கிசன்ம கிரமவித்தன் திருவீதி மடப்புறமாக நிலக்கொடை அளித்துள்ளார். இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு உறத்தூர்க் கூற்றத்துப் பிரமதேயமான குண்டூர் என்னும் ராஜநாராயண சதுர்வேதிமங்கலத்தின் வடபிடாகையான நெற்குன்ற நிலம் கொடையாகத் தரப்பட்டுள்ளது. தாந சபை, அண்ணி குளம் போன்ற சொல்லாட்சிகள் ஆய்வுக்குரியவை. திருநாட்களின் போது திருவீதி பணிசெய்தார், 'காவு' என்ற சொல்லால் குறிக்கப்பட்டனர் போலும். அவர்கட்குப் பகல் உணவு தரப்பட்டது.

காலம்: முதற் குலோத்துங்கன், கி. பி. 1108.

1 ஸ்வஸ்திஸ்ரீ கொலோத்துங்க சோழ தே$_3$வர்க்[கு யாண்]டு 38

2 ஆவது ராஜமஹேந்திர வளநாட்டு உறையூர் கூற்றத்து ப்$_3$ரஹ்மதே$_3$

3 ய . . . . . . . ராஜாஸ்ரீய ச°துர்வ்வேதி$_3$மங்கலத்து இ[ருக்கும்] தொன்ம்[ை]

4 ம ெ . . . . . . . . மானமேருசேரி வங்கிபுறத்து அக்கிசன்மக்க்ரமவித்தநா

5 ன . . . . . . . . யேன் இந்நாட்டு திருக்கற்குடி விழுமிய தே$_3$வர் கோயிலில் ச

6 ண்டேச்°வரர் தே$_3$[வர்] ஸ்ரீஹஸ்தத்திலேய் திருவீதி மடப்புறமாக நா[ன்] நீர்வார்த்து குடுத்த

7 நிலமாவது இரட்டபாடி கொண்ட சோழ வளநாட்டு உறத்தூர் [கூற்ற]த்து ப்ரஹ்

8 மதே$_3$யம் குண்டூரான ராஜநாராயண ச°துர்வேதி மங்கலத்து வடபிடாகை

9 க நெற்குந்றமென்று பேர் கூவப் . . . . . நான காரம்பிச் செட்டு ஆயர்களே

10 று பட்டந் பக்கல் பரிவ[ர்த்*]தனை செ[ய்*][து கொண்டு]டையே நாயிருன்த நெற்குன்ற நில

11 த்துக் கெல்லையாவது மாதவன் குறி . . . . க்கும் பலதேவன் வயல் எல்லை

12 க்கு ஓடம் போகி உள்படட கிழக்கும் வ[டபாற் கெல்] லை ராஜாஸ்ரீய ச°துர்வ்வேதி ம

13 ங்கலத்தார் எல்லை[க்*]கு தெற்கும் கீழ்பா[ற் கெல்]லை மேற்படியூர் த$_3$ாந ஸபை$_4$யார் நில

14 த்துக்கு மேற்கும் தென்பாற் கெல்லை இ . . . லைக்கும் அண்ணி குளத்துக்கு வடக்கும்

15 — — — —

16 கிழக்கும் . . ள . . . . . ல் உள்பட்ட இவ்விசைந்த பெருநான் கெல்லைக்குள்பட்ட

17 நிலமு மலைய — - மேனோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும் ம

18 ற்று[ம்*] எப்பேர்பட்டது . . . . . . . நா . ப்$_3$ரம்மதே$_3$யபடி நிலம் தி[ருத்]தி இ[வ்]வி

19 சைன்த பெருநான் [கெல்லையுள்] பட்ட நெல்குன்ற[த்*]து மேல் கரை[நி]லமு[ம்*] கீழ்கரை

20 நிலமு[ம்*] ஆக — — ன்த நெ[ல்]லுக்கு செய்யும் தன்மம[ாவ]து

21 — — லாண் . . . . சென் ஒன்றுக்கு நெல் . . . . . . .

22 க ஆண்டு(வ்) வரை நெல் . . . . . . . மும் இவர் — —

23 க்காசு 4 லும் ஸ்ரீராஜாஸ்ரீய சதுர்வேதி மங்கலத்தில் திருநாள் திருவீதி பணி செய்[ய*]

24 ப்போது அக்காவு பகல் உண்ண [நா]ள் ஒன்றுக்கு நெல்[1] 10 கலம்[2] . . ஆக நாள் 12 க்

25 கு நெல்[1] 120 கலத்துக்கு[2] மற்றும் வேண்டுவந வற்றுக்கும் இந்த தேவர் பிள்ளையார்

26 த்ெ . . . . . தவர் தே௩வர் ஸ்ரீ[ஹ*]ஸ்தத்தே இந்[த ]வளாந் வயலும் நெற்குந்றமும் திரு

27 வீதி மடப்புறமாக நீ

28 ர்வா[ர்*]த்து குடுத்[தேன்]

29 வங்கிபுறத்து அக்கி சந்

30 ம கிர[மவித்தநாந] திருவீதி

31 சொ . . யே[ந்] இப்படிக்கு ரா

32 [ஜாச்ூரய] ச் சருப்பேதி ம

33 ங்கல — —

34 — —

இரண்டாம் கல்வெட்டு

இடம்: வசந்த மண்டபம், மேற்குச் சுவர்.

செய்தி: இத்திருக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிக்க இரண்டாம் இராசேந்திர சோழரின் மகளார் மதுராந்தகியாரின்[3] தமக்கையார் தொண்ணூறு ஆடுகள் கொடையளித்துள்ளார். கல்வெட்டு பெரிதும் சிதைந்துள்ளதாலும் கல்வெட்டின் ஒரு பகுதியை மறைத்துத் தூணொன்று பிற்காலத்தில் நிறுவப்பட்டிருப்பதாலும் மதுராந்தகியின் தமக்கை பெயரையும் அவர் தந்த குத்துவிளக்கின் பெயரையும் பெறமுடியவில்லை. இக்கல்வெட்டால் பெயர் பொறிக்கப்பட்ட குத்துவிளக்குகள் அக்காலத்தே கொடையளிக்கப்பட்ட செய்தி கிடைத்திருக்கிறது.

---

1. நெல் குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளது.
2. கலம் குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளது.
3. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1974, பக். 228.

காலம்: இரண்டாம் இராசேந்திர சோழர், கி. பி. 1059.

1 - 5 திருமகள் என்று தொடங்கும் மெய்க்கீர்த்தி

6 — — [கே]ாப்பரகேசரிபந்ம — — — — ஸ்ரீராஜேந்த்ர தேவர்க்கு யாண்டு [8ஆவது]கேரளாந்தக வளநாட்டு [உ]றை[யூர்]

7 கூற்றத்துத் திருக்கற்குடி — — — — . . லே சூலவுழக்கால் நிசதம் உ . . . . . . . அட்டி இரவும் பகலும் எ[ரிவ]தாக உ

8 . . . . ஸ்ரீராஜேந்த்ர தேவர் — — — — மதுராந்தகியார் தமக் கையா[ர்] . . . . . நுடையாளா . . . . . . . . றைக்காடன்

9 — — சந்த்ராதித்த — — — — நொந்தா விளக்கு ஒந்றி — — இவ்[வாடு] தொ[ண்ணூ]றும் இவ்விளக்கு

10 . . . . த்த[நா]ச்சாணி குள — — — — லையென்று எ[ழுத்]து வெட்டின குத்து விளக்கு ஒ

11 — — திராதித்தவ — — — — வர்கந் — — பந்மாஹேச்ₒவர ரக்ஷை

---

## 16. புள்ளமங்கைக் கல்வெட்டுகள்

இரா. சுஜாதா, கோ. வேணிதேவி

தஞ்சாவூர் கும்பகோணம் நெடுஞ்சாலையில் தஞ்சாவூரிலிருந்து பதினான்கு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது புள்ளமங்கை. தற்போது பசுபதி கோயிலென்று பெயர் வழங்கும் இச்சிற்றூரில் முதலாம் பராந்தகர் காலத்துக் கற்றளியொன்று சிற்பக் களஞ்சியமாய் அமைந் துள்ளது. இங்குள்ள ஆடற்கரணச் சிற்பங்கள் டாக்டர் மா. இராச மாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் முதன் முதலாக அடையாளம் காணப்பட்டுக் கலை வரலாற்றுலகிற்கு அறிமுகப்படுத்தப் பட்டன. இத்திருக்கோயிலில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட புதிய கல்வெட்டுகளுள் சில இங்கு இடம் பெறுகின்றன.

### முதற் கல்வெட்டு

இடம் : முகமண்டபக் கிழக்குச் சுவர்.

செய்தி : புள்ளமங்கலத்து மகாசபையார் இத்திருக்கோயிலில் இரண்டு நந்தா விளக்குகள் எரிப்பதற்காக எட்டு மா நிலம் கொடை. மண்டகம் என்பது மண்டபத்தைக் குறிக்கும்.

காலம் : முதலாம் பராந்தகர், கி. பி. 946.

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட
2 கோப்பரகேசரிபந்மற்க்கு
3 யாண்டு 39ஆவது பிரமதே
4 யம் புள்ளமங்கலத்து
5 மஹாஸபை₄யோ[ம்*] எங்கள்
6 மண்டகபுறத்து எட்டு மா
7 செ புள்ளமங்கலத்து திருவால
8 ந்துறை மஹாதே₃வ[ர்*]க்கு சந்திராதிச்சவ
9 ல் இரவும் பக(ல்)லும் எரிவதா
10 க நிசதம் உரி(ய்) எண்ணையால்
11 இரண்டு நொந்தா விளக்குக்கு
12 குடுத்தோம் மஹாஸபை₄யோ
13 ம் இவை பன்மாஹேச்₀வர ரக்ஷை

## இரண்டாம் கல்வெட்டு

இடம் : முகமண்டபத் தெற்குத் தாங்குதளக் கபோதம்.

செய்தி : திருஇளங்கோயில் கணப்பெருமக்கள் ஆடவல்லான் படிமத்தை நிறுவி, அதற்கான திருஅமுதுப் படையலுக்கு நிலக் கொடை. ஸ்ரீகண்டமங்கலத்திலிருந்த இந்நிலம் புள்ளமங்கலத்து சபையாரிடம் விலைக்கு வாங்கித் தரப்பட்டது. இளங்கோயில் ஒன்று இப்பகுதியில் இருந்ததும், அது கணப்பெருமக்களால் நிர்வகிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க செய்திகள்.

காலம் : முதலாம் பராந்தகர், கி. பி. 923.

1 ஸ்வஸ்திஸ்ரீ மதிரை கொண்ட [கோப்பரகே]சரிபந்மக்கு யாண்
2 டு 16 ஆவது திருவி[ளங்]கோயில் கணபெருமக்கள்
3 தாங்கள் எழுந்தருளுவித்த கூத்தபெருமாளுக்கு தி
4 ருவமிதுக்கு ஸபை₄யாரிடை விலைக்கு கொண்டு தந்த
5 நிலம் ஸ்ரீகண்டமங்கலத்து கிழாரின் தென்வ . . மாவரை

## மூன்றாம் கல்வெட்டு

இடம் : முகமண்டப வடக்கு குமுதம்.

செய்தி : வாச்சியன் நாரியன் காடன் இத்திருக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிப்பதற்காக ஸ்ரீகண்டமங்கலத்தில் நிலக்கொடை.

காலம் : பத்தாம் நூற்றாண்டு.

1 ஸ்வஸ்திஸ்ரீ புள்ளமங்கலத்து திருவாலந்துறை
2 மஹாதே$_3$வ[ர்*]க்கு வாச்சியன் நாரியன் காடன் உழக்கு னெ[ய்*]
3 யால் ஒரு னொந்தா விளக்கு இரவும் பக(ல்)லும் சந்திராதி$_3$
4 [த்த]வல் எரிவதற்கு குடுத்த நிலம் ஸ்ரீகண்ட$_3$மங்கல
5 [த்து] கீழ் குளத்து இ[ரண்டு] . . . . வெள்ளவாக்கரை
6 . மாவும் ஆக நிலம் . . மா

## 17. கீழப்பழுவூர்க் கல்வெட்டுகள்

**அ. அப்துல் மஜீது, மு. நளினி**

திருச்சிராப்பள்ளி செயங்கொண்டம் சாலையில் ஐம்பத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது கீழப்பழுவூர். கல்வெட்டுகளில் சிறுபழுவூர் என்றழைக்கப்படும் இவ்வூரில் பழுவேட்டரையர்களால் கட்டப்பட்ட கற்றளிகள் இரண்டு உள்ளன. அவற்றுள் ஆலந்துறையார் திருக்கோயில் பழுவேட்டரையர் மறவன் கண்டனாரால் கற்றளியாக்கப்பட்டது. குடக்கூத்துச் சிற்பமொன்றைக் கபோதக் கூட்டில் கொண்டுள்ள இக்கோயில் வளாகத்திலிருந்து கண்டுபிடிக்கப் பட்ட புதிய கல்வெட்டுகளுள் சில இங்கு இடம் பெறுகின்றன.

### முதற் கல்வெட்டு

இடம் : மடப்பள்ளிக் கட்டடத்தின் தென்புறச் சுவர்.

செய்தி : நித்த விநோத வளநாட்டுக் கழார்க் கூற்றத்துப் பூஞ்சூற்றூர் கிழவன் சொக்கன் திருவையாறுடையானான இராசேந்திர சோழ மூவேந்த வேளான், சிறு பழுவூர்ச் சபையாரிடம் அன்றாடு நற்காசுகள் இரண்டினுக்கு நிலமொன்றை இறையிலித் தேவதானமாக விலைக்குப் பெற்று, இத்திருக்கோயில் இறைவனுக்குத் திருநந்தவனம் அமைக்கக் கொடையளித்ததைக் கூறும் இக்கல்வெட்டில் மலைய விச்சாதிரப் பேரேரி, பவித்திர மாணிக்க வதி, சுத்தமல்லி வாய்க்கால், முதலிய நீர் வழிகளைப் பற்றி அறிகிறோம்.

காலம் : முதலாம் குலோத்துங்கர், கி. பி. 1120.

1 ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவ[ர்*]த்திகள் ஸ்ரீ கொலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 50 தாவது

2 வடகரை உத்துங்க துங்க வளநாட்டு குன்றக் கூற்றத்து ப்$_3$ரஹ்மதே$_3$யம் சிறுபழுவூர் ஸபை$_4$யோம்

3 நிலவிலை ஆவணம் இவ்வூர் திருவாலந்துறை உடைய மஹா தே$_3$வற்க்கு திருநந்தவநம் இ

4 றையிலி தேவதாநமாய் சந்த்$_3$ராதித்தவல் செல்லக் கடவதாக நித்த விநோத வளநாட்டு கிழா

5 ர்க் கூற்றத்து பூஞ்சூற்றூர் பூஞ்சூற்றூர் கிழவந் சொக்கந் திருவை யாறுடையாநாந ராஜேந்த்ர சோழ

6 மூவேந்த வேளான் எங்கள் பக்கல் விலை கொண்டு விட்ட நிலத்துக்கு எல்லையாவது இவ்

7 வூர் மலைய விச்சாதிரப் பேரேரி கீழ் பவித்த மாணிக்க வதிக்குக் கிழக்கு சுத்தமல்லி வாய்க்கா

8 லுக்கு வடக்கு இரண்டாங் கண்ணாற்று முதற்(ச்) சதிரத்து தெற்(க்)கி(ல்) [லே]

9 நிலங் கால் இந்நிலங் காலும் விற்றுக் குடுத்து இவ்விராஜேந்த்ர சோழ மூவேந்த வேளான் பக்கல்

10 கொள்வதாந எம்மிலிசைந்த விலைப் பொரு ளன்றாடு நற்காசு 2 இக்காசு இரண்டும் ஆவணக் களி

11 யே கைச்செ(ல்)லவறக் கொண்டு இந்நிலங் காலும் விலைக்குற விற்றுப் பொருளறக் கொண்டு

12 இறையிலி தேவதாநமாக விற்றுக் குடுத்தோம் சிறுபழுவூர் சபையோம்

13 இவ[ர்*]கள் பணிக்க இந்நில விலையாவணம் எழுதிநேந் இவ்வூர் மத்$_3$த்$_4$யஸ்த[ந்]

14 முடி கொண்டான் சொக்கநாந மூவாயிரப் பிரியநேந் இவை எந் எழுத்து

## இரண்டாம் கல்வெட்டு

இடம் : இரண்டாம் திருச்சுற்றின் கிழக்குச் சுவர்.

செய்தி : இக்கல்வெட்டால் இரு நாட்டாருக்கிடையே விபத் தொன்றால் நேர்ந்த பகையையும் அது தீர்ந்த வகையையும் அறிய முடிகிறது. முதலாம் குலோத்துங்கரின் முப்பத்தெட்டாம் ஆட்சி யாண்டில் சூநிமான் நாட்டாரைச் சேர்ந்த சூநிமான் அரையன் ஒத்தனான வேசாலி நாடாழ்வானும், பள்ளி நாட்டாரைச் சேர்ந்த தழும்பனூர் பட்டன் தேவனான திருச்சிற்றம்பலனும் கோல் எறிந்து கொண்டிருந்த வேளையில், கை தவறுதலாகக் கோல் பட்டு பட்டன்

தேவன் இறந்துவிட்டான். இச்செயல் சூநிமான் மேல், பள்ளி நாட்டார்க்குப் பெரும் பகையை மூட்டிவிட்டது. இப்பகையைத் தீர்க்க, இறந்தவன் நினைவாக இக்கோயிலில் நந்தா விளக்கொன்று எரிக்குமாறு சூநிமான் நாட்டார் கூற, அதைப் பள்ளி நாட்டார் ஏற்றுக் கொண்டமையால், வேசாலி நாடாழ்வான் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் விதத்தில் இக்கோயிலில் விளக்கெரிக்க முப்பத்திரண்டு பசுக்களைக் கோயிலாரிடம் கொடையாகத் தந்தான். இவ்வேசாலி நாடாழ்வான் வடகரை இராசேந்திர சிம்ம வளநாட்டுக் காரைக்காட்டுச் செந்நிவலக் கூற்றத்து மிறை நாட்டைச் சேர்ந்தவனாகக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறான்.

காலம் : விக்கிரம சோழர், கி. பி. 1127.

1 ஸவஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபற்மரான திரிபுவனச் சக்ரவ [ர்த்திகள் விக்]கிரம சோழ தேவர்க்கு யாண்டு ஒன்பதாவது வடகரை ராஜேந்த்ர ஸிம்ஹ வளநாட்டு

2 மேல் காரைக் காட்டுச் செந்நிவலக் கூற்றத்து மிறை நாடாழ்வ — — — — யில்லிருக்கும் சூநிமாந் னரையன் ஒத்த(ந்)னான வேசாலி நாடாழ்வாநேந் இந்நா

3 ட்டுத் தழும்ப(ந்)நூர் இருக்கும் பட்டந் தேவநான திருச்சிற்றம் — — — — கொலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு முப்பத்தெட்டாவது எங்கள் சூநிமா

4 ந் பகையில் நாங்கள் எய்யா நிற்க இடையே கைய் பிழையாலிவ் — — — — கோல் பட்டுப் பட்டமையில் இந்நாட்டுப் பள்ளி நாட்டார் எந் மேலே பகையிட்டமையில்

5 இந்தப் பகை தீர இந்நாட்டு பள்ளி நாட்டாரும் சூநிமாந் நாட்டாரும்கூட இருந்து காணாக் கோல் பட்டு கைப் பிழையால்(ப்) பட்டமையில் இவனைச் சாத்தி ஒரு திருநுந்தா விள

6 க்கு கொள்க வெந்று சூநிமாந் நாட்டார் சொல்ல பள்ளி நாட்டாரும் ஸம்மதித்த — — — — விளக்கொன்றுக்கும் வடகரை உத்தொங்க தொங்க வளநாட்டு குந்றக் கூற்றத்து ப்₃ரஹ்மதே

7 யம் சிறுபழுவூர்த் திருவாலந்துறை உடைய மஹாதே₃வற்(க்)கு வைப்பதெந்று — — — — ஸம்மதித்தமையில் வைச்ச நுந்தா விளக்கொந்றுக்கும் பசு முப்பத்திரண்டும் சூநி

8 மாந் அரையந் ஒத்த(ந்)நாந வேசாலி நாடாழ்வாந் நடைதர பள்ளி நா[டாழ்வான் சந்திராதி]தவர் இரவு பக(ல்)லெரிய விட்டமைக்கும் இப்பசு முப்பத்திரண்டும் இக்கோ

9 யில் காணியுடைய சிவப்பிராமணரோம் கைக்கொண்டு எரி — — — — [வி]ளக்கொந்று இது பந்மாஹேச்₂வர ரக்ஷை

## மூன்றாம் கல்வெட்டு

இடம்: கருவறை வடக்குச் சுவர்.

செய்தி: திருவாலந்துறை மகாதேவர்க்கு மூன்று சந்திக்கும் தயிரமுதிற்காக இருபது ஆடுகள் கொடை தந்தவர், இக்கோயிலைப் பழுவேட்டரையர் மறவன் கண்டனார் கற்றளியாக்கிய காலத்து மேனாயகமாக இருந்து செய்வித்த மங்கலநாட்டு மங்கலத்துக் கவுசியன் நக்கன் மாறபிரானான நம்பி ஆரூரன். தொல்காப்பியத்துள் வரும் 'நாடுரி' இக்கல்வெட்டில் கையாளப்படுவது குறிப்பிடத்தக்கது.

காலம்: உத்தம சோழர், கி. பி. 978.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்ப
2 ரகேஸரிபம்மக்கு ய
3 ாண்டு 9ஆவது அ
4 டிகள் பழுவேட்டரய
5 ர் மறவன் கண்டனா
6 ர் கன்மி அடிகள் அ
7 ரிளிச் செய்ய சிறுப
8 ழுவூர் திருவாலந்துை
9 ற திருக்கற்றளி மேனாய
10 கமா நின்று செய்வித்த
11 மங்கல நாட்டு மங்கலத்து
12 கவிசியன் நக்கன் மாறபி
13 ரானான நம்பியாரூரன் திருவ
14 ாலந்துறை மஹாதேவர்க்கு
15 மூன்று சந்திக்கும் வைத்த
16 தயிரமுது நாராய நாழி
17 யால் நாடுரி நாடுரிக்கு
18 ம் வைத்த சாவா மூவாப்
19 பேராடு இருபது இது
20 பந்மாஹே
21 ச்ஂவர ரக்ஷை

## நான்காம் கல்வெட்டு

இடம்: மகா மண்டப வடக்குச் சுவர்.

செய்தி: மதுராந்தகன் கண்டராதித்தர் இக்கோயில் இறைவர்க்கு நாள்தோறும் உழக்கு நெய் கொண்டு நந்தா விளக்கொன்று எரிக்கத் தொண்ணூறு ஆடுகள் கொடையாகத் தந்தார்.

காலம் : உத்தம சோழர், கி. பி. 981.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மற்(க்)கு யாண்டு 12 ஆ
2 வது குன்றக் கூற்றத்து ப்ரஹ்மதேயம் சிறுபழுவூர் மஹா
3 தேவர்க்கு திருவாலந்துறை உடையார்க்கு மதுராந்தகன் கண்டரா
4 தித்தந் வை(ய்)த்த விளக்கு 1 ஒந்றும் நொந்தா விளக்கு எரிய வை(ய்)த்த
5 சாவா மூவாப் பேராடு தொண்ணூற்றிநால் நிசதி உழக்கு நெய் இது பந்மா
6 கேச்வர ரக்ஷை

ஐந்தாம் கல்வெட்டு

இடம் : மேலது.

செய்தி : மாதேவடிகளும், முதுகுடி வாழ் வீர கலி அரங்கனும் சண்டையிட அந்தச் சண்டையில் வீரகலி அரங்கன் இறக்க நேர்கிறது. இறந்தவன் நினைவாகத் திருவாலந்துறை மகாதேவர்க்கு நந்தா விளக்கொன்று எரிக்கப் பழுவேட்டரையர் குமரன் மதுராந்தகர் தொண்ணூறு ஆடுகளைக் கொடையளித்தார்.

காலம் : உத்தம சோழர், கி. பி. 981.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மக்கு யாண்டு
2 12ஆவது குன்றக் கூற்றத்து ப்ரஹ்மதேயம் சிறு
3 பழுவூர் மஹாதேவர்க்கு அடிகள் பழுவேட்டரையர்
4 குமரன் மதுராந்தகனேன் மாதேவடிகளுங் கு
5 ன்ற கூற்றத்து முதுகுடி இருக்கு[ம்*] வீரகலி அரங்கநும் கிலாச்சு வீரகலி அரங்கன்
6 பட அவனைச் சாத்தி வைத்த நொந்தா விளக்கு ஒந்று ஒ
7 ரு விளக்கெரிய வைச்ச ஆடு தொண்ணூறுங் கொண்டு நிசதம்
8 நாராய[த்*]தால் உழக்கும் இரவும் பகலும் எ
9 ரிய வை(ய்)த்த சந்திராதித்தவல்
10 இது பந்மாவேற்ச்வர[1] ரக்ஷை

---

1. பன்மாஹேச்வர என்று படிக்கவும்.

ஆறாம் கல்வெட்டு

இடம் : மடப்பள்ளிக்கு அருகே உள்ள பலகைக் கல்வெட்டு.

செய்தி : அரசு நிலையிட்ட ரெங்கப்ப மழவராயர் பண்டாரத்தார் திருப்பழூவூர் யோகவனீசுவர சுவாமிக்கு உச்சிக் காலத்தில் திருவிளக் கொன்று எரிக்க ஏலாக் குறிச்சியில் இலுப்பை, மா மற்றும் மாவடை, மரவடை அடங்கிய தோப்பொன்றைக் கொடையாகத் தந்தார்.

காலம் : பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டாகலாம்.

1 பரிதாபி ஞு
2 ஆவணி மீ 22 வ
3 திருப்பழுவூர்
4 யோகவனீசுர
5 சுவாமிக்கு
6 உச்சிக் கால
7 திருவிளக்கு
8 கட்டளைக்கி
9 ஏலா குறிச்சி யி
10 லுப்பை மரம் மா
11 மரம் மாவடை மர
12 வடை உள்பட தோப்பு
13 அரசு நிலையிட்ட ரெ
14 ங்கப்ப மழவராய
15 பண்டாரத்தார் ஆவர்[க*]
16 ள்[1] உபயம் உ
17 யிந்த தர்மத்துக்கு யாதாமொரு(ே)வன் வி
18 கர்தம் பண்ணினானாகில் கெங்கை கரையில்
19 காராம் பசுவைக் குரண்ண தோழத்திலே[2]
20 போவ[ர*] ன் உ

ஏழாம் கல்வெட்டு

இடம்: முன் மண்டப வாசல் நிலை.

செய்தி: விக்கிரமசோழன் திருவாசல் என்ற பெயரில் அமைந் திருந்த இவ்வாசல் நிலை பழுதுபட்ட காலத்து, விளந்தை வாழ் சேவகப் பெருமாள் கச்சியராயர் இதைத் திருத்தியமைத்தார்.

காலம்: பதினாறு அல்லது பதினேழாம் நூற்றாண்டாகலாம்.

1 ஸ்வஸ்திஸ்ரீ இந்த வி
2 க்கிறம சோழன்
3 திருவாசல் முறிந்
4 து விழுகையில்
5 பின்பு விளந்தையி
6 ல் சேவகப் பெருமா
7 ள் கச்சிராயர்
8 திருப்பணி இரா
9 குத்த மிண்டன்

---

1. அவர்கள் என்று படிக்கவும்.
2. கொன்ற தோஷத்திலே என்று படிக்கவும்.

# 2. விட்டுப்போன தொடர்ச்சிகள்

## திருச்செந்துறைக் கல்வெட்டுகள்

திருச்செந்துறை சந்திரசேகரர் கோயிலில் இருந்து 1903இல் சில கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன. அவற்றுள் சில முழுவதுமாகப் படியெடுக்கப்படாத நிலையில் தென்னிந்தியக் கல்வெட்டுகள், தொகுதி எட்டில் இடம் பெற்றுள்ளன. கள ஆய்வுகளில் இக்கல்வெட்டுகளின் விட்டுப்போன தொடர்ச்சிகளை மைய ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அவற்றுள் இரண்டு இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

### முதற் கல்வெட்டு

மையக் கோயிலின் மேற்குச் சுவரில் உள்ள விக்கிரம சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று தென்னிந்தியக் கல்வெட்டு கள் தொகுதி எட்டில் 606ஆம் எண்ணிடப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள் ளது. இக்கல்வெட்டின் விட்டுப்போன இடைப்பகுதி மேற்கு மற்றும் தெற்கு ஜகதியில் இருக்கிறது. வெளியிடப்பட்டிருக்கும் கல்வெட்டுச் செய்தி தொடர் ஒழுங்கின்றி இருந்தும் பதிப்பில் வரிகளின் எண்கள் தொடராகத் தரப்பட்டுள்ளன.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் முதற் பகுதியான **1—16** வரிகள்

1 ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு 3

2 ஆவது ராஜமகே[ஹ*]ந்த்ர வளநாட்டு உறையூர்[க்] கூ [ற்*] றத்துப் பி

3 ரஹ்மதே$_3$யம் விருதரா[ச*] பயங்கரச் சருப்பேதி மங்கலத்து உ

4 டையா[ர்*] திருச்செந்துறையுடையார் கோயிலில்

5 சிவப்பிராஹ்மணர் மொகிலியந் உய்யவந்தாந் உய்

6 யநின்றாடுவானான ஒலோகவி[ட]ங்க பட்ட

7 (ந்)நும் காச்$_0$யபந் தேவந் பொற்காரியாந தி[ல்*]லை

8 நா[ய]க பட்டநும் இவ்விருவோம் இதே$_3$வர்க்கு பண்

9 டு உப$_4$யமா[ய்*] வருகிற உபையங்கள் செலுத்த எ

10 ங்களுக்கு உடலில[ா]மையில் உரகூருடை

11 [ய]ாந் சொற்றுணை கங்கை சடைக்கரந்தாந்நிடை நாங்கள் கொண்[ட*] காசு

12 பத்து இக்காசு பத்துக்கும் இவ்வாட்[டை வைகாசிமா]தம் முத

13 ல் காசு 1றுக்கு திங்கள் கா[சு*]த் திரம பலிசை பொலிவதாக இக்காசு பத்துக்கும் திங்

14 கள் பொலிவதாந பலிசைத் திரமம் . ½ இத்திரமம் . . . . [னை] ரக்கும் இத்திங்கள்

15 முதல் இத்தேவர்க்கு ஒரு திரு[ந*]ந்த . . . . . க நா[ள்] ஒ[ந்] றுக்கு எரி

16 யு[ம்*] எண்ணை உழக்காக மாஸம் ஒன்[று] . . . . ரியு . . . . . றுணி [இ]ப்படி ஸம்

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இடைப் பகுதி

17 மதித்து இக்காசு பத்தாலும் வந்த பலியை கொண்டு இத்தேவர்க்கு முட்ட[ா]மல் ஒரு திருநந்தாவிளக்குச் சந்திராதித்தவல் செலு

18 த்தக் கடவோமாக இப்படி சம்மதித்தோம் நாங்களும் எங்களுறவு முறையாரும் இக்கோயிலிற் காணியுடையார்ப் படி கடந்து புகு(து) வாரும் இவ் உபையமே

19 கொண்டு செலுத்தக் கடவராகவும் இப்படி ஸம்மதித்துக் கல்மேல் வெட்டுவித்தோம் இவ்வநைவோம் இப்படி அறிவார் இந்தத் தாநத்து அடியாரும் இவ்வூர்

20 ஸபை$_4$யாரும் இருக்க இஉபையம் ஸம்மதித்து இக்காசு 10ம் உரகூருடையாந் சொற்றுணை கங்கைச் சடைக்கரந்தாநிடை இவ்வனைவோம் இவர்கள் சொல்ல இப்பிரமாணம் எழுதிநே

பதிப்பிக்கப்பட்டிருக்கும் பிற்பகுதியான 17—26 வரிகள்

பதிப்பில் கல்வெட்டின் பிற்பகுதி பதினேழாம் வரியாகத் தொடர்கிறது. இப்போது விட்டுப் போன இடைப் பகுதியாக நான்கு வரிகள் கிடைத்துள்ளதால் இங்குப் பிற்பகுதி வரிகளின் எண்கள் தொடர் ஒழுங்கு கருதி மாற்றப்பட்டுள்ளன. அடைப்புக் குறிக்குள் தொகுதியில் தரப்பட்டிருக்கும் பழைய வரி எண் தரப்பட்டுள்ளது.

21 (17) . . . . . . . . . இப்படிக்கு இக்(ெ)

22 (18) கோயிலி[ல்*] சிவப்பிராமணந் மொகி[லி]யந் உய்யவந்தாந் உய்யநிந்றாடுவாநாந உலோகவிடங்

23 (19) க பட்டநேந் இவை எந் எழுத்து இப்படிக்கு இக்கோயிலில் சிவப்பிராமணர் காசியபந் தேவந்

24 (20) பொற்காரியாந தி[ல்*]லைநாயக பட்டநேந் இவை எந் எழுத்து இப்படி அறிவோம் விருதராஜபயங்

25 (21) கரச் சருப்பேதிமங்கலத்து திரு[ப்*]பேர் சேந்தந்

26 (22) அநந்தநாராயண பட்டந் எழுத்து இப்படிக்கு இவை

27 (23) திருச்சிற்றம்பல நம்பி எழுத்து பந்மாஹே
28 (24) ச்ஂவர ரக்ஷை உ உண்ணலாம் நெய்யொடு சோ[று] ஓ
29 (25) வாதே எப்பொழுதும் பண்ணெலாம் பாடி இருக்கலா
30 (26) ம் மண்ணெலா ம[க]ல்மாட நீடுரகூர் கங்கை சடைக்கரந் தாந் பொந்மாடத் தெப்பொழுதும் புக்கு

இரண்டாம் கல்வெட்டு

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி எட்டில் 630ஆம் எண்ணிடப் பட்டுப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டின் பிற்பகுதி கிடைத்துள்ளது. பதிப்பிக்கப்பட்டிருக்கும் பகுதி உள்மண்டபத்தின் தெற்குக் குமுதத்தில் உள்ளது. புதிதாகக் கிடைத்துள்ள அதன் தொடர்ச்சி அதே பகுதியில் ஜகதியில் காணப்படுகிறது.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் பகுதி 1—5 வரிகள்

1 ஸ்வஸ்திஸ்ரீ கோ[ப்*]பரகேசரிபன்மற்கு யாண்டு 3வது பிரம தேயம் ஈசான மங்கலத்து பருடையோம் இவூர் திருச்செந் . . .
2 ய்[க்*] கற்றளிப் பெருமானடிகளுக்கு தேவதானமாக எங்கள் பருடை நிலத்தைய் நீரோடு அட்டி கு[டு]த்த நிலத்து[க்*]கு இசைத்த எல்லை மேக்கினுக்கு எல்லைய் அமண்குடி ஊர் எ[ல்] . . . .
3 கீழை தெருவினுக்கு கிழக்கும் கிழக்கினுக்கு எல்லைய் பாரதாயன் நக்கன் சாத்தனுள்ளிட்டாரும் பாதகாரி மருதஞ் சேந்தனும் ஆவெணி நாராயண நாராயணனும் ஆவணி[செ] . . . . .
4 லத்துக்கு மே[ர்*]க்கும் வடக்கினுக்கு எல்லைய் காச்சுவன் கண்ண நக்கனு மையித்திரையன் நாராயண[ன்] முருகன் உள்ளிட்டாரும் பாரதாயன் நாராயண நக்கனும் பாரத . . . . .
5 ட்டார் நிலத்துக்கு தெற்கும் தெற்கினுக்கு எல்லைய் மறவன் வாய்க்கு வடக்கும் இவ்வி[ன]சத்த பன்னான் கெல்லையுள் அகப் பட்ட பருடை நிலம் . . .

புதிதாகக் கிடைத்திருக்கும் பிற்பகுதி

6 றைக் கற்றளி பெருமானடிகளுக்கு தேவதானமாக நீரோடு அட்டிக் குடுத்தோம் பருடைஓம் இறையும் எச்சோறும் வெட்டியும் குலை யும் மற்றும் எப்பேர்பட்டது[ம்*] நா
7 ங்களேய் காத்து குடுப்போமானோம் பருடையோம் இநிலத்தை நங்கை பூதி ஆதித்த பிடாரியேன் திருச்செந்துறை நான் எடுப்பி

8 த்த கற்றளி பெருமா(ன்)னடிக(ள்)ளுக்கு யிநிலத்தினை நூற்று கழைஞ்சு பொன் குடுத்து கல்லி செயியாக்கி மின்னாமழை வயக் க(ல்)லென்று

9 பேர் யிட்டு அரையே அரைக்கால் செயியும் யிநிலம் உழுவார் பத் தெட்டு குத்தல் பழவரிசி திருவமிதுக்கு அட்டுவிதாக திருசென் துறை

10 பெருமானடிக(ள்)ளுக்கு பூதி ஆதித்த பிடாரியேன் நீரோடு அட்டி குடுத்தேன் இது பன்மாஹேச்ஂவர [ரக்ஷை]

---

## ஈசன் எழுதும் கீழ்க்கணக்கு

இறைவனின் பல்வேறு விளையாட்டுக்களைத் திருமுறை ஆசிரியர்களும், கவிஞர் பெருமக்களும் கணக்கின்றிக் குறித் துள்ளனர். ஆனால் இறைவன் கணக்கெழுதுவதாய் வீட்டில் பெரியவர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறோமே தவிர கவிதைகளில் படித்ததில்லை. அப்பர் பெருமான் ஐந்தாம் திருமுறையில் இன்னம்பர் கோயிலைப் பாடுமிடத்தில் ஈசன் எழுதும் கீழ்க் கணக்கைக் காட்டி அந்தக் குறையைத் தவிர்க்கிறார்.

தூய மலர்களைத் தூவி நேயத்தோடு தொழுது வணங்கி அன்பு மேலீட்டால் கண்களில் நீர் மல்க இதழ்கள் நெகிழ்ந்து இறைவனின் திருப்பெயர்களைப் பலவாய்ச் சொல்லிப் பத்திமை காட்டுவாரையும், இந்தச் சிந்தனையே இல்லாமல் பொழுதை வீணே போக்கித் தெய்வத்தைப் புறக்கணிப்பாரை யும் கடவுள் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார். இந்தச் செயற்பாடுகளையெல்லாம் தம்முடைய கணக்குப் பேரேட்டில் அவர் குறித்தும் வைக்கிறார். காலம் வரும்போது கணக்குகள் கனியும்.

''தொழுது தூமலர் தூவித் துதித்துநின்று
அழுது காமுற்று அரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே.''

# 3. ஆய்வுக் கட்டுரைகள்

## 1. கீழப்பாவூர் கள ஆய்வும் கண்டுபிடிப்புகளும்

### நெல்லை நெடுமாறன், எஸ். இராமச்சந்திரன்

சற்றொப்ப 530 ஆண்டுகளுக்கு முன் தென்காசியைத் தலை நகராகக் கொண்டு அரசாண்ட பராக்கிரம பாண்டியன், தென்காசியில் காசி விசுவநாதர் உலகம்மன் ஆலயம் எழுப்பிய வரலாறு நமக்குத் தெரியும். ஆனால் அதற்கும் 200 ஆண்டுகளுக்கு முன்பு, தென்காசிக்கு அருகில் அமைந்துள்ள பாவூரில் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர் குலத்துடன் நெருங்கிய உறவு கொண்டிருந்த ஒரு குழுவினர் வாழ்ந்தனர் என்ற வரலாற்றுச் செய்தி நம்மில் பலருக்குத் தெரியாது. இன்று பாவூர் சத்திரம், மேலப்பாவூர், கீழப்பாவூர் என்ற பெயர்களில் அழைக்கப்படும் ஊர்கள் அன்று 'பாகூரான க்ஷத்ரிய சிகாமணி நல்லூர்' என்றும், 'பாகூரான க்ஷத்ரிய ரக்ஷ நல்லூர்' என்றும் அழைக்கப்பட்டன. இவ்வூர்கள் அடங்கிய குறுமறை நாடு என்ற பகுதியே முன்னர்க் குறிப்பிட்ட வீரக்குழுவினரின் நிர்வாகத்தில் அடங்கியிருந்தது. தன்னாட்சி அதிகாரம் படைத்த இக்குழுவினரின் கீழ், தண்டல் நாயகம் செய்வார் என அழைக்கப்பட்ட வரி வசூல் அதிகாரிகள் இருந்தனர்; படை இருந்தது; தந்திரத்தார் எனப்பட்ட படைத் தலைவர் இருந்தனர். கீழப்பாவூரில் திருக்கபாலீச்சுரம் என்ற பெயருடன் திகழ்ந்த சிவன் கோயிலுக்கு இக்குழுவினர் பல கொடைகளைத் தந்தனர். அக்கோயில் தற்போது திருவாலீசுவரர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலுக்கு மேற்கில் ஓர் ஏரி வெட்டுவித்தும், அருகில் திருமால் கோயில் ஒன்று எழுப்பியும் ஊருக்குப் பெருமை சேர்த்த அவர்கள் போர் முனைக்குச் செல்வதில் மோகம் கொண்டவர்கள் என்ற கருத்தில், முனையெதிர் மோகர் என அழைக்கப்பட்டனர். இப்பெயராலேயே அந்த ஏரியும், திருமால் கோயிலும் முனையெதிர்மோகர்ப் பேரேரி[1] என்றும், முனையெதிர் மோகர் விண்ணகர் என்றும் அழைக்கப்பட்டன. முனையெதிர் மோகர் விண்ணகர் பல மாற்றங்களுக்கு ஆளாகி இன்று வெங்கடாசலபதி கோயில் என அழைக்கப்படுகிறது.

திருவாலீசுவரர் கோயிலிலுள்ள கல்வெட்டுகள் பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இக்கல்வெட்டுகளில் முனையெதிர் மோகர் பற்றிய குறிப்புகள் வருகின்றன. வெங்கடாசலபதி கோயிலில் இருந்த மூன்று கல்வெட்டுகள் பற்றிய குறிப்பு 1917ஆம் ஆண்டில் மையத் தொல்பொருள் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.[2]

கீழப்பாவூரில், இக்கல்வெட்டுகள் தவிர, பல இடங்களில் கல்வெட்டுத் துண்டுகள் சிதறிக் கிடக்கின்றன. இவை திருமால் கோயிலின்

இடிபாடுகளிலிருந்து சேகரிக்கப்பட்டனவாகத் தோன்றுகின்றன. இத் தகைய கற்கள் கொண்டு கட்டப்பட்ட நடைப் பாலம் ஒன்றும், வண்டிகள் செல்வதற்கான பாலம் ஒன்றும், கள ஆய்வில் கண்டறியப்பட்டன.



நடைப் பாலம்



வண்டிப் பாலம்

இவற்றின் காலம் பதினான்கு மற்றும் பதினாறாம் நூற்றாண்டாக இருக்கலாம். கி. பி. 1269–70ஆம் ஆண்டைச் சேர்ந்தவையாகக் கருதத் தக்க வெங்கடாசலபதி கோயில் கல்வெட்டுகளால், முனையெதிர் மோகர் எனப்பட்ட இவ்வீரக்குழுவினர், தென்னவன் ஆபத்துதவிகள் என்றும் அழைக்கப்பட்டனர் எனத் தெரிகிறது. தென்னவன் என்பது பாண்டிய மன்னனைக் குறிக்குமாகையால், பாண்டிய மன்னனுக்கு ஆபத்து நேரும் போதெல்லாம் விரைந்து சென்று உதவி புரிந்தவர்கள் இவர் கள் என அறியலாம்.

பாண்டியர் வரலாற்றை ஆய்வு செய்து ஆங்கிலத்தில் எழுதிய பேராசிரியர் கே. ஏ. நீலகண்ட சாஸ்திரியார் அவர்கள்[3] கி. பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தைச் சுற்றிப் பார்த்த மார்க்கோ போலோ என்ற வெனிஸ் நாட்டுப் பயணி தந்துள்ள சில குறிப்புகளை வெளியிட்டுள்ளார். ''பாண்டிய மன்னனுக்கு மெய்க்காவலராகச் செயற்படும் நிலப்பிரபுக்கள் சிலர் உள்ளனர். மன்னனுடனே உடன் கூட்டமாகச் செல்வது இவர்கள் வழக்கம். இவர்களுக்கென்று சிறப்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. பாண்டிய மன்னன் இறந்துவிட்டால் சொர்க்கத்திலும் அவனுடனேயே இருக்க வேண்டுமென்பதற்காக அவன் உடலுக்குத் தீ மூட்டப்படும்போது இவர்கள் தாமும் தீப்பாய்ந்து மடிந்து விடுவார்கள்''. மார்க்கோபோலோவின் இக்குறிப்பு தென்னவன் ஆபத்துதவிகளையே சுட்டுகிறது என்பது நீலகண்ட சாஸ்திரியாரின் கருத்தாகும்.

சோழ நாட்டில், அரச மரபுடன் மண உறவு கொண்டிருந்த விசுவாசம் மிக்க வேளக்காரப்படை போலவே, பாண்டிய மன்னர்பால் விசுவாசம் மிக்கவர்களாயிருந்த இத்தென்னவன் ஆபத்துதவிகள் பற்றிய தடயங்கள் எவையாகிலும் கிடைக்கின்றனவா என்று கீழப் பாவூரில் தேடியபோது, திருவாலீசுவரர் கோயிலுக்கு நேர் வடக்கே ஆபத்துக் காத்த அம்மன் என்ற பெயரில் சிறிய கோயில் ஒன்று இருப்பது தெரிய வந்தது. சுற்றிலும் வயல்வெளிகள் சூழ, கிணற்றின் மோட்டார் அறை போன்ற தோற்றத்தில் அமைந்த சிறிய கோயில் அது. ஆயினும் ஆபத்துக் காத்த அம்மன் என்ற பெயரும், சிவன் கோயிலுக்கு வடக்கில், ஊரின் வடவாயிற் செல்வியாக இத்தெய்வம் எழுந்தருளியிருப்பதும் கவனத்தை ஈர்த்ததால் இக்கோயில் ஆய்வு செய்யப்பட்டது.

கோயிலுக்கு வெளியே ஒரு மூலையில் கைகள் சிதைவுற்று, தலையும் தனியாக உடைந்த நிலையில், பழங்காலச் சிற்பம் (காளியின் கற்சிலை) ஒன்று காணப்பட்டது. கோயிலில் பூசை செய்து வரும் வயிராவியை (பண்டாரம் இனத்தவர்) விசாரித்ததில் இத்தெய்வம்தான் ஆபத்து காத்த அம்மன் என்றும், இசுலாமிய மன்னர் படையெடுப்புக் காலத்தில் இச்சிற்பம் உடைக்கப்பட்டதால் அரசி மங்கம்மாள் காலத்தில் (பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கம்) வேறு சிற்பம் செய்து வைக்கப்பட்டது என்றும், அவருடைய காலத்தில் இப்பகுதியில் குடியேறிய வைகைக் கரையாளர் எனப்படும் பிராமணர்கள்தான் இன்றும் இக்கோயிலில் வழிபட்டு வருகின்றனர் என்றும், அப்போதிலிருந்து தமது மூதாதையர் பொறுப்பில் இக்கோயில் இருந்து வருகிறது எனவும் கூறினார். மங்கம்மாள் காலத்திற்கு முன்னர் மேலப்பாவூர், குறும்பலாப்

பேரி (குறுமறை நாட்டுப் பேரேரி) ஊரைச் சேர்ந்த நாடார் சமூகத்தவர் இக்கோயிலில் வழிபட்டிருக்கவேண்டும் என்று தாம் கருதுவதாகவும், இன்றும் திருவிழாக் காலங்களில் குறும்பலாப்பேரி நாடார் சமூகத்தவர் இங்கு வந்து வழிபடுவதாகவும் கூறினார்.



காளிதேவி

கோயிலின் உள்ளே, சுவரில், சிற்பத்தொகுதி ஒன்று வைத்துக் கட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத் தொகுதியைக் கன்னிமார் எனத்



தவறாகக் குறிப்பிடுகின்றார், வயிராவியார். ஏழுபேர் இச்சிற்பத் தொகுதியில் காணப்படுகின்றனர். அதனால் ஏழு கன்னியர் எனத் தவறாகக் கருதப்பட்டது போலும். இவ்ஏழுபேரும் கையில் ஆயுதம் ஏந்தி நிற்கும் வீரர்கள் ஆவர். இவர்களே தென்னவன் ஆபத்துதவிகள் எனத் தோன்றுகிறது. இச்சிற்பத் தொகுதி, ஆபத்து காத்த அம்மன் சிற்பத்துக்குச் சற்று பிற்பட்ட காலத்தைச் சேர்ந்ததாகும். அதாவது அம்மன் சிற்பத்தைப் பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்தது எனக் கொண்டால், ஆபத்துதவிகள் சிற்பத்தைப் பதினான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தைச் சேர்ந்ததாகக் கருதலாம்.

மதுரைப் பாண்டியர்களின் உடன் கூட்டத்தாராகத் திகழ்ந்த உத்தம வீரர்களின் குலதெய்வச் சிற்பம், தான் என்ற முனைப்பை விடுத்துத் தொண்டர்களாகச் செயற்பட்ட அந்த முனையெதிர் மோகர்களின் குழுச் சிற்பம் ஆகியவற்றின் வழி கிடைக்கும் தடயங்கள் தென்காசிப் பாண்டியர் வரலாற்றுக்கே முன்னுரையாக அமையும் ஒரு வீரப்பாயிரம் எனில் அது மிகையாகாது.

### அடிக்குறிப்புகள்

1. பாவூர் சத்திரம் பேருந்து நிறுத்தத்துக்கு அருகிலுள்ள பிள்ளை யார் கோயிலின் முன்பு கிடக்கும் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள கல் வெட்டு; பார்த்துப் படிக்கப்பட்டது. ‘முனைவது மோகப் பேரேரி’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2. ARE 395 of 1917.

3. K. A. Nilakanta Sastry, The Pandyan Kingdom, Madras, 1972, P. 173.

# 2. குடிகாட்டின் தொல்பொருள்கள்

ம. காந்தி

தமிழகத்திற்கும் யவனத்திற்கும் இடையில் இருந்த வணிகத் தொடர்பு இலக்கியங்களாலும், தொல்லியல் ஆய்வுகளாலும் மெய்ப்பிக் கப்பட்டுள்ளது. தொல்லியல் அகழ்வுகளில் இதற்குப் பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன. அப்படிக் கிடைத்த இடங்களுள் அரிக்கமேடு முதன்மையான இடமாகும். இந்த ஊர் புதுச்சேரிக்குத் தெற்கில் அதே மாநிலத்தில் உள்ளது. அரிக்கமேட்டில் கிடைத்த தொல் பொருள்கள் போன்று வேறிடங்களிலும் கிடைத்திருக்கின்றன.

கடலூர் வட்டத்தில் உள்ள கடற்கரை ஊர் குடிகாடு. கடலூரிலி ருந்து சிதம்பரம் செல்லும் சாலையில் பதினோராம் கிலோமீட்டரில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்குக் கிடைத்துள்ள தொல்பொருள் களுள் பல, அரிக்கமேட்டில் கிடைத்தவற்றை ஒத்திருக்கின்றன. குடி காடு என்ற ஊருக்குப் பேருந்து நிற்குமிடம் காரைக்காடு கூட்டுச்சாலை யாகும். அதனால் குடிகாட்டைப் பற்றி எழுதியவர்கள் பிழையாகத் தொல்பொருள் கிடைக்கும் இடம் காரைக்காடு என்று எழுதிவிட்டனர். ஆனால் 1980 களில் அகழாய்வு செய்யப்பட்ட இடம் குடிகாடு என்ற ஊரைச் சேர்ந்த நத்தமேடு என்ற நிலப்பரப்பாகும்.

1991 ஆம் ஆண்டில் பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த புலவர் வேல்முருகன் அவர்கள் குடிகாட்டின் நத்தமேடு நிலத்தின் மேற்பரப் பில் வண்ணக் கண்ணாடிகள் மற்றும் மணிகள் கிடைக்கும் இடத்தைக் காட்டினார். அங்கிருந்து கொணரப்பட்ட மணிகளைக் கொண்டு கண்காட்சி ஒன்று கடலூர் அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது. ஸ்பிக் பார்மா நிறுவனத்தினர் குடிகாட்டில் தங்கள் தொழிற்கூடங் களுக்காகப் பல இடங்களில் அகழ்ந்தபோது ஓடுவகைகள், வண்ணக் கற்கள், பலவகை மணிகள், வண்ணக் கண்ணாடி மணிவகைகள் ஆகியன கிடைத்தன.

சிப்காட்டின் திட்ட அலுவலகத்தின் பின்புறத்தே ஸ்பிக் பார்மா தன்னுடைய நிறுவனத்திற்கு அடித்தளமிட அகழ்ந்தபோது வெளிறிய சிவப்பு நிறமுடைய கூர்முனைச் சாடிகளின் அடிப்பகுதிகள் ஆறு கிடைத்தன. இவ்வகைச் சாடிகள் ரோமானிய மதுச் சாடிகளைப் பின்பற்றிச் செய்யப்பட்டவை என்று தொல்லியல் அறிஞர் மார்டிமர் வீலர் தெரிவித்துள்ளார். கூர்முனைப் பகுதி கையாலும், மேற்பகுதி குயவனுடைய சக்கரத்தினாலும் செய்யப்பட்டு இணைக்கப்பட்டவை யாகும்.

ஸ்பிக் பார்மா நிறுவனத்தின் தென் கோடியில் லாரி எடை மேடை இருக்கின்றது. அதற்குப் பள்ளம் அகழ்ந்த இடத்தில் ரௌலெட்டெட் தட்டுகளின் ஓடுகளும், வண்ணக்கல் மணிகளும், கற்களும் அதிக அளவில் கிடைத்தன. ரௌலெட்டெட் மண் தட்டுகள் முழுமையாகக் கிடைக்கவில்லை எனினும் தட்டையான அடிப்பகுதியின் உடைந்த பாகங்கள் கிடைத்திருக்கின்றன. இவற்றில் வரிசையாகப் புள்ளிக ளிட்ட இரண்டு வட்டங்கள் போடப்பட்டுள்ளன. இவ்வட்டங்கள் முழு மையாகக் கிடைக்கவில்லை. இவ்வகைத் தட்டின் விளிம்பும், சுவரும் இரு வேறு வண்ணங்களில் உள்ளன. உள்பக்கம் சாம்பல் நிறமாகவும், வெளிப்புறத்தின் அடிப்பக்கம் சாம்பல் நிறமாகவும், செங்குத்துப் பகுதி இளஞ் சிவப்பு நிறமாகவும் இருக்கின்றது. இவ்வகை ஓடுகள் கி. மு. முதல் நூற்றாண்டின் முதற் பகுதியைச் சேர்ந்தவை என்று மார்டிமர் வீலர் தெரிவித்துள்ளார். இவை மிகவும் மென்மையான மண்ணால் வனையப்பட்டவை. மேலும் மணல் கலந்த, மென்மைத் தன்மை குறைந்த மண்ணால் செய்யப்பட்ட ரௌலெட்டெட் தட்டின் உடைந்த பாகங்களும் கிடைத்துள்ளன. சில ரௌலெட்டெட் தட்டுகளின் உடைந்த விளிம்புகள் பறவையின் மூக்கு போல் காணப்படுகின்றன.

ஈச்சங்கச் சங்குக் கூடையின் முத்திரை ஓடுகள்

சில பானைகளின் வெளிப்புறத்தே அடிப்பகுதியில் ஈச்சங்கச் சங்கால் செய்யப்பட்ட கூடையின் பதிப்பு காணப்படுகின்றது. இது சாம்பல் நிற ஓடு ஆகும். வேறு ஓர் ஓட்டின் வெளிப்புறத்திலும் இதே பதிப்பைக் காணமுடிகிறது. ஆனால் வெளிப்பக்கத்தில் இளஞ் சிவப்பு நிறமாக உள்ள இந்த ஓட்டில் மினுமினுக்கும் துகள்கள் உள்ளன. வேறோர் ஓட்டில் நேர்க் கோடுகளால் முத்திரை இடப்பட்டுள்ளது. மார்டிமர்வீலரின் அரிக்கமேடு ஆய்வுடன் ஒப்பு நோக்குகையில் இப் பொருட்களைக் கி. மு. முதல் நூற்றாண்டின் இறுதிப் பகுதி அல்லது கி. பி. முதல் நூற்றாண்டின் முதற் பகுதியைச் சேர்ந்தவையாகக் கொள்ளவேண்டியுள்ளது.

சாம்பல் நிறத்தில் கிடைத்திருக்கும் கிண்ணத்தின் பகுதி அரிட்டைன் மட்பாண்ட வகையைச் சேர்ந்தது எனக் கருதலாம். சிறிய வட்டமான அடித்தட்டிலிருந்து சாய்வாக மேலெழும் சுவர்ப் பகுதியில் ஆறு இணைக்கோடுகள் வட்டமாகக் கீறப்பட்டுள்ளன. இந்த ஓட்டின் தேய்ந்த அடிப்பகுதி இளஞ்சிவப்பு வண்ணம் கொண்டுள்ளது. இது மென்மையான ஓடாகும். உள்ளூரில் செய்யப்பட்ட பல சாம்பல் நிற, சிவப்புக் கருப்புநிற மென்மையான ஓடுகளும் கிடைத்திருக்கின்றன.

**மயில் கிண்ணம்**

கிண்ணத்தின் உட்பக்கம் கருப்பு நிறத்திலும், வெளிப்பகுதி இளஞ் சிவப்பும் சாம்பலும் கலந்த நிறத்திலும் உள்ளன. உட்பக்கத்தில் ஐந்து கோடுகளாலான இரண்டு பட்டைகள் கீறப்பட்டுள்ளன. இவற்றுக்கு இடையில் புடைப்பான மயில் முத்திரை இடப்பட்டுள்ளது. இது புது வகையான கிண்ணம் என்று மார்டிமர்வீலர் கூறியுள்ளார்.



ஈச்சங்கச் சங்குக் கூடையின் பதிப்புள்ள பானையோடு



கூர்முனைச் சாடிகளின் அடிப்பகுதிகள்

### சிவப்புக் கிண்ணம்

இது குறுகிய தட்டையான அடிப்பகுதி கொண்டு வெளிப்புறம் விரித்து, வளைத்துச் செய்யப்பட்டதாகும். சிவப்புப் பூச்சு உள்ள இடங்கள் தவிர மற்ற இடங்கள் மென்மையாக இல்லை. இந்த வகைக் கிண்ணத்தை மார்டிமர்வீலர் அரிதானது என்கிறார். இது போன்று மூன்று கிண்ணங்களின் ஓடுகள் கிடைத்துள்ளன.

### மூடிகள்

இங்குக் கிடைத்துள்ள மூடிகளில் ஒன்றின் குமிழியில் மூன்றில் ஒரு பகுதி துளைகள் இடப்பட்டுள்ளன. அத்துளைகளின் வழியாகத் திரவத்தை வடிகட்டி இருக்கலாம். துளையற்ற குமிழிகளுடன் இரு மூடிகள் கிடைத்துள்ளன. இவையும் சிவப்பு நிறமானவை.



துளைகளிடப்பட்ட குமிழியும் மயில் முத்திரைக் கிண்ணமும்

### பிற கண்டுபிடிப்புகள்

வெள்ளை நிறப் பானையின் மினுமினுக்கும் தோள்பகுதி ஓடு ஒன்று கிடைத்துள்ளது. இதில் சாய்வான கோடுகள் அழுத்தமாக வரையப்பட்டிருக்கின்றன. இவ்வகையைச் சாக்கின் பூச்சு என்கிறார் மார்டிமர் வீலர். வடிதட்டுகளின் உடைந்த பாகங்கள் கிடைத்திருக் கின்றன. ஓர் ஓட்டில் துளைகள் இருக்கின்றன. பானைகளின் உதட்டுப் பகுதிகள் ஆறு வகைகளில் கிடைத்திருக்கின்றன. உருண்டை யாகவும், மேற்புறம் தட்டையாகவும் உள்ள அவற்றின் கீழ்ப்பகுதிகளில் அலங்கரிப்பு உள்ளது. வானால் சட்டியின் கைப்பிடி வட்டமானது கிடைத்திருக்கின்றது. கைப்பிடி, சட்டியுடன் இணையும் இடத்தில் அரும்பு போன்ற அமைப்பு காணப்படுகிறது. சுடுமண் கலசத்தின் உடைந்த மூன்று ஓடுகள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று மென்மை யானது.

தானியக் குதிர்

கையினால் செய்யப்பட்ட தானியக் குதிர்களின் ஓடுகள் இளஞ் சிவப்பு நிறமுடையவை. இவற்றின் வெளிப் பக்கத்தில் விரலால் சாய் வான கோடுகள் இழுக்கப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது. ஓர் ஓட்டில், உள்ளே இருக்கும் தானியத்தை வாய் மூலமாக எடுப்பதற்குப் பதிலாகத் தேவையான போது தேவையான அளவு எடுத்துக்கொள்ள அடிப்பக்கத்தில் வழி வைக்கப்பட்டிருக்கின்றது.

கிணற்றின் வட்ட உறைகள்

ஸ்பிக் பார்மா தொழிற்சாலைக்கு நீர்த்தொட்டி கட்டிய இடத்தில் தரை மட்டத்திற்கும் கீழே மூன்றரை மீட்டர் ஆழத்திலிருந்து கிணற்றின் சுடுமண் வளையமொன்று அகழ்ந்தெடுக்கப்பட்டுக் கடலூர் அரசு அருங் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. உறைகள் ஒன்றின் மீது ஒன்றாக இல்லாமல் ஒன்றை ஒன்று உராய்ந்தாற் போல அடுக்கப்பட்டு இரண் டிற்கும் பிடிப்பாக இருக்கச் சுண்ணாம்பைப் பயன்படுத்தியுள்ளனர். இதே வகையில் அடுக்கப்பட்ட உறை கிணறு திருக்கோயிலூருக்கு எதிர்க்கரையில் உள்ள மணம்பூண்டிக்கருகில் தென்பெண்ணை ஆற்றின் வடகரையில் இருக்கின்றது. லாரிகள் எடை மேடை கட்டிய இடத்தி லிருந்து பெரிய பெரிய செங்கற்கள் சேகரிக்கப்பட்டன. அவற்றின் கன அளவு ஆறு அல்லது ஏழு செ. மீ. ஆகும்.

சிதம்பரம் நெடுஞ்சாலைக்குக் கிழக்கில் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் உள்ள திருச்சோபுரத்திற்குப் பக்கத்து ஊரான தியாக வல்லிக்குக் கிழக்கில் சல்லிமேடு என்ற மணல் நிறைந்த மேடு இருக் கின்றது. அந்த மேட்டின் மேற்பரப்பில் கண்ணாடியாலான பல வண்ண மணிகள் கிடைக்கின்றன. தியாகவல்லியும் கடற்கரை ஊர் ஆகும். தியாகவல்லியிலும் கண்ணாடி மணிகள் தொழிற்சாலை இருந்திருக்க லாம்.

பார்வை நூல்கள்

1. Ancient India, Vol. 2.

2. சு. தில்லைவனம், அரிக்கமேடு அகழாய்வு, நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி-1, 1990.

3. Peter Francis Jr, Bead Emporium, Pondicherry Museum, 1987.

# 3. குன்றக்குடி குடைவரைகளும் கல்வெட்டுகளும்*

அர. அகிலா, மு. நளினி

ஆறாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்திலிருந்து தமிழகத்தில் இறைவனுக்குக் கல்லில் கோயிலமைக்கும் பழக்கம் தொடங்கிய தென்பதை முதலாம் மகேந்திரரின் மண்டகப்பட்டுக் கல்வெட்டு தெளி வாக்குகிறது.[1] மகேந்திரரைத் தொடர்ந்த பல்லவர்கள் வட மற்றும் மையத் தமிழகப் பகுதிகளில் குடைவரைகளைத் தோற்றுவித்துக் கொண்டிருந்த அதே காலகட்டத்தில் தென் தமிழகத்தில் பாண்டியர்கள் அந்தத் திருப்பணியில் தங்களை ஆட்படுத்திக்கொண்டனர். திருப்பரங் குன்றம், யானைமலை, மலையடிக்குறிச்சி, திருமலாபுரம், குன்றக்குடி, திருக்கோலக்குடி, பிள்ளையார்பட்டி என்று பல குடைவரைகளைத் தென் மாவட்டங்களில் காண முடிகின்றது. இவற்றுள் குன்றக்குடி முக்கியமானது.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் திருப்புத்தூ ருக்கும் காரைக்குடிக்கும் இடையில் அமைந்துள்ள குன்றக்குடி, வணக் கத்திற்குரிய அடிகளார் பெருமானால் உலகப் பார்வையைப் பெற்று விட்ட சீரான சிற்றூர். இங்குள்ள குன்றின் மேல், குமரனுக்கான கற்றளியொன்று அமைந்துள்ளது. இதே குன்றின் தெற்குப் பார்த்த சரிவில் மூன்று குடைவரைகள் அடுத்தடுத்துக் குடையப்பட்டுள்ளன. தமிழகத்தில் இந்த அமைப்பு முறையைக் குன்றக்குடியில் மட்டுமே பார்க்க முடிகிறது. இக்குடைவரைகள் உள்ள பகுதியில் இவற்றின் முன்னே, இவற்றை முழுவதுமாய்ப் பார்வையிலிருந்து மறைத்துப் பெரு மண்டபமொன்று பிற்காலத்தில் எடுக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தை எடுப்பித்த பெருமக்கள் இங்குள்ள தூண்களில் நின்றபடி கைகுவித்து நம்மை வரவேற்கிறார்கள். இவர்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ள இங்குள்ள கல்வெட்டுகள் ஒத்துழைக்காதபோதும், இப்பெரு மக்களின் தோற்றச் சிறப்பு இம்மண்டபத்தின் காலத்தைப் பதினேழு அல்லது பதினெட்டாம் நூற்றாண்டாகக் கருத வைக்கிறது.

பெருமண்டபத்தின் தெற்குப் பார்த்த முகப்பு வாயில்களின்றி முழுவதும் திறப்பாக அமைந்துள்ளது. இம்மண்டபத்தின் மேற்கில்

---

* இந்தக் கட்டுரை திரு. அ. முருகப்பனார், திரு. இதழியல் இளங் கோவன், திரு. க. இ. சுக்குணி அய்யா, திருமதி. சி. சுப்புலட்சுமி அம்மை, திருமதி. சிவகாமி வடிவேல் ஆகியோர் நினைவாய் அமைந் திருக்கும் அறக்கட்டளைகளின் உதவியோடு வெளியிடப்படுகிறது.

வரிசையாக மூன்று திருமுன்கள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளன. இவற்றுள் முதலாவது திருமுன்னில் அழகுடைநாயகி ஆட்சி செய் கிறார். இரண்டாவது திருமுன், இறைவடிவம் இல்லாமையால் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறைக்குக் காப்பறையாகியுள்ளது. மூன்றாவது திருமுன் தேனாற்று நாதர் என்ற பெயரிலமைந்த லிங்கத் திருமேனியைக் கொண்டுள்ளது. இறைவன், இறைவித் திருமுன்கள் இரண்டும் உள்மண்டபம், கருவறை கொண்ட ஒரு தள விமானங்களாகப் பிற்காலப் பாண்டியர் காலத்தில் எழுப்பப்பட்டவை. பெரு மண்டபம் கட்டிய காலத்தில் இத்திருமுன்களின் முன்னால் மகா மண்டப அமைப்புகள் இணைக்கப்பட்டு, வாயில்கள் பெரு மண்டபத்தி லிருந்து அமைக்கப்பட்டன போலும். இம்மகாமண்டபங்கள் இன்று ஒழுங்கின்றி அமைந்துள்ளன. தேனாற்று நாதர் கோயில் உள் மற்றும் வெளிச் சுவர்களில் ஐந்து கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[2]

அழகுடை நாயகி திருமுன் வாயிலில் எழுவர் அன்னையர் சிற்பங் களும், சேட்டையின் சிற்பமும் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும் பாலானவை பொரிந்துள்ளன. திருமுன் வாயிலின் வலப்புறமுள்ள பெண் சிற்பம் இரண்டு கைகளுடன் காணப்படுகிறது. கச்சின்றியுள்ள இதன் மார்பகங்கள் சற்றுத் தளர்ந்துள்ளன. தன் வலக்கையில் ஏந்தி யிருக்கும் வடிவத்திற்கு வல மார்பிலிருந்து பாலூட்டுவது போல இச் சிற்பம் அமைந்துள்ளது. வடிவம் சிதைந்துள்ளதால் இன்னதென்று அடையாளம் காண முடியவில்லை.

தேனாற்று நாதர் திருமுன்னுக்கு முன்னால் பெருமண்டபத்தில் நந்தியெம்பெருமான் அமர்ந்துள்ளார். காப்பறைக்கும் இறைவன் திருமுன் வாயிலுக்கும் இடையிலுள்ள மேடையொன்றில் பிள்ளையார் திருமேனியும், லிங்கமும் இருத்தப்பட்டுள்ளன. பெருமண்டபத்தின் பின்சுவர் தேனாற்று நாதர் திருமுன்னுக்குச் சற்று முன்வரை வந்து நின்று விடுகிறது. இரண்டு வாயில்களையும் மூன்று சாளரங்களையும் கொண்டுள்ள இப்பின்சுவர், மலைக்கொழுந்து நாதர் திருமுன்னாகப் பெயரிடப்பட்டுள்ள மூன்றாம் குடைவரையின் முன்னால் இழுக்கப்பட் டுள்ள மகாமண்டபத்தின் மேற்குச் சுவருடன் இணைகிறது.

பின் சுவரிலுள்ள வாயில்கள் இரண்டுமே நடுக் குடைவரையை அடைவதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பெரியது ஏறத் தாழக் கருவறைக்கு நேராக எடுக்கப்பட்டுள்ளது. சிறிய வாயில் அக் குடைவரையில் நிறுவப்பட்டிருக்கும் சேத்ரபாலர் திருமேனியிருக்கும் இடத்தைத் தனித் திருமுன் போல் காட்டுவதற்காக எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாயில்களின் மேல் யானைத் திருமகள் சிற்பம் செதுக்கப்பட்டுள் ளது. இவ்வாயில்கள் அமைந்துள்ள சுவரின் மேற்பரப்பில் கிடந்த

கோலத்தில் பெருமாள் மகிழ்வுடன் காட்சியளிக்கிறார். இவ்வாயில் களின் இடப்புறம் ஒரு மிகச்சிறிய சாளரமும் வலப்புறம் இரண்டு சாள ரங்களும் உள்ளன. இடப்புறச் சாளரம் நடுக் குடைவரைக்கும் மூன் றாம் குடைவரைக்கும் இடையிலுள்ள மலைப்பாறையில் செதுக்கப்பட் டிருக்கும் பிள்ளையார் வடிவத்தைக் காண்பதற்காக அமைக்கப்பட்டுள் ளது. வலச் சாளரங்கள் இரண்டனுள் பெரியது, முதற் குடைவரைக்கும் நடுக் குடைவரைக்கும் இடையிலுள்ள மலைப்பாறையில் செதுக்கப் பட்டிருக்கும் லிங்க வடிவத்தையும், நடுக் குடைவரையின் மேற்குப்புற வாயிற் காவலரையும் பார்க்க உதவுகிறது. சிறிய சாளரம் முதற் குடைவரைக்கும் நடுக் குடைவரைக்கும் இடையிலுள்ள கோட்ட லிங்கத்தை மட்டும் பார்க்கும் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

பெருமண்டபத்தின் கிழக்கில் மண்டபத்திற்குள் பிதுக்கமாய் அமைந்திருக்கும் மூன்றாம் குடைவரையின் மகாமண்டபச் சுவர்களில் கல்வெட்டுகள் உள்ளன.[3] அவற்றுள் ஒன்று மகாமண்டபத் திருப்பணி கி. பி. 1559இல் நடைபெற்றதாகக் கூறுகிறது.[4] இக்கல்வெட்டின் தொடர்பற்ற நிலையே, இம்மண்டபம் பிற்காலத்தில் மீண்டுமொரு திருப்பணிக்கு ஆளானதைத் தெளிவாக்குகிறது.

பெருமண்டபப் பின்சுவர் வாயில்களின் வழியாகவோ, அல்லது மேற்கே இச்சுவர் நின்று விடுவதால் உண்டாகியிருக்கும் வழியிலோ உள் நுழைந்தால் முதலிரண்டு குடைவரைகளுக்கு முன்னால் எடுக்கப் பட்டிருக்கும் நீளமான, அகலம் குறுகிய பிற்காலத் திருப்பணியான திருநடைமாளிகையை அடையலாம். இந்நடைமாளிகையின் கிழக்கில் மூன்றாம் குடைவரையின் மகாமண்டபச் சுவர் தடுப்பாக அமைய மேற்கில் வாயிலில்லா வழி, திறந்தவெளிக் காற்றும், ஓரளவு வெளிச்ச மும் உள்வர அனுமதிக்கிறது. தேனாற்று நாதர் மற்றும் அழகுடை நாயகி திருமுன்களின் விமானங்களைப் பார்க்கவும், குன்றின் சரிவைப் பார்வையிடவும் மலைவெளிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் இந்த வழி உதவுகிறது.

திருநடைமாளிகை இரு வரிசைத் தூண்களோடு நீள்கிறது. இத் தூண்களுள் பல சரியாகப் பொளியப்படாமல் கடனுக்கு வைத்தது போல் காட்சி தருகின்றன. இவற்றின் வெட்டுப் போதிகை பிற்காலத் தழுவ லாகும். சில தூண்கள் சிற்பங்களோடு உள்ளன. இத்தூண்களின் முன் வரிசையில் ஐந்து தவிர பிற தூண்கள் பெருமண்டபப் பின்சுவரோடு ஐக்கியமாகியுள்ளன. பின் வரிசையின் முதல் தூண், முதற் குடைவரை யின் தொடக்கப் பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளது. நான்காம், ஐந்தாம் தூண்கள் கோட்ட லிங்கமுள்ள பாறைப் பகுதியின் இருமுனை களிலும் இணைக்கப்பட்டுள்ளன. ஆறாம் தூண் நடுக்குடைவரையின்

முன் நிற்கிறது. ஏழாம் தூண் சேத்ரபாலரைத் தனித்துக் காட்டக் கட்டப்பட்டுள்ள பிற்காலச் சுவரமைப்பில் மறைந்துள்ளது. இச்சுவர்ப் பகுதி நடுக் குடைவரை முகப்புத் தூண்களுள் கிழக்கு முழுத்தூணில் தொடங்கித் திருநடைமாளிகைத் தூண் வரை ஏறத்தாழ 1.89 மீட்டர் தெற்காக நீண்டு, பின் கிழக்கில் திரும்பிப் பிள்ளையார் கோட்டமுள்ள பாறை வரை தொடர்கிறது. இத்தொடரின் இடையில், பெரு மண்டபத்துச் சிறு வாயிலுக்கு நேராக 83 செ.மீ. அகலத்தில் ஒரு வாயில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாயில் வழியே உள் நுழைந்தால் நடுக் குடைவரையின் கிழக்குப் பகுதியை அடையலாம். இக்குடைவரை முகமண்டபத்தில் நிறுவப்பட்டுள்ள சேத்ரபாலர் திருமேனியைப் பார்க்கவும், அத்திருமேனி தனிக் கோயிலில் இருப்பது போன்ற ஒரு தோற்றத்தை உண்டாக்கவும் இச்சுவரமைப்பு மிகப் பிற்பட்ட காலத்தில் சற்றும் கலை நோக்கின்றி எடுக்கப்பட்டுள்ளது.

## குடைவரைகள்

குன்றின் தென் சரிவில் மூன்று குடைவரைகள் அடுத்தடுத்துக் குடையப்பட்டுள்ளன. ஒவ்வொன்றின் இடையிலும் ஏறத்தாழ 1.50 மீட்டர் அளவிலான பாறை விடப்பட்டுள்ளது. இப்பாறைப் பகுதிகளின் குடைவரைப் பக்கங்கள் சுவர்களாகப் பொளியப்பட்டுள்ளன. குடைவரைகளுக்கு இடையிலான பாறைப் பகுதிகளில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

முதற் குடைவரைக்கும் இரண்டாம் குடைவரைக்கும் இடையிலுள்ள பாறைப் பகுதியில் 1.01 மீட்டர் உயரம், 82 செ. மீ. அகலத்திற்குக் கோட்டமொன்று அகழ்ந்து அதில் லிங்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள். தமிழகக் குடைவரைகளில் பாறைச் செதுக்கலாகக் கோட்டமொன்றில் லிங்கம் காட்டப்பட்டிருப்பது இதுவே முதல் முறை எனலாம்.[4A] ஆவுடையார், லிங்க பாணம், கோமுகம் என்று அனைத்து உறுப்புகளும் கொண்டு இத்திருமேனி முழுமையுற அமைந்துள்ளது.

இரண்டாம் குடைவரைக்கும் மூன்றாம் குடைவரைக்கும் இடையிலுள்ள பாறையில் கோட்டம் செய்து பிள்ளையாரைச் செதுக்கியுள்ளனர். அரைத் தாமரையமர்வில், இட முன்கையால் வயிற்றுக் கட்டைத் தொட்டபடி, வல முன் கையிலும், வலமாய்ச் சுற்றிய துதிக்கையிலும் மோதகங்களை ஏந்திக் காட்சியளிக்கும் இவரின் வலப் பின் கையில் அடர்ந்த தோகையுடன் கூடிய கரும்பு உள்ளது. குன்றக்குடிக் குடைவரைக் கோயில்கள் என்ற தம்முடைய கட்டுரையில் திரு. தி. இராசமாணிக்கம் இதைப் பாசமென்று தவறாகக் குறித்துள்ளளார்.[5] இடப் பின் கையிலுள்ள பொருள் தெளிவாகப் பொளியப்படவில்லை. இதைப்

பர்சமர்க ஊகிக்கலாம். இவரது மேற் கைகளில் கங்கணங்களும், மணிக்கட்டுகளில் பட்டையான வளைகளும் உள்ளன. தலையில் பொதுவாக அமைய வேண்டிய கரண்ட மகுடம் இல்லாமல் வெறுந் தலையராய் அமர்ந்திருக்கும் இவரின் இரு கொம்புகளும் உடைந்துள் ளன. முப்புரி நூல் வல மேற்கையில் செல்லுமாறு காட்டப்பட்டுள்ளது.

முதற் குடைவரை

கருவறை, முகமண்டபம், முகப்பு என்றமைந்துள்ள இக்குடை வறையின் மேற்குச் சுவரையொட்டி, மலைப் பாறையிலிருந்து திருநடை மாளிகையின் மேற்குப் பகுதியில் தெற்காகச் சிறு தடுப்புச் சுவரொன்று பிற்காலத்தே எடுக்கப்பட்டுள்ளது. இது மலைவெளிக்குச் செல்லும் பாதையிலிருந்து குடைவரையைப் பிரிக்கிறது. திருநடைமாளிகையின் தரையமைப்பிலிருந்து குடைவரையின் முகப்புத் தரை 33 செ. மீ. உயரத்தில் அமைந்துள்ளது. இத்தரையின் முகப்பு கருவறைக்கு எதிரில் மட்டும் சற்று மழுங்கலாக மடிந்தும், மற்றபடி அதன் இருபுறங் களிலும் பட்டையாக மடித்து விடப்பட்டும் கீழிறங்குமாறு அமைக்கப் பட்டுள்ளது. இத்தரைப் பகுதியிலும், மடிப்புகளிலும் சிதைந்த கல் வெட்டொன்று காணப்படுகிறது.

ஏறத்தாழ 76 செ. மீ. அகலமும், 5·88 மீட்டர் நீளமும் உள்ள இம் முகப்புத் தரையின் வடபுறத்தே, சதுரமாகச் செதுக்கி நடுவில் குழி யொன்று தோண்டப்பட்டுள்ளது. பார்ப்பதற்கு ஆட்டுக்கல்லின் மேலமைப்பு போல் தோற்றமளிக்கும் இதனருகே குழவியொன்றும் கிடத்தப்பட்டுள்ளது. மிகப் பிற்பட்ட காலத்துச் செதுக்கலான இவ் வமைப்பு இன்றும் பயன்பாட்டில் உள்ளது.

முகப்புத் தரையிலிருந்து ஐந்து செ. மீ. உயரத்தில் உள்ள அறுபது செ.மீ. அகலத் தளத்தின் மீது நான்கு தூண்கள் எழும்புகின்றன. இத் தூண்கள் தளத்தின் விளிம்பிலிருந்து ஐந்து செ.மீ. உள் தள்ளியே எழுகின்றன. இந்த உள்வாங்கல் அனைத்து இடங்களிலும் ஒன்று போல் இல்லாமல், ஓரிடத்தில் நான்கரை செ.மீ. ஆகவும், மற்றோர் இடத்தில் ஏழு செ.மீ. ஆகவும் உள்ளது. இத்தள அமைப்பு முக மண்டபத் தரையோடு சரிந்து இணைந்தாலும் இரண்டிற்கும் இடையே வேறுபாடு தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. இத்தளமும் தூண்களுமே முகமண்டபத்தையும், முகப்புத் தரையையும் பிரிக்கின்றன.

தளத் தூண்களுள் இடைத்தூண்கள் இரண்டும் முழுத்தூண்க ளாகவும், பக்கத் தூண்கள் அரைத்தூண்களாகவும் காட்டப்பட்டுள்ளன. இடைத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்புடன் இருக்கப்

பக்கத் தூண்கள் அப்படி எந்த வேறுபாடும் இல்லாமல் நாற்கட்டம் சார்ந்த பிரம்மகாந்தத் தூண்களாய்க் காட்டப்பட்டுள்ளன. ஆனால் திரு. தி. இராசமாணிக்கம் இவையும் கட்டு, சதுரம், கட்டு என்ற அமைப்பில் இருப்பதாகக் கூறியுள்ளார்[6]. நான்கு தூண்களிலுமே கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன. இத்தூண்களின் போதிகைகள் அளவிலும் கனத்திலும் மிகச் சிறியனவாய் உள்ளன. இவற்றின் மேற் கைகளைவிட மிகச் சிறியனவாக இருக்கும் கீழ்க் கைகள், மேல் நோக்கித் திரும்புகையில், வளைந்து திரும்பாமல் விரி கோணத்தில் திரும்புமாறு மடிக்கப்பட்டுள்ளன. மேற்கைகள் உத்திரத்தை அடையும் இடத்தில் சிறு மடிப்பு காட்டப்பட்டுள்ளது. இந்த அமைப்பு இங்குள்ள மூன்று குடைவரைகளிலுமே காணப்படு கிறது. இதைப் பல்லவர் குடைவரைகளில் அதிகம் பார்க்க முடிய வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

போதிகைகளின் கீழ்க்கைகளைவிட உத்திரம் கனம் குறைந்ததாய், அளவில் சிறுத்துக் காணப்படுகிறது. இதன் மேல் பிதுக்கமாய் ஓடும் வாஜனம் அரைத்தூண்களின் மேலோடி நின்று விடுகிறது. மேற்புறம் பாறைச்சரிவு 62 செ. மீ. அளவுக்கு முன்னால் நீட்சியுற்று வடிவமைக் கப்படாத கபோதமாய் அமைந்துள்ளது. இந்நீட்சி ஏறத்தாழ முகப்புத் தரையமைப்பு முழுவதற்குமான கூரை போல அமைந்துள்ளது. குடை வரையின் முன்னாலுள்ள திருநடைமாளிகையின் கூரை இப்பாறைச் சரிவுடன் பொருந்த இணைக்கப்பட்டுள்ளது.

முகப்புத் தூண்களுக்குப் பின்னால் 6·30 மீட்டர் நீளமும், 1·43 மீட்டர் அகலமுமாய் அமைந்துள்ள முகமண்டபத்தின் பின் சுவரிலோ, பக்கச் சுவர்களிலோ சிற்பங்கள் ஏதுமில்லை. மாறாகக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முகமண்டபத்தின் கூரையும் வெறுமையாக உள்ளது. இம்முகமண்டபத்தின் மேற்குச் சுவர் அருகே முருகன் வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளியுள்ளார். இத்திருமேனிகளைக் கோமாறவர்மர் சுந்தரபாண்டிய தேவரின் மூன்றாம் ஆட்சியாண்டில் புவன கங்கன் என்பார் எழுந்தருளுவித்ததாகத் தேனாற்று நாதர் திருமுன் கல்வெட்டு கூறுகிறது[7].

முகமண்டபப் பின்சுவரின் மையப் பகுதியில் கருவறை குடையப் பட்டுள்ளது. 98 செ.மீ. அகலமுடைய இதன் வாயிலின் இருபுறமும் முகமண்டபத் தரையில் நாகர் வடிவங்கள் சில நிறுத்தப்பட்டுள்ளன. முகமண்டபத் தரையமைப்பிலிருந்து கருவறைக்கு மூன்று படிகள் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் கீழ்ப்படி அரைநிலா வடிவத்தில் அமைந்துள்ளது. கருவறையின் தரையமைப்பு இறுதிப் படியைவிட 6·5 செ. மீ. உயர்த்திக் காட்டப்பட்டுள்ளது. சுவர்களும் கூரையும்

வெறுமையாக உள்ள கருவறையின் நடுப்பகுதியில் இறைவன் லிங்கத் திருமேனியராய் ஆவுடையார் மீது எழுந்தருளியுள்ளார். இங்குள்ள மூன்று குடைவரைகளிலுமே கருவறை லிங்கத் திருமேனிகள் மலைப் பாறையிலேயே செதுக்கி உருவாக்கப்பட்டுள்ளன.

லிங்கமேனி பொருந்தியுள்ள ஆவுடையார் ஏறத்தாழ சதுரமாய் அமைந்துள்ளது. ஜகதி, முப்பட்டைக் குமுதம், பாதங்களோடு கூடிய பெரிய அளவிலான கந்தம், இந்தக் கந்தத்தின் மேலும் கீழும் கம்பு, கந்தத் தொகுதியின் மேல் பட்டிகை, அதன் மேல் ஒரு கம்பு என ஆவுடையாரின் வெளிப்பகுதி அழகுபடுத்தப்பட்டுள்ளது. லிங்கமேனி யின் சுற்றளவு 1·60 மீட்டர். இது ஆவுடையாரில் பொருந்தும் தளத்தின் உட்பரப்பு, வெளிப்புறமுள்ள மேற்கம்பின் விளிம்பிலிருந்து சற்றுத் தாழ்வாகக் காட்டப்பட்டுள்ளது. ஆவுடையாரின் வலப்புறம் பட்டிகைப் பகுதியில் சிறியதாய்க் காணப்படும் கோமுகத்தைப் பூதகண மொன்று தலையில் தாங்குகின்றது. இப்பூதகணம் தன் கைகளை முழங்கால்களில் அழுத்திக்கொண்டு நன்றாய்க் குனிந்தவாக்கில், முட்டுக் கொடுப்பதுபோல் கோமுகத்தைத் தாங்கும் அழகு சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இக்கணத்தின் கால்கள் கந்தத்தின் கீழ்க் கம்பில் இருக்கத் தலை கோமுகத்தைத் தாங்கப் பின்புறம் கந்தப் பகுதியில் பொருந்தியுள்ளது. இதுபோல் பூதகணங்கள் தாங்கும் கருவறை நீர் வழிகளைப் பல கோயில்களில் பார்க்கலாமென்றாலும், அவை பொது வாகக் கட்டடப் பகுதியின் வெளியில் காட்டப்பட்டிருக்கும். இங்கோ ஆவுடையாரின் மேல் அழகாய்ச் சாய்ந்தபடி கோமுகம் தாங்கும் நிலையில் கணம் காட்டப்பட்டுள்ளது இதுவரை காணாத புதுமை யாகவே உள்ளது.

முகமண்டபப் பின் சுவரில் கருவறை வாயிலையொட்டி அதன் இருபுறமும் 2·03 மீட்டர் உயரத்திற்கு, வலப்புறம் 75 செ.மீ. அகலத் திற்கும், இடப்புறம் 65 செ.மீ. அகலத்திற்கும் குடைவரையின் சுவர்ப் பகுதி அகற்றப்பட்டு அவ்விடங்களில் அதே அளவிலான பாறைப் பாளங்கள் வைத்துப் பூசப்பட்டுள்ளன. தமிழகத்திலுள்ள வேறெந்தக் குடைவரையிலும் காணப் பெறா அதிசயம் இது. இவற்றுள் வலப் புறப் பாளத்தின் மீது சடையவர்மர் ஸ்ரீவல்லபரின் நான்காம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு[8] காணப்படுகிறது. இந்த அகற்றலும் பொருத்த லும் ஏன் நிகழ்ந்தன என்பது புதிராகவே உள்ளது.

### சிற்பங்கள்

குடைவரைக் காலத்தைச் சேர்ந்தவையாக எந்தச் சிற்பமும் இங் கில்லை. சுந்தர பாண்டியர் காலத்து முருகன் தேவியருடன் எழுந்தருளி

யுள்ளார். இவர்து பின் கைகளில் வலப்புறம் சக்தியும் இடப்புறம் வஜ்ரமும் உள்ளன. வல முன் கை காக்கும் குறிப்பிலிருக்க இட முன் கை கட்ய வலம்பிதமாக உள்ளது. கரண்ட மகுடமும், செவிகளில் மகர குண்டலங்களும், எடுப்பான நாசியும் இளநகையுமாய்க் காட்சி தரும் வேலவரின் வலப்புறம் தெய்வானையும் இடப்புறம் வள்ளியும் உள்ளனர். கரண்ட மகுடர்களாய்க் காட்சிதரும் தேவியர் இருவரும் ஒரு கையை நெகிழ்த்தி மறுகையில் மலரேந்தியுள்ளனர். உடைந்து போயிருக்கும் வள்ளிச் சிற்பத்தின் தலைப் பகுதி மெழுகால் உடலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

நாகர் வடிவங்களில் பாம்புப் படத்தின் கீழே கண்ணனின் ஆடல் தோற்றம் காட்டப்பட்டுள்ளது.

## கல்வெட்டுகள்

இக்குடைவரையில் மட்டும் பதினாறு கல்வெட்டுகள் உள்ளன.[9] தூண்களில் எட்டும்,[10] சுவர்களில் ஏழும்[11] முகப்புத் தரையில் ஒன்றுமாய்[12] இவை வெட்டப்பட்டுள்ளன. இவற்றுள் முதலாம் குலோத்துங்கர் காலத்தவை ஆறு. பாண்டியர்களுடையவை ஏழு. மன்னன் பெயரற்றவை மூன்று. இங்குள்ள குலோத்துங்கர் கல்வெட்டுகள் ஆழமாகவும் அழகாகவும் வெட்டப்பட்டிருப்பதாலும், அண்மையில் வேதித் தூய்மைக்கு ஆளாகியிருப்பதாலும் படிப்பதற்கு ஆர்வமூட்டும் வகையில் அமைந்துள்ளன.

முகமண்டப மேற்குச் சுவரில் முருகன் திருமேனிக்குப் பின் புறத்தே இரண்டு படியெடுக்கப்படாத கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் ஒன்று பெரிதும் சிதைந்துள்ளது. இப்பதினாறு கல்வெட்டுகளிலிருந்தும் கிடைக்கும் செய்திகளைக் கல்வெட்டுகளின் பார்வையில் குன்றக்குடி என்ற தலைப்பின் கீழ் விரிவாகப் பார்க்கலாம்.

## இரண்டாம் குடைவரை

முதற் குடைவரையை அடுத்துள்ள இரண்டாம் குடைவரையும், கருவறை, முகமண்டபம், முகப்பு என்ற அமைப்பிலேயே குடையப்பட்டுள்ளது. முகப்புத் தரையையும், முகமண்டபத்தையும் நான்கு தூண்கள் பிரிக்கின்றன. இவற்றுள் இடைத்தூண்கள் சதுரம், கட்டு, சதுரமெனப் பொளியப்பட்ட முழுத்தூண்கள். பக்கத் தூண்கள் அரைத் தூண்களாய் முதற் குடைவரை போலவே பிரம்மகாந்தமாய்க் காட்டப்பட்டுள்ளன. இத்தூண்கள் எழும் தளம் முன்னாலுள்ள முகப்புத் தரையை விட 12 செ. மீ. உயர்த்தப்பட்டுள்ளது. முகமண்டபத் தரை இத்தளத்தினும் சற்றுத் தாழ்வாக உள்ளது.

வேலைப்பாடின்றி வெறுமையாய் உள்ள போதிகைகளின் கீழ், மேற் கைகள் ஏறத்தாழ ஒரே அளவினதாக உள்ளன. மேற்கை உத்தி ரத்தைத் தொடுமிடத்தில் முதற் குடைவரையைப் போலவே சிறு மடிப்பு பெற்றுள்ளது. போதிகைகளின் மேல் உத்திரமும், உத்திரத் தின் மேல் பிதுக்கமாக வாஜனமும் காட்டப்பட்டுள்ளன. வாஜனம் முதற் குடைவரையைப் போல் முகப்போடு நின்று விடாமல், முகப்பின் பக்கச் சுவர்களில் இறங்கி அங்குள்ள வாயிற்காப்போர் கோட்டங்களின் வெளி அரைத் தூண்களின் மேல் முடிகிறது.

முகப்புத் தரையில் கருவறைக்கு எதிரே பிற்காலத்து நந்தியொன்று நிறுவப்பட்டுள்ளது. முகப்பின் கூரை பாறையின் இயற்கைச் சரிவையே கபோதமாகக் கொண்டமைந்துள்ளது. வடிவமைக்கப்படாத இக் கபோதத்துடன் சரியாகப் பொருந்துமாறு முன்னாலுள்ள திருநடை மாளிகையின் கூரை ஒட்டப்பட்டுள்ளது. முகப்பின் மேற்கு, கிழக்குச் சுவர்களில் நடுநாயகமாகத் தரையமைப்பிலிருந்து நன்றாக உயர்த்தப் பட்டுள்ள தளங்களிள் மீது, நின்ற கோலத்தில் நேர்ப் பார்வையராய் வாயிற்காவலர், பக்கத்திற்கொருவராய்க் காட்சி தருகின்றனர். இவர்கள் நிற்கும் கோட்டங்களின் வெளிப்புறத்தே அகலம் குறைந்த அரைத்தூண்கள் பொளியப்பட்டுள்ளன. இத்தூண்களுக்கும் வாயிற் காவலர் தளங்களுக்கும் இடையில் இடைவெளி உள்ளது.

முகமண்டபப் பின் சுவரின் மையத்தில் கருவறை குடையப்பட் டுள்ளது. கருவறை வாயிலுக்கு இருபுறமும் உள்ள சுவர்களும் கிழக்குச் சுவரும் கூரையும் வெறுமையாக உள்ளன. மேற்குச் சுவரில் பேரள வினராகத் திருமாலும் அருகே தோழமைத் தொண்டராய்க் கருடனும், பொளியப்பட்டுள்ளனர். இவர்கள் நிற்கும் தளம் முகமண்டபத் தரையி லிருந்து 45.5 செ.மீ. உயரத்தில் உள்ளது. இந்தத் தளத்தின் கீழுள்ள கல்வெட்டு 1909இல் கல்வெட்டுத் துறையினரால் படியெடுக்கப் பட்டுள்ளது. இதன் தொடர்ச்சி வட சுவரின் கீழ்ப் பகுதியில் இருந்தும் கல்வெட்டுத் துறையினர் அதைக் கவனியாது கல்வெட்டின் தொடர்ச்சி இல்லையென்பதுபோல் கல்வெட்டுத் தொகுதியில் குறிப்பிட்டுள்ளனர்.[13]

பெருமாளும் கருடனும் செதுக்கப்பட்டிருக்கும் கோட்டத்தின் பக்கங் களில் இரு சிறு அரைத் தூண்கள் எளிய போதிகைகளுடன் காட்டப்பட் டுள்ளன. இப்போதிகைகள் முடியும் சிறிய அளவிலான உத்திரம், இக் கோட்டத்தின் மேல் நிலையாக அமைந்துள்ளது. முகமண்டபத்தின் இடப்புறத்தே சேத்ரபாலர் திருமேனியொன்று தனிச் சிற்பமாய் நிறுவப் பட்டுள்ளது, குடைவரையோடு தொடர்பில்லாத, இப்பிற்காலப் பாண்டி யர் காலத்து நிறுவல் குறித்து இரண்டு கல்வெட்டுகள் பேசுகின்றன.[14]

இத்திருமேனியிருக்கும் இடத்தைத் தனித் திருமுன்னாகக் காட்ட முயன்றதன் விளைவாய்க் கற்சுவரொன்று முகமண்டபத்திலிருந்து நடைமாளிகை வரை நீண்டு அதன் பின்வரிசைத் தூண்களை ஒட்டிக் கிழக்கு முகமாகத் திரும்பிப் பிள்ளையார் கோட்டப் பாறையுடன் முடிகிறது. இச்சுவரின் அரவணைப்பால் முகமண்டப இடப்புற முழுத்தூண் தன் வனப்பையும் தன் மீதுள்ள கல்வெட்டில் பாதியையும்[15] இழந்து பரிதவித்து நிற்கிறது. இச்சுவரமைப்பு இரண்டாம் குடைவரையின் தோற்றத்தைப் பெரிதும் பாதித்துள்ளது. கலை நோக்கற்ற பிற்காலத் திருப்பணியாளர்கள் பல கோயில்களில் இதுபோன்ற கொடுந் தீங்கிழைத்துள்ளனர்.



இரண்டாம் குடைவரையின் முகப்பும் கருவறையும்

கருவறைக்கு முகமண்டபத்திலிருந்து இரண்டு படிக்கட்டுகள் உள்ளன. கருவறையின் கீழ்நிலை மூன்றாம் படிபோலமைய, வாயிலின் இருபுறமும் சிறு அரைத்தூண்கள் பக்கத்திற்கொன்றாய்க் காட்டப்பட்டுள்ளன. போதிகைகளற்ற எளிய இத்தூண்களின் மேல் ஓடும் உத்திரமே கருவறையின் மேல்நிலையாகியுள்ளது. கருவறையின் தரை, நிலைப்படியைவிடச் சற்றுத் தாழ்வாக இருக்கக், கூரை மற்றும் பக்கச் சுவர்கள் வெறுமையாக உள்ளன. கருவறையின் மையப் பகுதியில் லிங்கம் வெட்டப்பட்டுள்ளது. உபானம், ஜகதி, முப்பட்டைக் குமுதம், கந்த வரி, பட்டிகை ஆகியவற்றால் அழகூட்டப் பெற்ற சதுர ஆவுடையாரின் மீது 1.53 மீட்டர் சுற்றளவுள்ள லிங்க பாணம் பொருத்தப்பட்டுள்ளது. ஆவுடையாரின் இடப்புறமும், வலப்புறம் அமைந்துள்ள சிறு கோமுகமும் சிதைந்துள்ளன.

சிற்பங்கள்

வாயிற் காவலர்களும், திருமால் கருடன் தொகுதியும் குடைவரைக் காலத்துச் சிற்பங்கள். சேத்ரபாலர், பிற்காலப் பாண்டியர் காலத்தினர். வாயிற் காவலர்கள் முகப்பின் பக்கச் சுவர்களில் மேற்கில் ஒருவரும் கிழக்கில் ஒருவருமாய் எதிரெதிர்ப் பார்வையில் உள்ளனர்.

முகப்புத் தரையிலிருந்து 43 செ.மீ. உயரத் தளத்தின் மீது வலப் பாதத்தைப் பார்சுவத்திலும் இடப்பாதத்தை நேராகவும் வைத்தபடி, பாம்பு சுற்றிய உருள்தடியின் மீது வல முழங்கை படிந்திருக்க மணிக் கட்டையும் விரல்களையும் கீழ்நோக்கி நெகிழ்த்தி நிற்கும் வலக் காவலரின் வலப்பாதம் சரியாகப் பொளியப்படவில்லை. இடக்கையை இடுப்பில் ஊன்றியுள்ள இவரின் இடுப்பாடை முடிச்சுகள் அரைப்பட்டிகையின் அரவணைப்பில் இருபுறமும் நெகிழ்ந்து, கால்களின் மீதும் படிந்துள்ளன. பட்டையான வயிற்றுக்கட்டு, மேற்கைகளில் பாம்புக் கங்கணங்கள், மணிக்கட்டுகளில் மணிகள் மற்றும் ருத்திராக்கம் பதித்த பட்டையான வளையல்கள், திரட்சியான முப்புரிநூல், கழுத்தில் சரப்பளி, செவிகளில் குண்டலங்கள் ஆகியவற்றோடு சடாமகுடராய்க் காட்சி தரும் இவர் மகுடத்தின் வலப்புறம் பிறையும், பின்னால் தலைச் சக்கரமும் காட்டப்பட்டுள்ளன.

கிழக்குக் காவலர் 41 செ.மீ. உயரத் தளத்தின் மீது வலப்பாதத்தைத் திரஸ்ரயமாகவும் இடப்பாதத்தை நேராகவும் வைத்துச் சற்றே வலப் புறம் சாய்ந்த நிலையில் காட்சி தருகிறார். வலச்செவியில் பனையோலைக் குண்டலம்; இடச்செவியில் சிறுவளையம்; மணிகள் பதித்த முப்புரிநூல்; கழுத்தில் சரப்பளி; இடக்கை மார்பின் குறுக்கே வலப்புறம் வந்து உருள்தடியின் மேற்பகுதியைப் பற்றத் தடியின் மேல்முனை மேற்

கையின் குழிவுக்குள் பொருந்துமாறு வலக்கை, நெகிழ் கையாகக் காட்டப்பட்டுள்ளது. இக் கை கட்யவலம்பிதத்தில் இருப்பதாகத் திரு. தி. இராசமாணிக்கம் எழுதியிருப்பது சரியல்ல.[16] இவ்வலக்கையின் கீழ்ப்புறத்தே பாம்பொன்று காட்டப்பட்டுள்ளது. சடாமகுடம் அணிந்த தலையின் பின்னால் தலைச் சக்கரமும், மகுட முகப்பில் தலையோடும் காட்டப்பட்டுள்ளன. மேற்புறத்தார் போல இவருக்குப் பிறையில்லை எனினும், அதற்குப் பதிலாக இவரது மார்பின் இடமேற்பகுதியில், முப்புரிநூலின் பிரம்ம முடிச்சையொட்டியும் இடச்செவி வளையத்திற்கு அருகிலுமாய்க், கால்களை மார்போடு மடித்துக் கீழ் நீட்டியுள்ள நிலையில் இறக்கைகள் ஒன்றுசேர மடிக்கப்பட்ட தோற்றத்தில் பறவை போன்ற ஒரு வடிவம் காட்டப்பட்டுள்ளது. இது அணிகலனா அல்லது வேறு எதையேனும் குறிக்கும் குறியீடா என்பது தெரியவில்லை.



சூலத்தேவரின் முன்னோடியாய் வாயிற்காவலர்

இக்காவலரின் தோள்களுக்குப் பின்னால் பக்கத்திற்கொன்றாகச் சூலத்தின் இலைப்பகுதிகள் மிக அருமையாக வடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இட இலையின் நுனிப்பகுதி சிதைந்துள்ளது. திரு. தி. இராச மாணிக்கம் இந்தச் சூல இலைகளை வாயிற் காவலரின் தலைக் கொம்பு களாகக் கண்டுள்ளமை பொருந்தாது.[17] பின்னாளில் அஸ்திர தேவர்

களுள் ஒன்றாக மாறும் சூலதேவரின் தொடக்கநிலைக் காட்டல்களில் இதுவும் ஒன்றாகும். மல்லையிலுள்ள கணேசர் ஒருகல் தளியின் சிகரத் தில்தான் தமிழகக் கோயிற்கலை வரலாற்றில் முதன்முறையாகக் கருவி யொன்றுக்குத் தெய்வத் தகுதியளிக்கும் முயற்சி தொடங்குகிறது. இந்த முயற்சியின் தொடர்ச்சிகளுள் ஒன்றுதான் இக்குடைவரையில் காட்டப்பட்டிருக்கும் கிழக்குக் காவலர். இதன் வளர்நிலைகளை முதலாம் இராசராசர் திருக்கோயில் வாயிற் காவலர்களிடமும், முதிர் நிலைகளைத் திருப்புத்தூர் திருத்தளிநாதர் மற்றும் சூலமங்கலம் சிவன் கோயிலிலும் காணலாம்.

கிழக்கு வாயிற் காவலரின் ஆடைத் தொங்கல்களும் அரைப்பட்டி கையும், தாரகைச் சும்மையும் மிக அழகுபடக் காட்டப்பட்டுள்ளன. பக்கத்திற்கு மூன்று புரிகளாய் இருபுறமும் படர்ந்து ஆங்காங்கே சிறு வளையங்களால் பிணைக்கப்பட்டு, மையப் பகுதியில் பின்னல் முடிச்சு களால் அழகு படுத்தப்பட்டுள்ள ஆடைத் தொங்கல், தமிழர்தம் மிக அரிய ஆடைக் கலைத் திறனுக்குச் சான்றாக நிற்கிறது.

### திருமாலும் கருடனும்

முகமண்டபத்தின் மேற்குச் சுவர் கோட்டத்தில் திருமாலும் கருட னும் அருகருகே காட்டப்பட்டுள்ளனர். திருமால் கிரீட மகுடத்துடன், முழங்காலுக்குச் சற்றுக் கீழ் வரையிலான கனத்த மடிப்புகளுடன் கூடிய பட்டாடையினராய், அவ்வாடையின் முடிச்சுகள் இருபுறமும் சரிய, கம்பீரமாய் இட முன்கையின் முழங்கைப் பகுதியைக் கருடனின் வலத்தோளின் மீது அழுத்திக் கீழ்க்கையை நெகிழவிட்டுக் காட்சி தருகிறார். இவரது வல முன்கை முழங்கையருகே மடக்கப்பட்டு மார் பருகே திருப்பப்பட்டுள்ளது. இக்கையின் கட்டை விரல் நடுவிரலின் மேல் கணுவைத் தொட்டபடி இருக்க மற்ற விரல்கள் நீண்டு இன்ன தென்று விளங்காத ஒரு முத்திரையில் காட்சி தருகின்றன. ஆடற் கலை நூல்களிலோ, சிற்ப நூல்களிலோ இம்முத்திரையை இனம் காண முடியவில்லை.

வலப் பாதத்தை நேராகவும் இடப்பாதத்தைப் பார்சுவமாகவும் வைத்து நிற்கும் திருமாலின் பின் கைகளில் இடப்புறம் சங்கு காட்டப் பட்டுள்ளது. வலப்புறம் சக்கரம் இருந்து பிற்காலத்தில் தகர்க்கப்பட் டுள்ளது. இவரது கிரீடத்தின் பின்னால் தலைச் சக்கரம் காட்டப்பட் டுள்ளது. மார்பில் குறுக்கீடாகச் சன்ன வீரம் மிக்க அழகுடன் வடிக்கப் பட்டுள்ளது. மணிக்கட்டுகளில் பட்டையான வளைகளும் மேற்கை களில் கங்கணங்களும் அணிந்து மலர்ச்சியான முகத்துடன் காட்சி யளிக்கும் இவரது இடச் சுண்டு விரலைக் கனமான மோதிரமொன்று அழகு செய்கிறது.

திருமாலின் இடப்புறம் பயபக்தியுடன் இருபுறமும் இறக்கைகளைச் சுருக்கியபடி கருடன் மனித வடிவத்தில் காட்சி தருகிறது. இதன் பாதங்களும் திருமாலின் பாதங்களைப் போலவே அமைந்துள்ளன. இரு கைகளையும் மார்பின் குறுக்காக மடித்துத் தன் பணிவை வெளிப்படுத்துவது போலக் காட்சி தரும் கருடனின் கழுத்தில் சரப்பளியுள்ளது. கைகளின் மேற்பகுதிகளில் கங்கணங்களும், மணிக் கட்டுப் பகுதிகளில் வளைகளும் உள்ளன. மார்புக்குக் குறுக்காக மடித்திருக்கும் கைகளில் இடக் கை வல மேற்கையின் கீழ் மறைய, வலக்கை இட மேற்கையைப் பற்றியவாறுள்ளது. தலைக்கு மேல் துணியால் போர்த்திருப்பது போன்ற கருடனின் தலையலங்காரம் சற்றுப் புதுமையாக மல்லைப் பாறைச் சிற்பத் தொகுதியில் உள்ள குரங்கொன்றின் தலையலங்காரத்தையொத்து அமைந்துள்ளது. ஏறத்தாழ இந்தக் கருடனைப் போலவே கைகளைக் கட்டிக் கொண்டு நிற்கும் சிற்பமொன்றைச் சோழர் காலக் கோயிலான சீனிவாசநல்லூர் குரங்கநாதர் கோயிலின் ஆதிதளத் தென்புறக் கோட்டத்தில் பார்க்கலாம்.



கருடன்

சேத்ரபாலர்

சுடர் முடியுடன் நிர்வாணியாய்க் காட்சி தரும் சேத்ரபாலரின் பின் கைகளில் வலப்புறம் உடுக்கையும் இடப்புறம் பாசமும் இருக்க வல

முன்கையில் முத்தலை ஈட்டியும் இட முன்கையில் தலையோடும் காட்டப்பட்டுள்ளன. வயிற்றுக் கட்டு, முப்புரிநூல், குண்டலங்கள், வீரக் கழல்கள் கொண்டு சமபாதரராய்த் தளத்தின் மீது நிற்கும் இறைவனின் பின்புறமுள்ள நாய், தலையை இறைவனின் இட முன்கையருகே நீட்டி அவரது கையிலுள்ள தலையோட்டிலிருக்கும் ஊனையருந்த முனைப்பு காட்டுவது சிற்பத்தில் சிறப்பாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளது. இது சற்று அரிய படைப்பாகும். இதே போன்றதொரு ஆனால் இதை விட மேலான சிற்பச் செறிவுடன் கூடிய சேத்ரபாலர் வடிவமொன்று பெரிச்சியூர்க் கோயிலில் தனித் திருமுன்னில் இடம் பெற்றுள்ளது.[18] இது தமிழ்நாட்டுச் சிற்பங்களைப் போல் இல்லாமல் மாறுபட்ட தோற்றத்தில் மிக உக்கிரமாக வடிக்கப்பட்டுள்ளது. குன்றக்குடி குடைவரையிலுள்ள சேத்ரபாலர் திருமேனிக்கு இது முன்னோடியாகலாம்.

பாண்டி மண்டலத்தில் அதிலும் குறிப்பாகத் திருப்புத்தூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் சேத்ரபாலருக்குச் சிறப்பான வழிபாடுகளும் தனி மரியாதைகளும் உண்டு. திருப்புத்தூர் திருத்தளிநாதர் கோயில், பிரான்மலைக் கோயில் ஆகியவற்றில் இவருக்குத் தனித் திருமுன்களே உண்டு. அந்த மரபைப் பின்பற்றித்தான் இங்கும் சேத்ரபாலர் இருப்பிடத்தைத் தனித் திருமுன்னாக்கிக் காட்டும் முயற்சியில் இக் குடைவரையின் கிழக்குப் பகுதியில் சுவரெழுப்பி வாசல் நிறுத்தியிருக்கிறார்கள்.

## கல்வெட்டுகள்

முகப்பு முழுத்தூணின் மேற்சதுரத்திலுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டால் மசிலீச்சுரம் என்றழைக்கப்படும்[19] இந்நடுக் குடைவரையில் இதையும் சேர்த்து ஒன்பது கல்வெட்டுகளும்[20] சேத்ரபாலருக்காக எடுக்கப்பட்டுள்ள சுவரில் இரண்டு கல்வெட்டுகளும்[21] உள்ளன. இவை தரும் செய்திப் பிழிவுகளைக் கல்வெட்டுகளின் பார்வையில் குன்றக்குடி என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கலாம்.

## மூன்றாம் குடைவரை

முதலிரண்டு குடைவரைகளின் நடைமாளிகை வழியே மூன்றாம் குடைவரைக்குச் செல்ல முடியாதபடி அதன் முன் கட்டப்பட்டுள்ள மகா மண்டபச் சுவர் தடுப்பாய் அமைந்துள்ளது. பெருமண்டபத்தினுள் பிதுக்கமாய் நிற்கும் இம்மகாமண்டப வாயில் எப்போதும் பூட்டப்பட்ட நிலையிலேயே உள்ளது. இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் பராமரிப்பில் உள்ள குன்றக்குடிக் குடைவரைகளுள் இம்மூன்றாம் குடைவரையிலேயே அதிக அளவில் சிற்பங்கள் இருப்பதால் பாதுகாப்பு

கருதிப் பூட்டி வைத்துள்ளனர். இங்குள்ள மூன்று குடைவரைகளையுமே கண்ணாய்க் காத்துவரும் குடைவரை அலுவலர் திரு. பாலகுமார் பெரும்பாலும் இந்த வளாகத்திலேயே இருப்பதால் குடைவரையைப் பார்ப்பது எளிமையாக உள்ளது.



மூன்றாம் குடைவரையின் முகப்பும் கருவறையும்

மகாமண்டபத் திருவாயில் மேல் சுதையுருவங்களாகச் சில சிற்பத் தொகுதிகள். வாசலைத் திறந்து உள் நுழைந்ததும் பதினைந்தாம் நூற்றாண்டுக் கலைமுறையில் அமைந்த நான்கு தூண்கள் தாங்கி

நிற்கும் மண்டபத்தின் வரவேற்பு. குடைவரையின் கபோதச் சரிவின் மேல் பாறைப் பாளங்களை நுழைத்து மண்டபமாக இழுத்திருக் கிறார்கள். இம்மண்டபத் திருப்பணி பற்றிப் பேசும் கல்வெட்டு மண்டப வெளிச்சுவரில் காணப்படுகிறது.[22] குடையப்பட்டிருக்கும் கருவறையை நோக்கியவாறு இம்மண்டப நடுவில் நந்தியொன்று அண்மையில் வேதித் தூய்மை பெற்று மின்னிக் கொண்டிருக்கிறது.

மல்லையிலுள்ள அதிரண சண்டேசுவரம் போன்ற முகப்பு. குன்றின் இயற்கையான சரிவு, நீளமான கபோதத்திற்கும், கோட்டம் அமைக்க வாய்ப்பான பக்கப் பகுதிகளுக்கும், நின்று நோக்க நல்ல அகலமான தரையமைப்பிற்கும் இடம் தந்திருக்கிறது. பக்கப் பகுதிகளின் கீழ்ச் சரிவுகளில் மேற்கில் முருகனும், கிழக்கில் பிள்ளையாரும் செதுக்கப்பட் டுள்ளனர். இவ்விரண்டு சிற்பங்களும் இக்குடைவரையின் ஏனைய சிற்பங்களுக்குக் காலத்தால் சற்றுப் பிற்பட்டவையாகலாம்.

பக்கங்களில் அரைத்தூண்களும், இடையில் முழுத்தூண்களுமாய், முகப்பிலுள்ள 80 செ. மீ. அகலத் தளத்தின்மேல் நான்கு தூண்கள் பொளியப்பட்டுள்ளன. இத்தூண்கள் அமைந்திருக்கும் தளம், முகப்பு மற்றும் முகமண்டபத் தரைகளைவிட நன்றாக உயர்த்திக் காட்டப்பட் டுள்ளது. முகப்புத்தரை இத்தள விளிம்பிலிருந்து 1.08 மீட்டர் அளவிற்குத் தெற்கிலும் 5.30 மீட்டர் அளவு கிழக்கு மேற்காகவும் பரந்து காணப்படுகிறது. தளத்தின் மீதுள்ள தூண்கள் மற்றக் குடை வரைகளைப் போலவே அமைந்துள்ள போதும் திரு. தி. இராச மாணிக்கம் இங்குள்ள அரைத்தூண்களும் சதுரம் கட்டு சதுரமென்று அமைந்துள்ளதாகப் பிழைபடக் கூறியுள்ளார்.[23] இத்தூண்களிலிருந்து எழும் போதிகைகளின் கீழ்க்கைகள் அளவில் சிறியன. மேற்கைகள் அவற்றைப் போல ஒன்றரை மடங்கு பெரியன. கீழ்க்கைகள் மேற் கைகளாகத் திரும்பும் இடம் மற்ற இரண்டு குடைவரைகளைப் போலவே விரிகோணத்தில் அமைந்துள்ளது. மேற்கைகள் சிறு மடிப்புடன் உத்திரத்தைக் கூடுகின்றன. உத்திரத்தின்மேல் பிதுக்கமாய் ஓடும் வாஜனம் இரண்டாம் குடைவரையைப்போல் முகப்பின் பக்கச் சுவர் களில் இறங்கி ஆங்கமைந்துள்ள கோட்டங்களுக்கு மேல்நிலையா கின்றது. இக்கோட்டங்களின் வடபுற அணைவாக முகப்பின் பக்க அரைத்தூண்கள் அமைய, தென்புறத்தே சிறு அளவிலான பிரம்ம காந்த அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. கோட்டங்களின் அடித் தளங்கள் முகப்புத் தரையிலிருந்து மேற்கில் 41 செ.மீ., கிழக்கில் 29 செ. மீ. என உயர்த்தி அமைக்கப்பட்டுள்ளன. இக்கோட்டங்களில் பேரளவினராய் வாயிற்காவலர் நிற்கின்றனர்.

வாஜனத்திற்கு மேலிருந்து 1.29 மீட்டர் அளவிற்குத் தெற்கில் சரிந்து இறங்கும் கபோதம் முகப்புப் பகுதி முழுவதற்கும் கூரைபோல் அமைகிறது. பாறையின் இயற்கையான இச்சரிவை அதிக வேலைப் பாடுகளுக்கு உட்படுத்தாமல் எளிய கூரையாகப் பயன்படுத்தியிருக் கிறார்கள். இவ்வளவு நீண்ட கபோதச் சரிவை மிகமிக அருமையாகவே குடைவரைகளில் பார்க்க முடிகிறது. கபோத முகப்பின் மேற்பகுதியில் முழு நீளத்திற்கும் கிழக்கு மேற்காகக் குழிவுண்டாக்கி மழை நீரோட்ட வடிகாலாய்ச் செய்திருக்கிறார்கள்.

தெற்கு வடக்காக 1·59 மீட்டர் அளவிலும் கிழக்கு மேற்காக 5·68 மீட்டர் அளவிலும் அமைந்துள்ள முகமண்டபத்தின் கூரை வெறுமையாக உள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் இக்கூரையை ஒட்டி வாஜனம் காட்டப்பட்டுள்ளது. முகமண்டபச் சுவர்களில் முப்புறத்தி லும் கோட்டங்கள் அகழ்ந்து சிற்பங்களைச் சமைத்துள்ளனர். மேற்குக் கோட்டத்தைத் திருமாலும் கருடனும் பகிர்ந்து கொள்ளக் கிழக்குக் கோட்டத்தை ஆடல் தோற்றத்தில் சிவபெருமான் அலங்கரிக்கின்றார். முகமண்டபப் பின்சுவரின் வலப்புறத்தே நீள் எரியாய் நிமிர்ந்தவரும், இடப்புறத்தே கொற்றவை மற்றும் சங்கரநாராயணரும் காட்சி தருகின்றனர். இச்சிற்பக் கோட்டங்களின் கீழ்த்தளம் முகமண்டபத் தரையமைப்பிலிருந்து வெவ்வேறு அளவுகளில் உயர்த்திக் காட்டப் பட்டுள்ளது.

| | |
|---|---|
| திருமால் கருடன் கோட்டம் | — 43 செ.மீ. |
| லிங்கோத்பவர் கோட்டம் | — 55 செ.மீ. |
| கொற்றவைக் கோட்டம் | — 19 செ.மீ. |
| சங்கரநாராயணர் கோட்டம் | — 28 செ.மீ. |
| சிவபெருமானின் ஆடல் தோற்றக் கோட்டம் | — 68 செ.மீ. |

முகமண்டபத்திலிருந்து கருவறையை அடைய நான்கு படிகள் உள்ளன. கீழ்ப்படி அரைநிலா வடிவத்தில் இருக்க, மேற்படி, கரு வறை வாசலின் கீழ்நிலையாக அமைந்துள்ளது. எந்தவிதமான தாங்கு தள அமைப்புமில்லாமல் உள்ள கருவறை வாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொன்றாய் பிரம்மகாந்த அரைத்தூண்கள் போதிகைக ளின்றிக் காட்டப்பட்டுள்ளன. இந்தத் தூண்களின் மேல் அமர்ந் துள்ள உத்திரம் கருவறையின் பக்கங்களில் மடிந்து முகமண்டபப் பின் சுவர்க் கூரையையொட்டி முழுநீளத்திற்கும் கிழக்கு மேற்காகத் தொடர்கிறது. அரைத்தூண்களையொட்டி இவ்வுத்திரம் அவற்றின் மேற்பரப்பிலிருந்து சற்று வெளிவாங்கி அதே அகலத்தில் கருவறை வாசலின் மேல் படர்ந்து கருவறை வாயிலின் மேல்நிலையாக அமர்ந் துள்ளது. திரு. தி. இராசமாணிக்கம் கருவறை வாயிலையொட்டி

இரு வாயிற்காப்போர் சிற்பங்கள் இருப்பதாகக் குறிப்பிட்டு அவற்றைப் பற்றி மிக விரிவாக வண்ணித்துள்ளார்[24]. ஆனால், இக்குடை வரையில் கருவறை வாயிலையொட்டி வாயிற்காப்போர் சிற்பங்களே இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

கருவறையின் தரையமைப்பு, வாயில் நிலையின் மட்டத்தில் இருப்பதால் இவ்வாயில் நிலையை அடுத்துப் பிற்காலத்தில் சிறு தடுப்பு அமைத்துள்ளனர். கருவறையின் கூரையும் சுவர்களும் வெறுமையாக உள்ளன. கருவறையின் மையப்பகுதியில், லிங்கத் திருமேனி குன்றிலேயே குடைந்து செதுக்கப்பட்டதாய்க் குடைவரை யின் ஓரங்கமாகக் காட்சியளிக்கிறது. 1·08 மீட்டர் பக்க அளவுள்ள சதுர ஆவுடையாரின் மீது 55·5 செ. மீ. உயரமுள்ள லிங்கமேனி காட்சி தருகிறது. இதன் சுற்றளவு 1·18 மீட்டர். கோமுகம் மேற்கு முகமாக உள்ளது.

## சிற்பங்கள்

குடைவரையின் முகப்புப் பகுதியில் நான்கு சிற்பங்களும், முக மண்டபத்தில் நான்கு சிற்பத் தொகுதிகளும் உள்ளன.

### முகப்புச் சிற்பங்கள்

முகப்பையொட்டிய பாறைச் சரிவில் எடுக்கப்பட்டுள்ள கோட்டங் களில் கிழக்கிலொன்றும் மேற்கிலொன்றுமாய் இரண்டு வாயிற்காப் போர் வடிவங்கள் காணப்படுகின்றன. இவற்றின் உயரம் இரண்டு மீட்டர். அளவில் பெரிய இவ்வடிவங்கள் மண்டகப்பட்டு, தளவானூர் குடைவரைக் காவலர்களை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன.

இக்குடைவரையின் இரு காவலருமே நேர்கொண்ட பார்வையின ராய்ச் சடாமகுடத்துடன் முப்புரிநூல், வயிற்றுக்கட்டு அணிந்து வீரப் பெருமிதர்களாய்க் காட்சி தருகின்றனர். மேற்கிலுள்ளவருக்கு இரண்டு சிறிய கோரைப் பற்கள். இவரது இடப்பாதம் நேராகவும் வலப்பாதம் பார்சுவ உத்கட்டிதத்திலும் காட்டப்பட்டுள்ளன. வல முழங்கையை உருள் தடியின் மேல் வைத்து, இடக்கையைக் கட்யவலம்பித மாக்கியுள்ளார். மேற்கிலுள்ளவர் கிழக்கு நோக்கியவராய் இடக் கையைக் கட்யவலம்பிதமாக்கி வலக்கை மணிக்கட்டுப் பகுதியை உருள் தடியின்மீது தாங்கலாக வைத்துள்ளார். இருவரது தடிகளின் மீதும் பாம்புகள் சுற்றியுள்ளன. இவற்றுள் கிழக்குப் பாம்பு படமெடுத்த நிலையில் காவலரின் வலத்தொடையருகே காட்சி தர, மேற்குப் பாம்போ படமெடுக்காத தலையுடன் மேல் நோக்கித் தன் தலைவரைப் பார்க்கிறது. மேற்கிலுள்ளவர் தடியின் கீழ்ப்பகுதியில் சிறிய கத்தி

காட்டப்பட்டுள்ளதால் இதை மழுவென்றே கொள்ளலாம். இருவருமே கனமான ஆடைகளுடன் காட்சி தருகின்றனர். ஆடை முடிச்சுகளின் பக்கவாட்டுத் தொங்கலும், முன் வளையங்களும் கி. பி. எட்டாம் நூற்றாண்டு மரபையொட்டிக் காட்சி தருகின்றன. இருவர் கழுத்திலும் பட்டையான அட்டிகை. கைகளின் மேற்கைப் பகுதியில் முவ்வளைவுக் கங்கணங்கள்; மணிக்கட்டுப் பகுதியில் நகைப் பட்டைகள்; செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்.



அதிகார நந்தியின் முன்னோடியாய் வாயிற்காவலர்

கிழக்கிலிருப்பவரின் குண்டலங்கள் அதிக வேலைப்பாடுடையன. இவர் இடப்பாதத்தை நேராக வைத்து வலப்பாதத்தை திரஸ்ரயமாய் ஊன்றிக் கணுக்காலை இலேசாக உயர்த்தியுள்ளார். இவரது தலையின் இரு புறமும் நன்கு வளர்ச்சியடைந்த, திடமான, வளைந்த கொம்புகள் காட்டப்பட்டுள்ளன. நெற்றிக் கண்ணோடு நிற்கும் இவரது சடா மகுடத்தின் வலப்புறத்தே அழகான பிறை. வாயிற்காவலர் மகுடத்தில் பிறை வடிவம் காணப்படுவது மிகமிக அபூர்வமானதாகும். குன்றக்குடியில் இரண்டாம் குடைவரைக் காவலர் ஒருவர் மகுடத்திலும் இதுபோல் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பல்லவக் குடைவரைக் காவலர்களிடத்து இப்படியொரு பிறை காட்டப்படவில்லை என்பது நினைக்கத் தக்கது. தலைக்கொம்புகள், சடையிலுள்ள பிறை, நெற்றிக் கண்

இவை மூன்றும் உள்ள இவரைப் பிற்கால அதிகார நந்தி வடிவத்தின் முன்னோடியாய்க் கொள்ளலாமென்று தோன்றுகிறது.

இரு காவலருமே முழங்கால் வரையமைந்த இடையாடையுடன் தான் காட்சியளிக்கின்றனர். இருவருக்குமே அடர்த்தியான சடைக் கற்றைகள் கழுத்தின் இருபுறமும் தொங்குகின்றன. நன்றாகப் பொளியப்பட்ட புருவமும் நெற்றிப் பகுதியும் முகத்திற்குத் தனி அழகைத் தருகின்றன. திரண்ட தோள்களும் பெருவடிவும் உள்ள இக்காவலர்கள் பல்லவக் காவலர்களைவிட அழகினர்.

முருகன்

சிறிய வடிவினராய் நான்கு கைகளுடன், மேற்குக் காவலரின் வலப்புறப் பாறைச் சரிவில் முருகன் நேர்நின்ற கோலத்தில் காட்சி தரு கிறார். சென்னியும் இடப் பின்கையிலுள்ள சிறிய அளவிலான முத்தலை ஈட்டியும் அவரை அடையாளம் காட்டுகின்றன. வலப் பின் கை சின் முத்திரையிலுள்ளது. இக்கையின் மேற்பகுதியில் கருவியொன் றைக் காட்டும் முயற்சி தொடங்கிய நிலையில் உள்ளது. இட முன் கையைக் கட்யவலம்பிதத்தில் வைத்து, வல முன் கையை ஆகூய வரதத்தில் காட்டியுள்ளார்; செவிகளில் பனையோலைக் குண்டலங்கள்; அரையாடையும், உதரபந்தமும், முப்புரிநூலும் கொண்டுள்ள இவரது தலையைக் கரண்ட மகுடம் அணி செய்கிறது. கழுத்தில் பெரிய பட்டிகையுடன் சிரித்த முகமாய்க் காட்சி தருகிறார் முருகன். தமிழகக் குடைவரைகளில் முருகப்பெருமானின் சிற்ப வடிவங்கள் மிகக் குறைந்த அளவிலேயே இடம் பெற்றிருப்பதால் இச்சிற்பம் சிறப்புக்குரியதாகிறது.

பிள்ளையார்

கிழக்குக் காவலரின் இடப்புறப் பாறைச் சரிவில், அரைத் தாமரை யமர்வில் இரு கையினராய்க் காட்சி தருகிறார் பிள்ளையார். வலக் கையில் மோதகம்; இடக்கையைத் தொடைமேல் இருத்தியுள்ளார். கொம்புகள் இரண்டுமே உடைந்துள்ள நிலையில், துதிக்கை வலம்புரி யாய்க் காட்டப்பட்டுள்ளது. கரண்ட மகுடமும் முப்புரி நூலும் உதரபந்தமும் அணிந்து தளத்தின்மீது அமர்ந்துள்ளார். மகுட முகப்பு அழகாக அமைந்துள்ளது. கழுத்தில் பெரிய அளவிலான ருத்திராக்கங் கள் இணைந்த மாலை அணிந்துள்ளார். இதுபோன்ற ருத்திராக்க மாலையணிந்த பிள்ளையாரைப் பல்லவர் பகுதியில் பார்த்ததில்லை. இந்த ருத்திராக்க மாலை மிக அழகாகக் காட்டப்பட்டுள்ளது.

முகமண்டபச் சிற்பங்கள்

முகமண்டபத்தின் முப்புறச் சுவர்களிலும் கோட்டங்கள் அமைத்துச் சிற்பங்களை உருவாக்கியுள்ளனர். மேற்குக் கோட்டத்தில் திருமாலும்

கருடனும்; கிழக்குக் கோட்டத்தில் சிவபெருமானின் ஆடல் தோற்றம். பின்சுவர்க் கோட்டங்களில் கருவறைக்கு வலப்புறம் லிங்கோத்பவர் தொகுதியும், இடப்புறம் கொற்றவை மற்றும் சங்கரநாராயணர் சிற்பங் களும் உள்ளன. இவையனைத்தின் மீதும் கனமான சுதை பூசப்பட்டு வண்ணம் தீட்டப்பெற்றுள்ளது. சில இடங்களில் இச்சுதை சிதைந்து திருமேனிகளின் மெய்யான தோற்றம் தெளிவாய்த் தெரிகிறது. சுதை யகன்ற இவ்விடங்களில் சிற்பங்களின் அழகு சற்றுக் கூடுதலாக உள்ளது மறுக்க முடியாத உண்மையாகும்.

### திருமாலும் கருடனும்

மேற்குக் கோட்டத்தின் பெரும் பகுதியில் நெடிய திருமேனியராய்த் திருமாலும் அவருக்கு இடப்புறத்தே அணுக்கமாகச் சற்றுச் சிறிய அளவில் மனித வடிவில் கருடனும் ஏறத்தாழ இரண்டாம் குடைவரை யில் இருப்பது போலவே காட்டப்பட்டுள்ளனர். திருமாலின் வலப் பாதம் நேராக இருக்க, இடப்பாதம் பார்சுவத்தில் உள்ளது. கனமான இடுப்பாடை மைய மடிப்புகளுடன், கணுக்காலுக்குச் சற்று மேல்வரை காட்டப்பட்டுள்ளது. இதன் கீழ்மடிப்பும் கனமாக உள்ளது. வல முன் கையைக் கட்யவலம்பிதத்தில் கொண்டுள்ள இறைவன் தம் இட முன் கையை அருகே உள்ள கருடனின் வலத் தோளின் மேல் மென்மையாக அமர்த்திக் கையின் கீழ்ப்பகுதியை, உள்ளங்கை கருடனைப் பார்த் திருப்பது போல் நெகிழ் கையாய்த் தாழ்த்தியுள்ளார். திரு. தி. இராச மாணிக்கம் இக்கைகளைப் பற்றி எழுதும்போது வல முன் கையை இறைவன் இடுப்பில் ஊன்றியிருப்பதாகவும், இட முன் கையை கட்யவலம்பிதமாகக் கொண்டிருப்பதாகவும் தவறாகக் குறித்துள்ளார்[25]. இரு செவிகளையும் மகர குண்டலங்கள் அலங்கரிக்கக் கிரீட மகுடராய், மெல்லிய முப்புரி நூலும், வயிற்றுக் கட்டும் அணிந்துள்ள இப்பெரு மானின் பின் கைகளில் வலப்புறம் சக்கரம்; இடப்புறம் சங்கு. சிற்பம் முழுவதும் சுதையிருப்பதால் இந்த அணிகலன்கள் மெய்யானவையா அல்லது சுதையால் உருவாக்கப்பட்டவையா என்பதை அறிந்து கொள்ள முடியவில்லை. கடிசூத்திரத்தில் புலி முகக் கச்சு சுதையில் காட்டப்பட்டுள்ளது. தோள்களின் இருபுறமும் பூக்களாய்ப் படரும் கந்தமாலை.

கருடாழ்வார் வலப்பாதத்தை நேராக வைத்து இடப் பாதத்தைப் பார்சுவத்தில் திருப்பியுள்ளார். பூட்டுக் குண்டலங்கள் இரு செவி களையும் அலங்கரிக்கக் கரண்ட மகுடராய்க் கைகளிரண்டையும் குறுக்கீடு செய்து உள்ளங்கைகளை மார்பில் பதித்து பயபக்தியுடன் காட்சியளிக்கும் இவரது முகம் கூச்ச உணர்வுடன் இடப்புறம் சாய்ந் துள்ளது. இடப்புற இறக்கை மடிந்த நிலையில் காட்டப்பட்டுள்ளது.

இது போன்ற மனித வடிவக் கருடனைப் பிள்ளையார்ப்பட்டி, சிங்க வரம், ஆவூர்க் குடைவரைகளிலும் காணலாம்.

லிங்கோத்பவர் தொகுதி

முகமண்டபப் பின் சுவரில் தெற்கு நோக்கிய நிலையில் கருவறை வாயிலின் வலப்புறத்தே இத்தொகுதி அமைந்துள்ளது. இத்தொகுதி யில் நடுநாயகமாகப் பேரளவில் லிங்கோத்பவரும், அவரின் வலப் புறத்தே நான்முகனும், இடப்புறத்தே திருமாலும் சற்று அளவில் குறைந்த நிலையில் காட்டப்பட்டுள்ளனர். லிங்கோத்பவரின் முகத்தில் சுதை பெரும்பாலும் அகன்றுள்ளதால் மெய்க்கோலம் கண்டு மகிழ முடிகிறது. கண்களின் பார்வையெழில் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில் தென் திருச்சுற்றுமாளிகைச் சுவர்ச் சிற்பங்களிலுள்ள அரச வடிவத்தை நினைவூட்டுகிறது. அதே கண்கள்! அதே சுடரொளி! காந்தமாய் இழுக்கும் அதே பார்வை!

லிங்கோத்பவர் வடிவம் சற்று மாறுதலானது. தொடக்கக் கால லிங்கோத்பவர் வடிவங்களுள் இதை ஒன்றாய்க் கொள்ளலாம். இது போன்ற வடிவங்கள் பிள்ளையார் பட்டியிலும் திருமெய்யத்திலும் உள்ளன. கீழ்ப்பகுதி லிங்கத் திருமேனியாய் அமையப், பிளந்திருக்கும் அம்மேனியிலிருந்து பரவும் மனித வடிவாய்த் தொடைப் பகுதியிலிருந்து சிவபெருமான் காட்சியளிக்கிறார். வல முன்கை நெகிழ் கையாய்த் தாழ, இட முன்கை கட்யவலம்பிதமாய் இருக்கப், பின் கைகளில் வலப் புறம் மழுவும், இடப்புறம் மானும் சுதையில் காட்டப்பட்டுள்ளன. இவற்றுக்கருகே சுதை விலகிய பழைய மானும் மழுவும் பாதியளவு தெரிகின்றன. நெகிழ் கையின் கட்டை மற்றும் சுண்டு விரல்கள் நீண்டிருக்க ஏனைய மூன்று விரல்களும் உள்ளங்கை நோக்கி மடிந் துள்ளன. இதை ஆகூய வரதமாகக் கொள்ளலாம். இறைவனின் சடாபாரத்துக்கு மேல் சுதையில் ஒளிவட்டம் காட்டப்பட்டுள்ளது. இதன் வலப்புறம் அன்னமொன்றும் சுதையில் வடிக்கப்பட்டுள்ளது. வயிற்றுக்கட்டும், முப்புரி நூலும் மேற்குக் கோட்டத் திருமாலுக் குள்ளது போல் காட்டப்பட்டுள்ளன. வலச் செவியை மகர குண்டலமும் இடச் செவியைப் பனையோலைக் குண்டலமும் அழகு செய்கின்றன.

சிவபெருமானின் வலப்புறம் மூன்று திருமுகங்களுடன், முன் கைகள் இரண்டையும் மார்பருகே வணக்க முத்திரையில் காட்டிப் பின் கைகளில் வலப்புறம் அக்கமாலையும், இடப்புறம் கமண்டலமும் கொண்டு, நேர்ப் பார்வையராய் நேர் நின்ற கோலத்தில் காட்சிதரும் நான்முகனின் இடையாடை கணுக்கால் வரை காட்டப்பட்டுள்ளது.

சிவபெருமானின் இடப்புறம் அதேபோல் முன் கைகளை வணக்க முத்திரையில் கொண்டு, பின் கைகளில் வலப்புறம் சக்கரமும், இடப் புறம் சங்கும் ஏந்தி முகத்தைச் சற்றே இடப்புறம் சாய்த்தவராய்த் திருமால் காட்சி தருகிறார்.

கொற்றவை, சங்கரநாராயணர் தொகுதி

கருவறை வாயிலுக்கு இடப்புறத்தே முகமண்டபத்தின் பின் சுவரில் முதலில் கொற்றவையும் அடுத்து சங்கரநாராயணரும் காட்சி தருகின்றனர். கொற்றவை மகிடத்தின் தலைமேல் நின்றகோலம். வலப் பாதம் திரஸ்ரயமாய்த் திரும்ப, இடப்பாதம் நேராக உள்ளது. கரண்ட மகுடமும், பனையோலைக் குண்டலங்களுமாய், நெற்றிக் கண்ணுடன், கோரைப் பற்களைக் காட்டியபடி பல அணி வகைகளும், மார்புக் கச்சும் அணிந்தவராய்க் காட்சி தரும் கொற்றவையின் தலைக்கு மேல் குடை யொன்று காட்டப்பட்டுள்ளது. இந்தக் குடையின் அமைப்பு பனைமலை ஓவியத்திலுள்ள குடையை நினைவூட்டுகிறது. அம்மையின் தோளுக் குப் பின்னால் அம்புகள் நிறைந்த கூடுகள்.

எட்டுத் திருக்கைகளில் வல முன்கை அருட்கையாய்த் தாழ்ந்திருக்க வலப் பின்கைகளில் மூன்றாவதில் கத்தியும், நான்காவதில் எறியும் நிலையில் சக்கரமும் உள்ளன. இரண்டாம் வலக்கையில் உள்ள கருவியைச் சுதை பூசப்பெற்றிருப்பதாலும், ஒரு பகுதி சிதைந்திருப்ப தாலும் உறுதியாக இன்னதென்று அடையாளம் காண முடியவில்லை. இருக்கும் அமைப்பு கொண்டு பார்க்கும்போது இதைக் குண்டாந்தடி யாகக் கொள்ளலாம்.[26] இட முன்கையை முழங்கையருகே மடித்து, உள்ளங்கை மார்பருகே மேல் நோக்கி அமையும்படி திருப்பியுள்ள அம்மை, அக்கையால் தலையோட்டை ஏந்தியுள்ளார். இடப் பின் கைகளில் கீழிருந்து மேலாக வில், கேடயம், சங்கு ஆகியன உள்ளன.

அம்மையின் இருபுறமும் அடியவர் இருவர் பக்கத்திற்கொருவ ராய்க் குத்துக் காலிட்டு அமர்ந்துள்ளனர். வலப்புறம் உள்ளவர் தலை முடியை இடக்கையால் பிடித்துக் கொண்டு வலக்கையால் கழுத்தை அறுத்துக் கொற்றவைக்குத் தரும் செயற்பாட்டில் இருக்கிறார். சடா பாரத்தோடு இருக்கும் இடப்புறத்தார் கைகளில் சிறு பாத்திரமொன்றை ஏந்தியுள்ளார். திரு. தி. இராசமாணிக்கம் இப்பாத்திரத்தை உடுக்கை யென்று தவறாகக் குறிப்பிட்டுள்ளார்.[27]

சமபங்கராய் நிற்கும் சங்கரநாராயண வடிவத்தின் வலப்புறத்தை சிவபெருமானும் இடப்புறத்தைத் திருமாலும் பங்கிட்டுக் கொள்கின்ற னர். புலித்தோலாடையும் சடா மகுடமும் கொண்டிலங்கும் சிவப்

பகுதியின் வல முன்கை காட்டும் குறிப்பை ஆகூய வரதமாகக் கொள்ள லாம். வலப் பின்கைக்கு உரியதாய்ச் சுதை விழுந்த இடத்தில் நீள மான மழுவைக் காணமுடிகிறது. இது தவிர சுதையாலான சிறு மழு வொன்றும் உள்ளது. திருமால் பகுதி கிரீட மகுடமும், கணுக்கால் வரையிலான பட்டாடையும் கொண்டு, பின் கையில் சங்கேந்தி, இட முன்கையைக் கட்யவலம்பிதத்தில் கொண்டுள்ளது. இவ்வடிவத்தின் இரு செவிகளையும் மகர குண்டலங்கள் அலங்கரிக்கின்றன.

## சிவபெருமானின் ஆடல் தோற்றம்

முகமண்டபக் கிழக்குச் சுவர் முழுவதும் சிவபெருமானின் ஆடல் தோற்றம் பரவியுள்ளது. ஆடும் பெருமானின் கீழே இருபுறங்களிலும் அமர் நிலையில் பக்கத்திற்கொருவராய்க் கணநாதர்கள். வலப்புறம் இருப்பவர் தம் கால்களுக்கிடையில், ஒரு கண் முழவுகள் இரண்டை அருகருகே நிறுத்திக், கால்களால் அணையிட்டு இறையாடலுக்கு இசையெழுப்பும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இடக்கை ஒரு முழவின் மீது பட்டு இசையெழுப்ப வலக்கை அடுத்த தட்டுக்காக உயர்ந்துள்ளது.

சடாபாரத்துடன் இரு செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள் அணிந்து, வலப்புறம் இலேசாய்ச் சரிந்த சிரித்த முகத்துடன் காட்சி யளிக்கும் இவ்வடிவம் இயக்கும் முழவுகள், ஒன்றிலிருந்து ஒன்று வடிவத்திலும், அலங்கரிப்பிலும் வேறுபட்டுள்ளன.

இடப்புறம் இருக்கும் பூதநாயகர் லலிதஅமர்வில் பிள்ளையாரைப் போல் அழகாய் அமர்ந்து, கைகளில் உள்ள தாளங்களை இயக்கிய படியே இறைவனின் ஆடலைத் தலை நிமிர்த்திக் கண்டு மெய்மறக் கிறார். புடைத்த வயிறும் சடாபாரமுமாய்க் காட்டப்பட்டிருக்கும் இவரது செவிகளிலும் பனையோலைக் குண்டலங்கள்.

இந்த இருவரும் தரும் தாளத்திற்கேற்ப ஆடும் சிவபெருமானின் அர்த்த ஸ்வஸ்திகம், சுவரின் மையப் பரப்பெங்கும் மனதைக் கொள்ளை கொள்ளும் விதத்தில் பரவியுள்ளது. இந்தக் கரணத்தைத்தான் ராஜ சிம்மரின் பல கோயில்களில் பல்லவப் படைப்பாய்ப் பார்க்கிறோம். கி.பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் மிகப் பரவலாக விரும் பிப் போற்றப்பட்ட ஆடல் காணங்களுள் இதுவும் ஒன்றாக இருந்திருக்க வேண்டும். ஆடும் இறைவனைச் சுற்றிலும் சுதையில் திருவாசிச் சுடர்கள் காட்டப்பட்டுள்ளன. இவை சில இடங்களில் உதிர்ந்திருப்ப தால் முதல் வடிவத்தில் இச்சுடர்கள் இடம் பெறவில்லையென்பதும், பின்னாளைய சுதைப்பூச்சின் போது மேற்கொள்ளப்பட்ட அலங்காரமே இது என்பதும் புலனாகின்றன. சுதையை முற்றிலுமாய் நீக்கினா

லொழிய இந்த இறை வடிவத்தின் முழுமையை உணர்ந்து மகிழ முடியாது.

எட்டுத் திருக்கைகளில் வல முன் கை மார்பருகே தர்ஜனியாய் அமைய வலப் பின் கைகளில் கொடித்தண்டு, மழு, துடி உள்ளன. இட முன் கை அர்த்த ரேசிதமாய் எழுந்து தாழப், பிற பின் கைகளில் பாம்பு, தீ, ஓலைச் சுவடி ஆகியன உள்ளன. மண்டல நிலையில், இடப் பாதத்தைப் பார்சுவமாக்கி, வலக் காலை இடக் காலின் பின்னால் குறுக்கீடு செய்து, இடப் பாதத்தின் விரல்களை அக்ரதலசஞ்சாரத்தில் நிறுத்தியுள்ள இறைவனின் இந்த ஸ்வஸ்திகப் பாதநிலை அற்புதமானது. இரு செவிகளிலும் குண்டலங்கள்; வலப்புறம் பனையோலைச் சுருள்; இடப்புறம் மகரக் குழை. வரிசையாய் அடுக்கிய கொக்கிறகும், செருகிய ஊமத்தம் பூக்களும் கொண்ட மகுடத்தையும் மீறி, ஆடலின் விரைவுக்கேற்ப இருபுறமும் அலைபாயும் விரிசடைக் கற்றைகள் வெகு அழகாகக் காட்டப்பட்டுள்ளன. தலை இடப்புறச் சாய்வாக இருந்தாலும் முகம் இலேசாகவே திரும்பியுள்ளது. இதழ்களின் விரிவில் விளைந்திருக்கும் புன்னகை இறைவனின் முகத்தோற்றத்திற்கு அலாதியானதொரு எழிலைக் கூட்டுகிறது.

இவ்விறை வடிவத்தை வண்ணிக்கும் திரு. தி. இராசமாணிக்கம் தம் கட்டுரையில், சிவபெருமானின் இடச் செவியில் குண்டலமில்லை என்றும் அவர் வலக் கையில் கொண்டிருப்பது கட்வாங்கம் என்றும் பிழைபடக் கூறியுள்ளார்.[28] கட்வாங்கம் என்பது எலும்பின் மீது செருகப்பட்ட மண்டையோட்டுக் கருவி. இதைத் தமிழகத்தில் மிகமிக அரிதாகவே காணமுடியும். சிவபெருமானின் வல முன் கை குறிப்பையும் இவர் சூசி என்று குறித்துள்ளார்.[29] யாரையும் சுட்ட நீட்டப்படும் விரலே சூசியாகும். இங்கே விரல் மேல்நோக்கி நிமிர்ந்துள்ளதால் இதை தர்ஜனியென்று கொள்வதே பொருத்தமாகும்.

## கல்வெட்டுகள்

மூன்றாம் குடைவரையில் நான்கு கல்வெட்டுகளே உள்ளன. இவற்றுள் ஒன்று முதலாம் இராசராசருடையது.[30] மற்றொன்று முதலாம் இராசேந்திரருடையது.[31] ஏனைய இரண்டும் சுந்தர பாண்டியருடையவை.[32] இக்குடைவரையின் மகாமண்டபச் சுவர்களில் ஐந்து கல்வெட்டுகள் உள்ளன.[33] இவ்வொன்பது கல்வெட்டுகளின் சாரத்தையும் கல்வெட்டுகளின் பார்வையில் குன்றக்குடி என்ற தலைப்பின் கீழ்ப் பார்க்கலாம்.

## மூன்றாம் குடைவரையை அடுத்துள்ள பாறைச் சரிவு

பெருமண்டபத்திற்கு வெளியே மூன்றாம் குடைவரையைத் தொடர்ந்து அமைந்துள்ள மலைச் சரிவில் கோட்டம் செய்து சண்டேசு

வரரைப் பொளிந்துள்ளனர். இச்சிற்பத்திற்கு முன்னால் சிறு மண்டப மொன்றும் கட்டப்பட்டுள்ளது. அரைத்தாமரையமர்வில் அமர்ந்துள்ள சண்டேசுவரர் இரு கைகளையும் தொடைகளின் மீது இருத்தியுள்ளார். இவற்றுள் வலக்கை அழைத்து அருள் வழங்கும் கையாகக் காட்டப்பட் டுள்ளது. பட்டையான முப்புரிநூல், பூட்டுக் குண்டலங்கள், கழுத்தில் கண்டிகையெனச் சடாபாரத்துடன் காட்சி தரும் சண்டேசுவரரின் வலப் புறத்தே மழுவொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.



சண்டேசுவரர்

சண்டேசுவரர் திருமுன்னுக்கு முன்னாலுள்ள திறந்த வெளியி லிருந்து பெருமண்டபக் கிழக்குச் சுவரின் மேற்பகுதியைக் காணலாம். உத்திரத்தில் முடியும் இச்சுவரின் சில பகுதிகள் இலேசாய்ச் சிதைந் துள்ளன. உத்திரத்தின் மேல் வலபியும் அதையொட்டிக் கூடுகளுடன் கூடிய கபோதமும் அழகற்ற நிலையில் காட்டப்பட்டுள்ளன. இக் கபோதத்தின் மேல், முதல் தள முடிவைக் காட்டும் வகையில் பூமி தேசமாக யாளி வரிமானம் தொடர்கிறது.

## கல்வெட்டுகளின் பார்வையில் குன்றக்குடி

குன்றக்குடி மலையிலுள்ள குகைத் தளம், குடைவரைகள் மற்றும் கற்றளிகளில் இருந்து நாற்பத்தொன்பது கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன.[34] இவற்றுள் நாற்பத்தைந்து கல்வெட்டுகள் மைய அரசின் கல்வெட்டுத் துறையால் ஐந்து நிலைகளிலும், எஞ்சிய நான்கு கல் வெட்டுகள் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையக் கள ஆய்வுகளின் போதும் படியெடுக்கப்பட்டன. இந்த நாற்பத்தொன் பது கல்வெட்டுகளுள் முப்பது கல்வெட்டுகள் குடைவரைகளில் இடம்

பெற்றுள்ளன.[35] குடைவரை சார்ந்த மண்டபச் சுவர்களில் எட்டுக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.[36] வெளிமண்டபத்திலுள்ள தேனாற்று நாதர் திருமுன்னில் நான்கு கல்வெட்டுகளும்,[37] அதையடுத்துள்ள அறையின் உட்புறச் சுவர்களில் மூன்று கல்வெட்டுகளும்,[38] மலைமேல் உள்ள முருகன் திருக்கோயிலில் மூன்று கல்வெட்டுகளும்,[39] குன்றக்குடி மலையிலுள்ள இயற்கையான குகைத் தளத்தின் கூரையில் தமிழிக் கல்வெட்டொன்றும்[40] காணப்படுகின்றன.

தமிழி, வட்டெழுத்துக் கல்வெட்டுகளைத் தவிர்த்துவிட்டால் இங்குள்ள ஏனைய கல்வெட்டுகளுள் காலத்தால் பழமையானது முதலாம் இராசராசரின் இருபத்து மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டேயாகும். இவரது மகனார் முதலாம் இராசேந்திரரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும் இங்குள்ளது. இவ்விரண்டும் ஒரே குடைவரையில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. பிற சோழ வேந்தர்களுள் முதலாம் குலோத்துங்கரின் கல்வெட்டுகள் மட்டுமே இங்குக் காணப்படுகின்றன. இவை இவ்வேந்தரின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டிலிருந்து நாற்பத்தொன்பதாம் ஆட்சியாண்டு வரை பரவியுள்ளன. இவற்றுள் ஆறு கல்வெட்டுகள் முதற் குடைவரையிலும்,[41] ஒரு கல்வெட்டு நடுக் குடைவரையிலுமாய்[42] இடம் பெற்றுள்ளன. சோணாடு வழங்கியருளிய கோமாறவர்மரான சுந்தரபாண்டியர், சடாவர்மரான ஸ்ரீவல்லப தேவர், விக்கிரம பாண்டியர், கோமாறவர்மரான குலசேகர பாண்டியர் போன்ற பாண்டிய அரசர்களுடைய கல்வெட்டுகள் மிகுதியான எண்ணிக்கையில் உள்ளன. இவற்றுள் சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டியரின் கல்வெட்டுகள் பன்னிரண்டு ஆகும்.[42A] இம் மன்னரின் மூன்றாம் ஆட்சியாண்டிலிருந்து பதினெட்டாம் ஆட்சியாண்டு வரை பரவியுள்ள இக்கல்வெட்டுகள் மலை மேலுள்ள முருகன் கோயில் தவிர கல்வெட்டுகள் காணப்படும் ஏனைய அனைத்து இடங்களிலுமாய்ப் பொறிக்கப்பட்டுள்ளன.

மன்னர் பெயரற்ற கல்வெட்டுகள் பதின்மூன்று உள்ளன.[43] இவற்றுள் இரண்டே வரிகளில் வட்டெழுத்துக்களால் நடுக் குடைவரைத் தூணொன்றில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு இக்கோயிலை மசிலீச்சுரம் என்றழைக்கிறது.[44] இங்குள்ள மூன்று குடைவரைகளில் எட்டாம் நூற்றாண்டளவிலேயே பெயரிடப்பட்டிருக்கும் கோயில் இது ஒன்றுதான். மூன்றாம் குடைவரையில் காணப்படும் முதலாம் இராசராசர் மற்றும் முதலாம் இராசேந்திரர் கல்வெட்டுகள்[45] இங்குள்ள இறைவனைக் குன்றக்குடி பரமசாமி என்றழைக்கின்றன. முதற் குலோத்துங்கரின் ஏழு கல்வெட்டுகளுள் நான்கு, திருக்குன்றக்குடி திருமலை உடைய மகாதேவர் என்றும் இரண்டு, திருமலை உடைய நாயனார் என்றும் இறைவன் பெயரைக் குறிக்கின்றன. இக்கல்வெட்டுகளுள் ஐந்து

முதற் குடைவரையில் உள்ளன. ஒன்று நடுக் குடைவரையில் உள்ளது. எனவே இக்கல்வெட்டுகள் குறிக்கும் பெயர்கள் இங்குள்ள மூன்று குடைவரை இறைவர்க்கும் பொதுவானவையாக இருந்தனவோ என்று கருதவேண்டியுள்ளது. பிற்காலக் கல்வெட்டுகளிலும் இது போலவே தேனாற்று நாயகரென்றும், மலைக்கொழுந்து நாயனா ரென்றும் பொதுப் பெயரிட்டு அழைக்கும் முறையைப் பார்க்கிறோம். முதற் குடைவரையிலுள்ள சடையவர்மர் ஸ்ரீவல்லப தேவரின் இரண்டு கல்வெட்டுகளும் இங்குள்ள இறைவனை ஸ்ரீ மூலஸ்தானம் உடைய நாயனார் என்று குறிப்பிடுகின்றன.[46]

## நாட்டுப் பிரிவுகள் - அரசியலமைப்பு

முதலாம் இராசராசரின் கல்வெட்டில் பாண்டி நாடான இராசராச வளநாட்டுத் தேனாற்றுப் போக்கிலிருந்த பகுதியாகக் குன்றக்குடி குறிக்கப்படுகிறது. முதலாம் குலோத்துங்கர் காலத்தில் இப்பாண்டி நாடு இராசராசர் பெயரையேற்று இராசராசப் பாண்டி நாடாக மாற, இதற்குள்ளிருந்த இராசராச வளநாடு இராசேந்திர வளநாடாகப் பெயர் மாற்றம் பெறுகிறது. பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளில் மண்டலப் பெயர் மறைந்து, இராசேந்திர வளநாடு, கேரளசிங்க வள நாடாகப் பெயர் மாற்றம் பெறுவதைப் பார்க்கிறோம். இவ்வள நாட்டினுள் அடங்கிய அதலையூர் நாட்டுத் தேனாற்றுப் போக்கி லிருந்த ஊராகக் குன்றக்குடி கல்வெட்டுகளில் நிலைபேறடைகிறது. முதற் குலோத்துங்கரின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல் வெட்டில் மட்டும் குன்றக்குடியான தென்புகலூர் என்று குன்றக் குடியின் மற்றொரு பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது[47].

குன்றக்குடி கல்வெட்டுகளில் குறிக்கப்படும் மற்றொரு வளநாடு திருவழுதி வளநாடாகும். முதலாம் இராசேந்திரரின் காலத்தில் பாண்டி மண்டலத்தில் இருந்த வளநாடுகளில் இதுவும் ஒன்றுபோலும். அதலையூர் நாடு, கல்வாயில் நாடு, நியமப்பற்று என்பன இக்கல் வெட்டுகளில் குறிக்கப்படும் நாட்டுப் பிரிவுகள். இவற்றுள் இருந்த பல ஊர்களின் பெயர்களைக் கல்வெட்டு வரிகளில் காணமுடிகின்றது. இவற்றுள் பெரும்பான்மையானவை மங்கலம், குடி, ஊர், நல்லூர் என்னும் பின்னொட்டுகளைக் கொண்டுள்ளன. இவற்றுள் குடியென்று முடியும் பின்னொட்டே அதிக அளவில் காணப்படுகிறது. வயல் என்று முடியும் இரண்டு ஊர்களும், வாயில் அல்லது வாசல் என்று முடியும் இரண்டு ஊர்களும் உள்ளன. இவை தவிர செங்கணி, படைகாணி, ஆர்க்காடு, நியமம், முள்ளிக்குண்டு, கோனேரி, குறட்டி, நடுவக் கோட்டை, துழயூர் வல்லி, குலசேகரபுரம் என்னும் ஊர்களும் சுட்டப் படுகின்றன. இரண்டு ஊர்கள் இரு பெயர்களுடன் இருந்துள்ளன.

சாழியாகிய திருச்சமணமழகிய நல்லூர் மன்னர் பெயரற்ற கல் வெட்டிலும், இடைக்குடியான இரவிகுல மாணிக்க நல்லூர் முதலாம் குலோத்துங்கரின் கல்வெட்டிலும் இடம் பெறுகின்றன.

குன்றக்குடி கல்வெட்டுகள் அக்காலத்து அரசியலமைப்பையும் அலு வலர்களையும் ஓரளவுக்குப் படம்பிடித்துக் காட்டுகின்றன. முதலாம் இராசராசரின் கல்வெட்டு அவரது பெருந்தரம் முகுந்தனூர் உடையார் காடன் ஸ்ரீயாரூர் தேவரை அறிமுகப்படுத்துகிறது. அரசின் உயர் அலுவலரான இவர் இந்நாளைய அரசுச் செயலர் போன்றவரெனலாம். நாடுகள் நாட்டாரின் ஆளுகையில் இருந்தன. இவர்களுக்கென்று சில நிர்வாகப் பொறுப்புகளும், கடமைகளும் வரையறுக்கப்பட்டிருந்தன. அதலையூர், கல்வாயில் போன்ற நாடுகளின் தலைமைப் பொறுப்பேற் றிருந்த பெரியவர்கள் நாடாழ்வான் என்ற சிறப்புப் பெயரால் குறிக்கப் படுகின்றனர். ஏறத்தாழப் பதினோரு கல்வெட்டுகள் இத்தகு நாடாழ் வார் பணிகளைப் பற்றிப் பேசுகின்றன.

முதலாம் குலோத்துங்கரின் நாற்பதாம் மற்றும் நாற்பத்தொன்ப தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் ஐநூற்றுவன் உய்யவந்தானான அதலையூர் நாடாழ்வார், நாட்டான் வீரசேகரனான விருதராச பயங்கர அதலையூர் நாடாழ்வார் ஆகியோரை அறிமுகப்படுத்த[48], சடைய வர்மர் ஸ்ரீவல்லபரின் கல்வெட்டுகள் அதலையூர் நாடாழ்வார்கள் வெள் ளானை விடங்கன் அவை பஞ்சானனையும், மும்முடி சோழன் வீரசேகர னையும் அடையாளம் காட்டுகின்றன.[49] விக்கிரம பாண்டியரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும்[50] சோணாடு கொண்ட சுந்தரபாண்டிய ரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும்[51] மேலுமிரண்டு அதலையூர் நாடாழ்வார்களின் பெயர்களைத் தருகின்றன. முதலாம் இராசேந்திர சோழரின் கல்வெட்டு இராசேந்திரசோழ அதலையூர் நாடாழ்வாரை அறிமுகப்படுத்துவதுடன் நாடாழ்வாரின் கீழ்ப் படையமைப்புகள் இருந்ததையும் தெரிவிக்கிறது. சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டியரின் மூன்று கல்வெட்டுகள் கண்டன் ஆளுடையானான கல் வாயில் நாடாழ்வாரை வெளிக் கொணர்கின்றன.[52]

இந்த நாடாழ்வார்கள் நிலவரிகளில் செய்த சீரமைப்புகள், வரி விலக்கங்கள், நாட்டார்க்கு இவற்றைத் தெரிவிக்க மேற்கொண்ட நடை முறைகள் பற்றிச் சில கல்வெட்டுகள் விரிவான தகவல்களைத் தரு கின்றன. இக்கல்வெட்டுகளால் பல ஊரவை அமைப்புகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது. இவற்றுள் குன்றக்குடி ஊரவையும் ஒன்று. இந்த நிலவரிக் கல்வெட்டுகளில் நான்கு ஓலைச் செய்திகள் பேசப்படுகின்றன. அதலையூர் நாட்டார்க்கு, அதலையூர் நாடாழ்வா ராலும், கல்வாயில் நாடாழ்வாராலும் நிலவருவாய் குறித்து அனுப்

பப்பட்ட இரண்டு ஓலைகள் சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டியரின் எட்டாம் ஆட்சியாண்டில், மாசித் திங்கள் இரண்டாம் நாளில் எழுதி அனுப்பப்பட்டவை. புழக்கத்தில் கொணரப்பட்ட புதிய அளவுகோலான குடிதாங்கியால் அதலையூர் நாட்டு நிலங்களை அளந்து அதற்கேற்ப நிலவரி விதிப்பைச் சீரமைத்துத் தருமாறு இவை அதலையூர் நாட்டார்க்கு அறிவுறுத்துகின்றன.[53] இப்பகுதிகளில் நிலமளக்கப் பயன்பட்ட பழைய அளவுகோல் பதினெண் சாண் அளவுள்ளதாகவும் புதிதாய் அறிமுகப்படுத்தப்பட்ட குடிதாங்கிக் கோல் இருபத்து நான்கு சாண் அளவுள்ளதாகவும் குறிக்கப்படுகின்றன. 'தங்கள் நாடு முன்பு பதினெண் சாண் கோலானது தவிர்ந்து, குடிதாங்கி இருபத்து நாற் சாண் கோலாக்கி வந்த குடிதாங்கி நிலம் ஒரு மாவுக் குப் பண்டாடி பழநடை புள்ளி பார்த்து கழிவு நீக்கிக் கொண்ட நிலம், பண்டாடி பழநடை ஒன்று முக்காலாக்கி வந்த நிலம், ஒரு மாவுக்குக் கடமை காலாய் எழு கலனே இரு தூணியாய் வாசி ஏற்றி நாட்டவர் நாழிக் காலால் நெல் ஒன்பது கலனே இரு குறுணி நாநாழி உரியாக வந்தபடி இறுப்பதாக' என்ற கல்வெட்டு வரிகள் அந்நாளைய நில அளவை மற்றும் வரி விதிப்பு முறைகளை விளக்குவனவாகும். நிய மத்துக் கண்டன் உதயஞ்செய்தானான காங்கேயரின் ஓலைகள் குன்றக் குடி கோயில் நிர்வாகிகளுக்கு நிலவரி நீக்கம் பற்றிய செய்திகளைத் தருவனவாக அமைந்துள்ளன.[54]

இங்குள்ள சில கல்வெட்டுகளில் குறிக்கப்படும் ஜீவிதம் என்ற சொல் வாழ்வதற்குத் தேவையான வருவாயைத் தரவல்ல நிலங்களையோ ஊர்களையோ சுட்டுவதாய் அமைந்துள்ளது. இராசராச சோழரின் பெருந்தர அலுவலரான காடன் ஸ்ரீயாரூர் தேவருக்குத் தேனாற்றுப் போக்கில் ஜீவித நிலம் இருந்தது. ஐநூற்றுவன் உய்யவந்தானான அதலையூர் நாடாழ்வார் தேனாற்றுப் போக்கில் தமக்கு ஜீவிதமாய் அமைந்திருந்த செங்கணி, பலவாந்குடி, புரவுவரி நல்லூர், சிறுவெட்டி வயல், மணியாத்திறல், பாலை வாயில் போன்ற ஊர்களைப் பட்டிய லிட்டுத் தருகிறார்.[55] வீரசேகரனான விருதராச பயங்கர நாடாழ் வாரும் அதுபோலவே தேனாற்றுப் போக்கில் தமக்கு ஜீவிதமாக அமைந்திருந்த குன்றக்குடி, வெழவூர், படைகாணி, வெட்டங்குடி, காஞ்சிரங்குடி, சாழி, பாதிரிக்குடி, பாரீசுவரமங்கலம், மேற்கண்ண மங்கலம் போன்ற ஊர்களை முதலாம் குலோத்துங்கரின் நாற்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் அடையாளம் காட்டுகிறார்.[56]

இங்குள்ள கல்வெட்டுகளில் காணப்படும் வரியினங்களின் பெயர்கள் பொதுவாகத் தமிழகத்தின் பல பகுதிகளிலும் அவ்வக் கல்வெட்டுகளின் காலத்தே வழங்கி வந்தவையாகவே உள்ளன. கடமை, குடிமை, அந்தராயம், வேலி அரிசி, புழுகு, பீலி, வெட்டி, முட்டாவாள்,

நாடென்ற அச்சுவரி, சில்வரி, பெருவரி, எச்சோறு, கூற்றரிசி, வினியோகம் எனப்படும் இவ்வரிகளுள் பெரும்பான்மையன எதற்காகப் பெறப்பட்டன என்பதை அறியக்கூடவில்லை.

## வேளாண்மை

நிலங்கள் முறையாக அளக்கப்பட்டு, விளைவுகளுக்கேற்ப வரியளவு தீர்மானிக்கப்பட்டது. நெல், கரும்பு, மஞ்சள், கருணை, தினை, வரகு, எள் முதலிய பயிர்கள் பயிரிடப்பட்டன. நிலங்கள் வயக்கல், துடவை, செய், வயல் என்று பொதுப் பெயர்களால் குறிப்பிடப்பட்டன. பல நிலங்கள் தனிப்படவும் பெயர் பெற்றிருந்தன. உமைநங்கை வயக்கல், சேத்ரபால வயக்கல், சுப்பிரமணிய வயக்கல், கணபதி வயக்கல் என்று தெய்வங்களின் பெயர்களிலும் திருவாரூர் வயக்கல், பாளூர் வயக்கல், துழயூர்வல்லி இருள் நீக்கி வயக்கல் என்று ஊர்களின் பெயர்களிலும் கரந்தை வயக்கல், காஞ்சிரந் துடவை, இலுப்பைத் துடவல், இலந்தைச் செய், விளாந் துடவை என்று தாவரங்களின் பெயர்களிலும், கந்தன் வயக்கல், வடுகன் வயக்கல், பொன்னன் வயக்கல், ஆச்சன் வயக்கல், தேவன் வயக்கல், திருமலை வயக்கல், நங்கை வயக்கல், அவதாமணி வயக்கல் என்று மக்கள் பெயர்களிலும் குசக்குழி, தச்சன் வயக்கல் என்று தொழிலர் பெயர்களிலும் இவை அன்போடு அழைக்கப்பட்டன. ஒரு நிலப்பகுதி தமிழன் வயக்கல் என்று பெயரிடப்பட்டிருந்தது.[57] தேனாற்று நாதர் திருமுன் உள் மண்டபச் சுவர்களில் காணப்படும் சுந்தரபாண்டியரின் கல்வெட்டு பல நிலங்களின் பெயர்களையும், அவற்றின் உரிமையாளர்களின் பெயர் களையும் வரிசைப்படுத்துகின்றது.[58]

இவ் விளைநிலங்கள் கிணறு, குளம், ஊருணி போன்றவற்றிலி ருந்து நீரைப் பெற்றன. பூங்குடி குளம், கூன் குளம், தேனாற்று நாயகன் கால் என்பன இவற்றுள் சில. முதற் குடைவரை முகப்புத்தூண் சதுரத்தில் இருக்கும் பிலவங்க ஆண்டுக் கல்வெட்டு திருப்பாலைவாசல் முதலியார்க்குத் தேனாற்றுப் போக்கு நியமப்பற்றைச் சேர்ந்த திருச் சமணமழகிய நல்லூர் ஊரவையார் புதிய நீரோடு கால் ஒன்றை விற்றுத் தந்த செய்தியைத் தருகிறது.[59] கல்வெட்டு இதற்கான ஆவணத்தை மறுகால் விலைப் பிரமாணம் என்று பெயரிடுகிறது. சாழிக்குளத்தில் தண்ணீர் ஓரிடத்திலும் விடாமல், பிள்ளைத் தொல்லி யில் கீழ்த்தரையில் முறித்து, கோயாடு துறை மட்டும் வெட்டிப் பூங்குடி குளத்துக்குப் பாயுமாறு உருவாக்கப்பட்டு விற்றுத் தரப்பட்ட இம்மறு கால் பற்றிய கல்வெட்டு அரியதொரு வரலாற்று ஆவணமாகும். தனியர்களுக்குள் நிகழ்ந்த நில விற்பனையொன்றைச் சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியரின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு விளக்குகிறது.[59A]

கோயிற் செய்திகள்

குன்றக்குடி திருமலை வளாகத்தில் உள்ள திருக்கோயில்களைத் தேவகன்மிகள், ஸ்ரீகாரியம் செய்வார், ஸ்ரீருத்ர மாகேசுவரர், ஸ்ரீமாகேசுவரக் கண்காணி செய்வார், அகநாழிகையார், கோயில் கணக்கு போன்ற பல அலுவலர்கள் நிர்வகித்து வந்தனர். பிற்காலத்தில் இப்பொறுப்புகளில் இருந்தவர்கள் தானத்தார், தலத்தார் என்றழைக்கப்பட்டனர்.

பொதுவாகத் திருக்கோயில்களில் காணப்படும் கல்வெட்டுகளில் பெரும்பான்மையன விளக்குக் கொடைகளைப் பேசுவனவாகவே அமையும். ஆனால் குன்றக்குடியிலுள்ள நாற்பத்தொன்பது கல்வெட்டுகளில் மூன்று கல்வெட்டுகளே விளக்குக் கொடைச் செய்திகளைத் தருகின்றன. முதலாம் இராசேந்திரரின் ஆட்சிக் காலத்தில் இராசேந்திர சோழ அதலையூர் நாடாழ்வாரின் கூலிச் சேவகர் ஸ்ரீ குருகூர் வெள்ளாளன் உலகநாதனான துட்டடக்கிப் பேரரையர் இக்கோயிலில் சந்தி விளக்கொன்றெரிக்க ஒரு காசு கொடையளித்தார். இது கொண்டு திங்கள் தோறும் ஒரு நாழி நெய் செலவிட்டு நாள்தோறும் ஒரு சந்தியில் விளக்கெரிக்கக் கோயில் அகநாழிகையார் ஒப்புக்கொண்டனர்.[60] குன்றக்குடியைச் சேர்ந்த நாட்டான் அடவி என்பார் இக்கோயில் வளாகத்தில் சந்தி விளக்கொன்று எரிக்கத் திருவிளக்குத் துடவை நிலமென்று பெயரிடப்பட்ட நிலப் பகுதியை நீர்வார்த்துக் கொடுத்தார்.[61] தேனாற்று நாதர் திருமுன்னிலுள்ள சிதைந்த கல்வெட்டு விளக்கெரிக்கத் தரப்பட்ட இறையிலி நிலக்கொடையைச் சுட்டுகிறது.[62]

பல கல்வெட்டுகள் இறைக்கோயிலுக்குரிய தேவதான நிலங்களை இறையிலியாக்கியமை குறித்துப் பேசுகின்றன. விக்கிரம பாண்டியரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு[63] வீரசேகரன் ஆளுடையானான அதலையூர் நாடாழ்வாரும், உய்யவந்தான் கண்டனான காங்கேயன் தியாக மீகாமனும் குன்றக்குடி மற்றும் மணியாத் திறலில் இருந்த தேவதான நிலங்களிலிருந்து தமக்கு வந்த இறைகளை நீக்கி, அவற்றின் வருவாய் கொண்டு இரண்டு குடைவரைகளிலுள்ள தெய்வங்களுக்குத் திருஅமுது படைக்க வகை செய்தனர் என்ற தகவலைத் தருகின்றன. இக்கல்வெட்டுகளால் விலக்கப்பட்ட வரியினங்களின் பெயர்களும் பல்வேறு நிலங்களின் பெயர்களும் அவையிருந்த இடங்களும் தெரியவருகின்றன.

முதலாம் குலோத்துங்கரின் நாற்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் இரண்டு ஐநூற்றுவன் உய்யவந்தானான அதலையூர் நாடாழ்வாரும், நாட்டான் வீரசேகரனான விருதராச பயங்கர அதலையூர் நாடாழ்வாரும் தமக்கு ஜீவிதமான ஊர்களில் இருந்த தேவதான நிலங்களை இறையிலியாக்கித் திருக்குன்றக்குடி திருமலையுடைய

மகாதேவர்க்கு வழங்கியதைச் சொல்கின்றன.[63A] அதே மன்னரின் நாற்பத்தொன்பதாம் ஆட்சியாண்டில் திருக்குன்றக்குடி திருமலை யுடைய நாயனார் திருப்பலிச் சடங்கிற்கு எழுந்தருளும்போது, அமுதுண்டு எழுந்தருள்வதற்கு வாய்ப்பாக நாட்டான் வீரசேகரனான அதலையூர் நாடாழ்வார் கீழ்க்கண்ண மங்கலத்திலிருந்து தாம் பெற்று வந்த வரியினங்களை நீர்வார்த்துக் கொடையளித்தார்.[64]

மேற்கண்ண மங்கலத்திலிருந்த நிலங்கள் அதலையூர் நாடாழ்வார் களான வெள்ளானை விடங்கன் அவைப் பஞ்சானனுக்கும் மும்முடி சோழன் வீரசேகரனுக்கும் சரிபாதி உரிமையுடையனவாக இருந்தன. சடையவர்மரான ஸ்ரீவல்லப தேவரின் நான்காம் ஆட்சியாண்டில் இவ்விரு பெருமக்களும் தத்தமக்கு உரிமையுடைய நிலப்பகுதிகளின் வரியினங்களைத் திருக்குன்றக்குடி திருமலை மூலஸ்தானம் உடைய நாயனார்க்குக் கொடையளித்துக் கல்வெட்டித் தந்தனர்.[65]

சில கல்வெட்டுகள் வரி தவிர்த்துத் தனியர்க்கு நிலங்கள் விற்கப் பட்டதையும், அப்படித் தவிர்க்கப்பட்ட வரிகளுக்கு மாற்றாக அந்நிலங் களை வாங்கியவர்கள், விளைவுக்கேற்ப குறிப்பிட்ட அளவு விளை பொருட்களையோ அல்லது தொகையையோ தேனாற்று நாயகர் கோயிலுக்குத் தரவேண்டுமென்று விதிசெய்து ஒப்பந்தங்கள் அமைக்கப் பட்டதையும் தெரிவிக்கின்றன. தேனாற்று நாயகருக்குரிய வழிபாடு மற்றும் படையல்களுக்காய்ச் சில பெருமக்கள் நிலங்களை விலைக்கு வாங்கி இறையிலியாகக் கோயிலுக்குக் கொடையளித்துள்ளனர். நியமத்தைச் சேர்ந்த சூரியன் கண்டனான பஞ்சவராயன் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியரின் மூன்றாம் ஆட்சியாண்டில் விலைக்கு வாங்கிக் கொடையளித்த நிலப்பகுதியின் வரி மதிப்பீடு கண்டன் உதயஞ்செய்தானான காங்கேயரால் குறைக்கப்பட்டது.[66]

முதலாம் இராசராசரின் பெருந்தரத்து அலுவலர் அளித்த நிலக் கொடை குன்றக்குடி பரமசாமியின் உச்சம்போது திருவமுதிற்காய் அமைந்தது. சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியரின் பதினெட் டாம் ஆட்சியாண்டில் பல பெருமக்கள் ஒன்றிணைந்து தேனாற்று நாயகருக்குக் காராண்கிழமையாக பதினேழு மா நிலத்தை நீர் வார்த் துக் கொடுத்தனர்.[67] படையல்களுக்கும் வழிபாட்டிற்கும் கொடை யளித்தாற் போலவே இக்கோயில் இறைவர்க்கு விழா எடுப்பதற்கும் கொடையளிக்கப்பட்டது. குன்றக்குடி ஊரவையால் திருமலையுடைய மகாதேவர்க்கு விழா எடுப்பதற்காகத் தரப்பட்ட இந்நிலக்கொடை விழாப்புறமாகப் பதியப்பட்டது.[68] நாராயணன் கேசவனான தேவன் தேனாற்று வேளார் குன்றக்குடி திருமலையுடைய மகாதேவர்க்கு ஆய்யநத்துக்குக் கலசமாடியருள உமைநங்கை வயக்கலை நீர் வார்த்

துக் கொடுத்தார்.[69] தேனாற்று நாயகர்க்குரிய திருநந்தவனத்து அவிச் சுனையின் கீழ்க்கரையும், தென்கரையும் அமைக்கக் குன்றக்குடி கட்டி அரசன் நிலக்கொடை தந்ததை ஸ்ரீவல்லபரின் எட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டால் அறிகிறோம்.[70]

நடுக் குடைவரையில் இன்றும் காணப்படும் சேத்ரபாலர் திருமேனி பற்றி நேரடியாகப் பேசும் கல்வெட்டுகள் இரண்டு இங்குள்ளன. சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவரின் எட்டாம் ஆட்சியாண்டு வைகாசித் திங்களில் வெட்டப்பட்டுள்ள இவ்விரண்டனுள் ஒன்று, தேனாற்று நாயகர் கோயிலில் சேத்ரபாலர் திருமேனியை எழுந்தருள்வித்தவராகச் சாக்கலூர் பொற்பதி பிரியனான செழிய சிங்கபன் மனை அறிமுகப்படுத்துவதுடன், சேத்ரபாலரின் நித்த நிவந்தங்களுக்கான செலவினங்களுக்காகச் சில குறிப்பிட்ட நிலங்களின் இறையை நியமத்துக் கண்டன் ஆளுடையானான கல்வாயில் நாடாழ்வார் நீர்வார்த்துத் தந்ததையும் கூறுகிறது.[71] இக்கல்வெட்டின் கீழ் இதன் தொடர்ச்சி போலக் காணப்படும் மற்றொரு கல்வெட்டு சேத்ரபாலர்க்கு அளிக்கப்பட்ட தேவதான நிலம் பற்றித் தெரிவிக்கிறது. மற்றொரு கல்வெட்டும் இதுபோலவே சேத்ரபாலப் பிள்ளையாரின் நித்த நிவந்தங்களுக்காகச் சில குறிப்பிட்ட நிலங்களின் வரிகளை உய்யவந்தான் வென்று முடிசூடினானான அதலையூர் நாடாழ்வார் நீர்வார்த்துத் தந்த தகவலைத் தருகிறது.[72]

தேனாற்று நாயகர் கோயிலில் இருந்த ஆளுடைய பிள்ளையார்க்கு நியமத்துக் கண்டன் அமுதக் கண்டன் என்பார் சில குறிப்பிட்ட நிலங்களின் வரிகளைக் கொடையாக அளித்ததைக் குறிக்கும் கல்வெட்டு பெரிதும் சிதைந்துள்ளது.[73] ஆளுடைய பிள்ளையார் என்ற பெயர் பொதுவாக ஞானசம்பந்தரைக் குறிப்பதாகும்.[74] இக்கல்வெட்டில் இப்பெயர் யாரைக் குறிக்கப் பயன்பட்டதென்பதை அறியக்கூடவில்லை. குன்றக்குடியிலிருந்த காளையூர் தாலன் திருமடத்திற்கு நியமப்பற்று நாட்டவர் இறையிலி செய்த நிலத்தைக் குடிநீங்காக் காணியாக மடப்புறமாக்கித் தந்ததைக் கூறும் கல்வெட்டும் 'பிள்ளையார்க்கு' என்ற சொல்லைக் கொண்டுள்ளது.[75] இக்கல்வெட்டு குறிக்கும் பிள்ளையார் யாரென்பதும் தெரியவில்லை.

தரிசாய்க் கிடந்த தேவதான நிலத்தை வளப்படுத்தித் தம்பிக்கு நல்ல ஆவுடையானான எண்டிசை மீகாமப் பல்லவராயர்க்குக் குடிநீங்காத் தேவதானமாக உழும் உரிமை தந்து, நிலங்களின் தன்மை மற்றும் விளைவுக்கேற்ப அவர் கோயிலுக்குத் தரவேண்டிய விளைபொருட்களின் அளவையும் குறிப்பிட்டுத் தேனாற்று நாயகர் கோயில் ஸ்ரீருத்ர ஸ்ரீமாகேசுவர ஸ்ரீகார்யம் செய்வார் ஏற்படுத்திக்கொண்ட

ஒப்பந்தமொன்றைச் சடையவர்மர் ஸ்ரீவல்லப தேவரின் முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் வழி அறிகிறோம்.[76] இந்த ஒப்பந்தம் கல்வெட்டில் பிடிபாடு என்றழைக்கப்படுகிறது. இப்பிடிபாட்டை எழுதியவராக குலசேகர பட்டன் குறிக்கப்படுகிறார்.

கி. பி. 1559 தைத்திங்கள் இருபத்தோராம் நாள் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டொன்று[77] இக்கோயில் மகாமண்டபத் திருப்பணி பற்றிப் பேசுகிறது. இராகுத்தமிண்டன், சூரைக்குடியரசு என்ற சிறப்புப் பெயர்களுடன் விசையாலைய தேவர் குறிக்கப்படுகிறார். கல்வெட்டு சிதைந்துள்ளதால் முழுச் செய்தியையும் அறியக்கூடவில்லை.

மலைமேல் உள்ள முருகன் கோயிலைப்பற்றி மூன்று கல்வெட்டுகள் பேசுகின்றன. இவற்றுள் ஒன்று இக்கோயில் இளைய நாயனாரின் பல்வேறுபட்ட படையல்களுக்காகச் சொக்க நாராயணனான விசையாலைய தேவர், இறையிலி நிலமொன்றைப் பழந்தேவதான நிலமொன்றிற்கு மாற்றாகக் கொடுத்ததைக் கூறுகிறது.[78] சடையவர்மர் வீரபாண்டியரின் இருபதாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ள இக்கல்வெட்டே இக்கோயில் பற்றிப் பேசும் காலத்தாற் முற்பட்ட கல்வெட்டாகும். கி. பி. 1484 மற்றும் 1515இல் வெட்டப்பட்டுள்ள இரணவீரப் பெருமாள் காங்கேயரின் இரண்டு கல்வெட்டுகளுள் முதலாவது பெரும் பற்றப்புலியூர் மேற்குத் தெருவிலுள்ள திருவெல்லைக் காவலன் திருமடத்து வசிக்கும் பிக்ஷா மடத்துச் சந்தானம் திருப்புனவாசல் முதலியார்க்குப் புதுவூர் மற்றும் ஆனைமங்கலம் என்னும் ஊர்களைக் காங்கேயர் இறையிலிக் கொடையாக வழங்கியதைச் சொல்கிறது.[79] கல்வெட்டில் முதலியார் காங்கேயரின் குருவாகச் சுட்டப்படுகிறார். இரண்டாம் கல்வெட்டு திருப்பள்ளி எழுச்சியின்போது இளைய நாயனாருக்கு வழங்கப்படும் பல்வேறு படையல்களுக்காக இரவிகுல மாணிக்க நல்லூரான தயன்குடி வயலில் நிலமளித்ததைக் கூறுகிறது.[80]

தேனாற்று நாதர் திருமுன்னிலுள்ள மாறவர்மர் சுந்தரபாண்டியரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பெரிய கோட்டையில் ஏற்பட்ட கலகமொன்றில் உயிர் துறந்த நாகதேவனான பகைச்சவர் காலப் பல்லப் பல்லவதரையன் நினைவாகப் புவனகங்கன் என்பார் இக்கோயில் வளாகத்தில் எழுந்தருளச் செய்த சுப்பிரமணியப் பிள்ளையாரின் பல்வேறு படையல்களுக்காக இவ்விறைவர்க்குரிய காராண்கிழமை நிலம் ஒரு மாவிற்கான வரிகளை விலக்கி அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தானத்தார்க்குக் கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயர் அறிவுறுத்தியுள்ள தகவலைத் தருகிறது.[81]

ஆங்கிரச ஆண்டு ஆனித் திங்கள் ஒன்பதாம் நாள் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டு கேரள சிங்க வளநாட்டுக் கண்டுகொண்ட மாணிக்க நாட்டார்க்குக் குன்றக்குடி கோயில் சுப்பிரமணியசாமி காரியத்துத் தானத்தாரும், தலத்தாரும் தங்கள் ஊரான நடுவக்கோட்டையை இறைவனுக்குத் தந்தபடியால், பஞ்ச காலத்தில் நடக்கும் திருப்பணிகளுக்குக் குடிக்கு ஒரு பணம் அளிப்பதாக உறுதியளித்த தகவலைத் தருகிறது.[82]

முதலிரண்டு குடைவரைப் பகுதிகளிலிருந்து புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் நான்கு கல்வெட்டுகளுள் ஓரளவுக்கு முழுமையாகக் கிடைத்திருக்கும் கல்வெட்டுகள் மூன்று. இவற்றுள் ஒன்று ஸ்ரீவல்லப தேவரின் பத்தாம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது.[83] ஐநூற்றுவன் உய்யவந்தானான காங்கேயர் திருக்குன்றக்குடி திருமலையுடைய மகாதேவர்க்கு அளித்த நிலக்கொடையைப்பற்றிப் பேசும் இந்த ஆவணம் சோழன் தமிழனால் கையெழுத்திடப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டு[84] சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவரின் பதினெட்டாம் ஆண்டில் நிகழ்ந்த நில விற்பனையைப் பதிவு செய்துள்ளது. நியமத்தில் தம் காணிப்பற்றில் சிலவற்றை மலை மண்டலத்து இடைக்கொட்டு அய்யப்ப காமனுக்கு நியமத்துக் கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயர் விற்றுத் தந்த நில விலையாவணமாய்த் திகழும் இக்கல்வெட்டின் பிற்பகுதி பெரிதும் சிதைந்துள்ளதால் இதன் முழுச் செய்தியையும் அறியக்கூடவில்லை.

மூன்றாம் கல்வெட்டு இரண்டாம் குடைவரையிலுள்ள முகப்பு முழுத் தூண்களின் போதிகைகளில் வெட்டப்பட்டுள்ளது.[85] இதன் ஒருபகுதியைத்தான் தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுதி இருபத்தாறில் முப்பத்தேழாம் கல்வெட்டின் பிற்பகுதியாகத் தவறுதலாகச் சேர்த்திருக்கிறார்கள்.[86] இக்கல்வெட்டின் தொடக்க வரிகளின் நடுப்பகுதி சேத்ர பாலருக்காக எடுக்கப்பட்டிருக்கும் சுவரில் சிக்கியுள்ளதாலும் கல்வெட்டு சிதைந்துள்ளதாலும் முழுச் செய்தியையும் அறிய முடியவில்லை. எனினும் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவரின் காலத்தில் சேத்ரபால பிள்ளையார்க்குத் திருவமுதிற்காகக் கண்டன் ஆளுடையானான கல்வாயில் நாடாழ்வார் குறிப்பிட்ட அளவு நெல்லை முதலாக அளித்த தகவலைப் பெறமுடிகிறது. முதற் கல்வெட்டின் தொடர்ச்சியாக அதே சுவரின் கீழ்ப்பகுதியில் மிகவும் சிதைந்த நிலையில் காணப்படும் நான்காம் கல்வெட்டு சிங்கன் சூற்றி மூன்று மா நிலத்தை இத் திருக்கோயிலுக்கு நீர் வார்த்துத் தந்த தகவலைத் தருகிறது.[87] இப் புதிய கல்வெட்டுகளின் பாடங்கள் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

## குடைவரைகளின் காலம்

இங்குள்ள மூன்று குடைவரைகளும் ஏறத்தாழச் சமகாலத்தில் எடுக்கப்பட்டவையாகவே தோன்றுகின்றன. இரண்டாவது குடைவரையில் காணப்படும் வட்டெழுத்துக் கல்வெட்டின் எழுத்தமைதி, இக்குடைவரைகளின் அமைப்புமுறை, இங்குள்ள சிற்பங்களின் கலை அமைதி ஆகிய மூன்றும் இக்குடைவரைகளின் காலத்தைக் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் இருத்துகின்றன.

## பதிப்பும் இருப்பும்

குடைவரைகளைப் பற்றிய கட்டுரையாக இருந்தபோதும் முழுமை கருதி இவ்வளாகத்திலிருந்த அனைத்துக் கல்வெட்டுகளுமே கள ஆய்வுகளின்போது படித்தாயப்பட்டன. அந்நிலையில் பதிப்பிக்கப்பட்டிருக்கும் தகவல்களில் உள்ள சில முரண்பாடுகளை அறிய முடிந்தது. எழுத்துக்கள்[88] சொற்கள்[89] என்றில்லாமல் பதிப்பிக்கப்பட்டிருக்கும் கல்வெட்டுப் பாடங்களின் வரித் தொடக்கங்கள், முடிவுகள் கூட[90] மாறியிருப்பது கண்டறியப்பட்டது. சில கல்வெட்டுகள் காணப்படும் இடங்கள் மாற்றித் தரப்பட்டுள்ளன.[91] சில கல்வெட்டுகளில் படிக்கும் நிலையிலுள்ள வரிகள் கூடத் தொகுதியில் வெளியிடப்பட்டிருக்கும் பாடத்தில் புள்ளிகளால் நிரப்பப்பட்டுள்ளன.[92] இரண்டு வெவ்வேறு கல்வெட்டுகளை அவை தொடர்பின்றி இருந்தபோதும் ஒரே கல்வெட்டாக்கி வெளியிட்டிருக்கும் நிலையும் இரண்டு கல்வெட்டுகளின் தொடர்ச்சிகள் விடுபட்டு அரைகுறையாக அவை வெளியிடப்பட்டிருக்கும் நிலையும் ஆய்வின் போது தெரியவந்தன.

## ஒன்றிணைக்கப்பட்ட வெவ்வேறு கல்வெட்டுகள்

கல்வெட்டுத் தொகுதி இருபத்தாறில் முப்பத்தேழாம் எண்ணிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கும் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டிய தேவரின் கல்வெட்டு இரண்டாம் குடைவரையின் முகப்பிலுள்ள மேற்கு முழுத்தூணின் மேற்சதுரத்தின் வடபுறம் தொடங்கி மேற்கு முகம் வரை வரி வரியாய்ப் பரவிப் பிறகு அதே தூணின் கட்டு, கீழ்ச் சதுரம் ஆகியவற்றிலும் வடக்கு மேற்கு முகங்களில் தொடர்ந்து பிறகு இடமின்மை காரணமாக முகமண்டப வடசுவரில் கருவறை வாயிலுக்கு வலப்புறம் இடம் பிடித்து முடிகிறது. கல்வெட்டுத் தொகுதியில் இக்கல்வெட்டின் நாற்பத்தாறு மற்றும் நாற்பத்தேழாம் வரிகள் முழுமையாக இடம் பெறாமல் போனதற்கு யாது காரணம் என்பது விளங்கவில்லை. இன்றும் குடைவரையில் இவ்வரிகள் படிக்குமாறு உள்ளன. இந்த வரிகளைச் சரியாகப் பெறமுடியாமல் போனதால் இதன் தொடர்ச்

சியை அறிய முடியாத நிலையில், அத்தொடர்ச்சி முகமண்டபத்தின் வடசுவரில் இருந்தபோதும், அதைக் கவனியாது போதிகையில் உள்ள வேறொரு கல்வெட்டின் தொடர்ச்சியை, அது பொருந்தி வராத நிலையிலும் இதன் தொடர்ச்சியாகக் கொண்டு பதிப்பித்திருக்கிறார்கள்.

இந்தப் போதிகைக் கல்வெட்டுப் பகுதி மையத்தால் கண்டறியப் பட்ட புதிய கல்வெட்டு நான்கின் தொடர்ச்சியாகப் பொருந்துகிறது. இக்குடைவரையிலுள்ள சேத்ரபாலப் பிள்ளையார்க்கு அளிக்கப்பட்ட கொடையை இக்கல்வெட்டு சுட்டுவதாகக் கொள்ளலாம்.

## விட்டுப்போன தொடர்ச்சிகள்

விட்டுப்போன தொடர்ச்சிகள், தொகுதி இருபத்தாறில் முப்பத் தேழு, நாற்பது என்று எண்ணிடப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் இரண்டு கல்வெட்டுகளுக்குக் கிடைத்துள்ளன. இவை பின்னிணைப் பாகத் தரப்பட்டுள்ளன.

பலநூறு கல்வெட்டுகளைப் படியெடுத்துப் பதிப்பிக்கும் நிலையில் இது போன்ற சில தவறுகள் நேர்வது இயல்பானதே. கல்வெட்டுப் பாடங்களைத் தொகுதிகளில் படிப்பதுடன், நேரிடையாகக் களத்திற்கும் சென்று அவற்றைச் சரிபார்த்துக் கொள்வது மிக இன்றியமையாத தாகும் என்ற வழிகாட்டல் குன்றக்குடி அநுபவத்தால் பேருண்மை யாய்ப் பொலிகிறது.

## ஏற்புக் கோடல்

களப்பணிகளுக்காகப் பன்முறை சென்ற போதும் இன்முகம் காட்டி வரவேற்று வேண்டுவன செய்துதவிய வணக்கத்திற்குரிய தமிழ்மா முனிவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள், வணக்கத்திற்குரிய தவத்திரு இளவரசு அவர்கள், திரு. பரமகுரு, திருமடத்து அலுவலர் கள், இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் குடைவரைக் காப் பாளர் திரு. பாலகுமார், மையத்தின் திருவுருவ இயல் ஆய்வாளர் இரா. சுஜாதா அனைவருமே இக்கட்டுரையாசிரியர்களின் நெஞ்சார்ந்த நன்றிக்குரியவர்கள்.

## அடிக்குறிப்புகள்

1. Epigraphia Indica vol. XVII, P. 17.
2. SII vol. 26, ins. no. 44; ARE 410, 411 of 1954-55, 304, 305 of 1955-56.
3. SII vol. 26, ins. no. 43; ARE 407, 409 of 1954-55.

4. ARE 409 of 1954-55.
4A இதுபோன்ற கோட்ட லிங்கமொன்று திருவெள்ளறை வடசம்பு நாதர் குடைவரையிலும் காணப்படுகிறது. இதன் அமைப்பு இதைப் பிற்காலத்ததாகக் கருத வைக்கிறது.
5. தி. இராசமாணிக்கம், தமிழகக் குடைவரைக் கோயில்கள், கழக வெளியீடு, சென்னை, 1984, பக் 22.
6. மேற்படி. பக். 19.
7. ARE 411 of 1954-55.
8. SII vol. 14, ins. no. 208.
9. SII vol. 14, ins. nos., 204, 208, 219; SII vol. 26, ins. nos., 24-26, 28, 29, 32-35; ARE 400, 401, of 1954-55; புதிய கல்வெட்டுகள் (பு.க.) 1, 2 of 1994.
10. SII vol. 14, ins. no. 204; SII vol. 26, ins. nos., 24-26, 28, 29, 35; ARE 401 of 1954-55.
11. SII vol. 14, ins. nos., 208, 219; SII vol. 26. ins. nos., 32-34; பு. க. 1, 2 of 1994.
12. ARE 400 of 1954-55.
13. SII vol. 26, ins. no. 40.
14. ARE 160 of 1935-36, 405 of 1954-55.
15. ARE 405 of 1954-55.
16. தி. இராசமாணிக்கம், தமிழகக் குடைவரைக் கோயில்கள், பக்.22.
17. மேற்படி., பக். 22.
18. இரா. கலைக்கோவன், பெரிச்சியூர் பாலதேவர், தினமணி கதிர் 16-12-90.
19. SII vol. 26, ins. no. 38.
20. SII vol. 26, ins. nos., 36-40; ARE 160 of 1935-36, 402, 403, 405 of 1954-55.
21. SII vol. 26, ins. no. 41; பு.க. 3 of 1994.
22. ARE 409 of 1954-55.
23. தி. இராசமாணிக்கம், தமிழகக் குடைவரைக் கோயில்கள், பக்.19.
24. மேற்படி,, பக். 19.
25. மேற்படி., பக். 21.
26. ச. தண்டபாணி தேசிகர், கணபதி, திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1956, பக். 105, காண்க, படம் எண் 12.
27. தி. இராசமாணிக்கம், தமிழகக் குடைவரைக் கோயில்கள், பக்.21.

28. மேற்படி., பக். 20.
29. மேற்படி., பக். 20.
30. ARE 161 of 1935-36.
31. ARE 303 of 1955-56.
32. ARE 174 of 1936-37, 406 of 1954-55.
33. SII vol. 26, ins. nos., 42, 43; ARE 407-409 of 1954-55.
34. SII vol. 26, ins. nos., 24-45; ARE 160, 161 of 1935-36, 174 of 1936-37, 397-411 of 1954-55, 303-307 of 1955-56; பு. க. 1-4 of 1994.
35. SII vol. 26, ins. nos., 24-40; ARE 160, 161 of 1935-36, 174 of 1936-37, 400-403, 405-406 of 1954-55, 303 of 1955-56; பு க. 1, 2, 4 of 1994.
36. SII vol. 26, ins. nos , 41-43; ARE 404, 407-409 of 1954-55 பு. க. 3 of 1994.
37. SII vol. 26, ins. no. 44; ARE 410, 411 of 1954-55, 304 of 1955-56.
38. ARE 305, 307 of 1955-56.
39. ARE 397-399 of 1954-55.
40. SII vol. 26, ins. no. 45.
41. SII vol. 26, ins. nos., 24, 28, 32, 33, 35; ARE 401 of 1954-55.
42. SII vol. 26, ins. no. 36.
42A. SII vol. 26, ins. nos., 37, 40, 41, 44; ARE 160 of 1935-36, 174 of 1936-37, 405, 406, 410 of 1954-55, 306 of 1955-56 பு. க. 3, 4, of 1994.
43. SII vol. 26, ins. nos., 29, 34, 38; ARE 398, 399, 402-404, 407, 409 of 1954-55, 304, 307 of 1955-56; பு. க. 2 of 1994
44. SII vol. 26, ins. no. 38.
45. ARE 161 of 1935-36, 303 of 1955-56.
46. SII vol. 14, ins. nos., 204, 208.
47. SII vol. 26, ins. no. 35.
48. SII vol. 26, ins. nos., 28, 36.
49. SII vol. 14, ins. nos., 204, 208.
50. SII vol. 26, ins. no. 25.
51. ARE 160 of 1935-36.
52. ARE 174 of 1936-37, 405 of 1954-55; பு. க. 4 of 1994.
53. ARE 174 of 1936-37, 406 of 1954-55.

54. ARE 411 of 1954-55, 305 of 1955-56.
55. SII vol. 26, ins. no. 28.
56. SII vol. 26, ins. no. 36.
57. ARE 410 of 1954-55.
58. Ibid.
59. SII vol. 26, ins. no. 29.
59A. பு. க. 3 of 1994.
60. ARE 303 of 1955-56.
61. SII vol. 14, ins. no. 219.
62. ARE 304 of 1955-56.
63. SII vol. 26, ins. nos., 25, 26.
63A. SII vol. 26, ins. nos., 28, 36.
64. SII vol. 26, ins. no. 32.
65. SII vol. 14, ins. nos., 204, 208.
66. ARE 305 of 1955-56.
67. ARE 410 of 1954-55.
68. SII vol. 26, ins. no. 35.
69. ARE 401 of 1954-55.
70. SII vol. 14, ins. no. 217.
71. ARE 405 of 1954-55.
72. ARE 160 of 1935-36.
73. SII vol. 26, ins. no. 40.
74. அரசு,பெரிய புராண வசனம் அல்லது திருத்தொண்டர் புராணம், கழக வெளியீடு, சென்னை, 1980, பக். 195.
75. ARE 407 of 1954-55.
76. ARE 408 of 1954-55.
77. ARE 409 of 1954-55.
78. ARE 397 of 1954-55.
79. ARE 399 of 1954-55.
80. ARE 398 of 1954-55.
81. ARE 411 of 1954-55.
82. SII vol. 26, ins. no. 34.
83. பு. க. 1 of 1994.
84 பு. க. 3 of 1994.
85 பு. க. 4 of 1994.
86. SII vol. 26, ins. no. 37; வரிகள் 48-55 காண்க. இதுபற்றிய விளக்கம் 'பதிப்பும் இருப்பும்' பகுதியில் தரப்பட்டுள்ளது.
87. பு க. 2 of 1994.

88. i) SII vol. 26, ins. no. 25, வரி. 36. 'கீழ்க் காவில்' என்று வெளியாகியுள்ளது. கல்வெட்டில் 'கீழ்க் காலில்' என்றுள்ளது.

ii) Ibid., ins. no. 26, வரி. 10-11. 'காஞ்சிரந் குடவை' என்று வெளியாகியுள்ளது. கல்வெட்டில் 'காஞ்சிரந் துடவை' என்றுள்ளது.

89. i) Ibid., ins. no. 26, வரி. 40. 'நடு சந்தி' என்று வெளியாகியுள்ளது. கல்வெட்டில் 'ஒரு சந்தி' என்றுதான் உள்ளது.

ii) Ibid , ins. no. 33, வரி. 15-16. 'ஆலங்காட்டு' என்று வெளியாகியுள்ளது. கல்வெட்டில் 'ஆர்காட்டு' என்றுள்ளது.

90. i) Ibid., ins. no. 42. இக்கல்வெட்டின் முதல் வரி 'கொண்டருளிய ஸ்ரீ' என்று முடிவதாகத் தொகுதியில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் கல்வெட்டில் 'கொண்டருளி' என்பதோடு முதல் வரி முடிகிறது.

ii) Ibid., ins. no. 25. முதல் வரியின் முடிவும் அடுத்த நான்கு வரிகளின் தொடக்கங்களும் மாறியுள்ளன.

| வரி எண் | பதிப்பிக்கப்பட்டிருக்கும் பாடம் | கல்வெட்டில் காணப்படுவது |
|---|---|---|
| 1 | சக்கரவத்தி | சக்கர |
| 2 | கள் ஸ்ரீ | வத்திகள் ஸ்ரீ |
| 3 | யாண்டு | க்கு யாண்டு |
| 4 | ள நாட்டு | வள நாட்டு |
| 5 | ப் போக்கு | ற்றுப் போக்கு |

91. i) SII vol. 26, ins. no 42. இக்கல்வெட்டு அகத்தீசுவரர் திருமுன்னின் (சண்டேசுவரர் திருமுன்) வடக்குச் சுவரில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இது காணப்படுவது பெருமண்டபத்துள் பிதுக்கமாய் இழுக்கப்பட்டுள்ள மூன்றாம் குடைவரையின் மகாமண்டப மேற்குச் சுவரில்தான்.

ii) ARE 403 of 1954-55. இக்கல்வெட்டு இரண்டாம் குடைவரையின் கருவறை வாயிலுக்கு இடப்புறமுள்ள சுவரில் காணப்படுவதாகக் கல்வெட்டறிக்கை கூறுகிறது. ஆனால் இந்த இடப்புறச் சுவர் கல்வெட்டுகள் எதுவுமின்றி வெறுமையாக உள்ளது. கருவறை வாயிலுக்கு வலப்புறமுள்ள சுவரில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. இவற்றுள் இரண்டு விட்டுப் போன தொடர்ச்சிகள். ஒன்று கல்வெட்டுத் தொகுதியில் வெளியாகியுள்ள நாற்பதாம் கல்வெட்டின் தொடர்ச்சி.

மற்றொன்று முப்பத்தேழாம் கல்வெட்டின் தொடர்ச்சி. இந்தத் தொடர்ச்சியின் கீழே அத்துடன் தொடர்புடையது போல சிதைந்த கல்வெட்டொன்று காணப்படுகிறது. இதைத்தான் கல்வெட்டறிக்கை 403ஆகக் கொண்டது போலும். நில விற்பனை பற்றிப் பேசும் இக்கல்வெட்டிலும் கல்வெட்டு எண் முப்பத்தேழில் இடம்பெற்ற கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயரும் அழிவஞ்சாதானான பஞ்சவராயனும் இடம்பெற் றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கல்வெட்டு மிகவும் சிதைந்து பொரிந்து போயிருப்ப தாகவும் இறையிலியாக்கப்பட்ட நிலக்கொடைத் தகவலைத் தருவது போலிருப்பதாகவும் இதுபற்றிப் பேசும் கல்வெட் டறிக்கைக் குறிப்பு கூறுகிறது. ஆனால் படிக்கும் நிலையி லுள்ள இந்த இருபத்தோரு வரி கல்வெட்டு அழிவஞ்சாதா னான பஞ்சவராயனுக்குக் கண்டன் உதயஞ் செய்தானான காங்கேயர் ஆறு மா நிலமொன்றை இறையிலியாக விற்றுத் தந்த தகவலைத் தருகிறது. இந்த இறை நீக்கத்திற்கு மாற் றாகப் பஞ்சவராயன் தேனாற்று நாயனார்க்கு ஒரு மாவுக்கு இரு கலம் நெல் கடமை இறுக்க வேண்டுமென்ற விதியும் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டின் பாடம்

1 . . . [அழிவஞ்சா]தானான பஞ்சவராயனுக்குக் கண்டன் உத
2 [யஞ் செய்தானான க]ாங்கேயனேன் தனக்கு னாம் குறுமங்காட்டு
3 — — 13ஆவது எதிராமாண்டு காணியாக விற்று விலை
4 — — குடுத்த கிணற்றஞ் செய்யும் ஆலவட்ட
5 — — யியும் இதன் வடதலையில் ஊரணியு
6 — — ச்சன் வயக்கலும் செட்டும் செய்யும் கரைக் கீழ் னாற்ற
7 — — டி மூன்றும் ஆக [சீ]விதப்படி னிலம் ஆறு மாவுக்கு
8 — — நிலமிருமா நிலத்துக்கு நாடென்ற அச்சுவரி சில்
9 — — வெட்டி முட்டாவாளும் மற்றும் எப்பே
10 ர்ப்பட்டனவும் தவிந்து குடிதாங்கிப்படி
11 நிலம் ஒரு மாவுக்கு பெரும் பூவுக்கு புள்
12 ளி புக்கு நிலத்துக்குத் திருக்குன்றாக்குடி
13 திருமலை உடைய தேனாற்று நாயனார்[க்*]கு
14 இரு கல னெல்லுக் கடமை இறுப்பதாக
15 க் கல்வெட்டிக் குடுத்தோம் ஸ்ரீசுந்தரபா
16 ண்டிய தேவற்கு யாண்டு 13வதின் எதிரா
17 மாண்டு முதல் சந்திராதித்தவற் செல்வ
18 தாக இநாயனார் கோயிலில் திருமலையி
19 லே கல்வெட்டிக் குடுத்தோம் இவை கா

20 ங்கேயந் எழுத்து இவை காங்கேய
21 ந் இராமன் மூவேந்த வேளான் எழுத்து

iii) SII vol. 26, ins. no. 30. இக்கல்வெட்டு முதற் குடைவரை வாயிலுக்கு இடப்புறமுள்ள பாறையில் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கல்வெட்டு முதற் குடைவரையின் கருவறை வாயிலுக்கு வலப்புறமுள்ள பாறைப் பாளத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

iv) ARE 305 of 1954-55. இக்கல்வெட்டு தேனாற்று நாதர் திருமுன்னின் மேற்குச் சுவரில் இருப்பதாகக் கல்வெட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கல்வெட்டு அதனருகில் உள்ள காப்பறையின் வடக்குச் சுவரில் உள்ளது.

92. SII vol. 26, ins. nos., 37, 40-41. இம்மூன்றனுள் 37, 40 இரண்டும் விட்டுப் போன தொடர்ச்சிகளாகப் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன. அதனால் கல்வெட்டு எண் 41 மட்டும் இங்கு முழுமையாகத் தரப்பட்டுள்ளது.

1 ஸ்வஸ்திஸ்ரீ கோமாறுபந்மரா[ன*] த்ரிபுவநச் சக்கரவத்திகள் சோணாடு கொண்டு முடிகொண்ட[சோழ]

2 புர[த்*]து வீர[ா*]பி$_4$ஷேகமும் விஜயாபி$_4$ஷேகமும் பண்ணியருளிய சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு

3 15 வதிந் எதிராமாண்டு கேரளசிங்க வளநாட்டு தேனாற்றுப் போக்கு நியமத்து கண்டனுதைய்ய

4 ஞ் செய்தானான காங்கேயனேன் மேற்படியூர் ஆழ்வான் [கண்ட] னான கண்டன்ராயிண்டந் பந்மனுக்கு . . . . .

5 ப் பற்றி வெழவூர் வயவில் – – சீவிதம் கழித்துடல் நிலம் அரைக் காணிக் கீழ் மாக்காணியும் [காச]

6 வயக்கலிலம் முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் மூந்று மா முக்காணியும் ஆரி[த] வயக்க

7 ல் நிலம் முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழ் மூந்று மா முக்காணியும் [தாபரண] வயக்கல் நிலம் அரை மா

8 ஆக நிலம் சீவிதபட்ட ஒரு மாவரையிந் கீழ் — —

9 நதுக்கு வந்த அச்சு வரி சில் வரி பெருவரி வெட்டி முட்டாவாள் மற்று [எப்]பேர்பட்ட — —

10 திருக்குன்ற[க்*]குடி தேநாற்று நாயகர்க்கு திருவமுதுபடிக்கு — —

11 இறுப்பதாகவும் கொண்ட பிஞ்ச நிலத்துக்கு இவ்வா — —

12 திராதித்தவல் செல்வதாகக் கல்வெட்டி குடுத்தோம் காங்கே — — ரக்ஷை

## பின்னிணைப்பு

### 1. புதிய கல்வெட்டுகள்

### I. பு. க. 1 of 1994

இடம்: முதல் குடைவரை முகமண்டப மேற்குச் சுவர்.

1–4 திரு மடந்தையும் ஜய மடந்தையும் என்று தொடங்கும் மெய்க் கீர்த்தி

5 — — கோச்[சடையபன்]மரான த்ரிபு$_4$வனச் ச

6 க்கரவர்த்திகள் ஸ்ரீ வல்லப [தேவற்கு] யாண்டு 10[ஆவ*]து கேரளசிங்க வளநாட்டு அதலையூர் னாட்டுத் தே

7 தநாற்றுப் போக்கு [திருக்குன்]றக்குடித் திருமலை உடைய . . . . . . தேநாற்று னாயகற்கு ஐ

8 ஞ்ஞூற்றுவன் — — காங்கேயனேந் நீர்வா[ர்*]த்துக் காணி செய் . . . . . நிலமாவது திருக்குன்

9 றக்குடிச் சிங் — — தண்டங் கொண்ட நி[ல*]ம் இத்திருக்கு[ன்றக்குடி] . . . நாட்டான் வயக்கல்

10 செம்பாதி — — சூற்றி வயக்கல் நிலம்[1] 4 மாவும் — — நா

11 வற் துடவையில் — — காஞ்சிரந் துடவை நிலம்[1] — — தம்மை வயக்கல் — —

12 . . . மணியாத்திறல் . . . . . . . . ஆச்சன் வயக்கல் பாதி . . . . . குசக்குழிப் பாதியும் . . இன்நில

13 ம் அனைத்தும் இத்திருக்குன்றக்குடித் திருமலை உடைய தேனாற்று நாயகற்கு நீர்வா — — செய்து குடு

14 த்தேன் ஐஞ்ஞூற்றுவன் உய்யவந்தானா[ன க]ாங்கேயநேன் திருமலை உடைய — — திரு

15 க்குன்றக்குடி நாகன் சூற்றிய தே — — இவன் இசைவுமிட இந் நிலம் . . . . . . சோழ

16 ன் தமிழன் எழுத்து இப்படி — — ள்ளான் எழுத்து இப்படி அறிவேந் ஆராமிது பொன்நன்

17 [எ*]ழுத்து இப்படி அறிவேன் — — ஹேச்$_{\circ}$வர ரக்ஷை

1. நிலம் குறியீட்டால் குறிக்கப்பட்டுள்ளது.

## II. பு. க. 2 of 1994

இடம் : மேலது

1 ஸ்வஸ்திஸ்ரீ திரும — — வதானம் இவன் வழ . . வார்த்து சிங்கன் சூ

2 ற்றி முன்பு னீர்வார்த் — - க்கு ஒரு சந்தி$_2$ — — படிக்கு நீர்வா

3 த்துக் கல்லில் வெட் — — சூற்றியேன் இநிலம் மூன்று மா

4 வும் சிங்கன் சூ — — நாக பந்மாஹேச்$_0$வர ரக்ஷை

## III. பு. க. 3 of 1994

இடம்: இரண்டாம் குடைவரை, சேத்ரபாலருக்காக எடுக்கப் பட்டிருக்கும் தடுப்புச் சுவர்.

1 ஸ்வஸ்திஸ்ரீ திரிபு[வனச்] சக்ரவத்திகள் சோழ [நாடு] கொண்டு

2 முடிகொண்ட சோழபுரத்து வீராபி$_4$ஷேகமும் — —

3 ளிய ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 17 ஆ[வ*]தி

4 னெதிராமாண்டு கேரள — —

5 க்கு நியமத்துக் கண்டந் [உதையஞ் செ]ய்தானான காங்[கே]ய

6 நேன் மலை மண்டலத்து இடைக்கொட்டு ஐய்யப்பக்

7 காமநுக்கு விலைப் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது நி

8 யமத்து நம் காணிப் பற்று குறு[ம]டங் காட்டில் கீழை வய

9 லு[க்கு]ப் பெருனான் கெல்லையாவது கீழெல்லை தே[நாற்]று னாயகர் தேவதானத்துக்

10 . . . வரம்புக்கு மேற்கும் தென்பாற் கெ[ல்லை] திருக்குன்றாக்குடி

11 . . . லுக்கும் வடக்கும் மேல்பாற் கெ[ல்லை] பஞ்சவராயந் விலை கொ[ண்டு]டைய

12 . . . . . . வயலில் ஆலவட்டஞ் செயி. கீழ் வரம்புக்குக் கிழக்கும் வடபாற்கெல்

13 — — தெற்கும் இப்பெருனான் கெல்லைக்குள் ளகப்பட்ட

14 — — தவிர்ந்து நிலங் குடிதாங்கி யென்னுங் கோலால்

15 — — வெட்டி முட்டாவாள் அச்சு வரி சில் வரி பெருவரி உள்(ப்)பட மற்றுமெ

16 – 22 வரிகள் மிகவும் சிதைந்துள்ளன.

**IV. பு. க. 4 of 1994**

இடம் : இரண்டாம் குடைவரை முழுத் தூண்களின் போதிகைகள்.

1 ஸ்வஸ்திஸ்ரீ — — — — ள் சோ
2 ழணாடு வழங் — — — — ண்டி [ய*] தேவ
3 ற்கு யாண் — — — — பிள்ளையாற்
4 — —
5 — —
6[1] நெல்லு இப்பிள்ளையாற்குத் திருஅமுதுபடிக்கு
7 உடலாக அளப்பதாகவும் இப்படி சந்திராதிச்சவற் செ
8 ல்வதாக நீரும் வாற்து நம் எழுத்தும் இட்டோம் இ
9 ப்படி கல்[லி*] லும் வெட்டிக் கொள்க இப்படி கண்டன் ஆளு
10 டையான் ஆன கல்வாயில் நாடாழ்வான் எழுத்து இவை
11 அறிவாபரண மூவேந்த வேளா
12 ந் எழுத்து ஸ்வஸ்தி ஸ்ரீ
13 பந்மாஹேச்ᵒவர ரக்ஷை

**V. பு. க. 5 of 1994**

இக்கல்வெட்டு மலை மேலுள்ள முருகன் கோயிலில் கண்டுபிடிக்கப் பட்ட உருவச் சிற்பக் கல்வெட்டாகும். இதையும் சேர்த்து குன்றக்குடி கல்வெட்டுகளின் எண்ணிக்கை ஐம்பதாகின்றது.

இடம்: விசுவநாதர் விசாலாட்சி கருவறை முன்னால் உள்ள வலப்புறத் தூணின் மேற்சதுரம்.

செய்தி: இத்தூணின் கீழ்ச்சதுரத்தையும் கட்டையும் மறைத்தபடி ஓர் ஆடவரின் சிற்பம் காணப்படுகிறது. ருத்திராக்க மாலை அணிந்து வணக்க முத்திரையில் காணப்படும் இவரது கைகளை ருத்திராக்க வளைகள் அலங்கரிக்கின்றன. சமபங்கத்தில் உள்ள இவரின் இடுப் பாடை முழங்காலுக்குக் கீழ்வரை காட்டப்பட்டுள்ளது. ருத்திராக்கங் களாலான அணிகளையே செவிகளிலும் கழுத்திலும் தோள்களிலும் பூண்டிருக்கிறார். இவரது மார்பு, நெற்றி, தோள்கள் ஆகிய இடங் களைத் திருநீற்றுக்கோலம் அழகு செய்கிறது. சடாமகுடம் புனைந்து அந்த மகுடத்தின் உச்சியிலும் ருத்திராக்கம் கொண்டு கட்டியிருக்கும் இவரது சிவப்பற்று தோற்றத்திலேயே தெளிவாய்ப் பொலிகிறது. அழகப்ப செட்டியாரின் திருமகன் தேனப்பன் என்று கல்வெட்டு இவ ரைச் சுட்டுகிறது.

---

1. இங்குத் தரப்பட்டுள்ள 6 – 13 வரிகள் தென்னிந்தியக் கல்வெட்டு கள் தொகுதி இருபத்தாறில் கல்வெட்டு எண் முப்பத்தேழின் பிற் பகுதியென்று தவறாகக் கொள்ளப்பட்டு 48-55 என்று எண் ணிடப்பட்டு அக்கல்வெட்டின் தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப்பட் டுள்ளன.

காலம்: பத்தொன்பதாம் நூற்றாண்டு

கல்வெட்டு: 1 சேவி செட்டியார் அ
2 ளகப்பன் மகன்
3 தேந
4 ப்ப[ன்]

## II. விட்டுப்போன தொடர்ச்சிகள்

முதற் கல்வெட்டு

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி இருபத்தாறில் முப்பத்தேழாம் எண்ணிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்கும் கல்வெட்டு ஐம்பத்தைந்து வரிகளைக் கொண்டுள்ளது. இவற்றுள் 1-44 வரிகள் சரியாக உள்ளன. 46-47 ஆம் வரிகள் குடைவரையில் காணப்படும் பாடத்திலிருந்து பெரிதும் மாறுபடுகின்றன.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் பாடம்

46 னாட்டுத் தேனாற்றுப் போக்கு நியமத்துக் குன் . . . நஞ்செய் புன்செய் உட்கிடை . . . . . .

47 . . . . . . . . . . . . ன்றி அ . . . . . . னான . . . . . . . ழுக்கு இசைந்து விலை

குடைவரையில் காணப்படும் பாடம்

46 னாட்டுத் தேனாற்றுப் போக்கு நியமத்துக் கண்டன் உதையஞ் செய்த[ா]னான காங்கேயடே

47 நன் மேற்படி — — ன்றி அழிவஞ்சாதானான பஞ்சவராயனுக்கு விற்பாளசைந்து[1] விற்

நாற்பத்தேழாம் வரிக்குப் பிறகு இக்கல்வெட்டின் தொடர்ச்சி முகமண்டபத்தின் வடசுவரில் வெட்டப்பட்டுள்ளது. ஆனால் தொகுதியில் முகப்புத் தூணின் போதிகையில் உள்ள வேறொரு கல்வெட்டின் பாடத்தை 48-55 வரிகளாகக் கொண்டு எண்ணிட்டுத் தந்திருக்கிறார்கள். இவ்வரிகள் புதிய கல்வெட்டு நான்கின் பிற்பகுதியாகப் பொருந்துகின்றன (காண்க புதிய கல்வெட்டு நான்கின் பாடம்).

முகமண்டபத்தின் வடசுவரிலுள்ள கல்வெட்டு எண் முப்பத்தேழின் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொடர்ச்சி

48 (ற்)ற உடைய பிரான் குடிக்காட்டுக்கு எல்லையாவது — —

49 ாற் கெல்லை அளற்றூர் குடிக்காடான வெள்ளா[ளர்] விடங்க -- —

1. விற்பதாய் இசைந்து என்று படிக்கவும்.

50 வடக்கும் மேல்பாற் கெல்லை மாதவராயந் குடிக்காட் டெல்லை — —

51 . . . கிற காலுக்கு மிதிற் தென் கடையில் கடைவிட்டு — —

52 ந்த பெருநான் கெல்லை யகப்பட்ட உடைய பிரான் குடிக்கா[ட்] டுக்கு — — எம்மிலிசைத்த — —

53 — — மேல் னோக்கின மரமும் , கீழ் நோக்கின கிணறும் மற்றுந் தெற் — —

54 த கொடு பெரு துறையும் மீன்படு பள்ளமுந் தென் . . பொதும்பும் மற்றுமெப் பேற்ப்பட்டதும் எம்மிலிசைத்த விலை

55 ப் பொருளுக்கு விலைக்குற விற்று விலை பிரமாணம் செய்து குடுத்தோம் உடை[தயஞ்செய்]தானான காங்கேயநேன் . . . ணறி அழி[வ]

56 ஞ்சாதானான பஞ்சவராயனுக்கு இக்குடிக்காட்டுக்கு நாடென்ற அச்சுவரி — — மற்றுமெப்பேற்(ப்)பட்டன

57 [வும்] [த]வுந்து — — திருக்குன்[றா]க்குடி திருமலை உடைய தேனாற்று — — புள்ளி புக்க நிலம் ஒருமா

58 வுக்கும் அதலையூர் நாட்டு கடமை காலாலே மாத்தால் நெல் — — சந்திராதிச்சவல்ச் செ

59 ல்வதாக கல்வெட்டிக் குடுத்தேன் [கண்ட]ன் உதையஞ் செய்[தா] — — ராயனுக்கு இப்படிக்கு கா

60 ங்கேயன் எழுத்து இப்படிக்கு — —

இரண்டாம் கல்வெட்டு

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி இருபத்தாறில் நாற்பதாம் எண்ணின் கீழ் வெளியாகியிருக்கும் கல்வெட்டு நிறைவடையாமல் இருக்கிறது. இதன் தொடர்ச்சி வேறொரு சுவரில் இருப்பதை அறியாது இக்கல்வெட்டின் பிற்பகுதி பாதுகாக்கப்படவில்லை என்று அடிக்குறிப்பில் தகவல் தந்திருக்கிறார்கள். தொகுதியில் விடுபட்டுப் போன அந்தப் பிற்பகுதி ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டது.

பதிப்பிக்கப்பட்டிருக்கும் பாடம்

1 ஸ்வஸ்திஸ்ரீ த்ரிபு₄வனச் சக்ரவத்திகள் சோணாடு வழங்கி [ய*]ருளிய ஸுந்த்ர பாண்

2 டி[ய தே]வற்கு யாண்டு ஏழாவது கேரள சிங்க வளநாட்டு தேநாற்றுப் போக்கு திருக் . . . . . . . . ந நாற்று

3 ந . . . . கோயில் ஆழுடைய பிள்ளையாற்கு நியமத்துக் கண்டன் அமுதகண்டெ . . . . . . . . ணனால்

4 . . . . க நமனைகுடி வல்லி பிள்ளை நங்கைவயல் னிலம் வரைக் காணி முந்திரிகைக் கீழ்

5 மாகாணியும் துழயூர் வல்லி இருணீக்கி வய[க்*]கல் நிலம் காணியுள் பெரிய்ய வெள்ளூரந் வய[க்*]கல் நிலம் வை

6 [ரயு]ம் . . . . பெரியாண்டன் குடிக்காட்டில் உளவன் துடவல் நிலம் கீழ்க்காலே மூன்றுமா முக்காணியும் ஆ

7 க நிலம் ஒரும்மாவுக்கு யாண்டு ஏழாவது முதல் கடமையும் வினிஓகமும் மற்றும் யெப்பேர்ப்பட்ட

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அதன் தொடர்ச்சி

8 னவும் இன்னில ஓமாதி[1] உள்ளன
9 எல்லாம் குடுத்தோம் இதுவே பிடி
10 பாடாக கல்லிலு[ம்*] செம்பிலு[ம்*] வெட்டுயிச்
11 சு[2] கொள்க நம் எழுத்துமிட்டு குடுத்து
12 சந்திராதித்தவல்(ல) செய்வதாக எழுத்துமி
13 ட்டோம் இவை வடகெங்கை ஆரியமூ
14 வேந்த வேளான் எழுத்து

---

1. ஓபாதி என்று படிக்கவும்.
2. வெட்டுவித்து என்று படிக்கவும்.

# 4. அப்பரும் அவிநயமும்*

இரா. கலைக்கோவன்

திருமுறை இலக்கியங்கள் பக்தி இலக்கியங்களென வகைப்படுத்தப் பட்டதால் அவற்றில் கடவுளைத் தவிர வேறெதுவுமில்லை என்ற எண்ணம் வலிமை பெற்றது. இறைக்கோயில்களிலும் விழாச் சடங்கு களிலும் ஓதுவதற்கே திருமுறைகள் என்ற நிலையும் உருவாயிற்று. திருமுறை வரிகளில் தோய்ந்து மகிழ்ந்த உள்ளங்கள் கூட அந்த வரி களுக்குள் நுழைந்து நோக்கத் தவறியதால், வரலாறு பல அருமையான செய்திகளை இழந்தது. அதன் விளைவாய்த் தமிழனுக்கு வரலாற் றுணர்வே இல்லையென்று படித்த தமிழர்களே பெருமையாய்ச் சொல்லி மகிழ்ந்தார்கள்.

வரலாற்றின் பல முகங்களுக்கும் அடிப்படைச் செய்திகளை வழங்க வல்ல கருவூலங்களாய்த் திருமுறைகள் விளங்குவதை மைய ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன. குறிப்பாகச் சிற்பக்கலை, வார்ப்புக்கலை, ஆடற் கலை, இசைக்கலை போன்ற நுண்கலைகளின் சில நூற்றாண்டுப் படப்பிடிப்பை இந்த இறையிலக்கியங்கள் புதையலாய்ப் பெற்றிருக் கின்றன. தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர் என்ற சொற்றொடர்கள் வாழ்க்கைக்கு மட்டுமல்ல வரலாற்றாய்விற்கும் அடிப்படைகளாய் விளங்கவல்லவை.

ஆதி சைவராய், அந்தணராய்ப் பிறக்காத காரணத்தாலேயே சுந்த ரர், சம்பந்தர் அளவுக்குக் கடவுளாலும் சேக்கிழாராலும் கொண்டாடப் படாத அப்பரடிகள் பல முதல்களுக்கு உரிமையாளர். தமிழக வரலாற் றில் உண்ணா நோன்பை அறப்போராட்ட வித்தாக முதன் முதல் ஊன்றிய பெருமைக்குரியவர் அப்பர்.[1] அந்தப் போராட்டமும் பிற சமயி களின் ஆதிக்கத்திலிருந்து இறைக்கோயிலை மீட்கவே நிகழ்த்தப்பட்டு வெற்றிக் கனி பறித்தது. அந்த வகையிலும் அப்பருக்கு முதல்வர் மதிப்புண்டு. தேய்ந்த உடலும் தேயாத உள்ளமுமாய் இறையைத் தேடிய முதல் மனிதரும் அப்பர்தான். களபம், கஸ்தூரி கேட்டவர் களுக்கெல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் தோன்றி மகிழ்வளித்த சிவபெருமான், ஊர் ஊராய் அலைய வைத்துக் காட்சி தந்த ஒரே மனிதரும் அப்பர்தான். தாம் ஓயாமல் பாடிய பின்பே திறந்து, சம்பந்தரின் ஒரு பாட்டுக்கு மூடிக்கொண்ட திருமறைக்காட்டுக் கதவும் பின்னணியில் சிவபெருமான் நிகழ்த்திய திருவிளையாடலுக்குப் பிறகும், 'உன் பணி பிழைத்தாரைப் பெருமானே புளியம் வளாரால் மோதுவி'[2]

---

* பேராசிரியர் கோ. வேணிதேவி அறக்கட்டளை உதவியுடன் இக் கட்டுரை வெளியாகிறது.

என்று வணங்காரை அடிக்கச் சொல்லி, அடித்தால்தான் இந்தச் சமுதாயம் திருந்தும் என்பதை அப்போதே புரிந்து கொண்டு, இறைவனுக்கே வன்முறை வேண்டுகோள் வைத்த முதல் கவிஞரும் அப்பர்தான். ஆடற் செய்திகளைச் சம்பந்தரும் ஆடற் களம் பற்றிய செய்திகளைக் காரைக்கால் அம்மையும் அள்ளி வழங்கிய போதும் அவற்றோடு அவிநயக் குறிப்புகளையும் அளவாய்க் கலந்து நிறைவாய்த் தருபவர் அப்பரடிகள்தான். அந்த வகையில் அவிநயத்தின் அனைத்து முகங்களையும் விரிவாய்க் காட்டும் முதல் இலக்கியங்கள் அப்பரின் திருமுறைகள்தான்.

அறிவனாரின் பஞ்சமரபும், சாத்தனாரின் கூத்தநூலும் ஆடல் மற்றும் இசை விளக்கும் கலை நூல்கள். இவ்விரண்டனுள், பஞ்சமரபு காலத்தால் மிக முற்பட்ட நூலென்று அதற்கு அண்மைக் காலத்தே உரையெழுதி வெளியிட்டிருக்கும் இசையாய்வுப் பேரறிஞர் வீ. ப. கா. சுந்தரனார் குறிப்பிடுகிறார்.[3] இந்நூலில் உள்ள யாழ், வங்கியம், கண்டம், கூத்து, தாளம் என்னும் ஐந்து மரபுகளுள் கூத்து மரபு அவிநயவியலை உள்ளடக்கியிருக்கிறது. இந்த இயலில் பதின்மூன்று வெண்பாக்கள் உள்ளன. இவை கை மற்றும் கால் தொழில் பற்றி மட்டுமே பேசுகின்றன.[4] இப்பதின்மூன்று வெண்பாக்களின் எந்தவொரு வரியும் அவிநயமென்றால் என்னவென்று வரையறுத்துக் காட்டவில்லை. மாறாகக் கால் மற்றும் கை மரபுகளைச் சுட்டியதன் மூலம் அவையே அவிநயத்தின் தோற்றுவாய்களென்று காட்டியுள்ளது.

கூத்த நூலின் காலத்தைப் பற்றியும், அதன் உண்மைத் தன்மை பற்றியும் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கூத்து பற்றிப் பேசும் முழுமையான நூல் அது. சுவைநூல், தொகை நூல் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும் அந்நூலின் அவிநயம் பற்றிய வரிகளுக்குத் திரு. ச. து. சு. யோகியார் தந்திருக்கும் விளக்கங்கள் நாட்டிய சாத்திரச் சிந்தனைகளின் பின்னணியில் எழுந்தவை.

''ஆட்டம் பாட்டம் அவிநயம் என்ன
மூவகை என்பர் கூத்தின் முறைமை''[5]

''ஆட்டம் பிறந்தது பாட்டம் பாட்டம்
அதனிடைப் பிறந்தது அவிநயக் கூத்தே''[6]

ஆடல் முதலிலும் தொடர்ந்து பாடலும் பிறகு அவிநயமும் தோன்றின. வேராகிய ஆட்டத்தினின்று பாட்டாகிய மரம் கனியாகிய அவிநயத்தைத் தந்தது.

''ஆட்டம் தட்டாம் பாட்டம் பண்ணாம்
யாப்புக் கூத்தின் அவிநயம் என்ப''[7]

இவ்வரிகளுக்கு உரையெழுதும் இடத்தே, 'பொதுவாக அவிநயம் மன உணர்ச்சிகளை உடலின் உறுப்புகள் யாவற்றாலும் காட்டுவதாயினும் சிறப்பாகக் கைகளாலேயே அவை விளக்கம் பெறும். யாப்பு யாப்பது; சொற்களால் ஆனது. அவிநயம் அச்சொற்களின் பொருளைச் செயலாக வெளிப்படுத்துவது', என்கிறார் திரு. யோகியார்.[8]

''சொல்பொருள் எல்லாம் கைமெய் துலக்கி
நிற்பது பாட்டுஅவி நயம்என நிறுத்து''[9]

'பாட்டாகிய யாப்பின் உரைமூலம் வெளிப்படும் உள்ளக் கிடக்கையைப் பொதுவாக ஆங்கிகத்தாலும் சிறப்பாக அஸ்த முத்திரைகளாலும் அவிநயிப்பது. முக்கியமாக இதில் வார்த்தா பாவமும், அர்த்த பாவமும் அஸ்த பாவமாக உருக்கொள்ளும்.' வார்த்தா பாவம், அஸ்த பாவம் இரண்டும் முறையே வாசிக அவிநயம், ஆங்கிகா அவிநயம் என்று பெயரிடப்பட்டுள்ளன. கூத்த நூலின் கூற்றையும் அதற்கு உரைகாரர் தரும் விளக்கத்தையும் ஏற்றுக்கொண்டால் அவிநயம் என்பது கூத்தில் பாடப்படும் பாடல் அல்லது பேசப்படும் உரையாடலின் பொருளை உடலால், குறிப்பாகக் கைகளால் வெளிப்படுத்திக் காட்டும் வல்லமை என்று முடிவுகொள்ள நேரும்.

ஆடல் குறித்த பல செய்திகளைத் தரும் சங்க இலக்கியங்கள் அவிநயம் பற்றி நேரடியான கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளாமற் போனாலும், அந்தநாள் ஆடல்களிலும் அவிநயம் பெரும்பங்கு வகித்ததை ஆங்காங்கே உவமைகளால் எடுத்தோதிச் செல்கின்றன.

''கடியுண் கடவுட் கிட்ட செழுங்குரல்
அறியா துண்ட மஞ்ஞை ஆடுமகள்
வெறியுறு வனப்பின் வெய்துற்று நடுங்கும்[10]

அவிநயம் என்ற சொல்லை நேரடியாகப் பயன்படுத்தும் முதல் தமிழ் இலக்கியமாகச் சிலப்பதிகாரத்தைக் குறிப்பிடலாம். ஊர்காண் காதையில் தலைக்கோல் அரிவையின் மலைப்பரும் சிறப்புக்களைப் பட்டியலிடும் இளங்கோ அவளை,

''நால்வகை மரபின் அவிநயக் களத்தினும்
ஏழ்வகை நிலத்தினும் எய்திய விரிக்கும்''

வல்லமையுடையவளாகப் படம் பிடிக்கிறார்.[11] நால்வகை மரபின் அவிநயக் களங்களாய் அரும்பத உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்கல் என்னும் நான்கு நிலைகளைக் குறிக்கிறார்கள்.[12]

"நிற்றல் இயங்கல் இருத்தல் கிடத்தலென்று
அத்தகு நான்கே அவிநயக் களனே"

என்னும் நூற்பா மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளது. இந்த நூற்பா விற்குரிய நூல் எதுவென்று தெரியவில்லை.

அரும்பத உரைகாரரும், அடியார்க்கு நல்லாரும் அவிநயம் என்ற சொல்லைப் பல இடங்களில் பயன்படுத்துகிறார்கள். அவிநய நாடகம், அவிநயக் கூத்து என்பனவும் சுட்டப்படுகின்றன. சாந்திக் கூத்து நான்கனுள் ஒன்றாகக் குறிக்கப்படும் அவிநயக்கூத்து கதை தழுவாது, பாட்டின் பொருளுக்கேற்ப கைகாட்டி வல்லபம் செய்யப்படும் கூத்தாகக் காட்டப்படுகிறது.[13] கதை தழுவும் போது அது அவிநய நாடகமாய் அமைகிறது.[14] அவிநயம் முகம், மார்பு, கை, கால்களால் காட்டப்படுவ தாகவும் கைகளை ஒற்றையும், இரட்டையுமாக்கிக் காட்டப்படுவதாக வும் அடியார்க்கு நல்லார் சொல்கிறார்.[15] புறக் கூத்துகளில் ஆடல் நிகழுமிடத்து இந்த அவிநயம் நிகழாதென்றும், அவிநயம் நிகழு மிடத்து ஆடல் நிகழாதென்றும் இருவருமே கூறுகிறார்கள்.[16] பதி னான்கு விலக்குறுப்புகளுள் ஒன்றாக வைத்தெண்ணப்படும் அவிநயத் தைப் பாவனையென்று பொருள் சுட்டி, அதன் இருபத்து நான்கு வகைகளையும் காட்டும் அடியார்க்கு நல்லார் சுவைகள் ஒன்பதையும் அவிநயமே வெளிக்கொணர்வதாய்க் கூறுவது குறிப்பிடத்தக்கது.[17]

மணிமேகலை, 'ஆடற் கூத்தினோடு அவிநயம் தெரிவோர்' என்ற வரியின் மூலம்[18] அவிநயத்தைத் தனிப்பெரும் கலையாகக் காட்டு கிறது. அவிநயம் இல்லாமலே ஆடற்கூத்து நிகழ்ந்ததையும், அவி நயமே தெரியாமல் கூட ஆடற் கூத்தர் இருந்ததையும் இந்த வரியால் உணர முடிகின்றது. இதனால் அவிநயமற்ற கூத்தான சொக்கம் மணிமேகலைக் காலத்தில் சிறப்புற்று விளங்கியதையும் அவிநயம் கற்றோர் பாடலுக்கேற்ற அவிநயம் காட்டும் நிருத்தத்தையும் (அவி நயக் கூத்து) கதை தழுவிய அவிநய நாடகத்தையும் நிகழ்த்தி மகிழ்ந் தனரென்பதையும் அறிகிறோம்.

பஞ்சமரபு, கூத்தநூல், அரும்பத உரைகாரர் மற்றும் அடியார்க்கு நல்லாரின் குறிப்புகள் ஆகியன அவிநயம் பற்றிப் பேசும் செய்திகளைத் தொகுத்துப் பார்க்கையில் ஆடற் கலைஞர் ஆடலுக்கான பாடலின் அல்லது கதையின் பொருளைப் பார்ப்போருக்கு விளங்க வைக்கத் தம் உடலின் உறுப்புகளால் மேற்கொள்ளும் முயற்சிகளின் தொகுப்பே அவிநயம் என்று முடிவு கொள்ளலாம்.

காலத்தால் மிகப் பழமையானதாகப் பல அறிஞர்களால் கருதப் படும் நாட்டிய சாத்திரம் இந்த முடிவிலிருந்து வேறுபடுகிறது. அவி

நயத்தை நான்காகப் பகுத்துக் காட்டும் நாட்டிய சாத்திரம், ஆடலின் மையக் கருத்தை அதன் நிகழ் பொருளைப் பார்வையாளர்கள் புரிந்து கொள்ளுமாறு வெளிப்படுத்தும் நிலையே அவிநயமென்று வரையறுப் பதுடன்,[19] இந்த நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளையுமே அவிநயத்துள் அடக்கிக் காட்டுகிறது. அதன் காரண மாகவே அவிநயத்தை ஆகார்யம், ஆங்கிகம், வாசிகம், சாத்விக மென்று நான்காய்ப் பகுக்கிறது நாட்டியசாத்திரம்.[20] இவற்றுள் ஆகார்யம் ஆடற்கலைஞர் கொள்ளும் ஒப்பனை, கருவிகள், அணிகலன் கள், உடை ஆகியவற்றுடன் களம், ஒலி, ஒளி முதலியவற்றையும் உள்ளடக்கும்.[21] உரை, மற்றும் பாடலால் ஆடலின் பொருளைப் பார்வையாளர்க்கு உணர்த்துவது வாசிகம்,[22] உடலின் உறுப்புகளால் பாடலின் அல்லது கதையின் பொருள் வெளிப்படுத்தப்படும்போது அது ஆங்கிகம்.[23] இதைத்தான் அரும்பத உரைகாரரும் அடியார்க்கு நல்லாரும், பஞ்சமரபு ஆசிரியரும், கூத்த நூலாரும் அவிநயமென்று காட்டுகிறார்கள்.

ஆடற் பொருளால் ஆடுநரின் உள்ளத்தெழும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கலையே சாத்விக அவிநயம்.[24] இதற்கு ஆடுநர் தாம் மேற்கொண்ட ஆடலின் கருவோடு ஒன்றிப்போக வேண்டும். தானே அதுவாகி ஆடுநர் ஆடும்போதுதான் சாத்விக அவிநயம் இயலுவதாகும். அவிநயத்தின் குறிக்கோளே ஆடலைப் பார்ப்பவர் அதை விளங்கிக் கொள்ள வேண்டுமென்பதும், அவ்வாடல் எந்தக் களத்தில் எந்தக் கருவை மையமாக்கி நிகழ்த்தப்படுகிறதோ, அந்தக் களத்தில் அந்த நிகழ்வில் பார்ப்பவர் தாமும் ஒருவராகி ஒன்றிப் போகுமாறு செய்வதும் தான். அடியார்க்கு நல்லார் சுவைகள் ஒன்பதையும் அவிநயமே வெளிக்கொணரும் என்பதும் இதன் அடிப்படையில்தான். சுவை சுந்தரமாய் வெளிப்படும்போது சாத்விகம் தானே மலர்கிறது.

நாட்டிய சாத்திரச் சிந்தனைகளின் பின்னணியில் சொக்கத்தையும் நிருத்தத்தையும் பார்க்கும்போது ஆகார்யம் இரண்டுக்கும் பொதுவான தாக அமைகிறது. ஆங்கிகத்தில் நிருத்தக் கைகள், கால்நிலைகள், உடல் நிலைகள் மூன்றும் சொக்கத்திற்கும் உண்டு. இவற்றோடு ஆடல் முத்திரைகளும் பிற உறுப்புகளின் வழியிலான அவிநயமும் சேர்ந்த ஆங்கிகம் நிருத்தத்திற்காகும். வாசிகம் சொக்கத்திற்கில்லை. சாத்விகம் இரண்டிற்கும் உண்டு.

திருமுறை ஆசிரியர்களின் பதிகங்களைப் பயிலும் போது நாட்டிய சாத்திரப் பின்னணியில் அவர்களின் ஆடற்சிந்தனைகள் அமைந் திருக்குமோ என்று கருதத் தோன்றுகிறது. திருமுறைகளில் பயிலப் பட்டிருக்கும் ஆடற்கலைச் சொற்களுள் சில நாட்டிய சாத்திரத்தை

நினைவுபடுத்துகின்றன. திருமுறைகளில் இறையாடல் குறித்து மிகுதியும் பேசுபவை அப்பர், சம்பந்தர் பதிகங்களே. இருவருள்ளும் சாத்விகம் பற்றிப் பெயர் சுட்டாது, ஆனால் பல இடங்களில் அது பற்றிய கருத்தோட்டங்களைக் காட்டிச் செல்பவர் அப்பரடிகளே. அதனால்தான் அப்பர் காட்டும் அவிநயம் ஆய்வுக்களமானது.

நான்காய் அவிநயம் பகுக்கப்பட்டிருந்தாலும் சுவைஞர் கண்முன் ஆடுநர் தோன்றியதும் முதலில் தெரிவது ஆகார்ய அவிநயம்தான். விலகிய திரையின் பின்னே மேடைக் களத்தின் பின்னணிகளும் எதிரே நிற்கும் ஆடுநரின் தோற்றப் பொலிவுமே முதற் காட்சிகள். அதனால் தான் நான்கு வகை அவிநயங்களுள், மூன்று திருமுறைகளிலும் ஆகார்ய அவிநயம் பற்றியே அப்பர் அதிகம் பேசியுள்ளார். அரங்கு, ஒளி, ஒலி என்னும் மூன்றும் சேர்ந்தமையும் ஆடற் களம் பற்றிப் பாடியவர்களுள் காரைக்கால் அம்மையை விஞ்ச யாராலும் முடியாது. வரிகள் குறைவாக இருந்தாலும் மூத்த திருப்பதிகங்கள் காட்டும் களம் பற்றிய செய்திகள் செறிவானவை. அம்மைக்கு அடுத்த நிலையில் களம் பாடிய கவிஞராய் அப்பரே சிறக்கிறார். அம்மை ஆலங்காட்டுக் களம் மட்டும் காட்டினார். அப்பரோ காட்டுடன், நாட்டையும் களமாக்கிக் களிக்கிறார்.

அரங்கம்

இறைவன் ஆடல் உகக்கும் காடு மழையால் செழித்த மரங்கள் நிறைந்த பசுமைக் காடல்ல. இறந்தவர்களை எரியூட்டும் பிணக்காடு. அம்மை சொல்வது போல்,

> ''எட்டி இலவம் ஈகை சூரை
> காரை படர்ந்தெங்கும்
> சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி
> சோர்ந்த குடர்கௌவப்
> பட்ட பிணங்கள் பரந்த காடு.''[25]

இந்த மயானத்தைக் கரிகாடு, புறங்காடு, இடுகாடு, சுடுகாடு, பெருங்காடு. ஈமக்காடு, பிணக்காடு, பரந்த காடு, கள்ளி முது காடு, சுள்ளிக் காடு, வெங்காடு எனப் பலவாய்ச் சொற்கள் பெய்து சிறப்பிக்கும் அப்பரடிகள் ஆடுகளத்தின் சூழல்களையும் வரிகளால் விளக்குகிறார். இறைவன் ஆடி மகிழும் களம் நரிகள் விரவும் காடு. பிரிய விரும்பாமல் அவை தங்கி மகிழும் காடு. வயிற்றுப் பசிக்கு உணவும் பார்வைப் பசிக்கு ஆடலும் இடையறாது கிடைக்கும் களமாதலால் அவை அங்குத் தங்குதலை விரும்புகின்றன. இந்த நரிகள் இறைவனுக்குக் கருவிகள் தந்து உதவுகின்றன.

இடுபிணக் காட்டில் ஓரி கடித்துத் தந்த ஓட்டை வெண் தலையே இருளாடும் இறைவன் திருக்கையில் வாழ்க்கையின் விளக்கமாய் ஒளி வீசுகிறது. இறைவன் ஆடலுக்கு அமையும் இன்னிசைக் கூட்டியத்தில் இந்த நரிகளே குழலாசிரியர்கள். இவைகள் குறுநரிகள்தான். இருந்தாலும் வாசிப்பவையோ நீடு குழல்கள். கருவியெடுத்து இசையெழுப்பும் தேவையில்லாமல், கண்டத்திலேயே கருவி கொண்ட கலைஞர்கள் இவர்கள். வாயைத் திறந்தால் போதும் இசை முழக்கம்தான். ஒரு நரிக்கே காடு தாங்காது. ஆனால் அப்பரோ குறுநரிகள் கூட்டமாய்க் கூடி குதூகலித்துத் தொடர்ந்து குழலிசைத்ததாய்ப் பாடுகிறார். அதனால்தானோ என்னவோ பூமியே நெளிந்தது.

"..... ....... .... குறுநரிகள்
நீடும் குழல்செய்ய வைய நெளிய."[26]

நரிகளுக்குத் துணையாய் இந்தக் காட்டில் பேய்களும் உண்டு. பிறை போல் வளைந்த பல்லும் பறை போல் குழிந்த கண்ணும் பேழாய்ப், பிலவாய் அகன்ற வாயும் கொண்ட இப்பேய்கள் காட்டில் தங்கிப் பின் நயந்து சூழ்ந்து இருப்பிடம் பிடித்துப் போனதால் இதையே வாழிடமாக்கிக் கொண்ட வன்பேய்கள். வந்து போகும் நரிகளே குழலெடுக்கத் துணிந்த பிறகு வாழ்ந்துவரும் பேய்க் கணங்கள் சும்மாயிருப்பதா! பரந்து பல் பேய் கூடி, முழவுகள் தேர்ந்து கொட்டத் தொடங்கின. தாளம் சேர்ந்தது.

களத்தில் கள்ளியும் சுள்ளியும் காரையும் சூரையும் பின்புலமாக, நரியும் பேயும் நகர்வனவாயின. இந்தக் களத்தில் இரவும் பகலும் எந்த நேரமும் ஆடல் உண்டு. என்றாலும் சிறப்பான காட்சிகள் இரவில் மட்டும்தான். அதனால்தான் 'எல்லி மாநடமாடும்' என்று அந்த இரவாட்டம் புகழப்படுகிறது. நள்ளிருளில், எங்கும் எதுவும் தெரியாத துஞ்சிருளில் களத்துக்கு ஒளி வேண்டாமா? ஆடுபவரே நீள் எரியாய் நிமிர்ந்தவர்தான். ஆடும்போது அவர் கையில் கொள்வதும் எரிதான். ஆடுமிடம் கூடப் பல நேரம் பிணம் எரியும் சுடலைதான். அந்தத் தீயோடு தீயாய் ஒளியுமிழ்ந்து அவர் ஆடும் போது வேறு வெளிச்சமும் களம் காட்டத் தேவையா! ஆடும் களத்திலிருந்தே நெருப்பெடுத்துக் கையில் கொண்டு ஆடியதால் அதுவே ஒளியாயிற்று. ஆடும் களமும் ஒளி தந்தது. அதனால்தான் 'துஞ்சடை இருள் கிழியத் தூங்கெரி ஆடுமாறே' என்றார் அப்பர்.

இந்த எரிகள் இல்லாதும் இறைவன் ஆடுவதுண்டு. அந்த நேரங்களில் களத்திற்கு ஒளியூட்டப் பொன் தீ மணி விளக்குகளைப் பூதங்கள் தூக்கி நிறுத்தின. தண்டலை மயில்களாடக் கம்பரின் தாமரைகள்

விளக்கேந்தவில்லையா! திண்டி வயிற்றுச் சிறுகண் பூதங்களான இவைதான் ஆடுகளத்தின் முதன்மை இசைக்கலைஞர்கள். நாடகத்தின் தொடக்கத்தில் கட்டியங்காரன் பாடுவதைப் போல், இறையாடலுக்கு முன்னால் இந்தக் குள்ளச் சிறு பூதங்கள் குடமுழவம், வீணை, தாளம், பறை, மொந்தை, தக்கை கொண்டு களத்தில் குறு நடை பயின்று பார்வையாளர்க்குச் சுறுசுறுப்பேற்றும். இவற்றுள் சில குழலும் கொக்கரையும் ஊதிப் பார்க்கும். களம் சரியாக இருக்கிறதா என்று தாளம் தப்பாமல் ஆடியும் பார்க்கும். தங்கள் பங்கிற்குப் பேய்களும் வெள்ளோட்டம் காணும். ஆடியும், இசைத்தும், பாடியும் களத்தின் ஒலியமைவு காணும் பூதங்களும் பேய்களும் ஆடற்கலைஞராம் இறைவனின் பிரிக்கவியலாத் துணைகள். அதனால்தான் பிணக் காட்டில் பேயோடு ஒன்றுபவராகவும் பூதநாதராகவும் பூதப்படையராக வும் இறைவனை அப்பர் படம் பிடிக்கிறார்.

மூன்று திருமுறைகளிலும் பல்வேறு பதிகங்களில் ஆடுகளமாய்க் காட்டை வண்ணிப்பவர் அவ்வப்போது நாட்டுக் களமாய்த் தில்லை யையும் காட்டுகிறார். அணியார் தில்லை, மஞ்சடை சோலைத் தில்லை, சிறைகொள் நீர்த் தில்லை என்று களத்தின் பெருமைகளைக் கோயில் பதிகங்களில் எல்லாம் பாடல் தோறும் வரியமைத்துப் பட்டிய லிடும் அப்பரடிகள், 'ஞாலமாம் தில்லை தன்னுள் நீலஞ்சேர் கண்ட னார்தாம் நீண்டெரி ஆடுமாறே'[27] என்று பாடி, தில்லையை ஞால மாக்கிக் களத்தின் சிறப்பைச் சிகர உச்சிக்கு ஏற்றுகிறார். இறைவன் பொற்பாதம் தூக்கி ஆடியதாலேயே ஞாலமான தில்லையில், அந்தப் பெருநடம் நிகழ்ந்த அம்பலம் அணியம்பலமாகவும், மணியம்பலமாக வும் வண்ணிக்கப்படுகிறது. இறைவன் தாமே விரும்பித் தமக்கு அணுக்கமானவர்கள் சூழத் தாம் கிளர்ந்தெழும் நேரங்களில் எல்லாம்ஆடி மகிழ்ந்த இடமாதலால் அவர் உகந்த காட்டரங்கைப் பேரம்பலமாய்க் கொள்ளலாம். அதனால்தான் அதைப் பெருங்காடென்றும் ஆடு நரைக், காட்டில் நின்றாடல் பேணும் கருத்தினையுடையவரென்றும் இட்டமாய் இடுகாட்டு எரியாடுவாரென்றும் அப்பர் பாராட்டினார். கேட்டார்க்கு ஆடிய இடமாதலால், கேள்விக்கு இரங்கிய நிலையென்ப தால் தில்லையம்பலம் சிற்றம்பலமானது. அப்பரடிகள் தில்லையம் பலத்தைக் குறிக்கும்போது சிற்றம்பலமென்றே சொல்கிறார்.

அரங்கத்தில் ஒளியூட்ட எரியும் சுடலையும், பூதங்கள் ஏந்திய பொன் தீ மணி விளக்குகளும் போதாவென்று எரிகின்ற கொள்ளிகளும் இருந்தாற் போல், ஆடும் ஆடலுக்குப் பொருத்தமாக இசையெழுப்ப, வழக்கமான கருவிகளுடன் பல அரிய கருவிகளும் கூட்டியக் குழுவிடம் குடிபுகுந்திருந்தன. கொடுகொட்டி, கல்லவடம், கல்லலகு, சச்சரி, பிடவம் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கன, இக்கருவிகள் சங்க

இலக்கியங்களிலோ, அடியார்க்கு நல்லார் தரும் தோற்கருவிப் பட்டியலிலோ இடம் பெறாமையால், திருமுறையாளர் காலத்தில் மட்டுமே பயிலப்பட்டவையோ என்று கருத வேண்டியுள்ளது. இந்தக் கருவிகளைத் தேவைக்கேற்ப இயக்க நன்கு பயின்ற இசைஞானப் பூதங்கள் இருந்தன. அதனால்தான் அப்பரடிகள்,

'பாரிடங்கள் பலகருவி பயிலக் கொண்டார்'[28]

'பாடல் பயின்றபல் பூதம் பல்லா யிரம்கொள் கருவி'[29]

என்றெல்லாம் பாராட்டிப் பேசுகிறார்.

## தோற்றம்

களத்தில் தொடக்கநிலை ஏற்பாடுகள் முடிந்ததும் கலைஞர் தோற்றம் தருவதுதானே முறை. தோழியரோடு தலைவி வருவது போலப் பூதங்கள் சூழ இறைவன் களத்திற்குள் நுழைகிறார். அந்தக் கங்குல் வாய்க் கணங்களோடு, சுந்தரர் துணைக் கவரி வீச[30] குடமுழவு நந்தீசன் வாசகனாக,[31] இறைவன் பேசிக்கொண்டும், பாடிக் கொண்டும் வட்டணைகள் பட நடந்து வருகிறார். இந்த வட்டணை என்ற சொல் அப்பரடிகளால் இறைவனது அழகிய ஆடல் நடையைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இடமிருந்து வலமாகவும், வல மிருந்து இடமாகவும் சுழன்று நடந்து வட்டமிட்டாற் போல் வருவதே வட்டணை நடையென்று பேரகராதி பேசுகிறது.[32] இந்த வட் டணையை நான்காய்ப் பகுக்கும் பஞ்சமரபில் அவற்றிற்கான விளக் கங்கள் தெளிவாகத் தரப்படவில்லை.[33] மேலப்பெரும்பள்ளத்தில் உள்ள பிச்சையுகக்கும் தேவரின் செப்புத் திருமேனியை வட்டணை பட நடந்த நாயகராய்ச் சில ஆய்வர்கள் காட்டியுள்ளனர். வட்டணைக் குரிய நடையமைப்பே இல்லாமல், பாதங்களை முன் வைத்து நடை பயில்வது போல் உள்ள இந்தத் திருமேனியைவிட, சீனிவாசநல்லூர் திருக்குரக்குத்துறைப் பெருமானடிகள் திருக்கோயில் பிச்சைத்தேவர் வட்டணை நாயகர் பட்டத்திற்குப் பெரிதும் ஏற்றவராய்க் காட்சி தரு கிறார். சுழன்று இடப்புறமாய்த் திரும்பிய கால்கள். திரும்புவதற் கான தொடக்க நிலையில் மேலுடலும் முகமும். இடைக்குக் கீழ் சுழற்சியின் முழு வீச்சைத் திறம்படக் காட்டியிருக்கும் சோழச் சிற்பாசிரி யர்கள் அதற்கேற்பவே பூதகணத்தின் நடையையும் அமைத்துள்ளனர்.

வட்டணைகள் பட நடந்து மாயம் பேசி வரும் இறைவன் அரங்கிற் குள் நுழைந்ததும் சிறிது சிறிதாய் அவரது முழுத் தோற்ற அழகையும் தலைமுடி முதல் திருவடி ஈறாகத் தேர்ந்தெடுத்த தமிழ்ச் சொற்களால் தொகுத்தளித்து மகிழ்கிறார் அப்பர் பெருமான்.

பொன் போன்ற புரிசடைகள் இறைவனிடும் வட்டணைகளால் அங்குமிங்குமாய் அசைந்தாட, வேறு வேறாய் விரிந்த அந்தச் சடைகளில் ஆர்த்து வந்து அமர்ந்திருக்கும் அலை புனலாள் கங்கையின்



வட்டணை நாயகர்—குரங்கநாதர் கோயில்

நீர்த்திவலைகள் தெறித்தெங்கும் தெளிக்கப் பார்வைகளின் தொடக்க மலர்வாய் இறைவனின் செஞ்சடைக் காட்சிதான். இந்தச் சடை முடிகளைச் சம்பந்தர் போல அப்பரும் காதலித்து வண்ணிக்கிறார்.

அந்த முதிர் சடைமுடிகளில்தான் எத்தனைப் பொருட்களின் அடைக்கலம்! மூழ்கும் இளநாகம், வளரும் இளம் திங்கள், வடுவிட்ட கொன்றை, சுழிப்பட்ட கங்கை, கொக்கின் தூவல், கூவிளங்கண்ணி, பல்லாடு தலை மற்றும் கரந்தை, எருக்கு, வன்னி, மத்தம், தும்பை, செண்பகம், மல்லிகை என மலர்களின் நீண்ட பட்டியல். இவை தவிர இண்டை புனைந்து சிரமாலையும் கொள்வராம். இந்தச் சிரமாலை மூரல் வெண் சிரமாலையாம். இவையெல்லாம் சூடிய சடைகளை மகுடமாய்ச் சுற்றிக் கட்டிவிட்ட சடையராயும் வருவதுண்டு. விரித்த சடைகள் திசைகள் பாய வீறு கொண்டும் வருவதுண்டு.

ஆடற்கலைக்கு அந்த நாட்களில் அழகு ஓர் அடிப்படைத் தகுதியாய்க் கருதப்பட்டதைச் சிலம்பு பேசும்.[34] அந்த அழகுக்கு மேலும் அழகுபடுத்திக் கொள்வதே ஒப்பனையில் சேரும். மாதவி ஆடலுக்கு முன் தன்னை எப்படியெல்லாம் அழகு செய்து கொண்டாள் என்பதைக் கடலாடு காதை காட்டும்.[35] மேடைக்கு வரும் பூதநாயகரின் ஆடை, அணிகலன்கள், அவர் கைக் கருவிகள் மற்றும் திருமேனி எழில் பற்றி அப்பர் குறிக்காத இடங்கள் குறைவு.

கட்டங்கம், மழு, சூலம், தண்டு, வலிக்கோல், கொலைவேல், கங்காளம் போன்ற கருவிகளும் மான், பாம்பு, போன்ற உயிரினங்களும் யாழ், வீணை, கொடுகொட்டி, கல்லலகு, பறை, துடி, தக்கை போன்ற இசைக்கருவிகளும் வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தும் கனல், செத்தவர் தலை மாலை, தலையோடு போன்றவையும் சுரை, குண்டிகை, புத்தகம் போன்ற தவம் தொடர்பான பொருட்களும் இறைவன் திருக்கைகளில் ஆடலின் போது இடம் பெறுவதுண்டு. இவற்றுள் ஒவ்வொன்றையும் பதிக வரிகளில் பலபடப் பாராட்டி அடைகள் தந்து சிறப்பிக்கிறார் அப்பர் பெருமான். வெண் மழு, கொடு மழு, வெய்ய மழு என்று மழுவையும், இரும்பார்ந்த சூலம், முத்தீ அணைய தோர் மூவிலை வேல், சின்மணிய மூவிலை வேல் என்று சூலத்தையும் ஐந்தலை நாகம், ஒற்றைக் கதநாகம், பொங்கும் ஆடரவு, இரை உண்டறியாப் பாம்பு என்றெல்லாம் பாம்பையும் பெருமைப்படுத்தும் அப்பரடிகள் கனல் பற்றிப் பேசும் போது மெய்சிலிர்த்துப் போகிறார். இறைவனையே தீத்திரளன் என்றழைத்தவரல்லவா! அதனாலோ என்னவோ அவர் கை நெருப்பு கூடத் தீத்திரளாய், ஆரழலாய்க் காட்சி தருகிறது அப்பருக்கு.

அணிகலன்கள் இறைவனுக்குத் தனித் தன்மையனவாகவே அமைந்து விடுகின்றன. தலையில் சூளாமணி; சுற்றிலும் முடித்தணிந்த சடாமகுடம். செவிகளில் ஒருபுறம் புதுவிரி பொன்செய் ஓலை; மறுபுறம் நின்று புரளும் சுரிசங்கம். இந்தப் பொன் தோடு தோள்களை வருடும் அளவு

பெரியதாம். காட்சிக்குக் காட்சி அணிகலன்களில் மாற்றம் வேண்டாமா? அதனால் இறைவனின் அடுத்த வருகையில் அவர் செவிகளில் சதுர் வெண் பளிங்குக் குழையும் பொறி அரவமும்; சிவந்த நெற்றியில் தலைமாலை. இரண்டு தோள்களிலும் ஒத்த வடத்து இளநாக உருத்திர பட்டங்கள். சில நேரங்களில் இவற்றுக்கு மாற்றாக வலம் சூழ்ந்த வள்ளி மண்டலமாய் அமைந்த கொடிக்கருக்குக் கங்கணங்கள். நிலாக் கதிர் போல் அந்த நீள் திண் தோளில் வெண் நூல் உண்டு. கழுத்தில் இறைவனின் பேராண்மை காட்டும் பன்றிக் கொம்பு, ஆமை, எரி அரவம். இவற்றோடு முத்து, அக்கு, பளிக்கு இவற்றாலான வடங் கள், கொன்றை மாலை, பூவணிமாலை. இவையில்லாமல் பட்டவர் அங்கமும், மாண்டார் எலும்புகளும் கழுத்தணிகளாகி இறைவனின் மயான விளையாட்டுக்கு முகவுரை எழுதும். கைகளில் நாக வளைகள். இடுப்பில் கடிசூத்திரம்; அதன் மேல் கபால வடம்; சில நேரங்களில் பாம்புப் பின்னல். இது ஒருதலை நாகமாகவும் அமையும். ஐந்து தலைகள் கொண்டு சீற்றத்தோடு படம் விரித்துச் சினம் கொப்பளிக்கப் பொங்கும் ஆடரவமாகவும் அமையும்.

திருக்கால்களில் பாதம் நெருங்கும் முன்பே கணுக்கால் கட்டாய் வீரக்கழல்கள். பாதங்களின் மேல் படர்ந்தனவாய்ச் சிலம்பு, செறி பாட கம், செழுங் கிண்கிணித் திரள். இத்தனை நகைகளும், இதற்கு மேலாய் இதழ்களில் இளநகையும் கொண்ட எம்பெருமான் ஒப்பனைப் பூச்சும் கொள்கிறார். புன் புலால் நாறு காட்டின் பொடிதான் மேனியெங்கும் பூச்சாய்ப் புதுமணம் தந்து பரவி நிற்கிறது. வெந்த இவ்வெண்பொடி யும், சுடுநீறும் பூசிய பின்பே, சிறிது சுடலை சேர் சுண்ணமும், ஆங்காங்கே சந்தனச் சாந்தும் கொள்வார்.

பொடி பூசி நகையணிந்த மாலைகள் புரளும் அந்தத் திருமார்பில் அம்மையின் கொங்கை இணை அமர் பொருது கோலம் கொண்ட தழும்பும் காட்சியாம். அன்பில் விளைந்த அந்த ஆனந்தத் தழும்பின் பின் காஞ்சிப் புராணக் கதையொன்று வளர்ந்து திருச்சத்திமுற்றம் வரை படர்ந்து அங்கே அழகியதோர் தழுவல் சிற்பம் அமைந்திடக் காரணமாயிற்று.[36] லிங்கமேனியை ஆரத் தழுவிய அன்னையின் கண் களில் அளவற்ற அன்பும் இலேசாய் அச்சமும். லிங்கத்தில் அழுந்திப் பக்கங்களில் தளரும் எழிலார்ந்த மார்பகங்களின் இயல்பான படப் பிடிப்பு. இந்தத் தழுவல் குழைவைப் பார்க்கக் கண் கோடி வேண்டும். அப்பர் தவப்பேறு செய்தவர்.

காட்சிக்குக் காட்சி மாறும் ஆடைகள் பார்வைகளைப் பரவசப் படுத்தும். புலித்தோல் வீக்கி, ருத்திராக்க அரையணியை அதன்மேல் பெய்து ஆணழகராய் இறைவன் வருவது ஒரு காட்சி. உமாவை

அச்சுறுத்தி உரித்தெடுத்த யானைத் தோலைப் போர்வையாய்ப் போர்த்து நாகக் கச்சையுடன் நடமாடி வருவார் சில நேரம். கரு மானின் உரி, புள்ளியுழைத் தோல், பட்டாடை, அரவத் துகில், வண்ண உரிவை என்று இன்னபிற ஆடைகளும் உண்டு. இவையில்லாமல் துகில் கிழிக் கோவணக் கீள் மட்டுமே பூண்டு வருவதும் உண்டு. இந்தக் கீள்தானே அமர்நீதி நாயனாரை அடையாளம் காட்டி அமரர் உலகுக்கு அழைத்துச் சென்றது.[37]



தழுவக் குழைந்தவரும் தழுவிக் குழைந்தவரும்

கீளும் இல்லாமல் நிர்வாணியாய் வருபவரை நக்கன் என்கிறார் கள் திருமுறை ஆசிரியர்கள். 'சொக்கமது ஆடியும் பாடியும் பாரிடம் சூழ்தரும் நக்கர்' என்ற சம்பந்தரின் வரிக்கேற்ப இறைவன் நக்கராய் நின்று ஆடும் கோலத்தில் மேலைக்கடம்பூர் அமிர்தகடேசுவரர் திருக் கோயிலில் ஒரு செப்புத் திருமேனி இருக்கிறது. பாலா மரபுப் படிம மான இதில் இறைவன் யோகியாகவும், போகியாகவும் ஒரே நேரத்தில் காட்சி தருகிறார்.[38]

பொன் போன்ற மேனி, தூண்டு சுடர் போலத் திருமேனி, செக்கணைந்த சுடரொளி என்றெல்லாம் பதிகவரிகள் கொண்டாடும் இந்தப் பரஞ்சுடரின் சிவந்த மேனியில் கண்டம் மட்டும் நஞ்சிருளாய். இந்தச் சுந்தர வடிவம் அம்மையப்பராகவும் சங்கரநாராயணராகவும் கூட வருவதுண்டு. ஆனால் சங்கரநாராயணர் கோலத்தில் ஆடல் இல்லை.



நக்கராய் நந்தி தாண்டவர் - பாலா நடராசர் - மேலைக்கடம்பூர்

மூவர் உருவில் சாலவுமாகி சமயங்கள் ஆறின் உருவமுமாகியும் வரும் இறைவன் ஆடல் கொள்ளும்போது தாமாய் மட்டுமே நட்டமிடுவார்.

தம் துணையின் துணையுடனும் தம்மில் பாதியைத் துணைக்குத் தந்தும்கூட ஆடல் செய்வார்.

ஆகார்ய அவிநயத்தின் அத்தனைப் புலங்களையும் முழுமையாய்க் கொண்ட இறைவன் ஆடரங்கிற்குள் நுழைந்து பூர்வரங்கமாய்க் கரணங்கள் காட்டுகிறார். இதைத்தான் தாண்டவ லட்சணமென்று பரதரும் சொக்கம் பயின்றீர் என்று அப்பரும் குறிக்கிறார்கள். இங்கே தான் ஆங்கிகா அவிநயத்தின் முதற் படி மலரத் தொடங்குகிறது. வட்டணைகளிட்டு வரும்போதே ஆடலுக்குத் தயாராகிவிடும் உடற் கட்டு, பூர்வரங்கத்தில் அழகான அசைவுகளிட்டுக் கரணஞ் செய்கை யில் இறுக்கம் நீங்கி எந்த இயக்கத்திற்கும் இசைந்து கொடுக்கிறது. ஆடற் கைகள் கரணங்களின் ஓரங்கம். இந்தக் கைகளின் அசைவு களுக்குப் பொருளில்லை. ஆனால் அழகுண்டு. ஆடலின் அடிப் படையே அழகுணர்ச்சிதானே. அதில் தொடங்கிப் பின் தொடர்பவை தானே கருத்து, பாடம், படிப்பினை எல்லாம்.

இறைவன் தோள்கள் மட்டித்தாட கழலாடு திருவிரலால் கரணம் செய்து மாநடம் தொடங்கியதாய் அப்பர் குறிக்கிறார்.[39] எழிலாரும் தோள்வீசி நடமாடிய இறைவன் மணி திகழும் அம்பலத்தே மன்னிக் கூத்தாடியதாகவும் சொல்கிறார்.[40] குண்டைப் பூதம் கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட இறைவன் திண்தோள்கள் ஆயிரமும் வீசி நின்று திசை சேர நடமாடி அவனி தலம் பெயர நின்ற நிறை வுடையராய்க் காட்சி தருகிறார்.[41]

சுற்றி நின்ற பூதங்களும் பேய்களும் இசை முழக்கில் தமை மறந்து இறைவனைச் சூழ நின்று ஆர்த்து மிக மகிழ்ந்து ஆடத் தொடங்கு கின்றன. ஆடல் பிச்சாடலாகின்றது.[42] பாதம் நோவ இட்டெடுத்துச்[43] சதுர நடம் காட்டுகின்றார்[44] சங்குக் குழையர். குடமுழவச் சதிவழியே கூத்தாடும் இறைவனின்[45] பெருமையைப் 'பூதகணம் ஆட ஆடும் சொக்கர்,'[46] 'எண்டோள் வீசி அருந்திறல் மாநடம் ஆடும் அம்மான்'[47] என்னும் வரிகளில் மகிழ்வோடு பதிவு செய்கிறார் அப்பர் பெருமான். கொட்டும் முழவுகள் கொட்டி நின்று லயங்கள் ஆடிக் களித்தவர்கள் படுதம் பெயர்ந்தாடினர்.[48] இந்தப் படுதக் கூத்தைச் சம்பந்தரும் குறிக்கிறார்.[49]

கால் அதிர் கழல்கள் ஆர்ப்பக் கனல் எரி கையில் வீசி, ஞாலம் குழிய நின்று மேலவர் முகடு தோய, விரிசடை திசைகள் பாய, ஆயிரம் தோளும் மட்டித்தாடி, ஆயிரம் அடியும் வைத்த பெருமான் ஆடிய ஆடலைச் செய்தற்கரிய திருநட்டமாய்க் குறிக்கும் அப்பர், அத்தகு அரிய திருநடம் செய்த கால்களை ஆடிய பொழுதோடு சேர்த்து 'அந்தி

நாடகக் கால்' [50] என்று சிறப்பிக்கிறார். நாடகம் என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் இருந்ததைப் போலவே அப்பரின் காலத்தும் ஆடலைக் குறிக்கும் பொதுச் சொல்லாகப் பயின்று வந்தது இதனால் உணரப்படும்.



புஜங்கத்ராசிதர்

ஆங்கிகத்துள் ஒன்றான கால் நிலைகள் பற்றித் திருமுறை ஆசிரியர்கள் ஆங்காங்கே குறிப்பு காட்டுகிறார்கள். அந்தக் கால் நிலை

களுள் ஒன்றான எடுத்த பாதம் அப்பரால் பலபடப் பாராட்டப்பட்டுள்ளது. 'சிற்றம்பலத்து நட்டம் ஆட எடுத்திட்ட பாதமன்றோ நம்மை ஆட்கொண்டதே'[51] என்று அப்பர் மனமுருகும் நேரம், அதை அண்டம் உற வீசிய காலாகக் காண்பார் காரைக்கால் அம்மையார்.[52] அம்மை பாடியது விஷ்ணு கிராந்தம். அப்பர் பாடியது புஜங்கத்ராசிதமா, ஊர்த்வ ஜானுவா? மண்ணை நீங்கும் பாதம் விண் சார்ந்த கால் நிலைகளுள் ஒன்றாய் ஆங்கிகா அவிநயத்துள் அடங்கிப்போகும். அந்த எடுத்த பாதம் வீசப்பட்டால் புஜங்கத்ராசிதம்; உயர்த்தப்பட்டால் ஊர்த்வ ஜாநு. அப்பரின் காலத்தே புஜங்கத்ராசிதமே இருந்திருக்க



ஊர்த்வ ஜாநுவில் அம்மையும் அப்பனும்

வேண்டும். ஏனென்றால் இறைவனாடிய புயங்கராக மாநடத்தைச் சம்பந்தரின் வரிகள் பதிவு செய்துள்ளன.[53] பாடலில் மட்டுமல்லாது சிற்பமாகவும் கிடைப்பது புஜங்கத்ராசிதம்தான். பல்லவர் காலக் கோயில்கள் எதிலும் இறைவனின் ஊர்த்வ ஜாநு இல்லை. அதே கால கட்டத்தில் எழுந்த பாண்டியர், முத்தரையர் குடைவரைகளிலும் ஊர்த்வ ஜாநுவில் சிவபெருமானைப் பார்க்க முடிவதில்லை. கலை வரலாற்றில் ஊர்த்வ ஜாநுவின் முதற் பதிவு முதலாம் ஆதித்தர் காலத்தில்

தான் நிகழ்கிறது. அதனால் அப்பர் பாடியது ஆனந்தத் தாண்டவ் மாய்ப் பின்னாளில் மலர்ந்த புஜங்கத்ராசிதத்தையே என்று உறுதி கொள்ளலாம். சகளாதிகாரமும் இந்தத் துணிவுக்குத் துணையாகும்.

ஆகார்யமும், ஆங்கிகத்தில் சிலவும் கொண்ட சொக்கம், வாசிக அவிநயம் சேரும்போது ஆங்கிகத்தின் முழுமையுமேற்று நிருத்தமாகும். இதை அப்பரே அடிக்கோடிட்டு எழுதுகிறார்.

'' இரிக்கும் பறையொடு பூதங்கள் பாடக் கழுமலவன்
நிருத்தம் பழம்படி ஆடும்.''[54]

அப்பரின் இந்த வரிகள் ஆடற்கலை வரலாற்றின் வைர வரிகளாம். அவர் காலத்தில் நிருத்தம் சில மாறுதல்களை ஏற்று புதிய வடிவம் கொண்டதாலேயே இறைவன் ஆடிய நிருத்தத்தை அப்பர் பழம்படி யுள் சேர்த்தார். கோலம் பல அணிந்து குழகனார் ஆடிய இந்த நிருத்தத்திற்குத்தான் எத்தனைப் பேர் பாடியுள்ளனர்!

'' பாடும் பறண்டையும் ஆந்தையும் ஆர்ப்ப''[55]

'' . . . . .   . . . . . .   பாரிடம் பலவும் கூடிக்
குடமுடை முழவமார்ப்பக் கூளிகள் பாடநாளும்
நடுநவில் அடிகள் போலும்''[56]

'' பக்கம் பூதங்கள் பாட''[57]

'' பூதம் பாடநின் றாடும் புனிதனார்''[58]

'' முகைவளர் கோதைமாதர் முனிபாடுமாறும்
எரியாடுமாறும் இவர்கைப்
பகைவளர்நாகம்வீசி மதிமயங்குமாறும்''[59]

'' அங்கை ஆரழல் ஏந்திநின் றாடலன்
மங்கை பாட''[60]

'' பாலை யாழொடு செவ்வழி பண்கொள''[61]

'' பேய்பாட நடமாடும் பித்தன்''[62]

'' . . . . .   . . . . .   கூளி பாடக்
குறட்பூதம் கூத்தாட நீயும் ஆடி''[63]

'' புடைசூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச் சிற்றம்பலத்தே நடமாடுவார்''[64]

'' கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறா''[65]

பறண்டை, ஆந்தை, பூதம், பேய், கூளி, கின்னரங்கள் பாட ஆடியவர் உமை பாடவும் ஆடினார். அம்மை முனிபாட அத்தன் எரியேந்தி ஆடச் செவ்வழி, கொல்லி, காமரம், பஞ்சமம் என்று பண்களின் வரிசைகளை யும் தருகிறார் அப்பர். பிறர் பாட ஆடிய பெம்மான் தாமே பாடியும் அதற்கேற்ப இசைக் கருவிகளைக் கூடத் தாமே இயக்கியும் ஆடுகின்ற அழகையும் அப்பர் வரிகளில் பார்க்க முடிகிறது.

'' . . . . . . . . . . உகப்பார் காணப்
பண்ணாரப் பல்லியம் பாடி னான்காண்[66]

'' கொடுகொட்டி தாளம் உடையார் போலும்''[67]

'' குழையாடக் கொடுகொட்டி கொட்டாவந்து''[68]

'' கொடுகொட்டி கொண்டதோர் கையான்தன்னை''[69]

'' கல்லலகு பாணி பயின்றார் போலும்''[70]

'' பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னை''[71]

'' பண்மேலே பாவித் திருந்தாய் போற்றி
பண்ணொடியாழ் வீணை பயின்றாய் போற்றி''[72]

'' சாமத்தின் இசைவீணை தடவிக் கொண்டார்[73]

இறைவனே பண்ணாகவும் பண்ணின் திறமாகவும் இருப்பதாகக் கூறும் அப்பரடிகள், அவர் காலத்தே இருந்த இசைநூலின் பெயரொன்றை யும் தருவதோடு அவ்இசையிலக்கண நூல் இறைவன் இயற்றியது என் பது போல் குறிப்பும் காட்டுகிறார்.

'' பரமாணு வாய்ப்பழுத்த பண்கள் ஆகி''[74]

'' கந்திருவம் பாட்டிசையிற் காட்டுகின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலா னான்காண்''[75]

எண்ணிறந்த பண்கள் இருந்த போதும் இறைவன் விருப்பமாய்ப் பாடியது காமரம். அவர் திரிதரும் நேரம்கூடக் காமரமே பாடியதாய்ப்[76] பேசும் அப்பர் இறைவன் வண்ணங்களும் பாடி வந்து நின்றதாகக் குறிக்கிறார்.[77]

பாடியும், பாடலுக்கேற்ப கருவிகளை இயக்கியும், அந்த இசை யொலிக்கு ஆடியும் மகிழும் இறைவனை ஞானக் கூத்தனாய்க் காண் கிறார் அப்பர். பெருமான் ஆடும் கூத்து அரங்கிடை நூலறிவாளரால்

அறியப்படாத ஒரு கூத்தென்கிறார்.[78] இந்தக் கூத்தை மாநடம், பெருநடம் என்றெல்லாம் போற்றுபவர் இது காளி காண ஆடிய பெருங்கூத்தென்று சில இடங்களில் பேசி மகிழ்கிறார்.[79]

ஆகார்ய, ஆங்கிக, வாசிக அவிநயங்கள் கலந்து ஆடும் இறை யாடலைக் காளி மட்டுமா கண்டவர்? மானேர் நோக்கி வாள்முகத் தாள் காம்பாடு தோள் உமையன்னை அமர்ந்து கண்டார். அலையார் புனல் கங்கை நங்கையும் கண்டாள். அமரர் கணம் உட்படப் பதினென் கணமும் கண்டன. பாரோரும் விண்ணோரும் பார்த்தனர். அப்பரும் பார்த்தார். 'நிருத்தம் நான் காண வேண்டி நிருத்தனார் நிருத்தம் செய்ய' என்ற வரிகள் இதை உறுதிப்படுத்தும்.[80]

அவிநயம் நான்கனுள் அற்புதமானது சாத்விகம். இதைச் சத்துவம் என்பார் அடியார்க்கு நல்லார்.[81] ஆடும் ஆடலில் ஆடற் கலைஞர் தோய்ந்து போகக், காண்பவர் யாவரும் அதுவேயாகி மாறிப் போவது சாத்விகம். ஆடுபவர் இறைவன். எது நோக்கி ஆடுகிறாரோ அந்த நோக்கத்தின் தோய்வில்லாமலா ஆடல் அமையும்? அதனால் தானே அப்பரும் சிற்றம்பலத்துக் கூத்தனில் கூத்து வல்லார் உளரோ என்று அறைகூவல் விடுக்கிறார். ஆடியவர் ஆடலில் இருந்த சாத்வி கம் அதைக் கண்டவர் மாட்டு எழுந்ததா?

''குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே''[82]

என்ற நிலையில் அல்லவா பார்த்தவர் மயக்கம் பாடலாய் மலர்கிறது. இறைவனின் பாடலையும் அவர் ஆடலையும் கேட்டும் பார்த்தும் நின்ற வர்கள் தம்மை மறந்து தாமும் பாடியாடியதைக் 'கின்னரர்கள் பக்தர் கள் பாடியாட'[83] என்னும் பதிக வரியில் பதிவு செய்கிறார் அப்பர் பெருமான். உமையின் ஊடலை ஒழிக்க வேண்டிச் சாமவேதம் பாடிப் பின் பாடிய பாணியால் ஆடிய[84] இந்த அழகரின் ஆடலில் தோய்ந் துருகிப் போன தோகையர் சிலர், அவர் உமையிடம் காட்டிய காதலைத் தம்மிடம் கொண்டாற் போலுணர்ந்து கசிந்துருகியதை 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்' என்று சொல்லத் தொடங்கிப் பல்வேறு அகச்சுவைப் பாடல்களால் அப்பெண்களின் அவத்தைகளை விளக்கிப் 'பேர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்' என்று முடித்து வைக்கும் அப்பரின் பதிகங்கள் காட்டும் சாத்விக அவிநய எதிரொலிகளை வேறெந்தத் திருமுறையிலும் காண முடியாது.

காணும்போது மட்டுமல்லாது கண்ட காட்சிகளை நினைக்கும் போதே மெய் சிலிர்க்க வைத்து, நீர் மல்க வைத்து, நெஞ்சுருக வைக்கும் ஆடலாய் இறையாடல் அமைந்து விடுகிறது. அதனால்தானே,

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உருவெழுதி
உயிரா வணம்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப்படுவாரோ டொட்டி வாழ்தி"[85]

"நெஞ்சம் உமக் கேஇட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்"[86]

என்றெல்லாம் அப்பரடிகளால் பாட முடிந்தது. இறையாடலில், ஆட எடுத்த அந்தத் திருப்பாதத்தில் எந்த அளவிற்கு அவர் தம்மை இழந்திருந்தால் திருவையாற்றுக்கு வரும்போது,

'வட்டமிட்டு ஆடாவருவேன்'

'முரித்த வியலங்கள் இட்டு முகமலர்ந்து ஆடா வருவேன்'[87]

'பாடியும் ஆடா வருவேன்'

'கண்டேன் அவர்திருப் பாதம்கண்டறி யாதனகண்டேன்.'[88]

என்றெல்லாம் பாடி நெக்குருகியிருப்பார்! இது சத்துவமில்லாமல் வேறென்ன?

நாட்டிய சாத்திரம் காட்டும் அவிநயத்தின் நான்கு முகங்களைப் போல அவிநயக் களங்களாய் நான்கைச் சிலம்பின் உரை சுட்டுகிறது. இவற்றுள் நிற்றல், இயங்கல் என்னும் இரு களத்தும் இறைவன் ஆடி அவிநயித்ததை நின்றாடியதாகவும் சுழன்றாடியதாகவும் அப்பர் குறிப்பார். இருத்தல், கிடத்தல் நிலைகளில் இறைவனுக்கு ஆடலோ அவிநயமோ ஆறு திருமுறைகளில் எந்தவொரு பதிகத்திலும் பதிவாகவில்லை. அம்மையும் இவ்விரு நிலை குறித்துப் பேசவில்லை. ஆனால் இருத்தல் நிலையில் இறைவன் அவிநயத்தின் சில கூறுகள் காட்டிச் சொக்கம் ஆடியதைப் பல்லவச் சிற்பிகள் சிற்பங்களாய்க் காட்டியுள்ளனர். அத்யந்தகாமர் கற்றளிகள் அனைத்திலும் இந்த இருத்தல் களம் காட்டும் குஞ்சிதக் கரணச் சிற்பங்கள் தவறாது இடம்பெற்றுள்ளன. கிடத்தல் நிலையில் இறையாடல் காட்டும் சிற்பம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லையெனினும் அக்களத்தும் இறைவன் சொக்கம் ஆடியதாகத் தண்டு வழி அறிகிறோம்,[89]

அடிக்குறிப்புகள்

1. இரா. கலைக்கோவன், அப்பர் பாடிய ஆறை வடதளி, கலை வளர்த்த திருக்கோயில்கள், கழக வெளியீடு, சென்னை-600 018, 1984, பக். 9-26.
2. நான்காம் திருமுறை, தருமபுர ஆதீனப் பதிப்பு, 1957, பக். 687.
3. வீ. ப. கா. சுந்தரம், பஞ்சமரபு, கழக வெளியீடு, 1991, பக். 40.
4. மேற்படி., பக். 385 - 403.
5. கூத்த நூல், ச. து. சு. யோகியார் உரை, ச. து. சு. யோகியார் வெளியீடு, 1968, பக். 149.
6. மேற்படி., பக். 149.
7. மேற்படி., பக். 150.
8. மேற்படி., பக். 157.
9. மேற்படி., பக். 317.
10. குறுந்தொகை, உ. வே. சா. பதிப்பு, 1937, பாடல் எண். 105.
11. சிலப்பதிகாரம், தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்பு, தஞ்சாவூர், 1985, பக். 361, வரி 152.
12. மேற்படி., பக். 361, 378-379.
13. மேற்படி., பக். 80.
14. மேற்படி., பக். 80.
15. மேற்படி., பக். 191.
16. மேற்படி., பக். 57, 60, 79.
17. மேற்படி., பக். 83.
18. மணிமேகலை, உ. வே. சா. வெளியீடு, 1931, பக். 209, வரி 79.
19. Natya sastra, English Translation with critical notes by Adya Rangacharya, IBH Prakashana, Bangalore 560·009, 1986, P. 53.
20. Ibid., P. 53.
21. பத்மா சுப்ரமணியம், பரதக் கலை (கோட்பாடு), வானதி பதிப்பகம், சென்னை-600 017, 1985, பக். 118.
22. கார்த்திகா கணேசர், காலந்தோறும் நாட்டியக் கலை, கார்த்திகா ஆடற் கலையக வெளியீடு, 1979, பக். 66,
23. மேற்படி., பக். 66.
24. பத்மா சுப்ரமணியம், பரதக்கலை (கோட்பாடு), பக். 136.
25. பதினோராம் திருமுறை, சைவ சித்தாந்தப் பெருமன்றப் பதிப்பு, சென்னை-600 004, 1990, பக். 5.
26. நான்காம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1957, பக். 636.
27. மேற்படி., பக். 194.
28. ஆறாம் திருமுறை, தருமபுர ஆதீன வெளியீடு, 1963, பக். 715.

29. நான்காம் திருமுறை, பக். 26.
30. ஆறாம் திருமுறை, பக். 714.
31. மேற்படி., பக். 718.
32. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன் வெளியீடு, இரண்டாம் பாகம், பக். 466.
33. பஞ்சமரபு, பக். 381.
34. சிலப்பதிகாரம், பக். 57, வரி. 8.
35. மேற்படி., பக். 177-180.
36. இரா. கலைக்கோவன், தழுவக் குழைந்த இறைவனும், தவ மிருந்த தேவியும், கலை வளர்த்த திருக்கோயில்கள், பக். 27-34.
37. இரா. கலைக்கோவன், பூவார் அடிச்சுவடு-கட்டுரை, கலைமகள், திங்கள் இதழ், சனவரி 1985, சென்னை-600 004.
38. இரா. கலைக்கோவன், பாலா நடராசர், அமுதசுரபி, தீபாவளி மலர், 1984, சென்னை-600 001, பக். 291-294.
39. ஆறாம் திருமுறை, பக். 31.
40. மேற்படி., பக். 247.
41. மேற்படி., பக். 309, 325.
42. மேற்படி., பக். 362, 396.
43. மேற்படி., பக். 422.
44. மேற்படி., பக். 552.
45. மேற்படி., பக். 606. நந்தீசரின் குடமுழவச் சதிகட்கு இறைவன் திருநடம் செய்யும் அரிய சிற்பக் காட்சியைத் திருச்சென்னம் பூண்டி திருச்சடைமுடி மகாதேவர் திருக்கோயில் முக மண்டபத்தின் வட சுவர் வேதி பாதத்தில் பார்க்கலாம். இவ்வாடல் சிற்பம் டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தால் அடையாளம் காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.
46. ஆறாம் திருமுறை, பக். 634.
47. மேற்படி., பக். 612.
48. ஐந்தாம் திருமுறை, தருமபுர ஆதீனப் பதிப்பு, 1961, பக். 105.
49. இரா. கலைக்கோவன், முதல் திருமுறையில் ஆடற் குறிப்புகள், வரலாறு-1, டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மைய வெளியீடு, திருச்சிராப்பள்ளி-620 017, பக். 90.
50. நான்காம் திருமுறை, பக். 686.
51. மேற்படி., பக். 564.
52. பதினோராம் திருமுறை, பக். 33.
53. முதல் திருமுறை, தருமபுர ஆதீனப் பதிப்பு, 1953, பக். 250.
54. நான்காம் திருமுறை, பக். 568.
55. மேற்படி., பக். 636.
56. மேற்படி., பக். 451.

57. ஐந்தாம் திருமுறை, பக். 184.
58. மேற்படி., பக். 94.
59. நான்காம் திருமுறை, பக். 73.
60. ஐந்தாம் திருமுறை, பக். 124.
61. மேற்படி., பக். 82.
62. ஆறாம் திருமுறை, பக். 537.
63. மேற்படி., பக். 453.
64. மேற்படி., பக். 369.
65. நான்காம் திருமுறை, பக். 120.
66. ஆறாம் திருமுறை, பக்கம் 65.
67. மேற்படி., பக்கம் 74.
68. மேற்படி., பக்கம் 72.
69. மேற்படி., பக். 218.
70. மேற்படி., பக். 160.
71. மேற்படி., பக். 314.
72. மேற்படி., பக். 415.
73. மேற்படி., பக். 717.
74. மேற்படி., பக். 198.
75. மேற்படி., பக். 374.
76. மேற்படி., பக். 211.
77. மேற்படி., பக். 67.
78. நான்காம் திருமுறை, பக். 24.
79. மேற்படி., பக். 465.
80. மேற்படி., பக். 193, 196.
81. சிலப்பதிகாரம், பக். 84.
82. நான்காம் திருமுறை, பக். 557.
83. மேற்படி., பக். 258.
84. மேற்படி., பக். 222.
85. ஆறாம் திருமுறை, பக். 186.
86. நான்காம் திருமுறை, பக். 9.
87. மேற்படி., பக். 30.
88. மேற்படி., பக். 33.
89. இரா. கலைக்கோவன், புதிய பார்வையில் சார்ங்கபாணி கோயிற் கரணங்கள், மகாமகம் மலர் 1992.

# 4. பொதுப் பகுதி

## 1. பெருமைச் சுவடுகள்

### பம்மல் விசயரங்கனார் 1830 – 1895

*மா. ரா. அரசு*

பத்தொன்பதாம் நூற்றாண்டு, பல வகையிலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கால கட்டமாகும். அடிமை இந்தியாவில் விடுதலை உணர்வு ஆங்காங்கே சிறு சிறு முயற்சிகளாகக் கிளர்ந்து கொண்டிருந்த நிலை ஒரு புறம்; பல்வேறு புதிய இலக்கிய முயற்சிகள் சிறிய அளவிலேனும் மலரத் தொடங்கிய நிலை ஒரு புறம்; ஆங்கிலக் கல்வி என்னும் புதிய முயற்சியின் தொடக்கம் ஒரு புறம் என்று இந்தியா, குறிப்பாகத் தமிழகம் புதிய சூழலில், புதிய தமிழகமாக உருவாகத் தொடங்கிய காலம்தான் பத்தொன்பதாம் நூற்றாண்டு.

அந்தக் கால கட்டத்தில் தோன்றி, வளர்ந்து, வாழ்ந்து, மறைந்த தமிழறிஞர்கள், தமிழ்த் தொண்டர்கள் அறியப்பட வேண்டியவர்கள். அவர்களில் பலர் சாதனைகள் நிகழ்த்தியவர்கள்; பல புதிய முயற்சி களைத், துறைகளைத் தொடங்கி வைத்தவர்கள். தமிழை முறையாகப், பல்கலைக் கழகப் படிப்பாகப் பயிலாதவர்கள் அவர்களில் பலர். ஆனால் ஆர்வம் காரணமாக உண்மையான ஈடுபாடு காரணமாகத் தமிழ் படித்துத் தமிழ் வளர்த்துச் சிறந்தவர்கள் அவர்கள். அவர்களில் பல்வேறு துறை சார்ந்தவர்களும் இருந்தனர். நீதிபதிகளும் வழக் கறிஞர்களும் கல்வித்துறை சார்ந்தவர்களும் மருத்துவர்களும் இன்னும் பல்துறை சார்ந்தவர்களுமாக விளங்கிய அவர்தம் உழைப்பு, அவர்கள் ஆற்றிய தொண்டு தமிழுலகம் மறக்கக்கூடாத ஒன்று; ஆனால் மறந்துவிட்ட ஒன்று. அப்படி மறக்கப்பட்டவர்களில் ஒருவர் தான் பம்மல் விசயரங்கனார்.

சாராயக்கடை ஒன்றில் பணியாற்றிய ஏழைத் தொழிலாளியின் மகனாகப் பிறந்த விசயரங்கனார் பின்னாளில் வீடும் கோச்சு வண்டியும் காருமாக, செல்வ வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டார்; கல்வி யறிவு குறைந்த பாமரனின் மகனான அவர், கல்வித் துறையில் உயர்ந்த பதவியை வகித்தார்; பிறர் தயவில் தம்முடைய கல்வியைத் தொடரவேண்டிய நிலையில் இருந்த அவர், மிகப் பலருக்கு வேண்டிய உதவிகள் செய்து அவர்கள் வாழ்க்கையில் ஒளி ஏற்றினார்.

வியாபாரக் கூச்சலும் வாகனங்களின் இரைச்சலும் தொழிலாளி களின் நடமாட்டமுமே நிறைந்த சென்னை நகரின் மையப் பகுதியாகிய

ஜார்ஜ் டவுனில் ஒதுங்கிக் கிடந்த தெருக்களில் ஒன்றான ஆச்சாரப்பன் தெருவில் வளர்ந்த அவர், இன்று அந்தத் தெருவிற்கே ஒரு வரலாற்றுச் சிறப்பு வருமாறு வாழ்ந்து மறைந்தவர். ஆங்கிலம் படித்துவிட்டால் தமிழை அவமதித்தே தீரவேண்டும் என்னும் உணர்வில் ஊறிப்போன வர்களின் நடுவே, ஆங்கிலத்தில் நிறை புலமை பெற்றிருந்தும் தமிழை மதித்துப் போற்றி, அதன் வளர்ச்சியிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட விந்தை மனிதர் அவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சென்னை நகரின் செல்வமும் செல்வாக்கும் நிறைந்த பெரிய மனிதர்களுள் குறிப்பிடத் தக்க ஒருவராகத் திகழ்ந்த விசயரங்கனாரின் வாழ்க்கை முழுமை யானது; படித்து அறியவேண்டியது; அறிந்து பயன்பெற வேண்டியது.

### விசயரங்கனார் காலத்துக் கல்விநிலை

வாழ்க்கையில் வறுமை இருந்தபோதும், மனத்தில் வறுமை இன்மையால் விசயரங்கனாரின் தந்தையார் ஏகாம்பரனார் தம் பிள்ளை கல்வி கற்க வேண்டும் என்று விரும்பினார். அந்நாளைய வழக்கப்படி திண்ணைப்பள்ளி ஒன்றில் விசயரங்கனாரின் கல்வி தொடங்கியது. விசயரங்கனாரின் இளமைக்காலம் இந்தியக் கல்வி வரலாற்றில் இன்றி யமையாத ஒரு கால கட்டம். இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வி அளிக் கப்பட வேண்டும் என்ற எண்ணம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆங்கில ஆட்சியாளரின் மனத்தில் தோன்றி, 1813ஆம் ஆண்டுச் சாசனச் சட்டமாக (Charter Act of 1813) உருவெடுத்தது. அச்சட்டமே இந்தியாவில் ஆங்கிலக் கல்விக்கு வித்திட்டது.[1]

1835ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஏழாம் நாளன்று அன்றைய இந்தியாவின் தலைமை ஆளுநராக இருந்த பெண்டிங்கு தாம் பிறப்பித்த ஆணையொன்றில், ''இந்தியக் குடிகளிடையே ஐரோப்பிய இலக்கியத் தையும் அறிவியலையும் பரப்புவதே ஆங்கிலேய அரசாங்கத்தின் தலையாய நோக்கமாக இருக்கவேண்டும். கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் நிதி முழுவதும் ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.[2]

அதன் எதிரொலியைச் சென்னையிலும் கேட்க முடிந்தது. சென்னையைப் பொறுத்த வரையில் ஆங்கிலக் கல்விக்கு வித்திட்டவர் அன்றைய சென்னை ஆளுநராக விளங்கிய எல்பின்ஸ்டனே ஆவார். அவர் சென்னையில் ஆங்கிலக் கல்வியைக் கற்பிக்கத் திட்டம் ஒன்றை உருவாக்கினார். அந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்று சென்னையில், கல்லூரிக் கல்வி இயக்ககம் அல்லது பல்கலைக் கழகம் ஒன்றை நிறுவுவது ஆகும்.[3] உயர் கல்விக்குரிய கல்லூரி

ஒன்றும், ஆங்கில இலக்கியத்தையும் மாநில மொழிகளையும், தத்துவம், அறிவியல் ஆகியவற்றின் அடிப்படைகளையும் பயிற்றுவிக்க ஓர் உயர் நிலைப் பள்ளியும் ஆகிய இரண்டு நிலைகளில் அந்தப் பல்கலைக்கழகம் அமையவேண்டும் என்று வரையறுக்கப்பட்டது.[4] எல்பின்ஸ்டன் திட்டத்தின் பயனாக 1840 சனவரியில் ஜார்ஜ் நார்ட்டன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் முயற்சியால் 1841 இல் தொடங்கப்பட்டதுதான் ‘சென்னைப் பல்கலைக்கழகத்தின் உயர்நிலைப் பள்ளி’ (The High School of the Madras University). அது மாகாண உயர்நிலைப் பள்ளி (Presidency High School) என்றும் வழங்கப்பட்டது. கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்திலிருந்து வரவழைக்கப்பட்ட E. B. பவல் (Powell) என்பவர் அதன் முதல் தலைமையாசிரியரானார்.[5]

மாகாண உயர்நிலைப் பள்ளிக்குப் பிறகு சென்னையில் தொடங்கப்பட்ட குறிப்பிடத்தக்க பள்ளி பச்சையப்பன் பள்ளியாகும். அது, 1842இல் தொடக்கப் பள்ளியாகத் தொடங்கப்பட்டு, 1858இல் உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டது.[6]

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தம்முடைய கல்வியைத் தொடங்கிய விசயரங்கனார் புதிதாகத் தொடங்கப்பட்டிருந்த பச்சையப்பன் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். தம் பிள்ளை அப்போதுதான் சென்னையில் அறிமுகமாகிக் கொண்டிருந்த ஆங்கிலக் கல்வியைப் பயிலவேண்டும்; பயின்று சிறந்த வாழ்க்கையைப் பெறவேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாக ஏகாம்பரனார் விசயரங்கனாரைப் பச்சையப்பன் பள்ளியில் சேர்த்தார்.[7]

அந்நாளில் மாகாண உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராக இருந்த E. B. பவல் ஆண்டுக்கு ஒருமுறை பச்சையப்பன் பள்ளிக்குச் சென்று அங்குப் பயிலும் மாணவர்களின் அறிவைச் சோதித்து, அவர்களில் திறமையானவர்களைத் தேர்ந்தெடுத்துத் தம்முடைய பள்ளிக்கு அழைத்துச் செல்வதை ஒரு வழக்கமாக வைத்திருந்தார். அந்த வழக்கத்தின்படி அவரால் தேர்வு செய்யப்பட்டு மாகாண உயர்நிலைப் பள்ளியின் மாணவராகும் வாய்ப்பைத் தம் அறிவாற்றலால் விசயரங்கனார் பெற்றார்.[8] அவருடைய கல்வி வாழ்க்கை மாகாண உயர்நிலைப் பள்ளியில் வளர்ந்தது.

### மாகாண உயர்நிலைப் பள்ளியில் விசயரங்கனார்

கல்லூரிகள் தொடங்கப்படாத அந்தக் காலத்தில் பள்ளிப் படிப்பே குறிப்பாக ஆங்கிலப் பள்ளிப் படிப்பே பெரிய தகுதியாக மதிக்கப்பட்டது. மாகாண உயர்நிலைப் பள்ளியில் பயில்வது என்பது

பெருமைக்குரிய ஒன்றாகக் கருதப்பட்ட காலம் அது. அப்பள்ளியில், ஆங்கில இலக்கணமும் தமிழ் அல்லது தெலுங்கு எழுதவும் படிக்கவும் மற்றும் அடிப்படை நூல்களும் பயிற்றுவிக்கப்பட்டன. மாணவர்கள் அவர்தம் தகுதிக்கேற்ப நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு வகுப்பிற்கும் தாய்மொழியைத் தவிர, பிற பாடங்களை நடத்துவதற்கு வகுப்பாசிரியர் ஒருவர் இருந்தார். டிசம்பர் அல்லது மார்ச்சில் ஆண்டுத் தேர்வு நடக்கும். அது எழுதும் தேர்வு, வாய் மொழித் தேர்வு என்ற இரு நிலைகளில் அமைந்திருந்தது. வாய் மொழித் தேர்வுக்கு உரிய தேர்வாளர் பள்ளிக்கு வெளியிலிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட ஒருவராக இருப்பார். தேர்வு வெற்றி மூன்று நிலை களில் முடிவு செய்யப்பட்டு அந்தந்த நிலைகளுக்கு உரிய தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. முதல் இரண்டு வகுப்புகளில் தேறிய மாணவர்களுக்குத் தகுதிச் சான்றிதழுடன் பொன் மோதிரம் ஒன்றும் பரிசாகத் தரப்பட்டது.[9] விசயரங்கனார் அத்தேர்வில் 1851ஆம் ஆண்டு இரண்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். தகுதிச் சான்றிதழுடன் மோதிரம் ஒன்றும் பரிசாகப் பெற்றார். அத்துடன் இராபர்ட்சன் என்பவர் ஆங்கிலத்தில் எழுதியிருந்த அமெரிக்க வரலாறு என்னும் நூலின் இரண்டாம் பகுதியைத் தமிழில் மொழி பெயர்த்ததற்காக சிறப்புப் பரிசொன்றையும் அதே ஆண்டில் பெற்றார்.

இதற்கு முன்பாக 1848ஆம் ஆண்டு நடந்த தேர்வுகளில் முதல் மாணவராக வந்தமைக்காக அதற்குரிய பரிசையும் பெற்றார்.[10] இறுதித் தேர்வில் இரண்டாம் வகுப்பில் தேறியமைக்காக வழங்கப்பட்ட மோதிரத்தை ஏறக்குறைய தம் அறுபதாம் வயது வரையில் அணிந் திருந்தார் என்று அவருடைய மகனான பம்மல் சம்பந்த முதலியார் குறிப்பிட்டுள்ளார்.[11] விசயரங்கனார் இறுதித் தேர்வில் இரண்டாம் வகுப்பில் வெற்றி பெற்ற விவரம் சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டு விழாச் சிறப்பு வெளியீட்டில் இடம் பெற்றுள்ளது.[12] 1851இல் அவரால் மொழி பெயர்க்கப்பட்ட அமெரிக்க வரலாறு பின்னர் நூலாக வெளிவந்தது.[13]

## ஆசிரியப் பணியும் பதவி உயர்வும்

பள்ளி நாட்களில் அவர் பெற்றிருந்த தமிழ்ப் பயிற்சியும் தேர்ச்சியும் பள்ளிக் கல்வியை முடித்தவுடன் அவர் பயின்ற பள்ளியிலேயே தமிழாசிரியர் பணி கிடைக்க உதவின.[14] தம்முடைய இருபத்தோராம் வயதில் ஆசிரியரான விசயரங்கனாரின் பணி வாழ்க்கை படிப்படியாக உயர்ந்தது. விரைவிலேயே பள்ளி உதவி ஆய்வாளர் பதவி கிடைத்த தால் தாம் பார்த்து வந்த ஆசிரியப் பணியை விடுத்து, திண்டுக்கல்லில் அப்பணியில் சேர்ந்தார்.[15]

## மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் விசயரங்கனாரும்

இங்குக் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்று உண்டு. விசயரங்கனார் மாகாணப் பள்ளியில் தாம் பார்த்து வந்த தமிழாசிரியர் பணியை விடுத்துத் திண்டுக்கல் சென்றபோது, தம் பணிக்கு மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையைப் பரிந்துரைத்து அவ்வேலை அவருக்குக் கிடைக்குமாறு செய்தார் என்று பம்மல் சம்பந்த முதலியார் 'யான் கண்ட புலவர்கள்' என்னும் நூலில் எழுதியுள்ளார். மேலும் அவர், ''இந்த விஷயம் மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள் எனக்குத் தெரிவித்ததாகும்'' என்றும் குறித்துள்ளார்.[16] இது ஆய்வுக்குரிய ஒன்றாகும். திரிசிரபுரத்தில் (திருச்சிராப்பள்ளியில்) வாழ்ந்து கொண்டிருந்த மகாவித்துவானை விசயரங்கனார் சென்னைக்கு வரவழைத்துத் தம் பணியில் அவரை அமர்த்தினார் என்பதை உறுதிப் படுத்தும் வகையிலான சான்று எதுவும் சம்பந்த முதலியாரால் கொடுக்கப்படவில்லை. வெறும் செவிக் கூற்றை மட்டுமே சான்றாக்கியுள்ளார். இது சரியான தகவலாகக் கொள்ளுமாறு இல்லை.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வாழ்க்கையை அறிந்து கொள்வதற்கு முதன்மைச் சான்றான நூலாக ஆய்வுலகம் ஏற்றுக் கொண்டிருப்பது, டாக்டர் உ. வே. சாமிநாதையரின் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் என்னும் வாழ்க்கை வரலாற்று நூலேயாகும். அந்த நூலில் எந்த இடத்திலும் சம்பந்த முதலியார் கூறியுள்ள செய்தி காணப்படவில்லை. மகாவித்துவான் இரண்டே முறைதான் சென்னைக்கு வந்திருக்கின்றார். அந்த இரு பயணங்களும் சென்னை வாழ் அறிஞர்களையும் புலவர்களையும் கண்டு மகிழவும் அவர்களில் சிலரிடம் பாடம் கேட்கவுமே மேற்கொள்ளப்பட்டன. அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலுமே மகாவித்துவான் விசயரங்கனாரைச் சந்தித்தமைக்கான குறிப்பு எதுவும் அந்நூலில் இல்லை.[17] மாறாக, மகாவித்துவானை விசயரங்கனார் மதுரையில் சந்தித்த நிகழ்ச்சி ஒன்று விளக்கப்பட்டுள்ளது. அந்தச் சந்திப்பும் அது தொடர்பான நிகழ்வுகளும் பின்னால் தக்க இடத்தில் விவரிக்கப்படும். அதனால் சம்பந்த முதலியாரின் மேற்கண்ட கூற்றுப் பொறுத்தமற்றது என்பது விளக்கமுறும். அத்துடன் இங்குச் சுட்டத்தக்க மற்றொரு குறிப்பும் உண்டு. ஒரு சமயம் திருவனந்தபுரம் திவானாக இருந்த மாதவராயர் அந்நகரிலுள்ள மகாராசா கல்லூரிக்கு ஒரு தமிழ்ப் பண்டிதர் வேண்டும் என்றும் அவருக்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்படும் என்றும் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றி வந்த கோபால்ராயருக்குக் கடிதம் எழுதியிருந்தார். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையை நன்கு அறிந்திருந்த கோபால்ராயர் அந்தப் பணியை ஏற்றுக் கொள்ளுமாறு அவரை வேண்டியபோது

அதை அவர் மறுத்து விட்டார். மாதம் நூறு ரூபாய் சம்பளமும் சமஸ்தான வசதிகளும் கிடைக்கும் என்று தெரிந்தும், ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்வதையும் காவிரிக் குளியலையும் சிவ தரிசனத்தையுமே பெரிதாகக் கருதித் திருச்சிராப்பள்ளியை விட்டுச் செல்ல மறுத்து விட்டார் மகாவித்துவான்.[18] இச்செய்தி மகாவித்துவானுடைய மன நிலையைப் புரிய வைக்க வல்லது. அத்துடன் இத்தகைய மனநிலை கொண்டவர் விசயரங்கனாரின் பரிந்துரையின் பேரில் சென்னையில் தமிழாசிரியர் வேலையை ஏற்றுக் கொண்டார் என்னும் சம்பந்த முதலியாரின் கூற்றுப் பொருளற்றது என்பதையும் தெரிவிக்கும்.

### விசயரங்கனாரின் பதிப்புப் பணிகள்

திண்டுக்கல்லில் பணியாற்றிக் கொண்டிருந்த விசயரங்கனார் மதுரைக்கு மாற்றலானார். மதுரையில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைச் சந்திக்கும் வாய்ப்பு அமைந்தது. 1862ஆம் ஆண்டு அந்தச் சந்திப்பு நிகழ்ந்தது. அவ்வமயம் விசயரங்கனாரின் வேண்டுகோளுக்கு இணங்கி மகாவித்து வான் இரண்டு நூல்களை இயற்றி மதுரை திருஞானசம்பந்தமூர்த்தியா தீன மடத்தில் அரங்கேற்றினார். திருஞானசம்பந்தமூர்த்தி பதிற்றுப் பத்தந்தாதி, திருஞானசம்பந்தர் ஆனந்தக் களிப்பு என்னும் அவ்விரு நூல்களும் விசயரங்கனாரின் பொருளுதவியால் பதிப்பிக்கப்பட்டன.[19] இந்தச் செய்தியைத்தான் டாக்டர் உ. வே. சாமிநாதையர் சம்பந்த முதலியாரிடம் கூறியிருக்கவேண்டும் என்றும் கால இடைவெளியில் முன் கண்டவாறு அதை மாற்றிச் சம்பந்த முதலியார் எழுதியிருக்கக்கூடும் என்றும் கருத இடமுண்டு. விசயரங்கனாரின் பதிப்பு வாழ்க்கை மகாவித்துவானின் நூல்களைப் பதிப்பித்ததிலிருந்தே தொடங்கியது என்று கருதலாம்.

திண்டுக்கல்லிலும் மதுரையிலும் பணியாற்றிய பிறகு விசயரங்கனார் மீண்டும் சென்னைக்கே வந்து சேர்ந்தார். அதுமுதல் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரையிலும் அதன் பின்னரும் சென்னையே அவர் இருப்பிடமாகியது. உதவி ஆய்வாளராக இருந்தவர், துணை ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்றுத் தம்முடைய அறுபதாம் வயது வரையில் (1890) அப்பொறுப்பை வகித்துப் பின் ஓய்வு பெற்றார்.

சென்னை வாழ்க்கையில் அவர் தமிழ்ப் பணிகளிலும் பொதுப் பணிகளிலும் தம்மைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டார். சென்னைக்கு வந்தபிறகு தமிழ்ப்பண்டிதர்கள் சிலருடன் சேர்ந்து உபயுக்த கிரந்த பிரகரண சபை என்னும் ஒரு சபையை ஏற்படுத்தினார். அத்துடன், School Book And Vernacular Literature Society என்னும் சங்கத்தை

அறிஞர் பலருடன் சேர்ந்து நிறுவினார்.[20] இச்சங்கங்கள் பற்றிய முழு விவரம் கிடைக்கவில்லை. இவை தொடங்கப்பட்ட ஆண்டு, எத்தனை ஆண்டுகள் நடைபெற்றன, இவற்றின் செயற்பாடுகள் எப்படி இருந்தன என்பன போன்ற வினாக்கள், வினாக்களாகவே நிற்கின்றன. விசயரங்கனார் இச்சங்கங்களைத் தொடங்கி நடத்தி வந்தபோது சென்னையில் கல்வி சார்ந்த சில சங்கங்கள் செயல்பட்டு வந்தன. பாட நூற்குழு, சென்னைப் பாடப் புத்தகச் சங்கம் என்பவை அவற்றில் குறிப் பிடத்தக்கவை.[21] விசயரங்கனார் நடத்தியதாகக் கூறப்படும் மேற் குறித்த சங்கங்களும் இவையும் ஒன்றா அன்றி வேறு வேறானவையா என்பது அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

தம்மால் தொடங்கப்பட்ட சங்கங்களின் மூலமாக விசயரங்கனார் பல பதிப்பு முயற்சிகளில் ஈடுபட்டார். அவற்றுள் சிறப்பித்துச் சொல் லப்படுவது கீழ் வகுப்புகளுக்கு உரிய பாட நூல்களை எழுதி வெளி யிட்டதேயாகும். அவற்றுள்ளும் மூன்றாம் வகுப்பிற்கென்று அவர் எழுதிய மூன்றாம் வகுப்பு வாசகப் புத்தகம் பெரிதும் பாராட்டிப் பேசப்படும் ஒன்றாகும். ''இதை எல்லோரும் விசயரங்க முதலியார் மூன்றாம் பாடப் புத்தகம் என்று சொல்வார்கள்'' என்று சம்பந்த முதலியார் குறித்துள்ளார்.[22] அந்நூல் அச்சாகும்போது அதன் அச்சுப் படிகளைத் திருத்தி உதவியவர் அந்நாளில் மாகாணக் கல்லூரியில் முதன்மைத் தமிழ்ப் பண்டிதராக இருந்த கோ. இராசகோபால பிள்ளை ஆவார்.[23] அந்தப் புத்தகம் எந்த ஆண்டு வெளியிடப்பட்டது என்பதை அறிய முடியவில்லை. நூலும் கட்டுரையாளரின் பார்வைக்குக் கிடைக்கவில்லை.

தமிழில் முறையான பாட நூல்களைச் சிறந்த முறையில் எழுதி வெளியிட்டவர் என்ற பெருமைக்குரியவராக ஆறுமுகநாவலர் போற்றப் படுகின்றார். அவர் எழுதிய பால பாடங்கள் தனித்துவம் வாய்ந்தவை யாக மதிக்கப்படுகின்றன. அவை 1850இல் வெளிவந்தன.[24] நாவல ருக்குப் பிறகு விசயரங்கனாரே சிறந்த பாட நூலாசிரியராக மதிக்கப் பட்டார் என்று கருத இடமுண்டு. மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி மலர் ஒன்று வெளியிடப்பட்டது (1981). அதில், 'வாழையடி வாழையென வந்த தமிழ்ப் புலவோர்' என்ற பகுதியில் தமி ழுக்குத் தொண்டு செய்த அறிஞர் பெருமக்களின் பட்டியலும் அவர் களைப் பற்றிய குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன. அதில் விசயரங்க னார் பற்றிக் குறிப்பிடுகையில், பைந்தமிழில் பாடநூல் படைத்தவர் என்று அவருடைய பாடநூற் பணியே முன்னிறுத்தப்பட்டுள்ளது. அவர் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய பாட நூல்கள் பரவலாகப் பேசப் பட்டன என்னும் சம்பந்தனாரின் கூற்று இங்கு நினைவு கூரத்தக்கது. இவற்றின் அடிப்படையில் நோக்கும்போது, முன்னாளில் புகழ் பெற்று

விளங்கிய ஆறுமுக நாவலருக்கும் பின்னாளில் சிறப்போடு விளங்கிய கா. நமச்சிவாயருக்கும் இடைப்பட்ட காலத்தில் பாட நூல்கள் எழுதி வரலாறு படைத்தவர் என்று இவரைக் குறிப்பிடலாம். தமிழ்ப் பாட நூல் வரலாற்றில் விசயரங்கனாரின் இடம் என்பது விரிவாக ஆராய வேண்டிய ஒன்றாகும்.[25]

இந்தக் கால கட்டத்தில் வேறு சில நூல்களையும் விசயரங்கனார் பதிப்பித்துள்ளார். கவி குஞ்சர பாரதி மற்றும் மதுரகவி பாரதி, ஸ்ரீராம கவிராயர் ஆகியோரின் தமிழ்ப் பதங்களைக் 'கவிக்குஞ்சர பதங்கள்'; 'கவி குஞ்சர பாரதி, மதுரகவி பாரதி, ஸ்ரீராம கவிராயர் அவர்களும் பாடிய பதங்கள்' என்ற தலைப்புகளில் இரண்டு தொகுதிகளாக 1886 இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.[26] 'வேளாளர் மரபு' என்னும் பெயரில் சிறிய நூல் ஒன்றும் அவரால் வெளியிடப்பட்டது.[27] இது பற்றிய பிற விவரங்கள் அறியுமாறு இல்லை.

### விசயரங்கனாரும் அருட்பா மருட்பா இயக்கமும்

இராமலிங்க அடிகளாரின் திருப்பாடல்கள் ஆறு திருமுறைகளாகத் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள், முதல் நான்கு திருமுறைகளை 1867 இல் தொழுவூர் வேலாயுத முதலியார் வெளிக் கொணர்ந்தார். 1869 இல் அருட்பா மறுப்பு, 'போலி அருட்பா மறுப்பு' இயக்கம் தொடங்கியது. ஆறுமுக நாவலர் இதற்குத் தலைமை தாங்கினார். எதிர்ப்பும் மறுப்புமாக இயக்கம் வளர்ந்தது; தமிழக மெங்கும் இது பரவியது. அறிஞர்களும் பக்தர்களுமாகப் பலர் இரு கட்சிகளாகப் பிரிந்து நின்று வாதிட்டனர். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த அருட்பா மருட்பா இயக்கத்தில் விசயரங்கனாரும் கலந்துகொண்டாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அது தொடர்பாகக் கிடைத்துள்ள ஒரு குறிப்பு இவ் வாறு எண்ண இடம் தருவதாக அமைந்துள்ளது.

இராமசாமிப் பிள்ளை என்னும் தமிழ்ப் பண்டிதரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது இங்கு அவசியமாகிறது. போலி அருட்பா மறுப்பு இயக்கத்தில் முனைந்து செயல்பட்டவர்களில் ஒருவ ரான இவருடைய வரலாற்றிலிருந்து விசயரங்கனார் பற்றிய சில செய்திகளை அறிய முடிகிறது. ஆதலால் இவருடைய வாழ்க்கையின் இன்றியமையாத பகுதிகள் அறியத்தக்கன.

இராமசாமிப் பிள்ளை இராமநாதபுரத்தில் பிறந்தவர். மதுரையில் வாழ்ந்தவர்; பதிப்பாசிரியராகவும் உரையாசிரியராகவும் விளங்கிய இவர் இராமநாதபுர சமஸ்தான வித்துவானாகவும் இருந்தவர்; பொன்னுசாமித் தேவரின் அன்பிற்குப் பாத்திரமானவர்; மதுரைத்

திருஞானசம்பந்த சுவாமிகளாதீனத்து இளைய சந்நிதானத்திற்குக் கல்வியில் உசாத் துணைவராக இருந்தவர்; இலக்கண இலக்கியங் களிலும் சைவ சித்தாந்த நூல்களிலும் வல்லவர்; மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர்; ஆறுமுக நாவலரிடமும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்; நாவலர் சிதம்பரத்தில் தங்கி யிருந்தபோது அவ்வப்போது அங்குச் சென்று அவருடன் இருந்துவரும் வழக்கம் உடையவர்; நாவலரை 'அண்ணா' என்று அழைக்கும் அளவிற்கு அவரிடம் உரிமையும் நெருக்கமும் கொண்டிருந்தவர் என்பன இங்குக் குறிப்பிடத்தக்கனவாகும்.[28]

இவருக்கும் தொழுவூர் வேலாயுத முதலியாருக்குமிடையே அருட்பா பற்றிய வாதம் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலில் நடந்தது. அதுபற்றி இவர் ஆறுமுக நாவலருக்கு ஒரு கடிதம் எழுதி யுள்ளார். அதில் விசயரங்கனார் பற்றிய ஓர் இன்றியமையாத குறிப்பும் உள்ளது. ''சோமவாரத்திரவிலே ஸ்ரீ விஜயரங்க முதலியா ரவர்களும் மடத்துக்கு வந்தார்கள். திருக்கோயிலின் கண்ணே வேலு முதலியிடத்தே பேசினவைகளை வெளியிட்டேன். சந்தோஷப்பட்டார் கள்.''[29] ஆறுமுக நாவலருக்கு எழுதிய கடிதத்தில், மருட்பா வாதம் பற்றிய செய்திகள் அடங்கிய கடிதத்தில் விசயரங்கனாரின் பெயர் இடம் பெற்றிருப்பது சில முடிவுகளுக்கு நம்மை அழைத்துச் செல்லுகிறது.

1. விசயரங்கனாருக்கும் ஆறுமுக நாவலருக்கும் இருந்த நெருக் கத்தை இது உணர்த்துகிறது.
2. போலி அருட்பா மறுப்பு இயக்கத்தில் நேரடியாக இல்லை யென்றாலும் சார்பாளராகவாவது விசயரங்கனரா் இருந்திருக் கக்கூடும் ('சந்தோஷப்பட்டார்' என்பது இதைப் புலப்படுத் தும்) என்று கருத வாய்ப்பளிக்கிறது.
3. மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகளாதீனத்துடன் விசய ரங்கனார்க்கு இருந்த நெருக்கமான தொடர்பும் புலப்படு கின்றது.[30]

விசயரங்கனாரின் வரலாற்றில், போலி அருட்பா மறுப்புச் சார்பு என்பது புதிய செய்தியாகும். அருட்பா மருட்பா இயக்கத்தில் அவருடைய பங்கும் ஆறுமுக நாவலரிடம் அவருக்கிருந்த நட்பு அல்லது உறவும் தனியே ஆய்வு செய்ய வேண்டியவை.

## விசயரங்கனாரும் தமிழறிஞர்களும்

விசயரங்கனாரை அறியாத தமிழறிஞர்கள் அந்நாளில் இல்லை. அவர் காலத்தில் வாழ்ந்த புகழ் மிக்க அறிஞர் அனைவருமே அவருக்கு

நன்கு அறிமுகமானவர்களாக இருந்தார்கள் என்பது வியப்புக்குரிய செய்தியாகும்.[31]

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், வித்துவான் தியாகராச செட்டியார், சி. வை. தாமோதரம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, உ. வே. சாமிநாதையர், கோ. இராசகோபால பிள்ளை, பண்டிதர் சின்னசாமி பிள்ளை, காசி விசுவநாத முதலியார், சேலம் இராமசாமி முதலியார், மதுரை இராமசாமிப் பிள்ளை போன்ற பலரும் அவருடைய அன்புக்கும் நட்புக்கும் உரியவர்களாக இருந்தனர்.

பெயரைச் சொன்னாலே தெரிந்து கொள்ளுமளவிற்கு அவருக்கு ஆறுமுக நாவலரிடம் நெருங்கிய பழக்கம் இருந்தது.[32] அவர் விருப்பத்தை நிறைவு செய்யவே, மீனாட்சிசுந்தரம் பிள்ளை இரண்டு செய்யுள் நூல்களை இயற்றி உதவினார்;[33] அவர் கேட்டுக்கொண்டார் என்பதற்காகத் தியாகராச செட்டியார் அந்நூலைப் பதிப்பித்தார்;[34] சி. வை. தாமோதரம் பிள்ளை நலக்குறைவாக இருந்தபோது அவர் வீட்டில் தங்கியிருந்தார்.[35] பேராசிரியர் சுந்தரம் பிள்ளை எம். ஏ. தேர்வு எழுதும்போது விசயரங்கனார் வீட்டில் தங்கிப் படித்தார்;[36] பூண்டி அரங்கநாத முதலியார் அவரை 'அண்ணா' என்று உரிமையோடு அழைத்து நெருங்கிப் பழகி வந்தார்;[37] உ. வே. சா. வின் பதிப்பு முயற்சிகளுக்குப் பலவிதங்களிலும் உதவியாக இருந்தார்;[38] கோ. இராசகோபால பிள்ளை அவருடைய மூன்றாம் வகுப்பு வாசகத்தின் அச்சுப் படிகளைத் திருத்திக் கொடுத்தார்[39] என்பன போன்ற செய்திகள் அவருக்கு அந்நாளைய தமிழறிஞர்களிடம் இருந்த நட்புரிமையைப் புலப்படுத்த வல்லன.

விசயரங்கனார் விசாகப்பெருமாளையரிடம் தமிழ் பயின்றவர்.[40] விசாகப்பெருமாளையர்[41] சென்னை மாகாண உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். விசயரங்கனார் அப்பள்ளியில் மாணவராக இருந்தபோது அவரிடம் பயின்றிருக்க வேண்டும்.

## விசயரங்கனார் வகித்த பிற பொறுப்புகள்

விசயரங்கனார் தம்முடைய சென்னை வாழ்க்கையில் பல்வேறு முக்கிய பொறுப்புகளை ஏற்றுச் செயல்பட்டு வந்தார். சென்னை பச்சையப்பன் அறக்கட்டளையின் அறங்காவலர் குழுவில் உறுப்பினராக 1887 முதல் 1895 வரையில் இருந்தார்.[42] அரசாங்கம் அவரைச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக நியமித்தது. தம் இறுதிக் காலம் (1895) வரையில் அப்பதவியில் இருந்தார்.

பல்கலைக்கழகத் தமிழ்த் தேர்வுக் குழுவில் பல ஆண்டுகள் உறுப்பின ராகவும் சில ஆண்டுகள் தலைவராகவும் இருந்து பணியாற்றினார். விசயநகர அரசரால் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருந்த ஐந்து பெண்கள் பள்ளிகளுக்குச் செயலாளராக இருந்து தொண்டாற்றினார். கல்லூரிகளுக்குப் பாட நூல்களைத் தேர்ந்தெடுக்கும் பல்கலைக்கழகப் பாடநூற் குழுவிலும் அவர் இடம் பெற்றிருந்தார். கோயில்கள் சில வற்றிற்கு அறங்காவலராக இருந்துள்ளார்.[43]

பாமர மக்களும் தமிழை நேசிக்குமாறும் உலக நடப்புகளையும் பிற அறிவு சார்ந்த செய்திகளையும் அறியுமாறும் செய்ய வேண்டும் என்ற பேருணர்வு பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமிழும் ஆங்கில மும் கற்றறிந்த, பொது வாழ்வில் அக்கறை கொண்டிருந்த தக்கவர் சிலருக்குத் தோன்றியது. அந்தச் சிலர் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட் டனர்; அவர்தம் முயற்சிகள் பல சங்கங்களாகவும் சபைகளாகவும் மலர்ந்தன.[44] அவற்றுள் ஒன்றுதான் 1890ல் சென்னையில் தொடங்கப் பட்ட தென்னாட்டுத் தமிழ்ச் சங்கம். உன்னதமான பல் இலட்சியங் களை முன்னிறுத்தித் தொடங்கப்பட்ட அத்தமிழ்ச் சங்கத்தின் செய லாக்கக் குழு உறுப்பினர்களில் ஒருவராக விசயரங்கனார் விளங் கினார்.[45] அறுபதைக் கடந்த முதுமையிலும் தமிழ்ப்பணியில் தம்மைப் பிணைத்துக் கொண்டு, தமிழ் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற தொண்டைச் செய்ய விழைந்த விசயரங்கனாரின் தமிழ் உணர்வு மதித்துப் போற்றத் தக்கதாகும்.

சுருங்கச் சொல்லுமிடத்து அவர் அக்காலத்தில் சென்னையில் சேர்ந் திராத பொதுக்கூட்டமாவது, சங்கமாவது இல்லையென்றே ஒருவாறு கூறலாம்.[46]

## தந்தையாய்... நண்பனாய்... உற்ற துணைவனாய்

பொது வாழ்க்கையிலும் பணி வாழ்க்கையிலும் புகழோடு விளங்கிய விசயரங்கனார் தம்முடைய குடும்ப வாழ்க்கையையும் நிறைவாக அமைத்துக்கொண்டார். சிறந்த வாழ்க்கைத் துணை; அறிவார்ந்த மக்கள் என்று அவருடைய வாழ்க்கை மகிழ்ச்சியும் நிறைவுமாக இருந் தது. தம்முடைய பொது வாழ்க்கையையும் பணி வாழ்க்கையையும் திட்டமிட முடிந்த அவரால், இல்லற வாழ்வையும் திட்டமிட முடிந்தது. தம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியிலும் பண்பு வளர்ச்சியிலும் அதிகக் கவனம் செலுத்தினார். வள்ளுவர் வழி நின்ற தந்தையாக விளங்கி னார்.

ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட மணி நேரம் பிள்ளைகள் படித்தாக வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்

தார். ''நான் பி. ஏ. படித்துக் கொண்டிருந்த போது என் பால்ய சிநேகிதரான வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் என்னை அடிக்கடி பார்க்க வருவார். அச்சமயங்களில் நான் மேல் மாடியில் படித்துக் கொண்டிருந்தால் அவரைக் கீழேயே நிறுத்தி, சம்பந்தம் படித்துக் கொண்டிருக்கிறான். நாலு மணி வரையில் அவன் படிக்க வேண்டிய காலம்'' என்று சொல்லி, அதுவரையில் அவருடன் பேசிக்கொண்டிருந்து, நான்கு அடித்தவுடன் அவரை மெத்தைக்கு அழைத்து வந்து என்னிடம் விட்டு நாங்கள் பேசுவதற்குத் தடையாயிருக்கலாகாது என்று கீழே போய்விடுவார்''[47] என்னும் சம்பந்த முதலியாரின் குறிப்பு விசயரங்கனாரின் கண்டிப்பையும் பிள்ளைகளின் படிக்கும் நேரம் எந்த விதத்திலும் வீணாதல் கூடாது என்பதில் அவருக்கு இருந்த தீவிரத்தையும் உணர்த்தும்.

பிள்ளைகள் படிப்பில் கடுமை காட்டிய தந்தையாக விளங்கிய விசயரங்கனார் எஞ்சிய நேரத்திலும் விடுமுறை நாட்களிலும் அவர்கள் விளையாட அனுமதித்தார். அத்துடன் நில்லாது தாமும் அவர்களுடன் சேர்ந்து விளையாடினார்.[48] படிப்பைப் பொறுத்த வரையில் கடுமை மிக்க தந்தையாய் விளங்கியவர், விளையாட்டு என்று வந்தபோது தோழமை உணர்வோடு அவர்களில் ஒருவராய்க் கலந்து நின்றார்.

பிள்ளைகள் தாமே சிந்திக்கவும் தாமே முடிவெடுக்கவும் பயில வேண்டும் என்பதில் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார். ஆண்டு தோறும் கோடை விடுமுறையில் தம் பிள்ளைகளைத் தக்க துணையுடன் வெளியூர்களைச் சுற்றிப் பார்க்க அனுப்பி வைப்பார். ''அதுபற்றி யாராவது கேட்டால் புத்தகங்களில் இருப்பது மாத்திரம் கல்வியாகாது; நம்முடைய சிறுவர்கள் வெளியூர்களுக்குப் போய்க் கற்க வேண்டிய விஷயங்கள் அதிகமிருக்கின்றன என்று பதில் உரைப்பார்''.[49]

பொதுவாகத் தம் பிள்ளைகள் அனைவரின் வளர்ச்சியிலும் வாழ்விலும் உறுதுணையாக விளங்கிய விசயரங்கனார், அவர்களுள் ஒருவரும் பின்னாளில் நாடகப் பேராசிரியர் என்று போற்றப்பட்டவரும் தமிழ் நாடக வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக விளங்கியவருமான சம்பந்தனாரின் நாடக வாழ்க்கையில் பல நிலைகளிலும், தந்தையாய், நண்பனாய், உற்ற துணைவனாய் விளங்கிய பான்மை வியப்புக்குரிய ஒன்றாகும். ஒவ்வொரு தனி மனிதனும் தன்னுடைய சொந்த வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய வாழ்வியல் நெறி முறைகளான அவை அறியத் தக்கன.

சம்பந்தனார் தம் நண்பர்களுடன் சேர்ந்து 'சுகுண விலாச சபை' (1891) என்னும் நாடகக் குழுவைத் தொடங்கியபோது அதை வா

வேற்று, "உன்து படிப்பு இதனால் கெடாது என்று எனக்குத் தெரியும். அதனால் தொடங்கலாம்" என்று கூறி ஊக்கப்படுத்தியவர் விசயரங்கனார்.[50]

நாடகக் குழுவைத் தொடங்கிய பிறகு, தமிழில் நாடகம் எழுதி நடிக்க விரும்பிய சம்பந்தனாரை, அது வரையில் தமிழ் நாடகம் எதுவும் பார்த்தறியாத அவரை நாடகம் பார்க்க அழைத்துச் சென்றதோடு, "இரவு ஒன்பது மணி முதல் நான்கைந்து மணிநேரம் தம் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு அன்று நடந்த நாடகத்தின் விவரங்களையெல்லாம் கிரமமாகக் கூறி நல்ல நாடகம் இப்படி இப்படி இருக்கவேண்டும்" என்று விளக்கிச் சம்பந்தனாரின் நாடக வாழ்க்கைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் விசயரங்கனார்.[51] இவை, அவர் தம் மைந்தன் மேல் வைத்திருந்த நம்பிக்கையையும், திறமை கண்டவிடத்து அதை உரிய வகையில் தூண்டி, நெறிப்படுத்தி நல்வழி காட்டும் அவருடைய உயரிய பண்பையும் புலப்படுத்தவல்லன.

சம்பந்தனார் சுகுண விலாச சபையைத் தொடங்கியபோது அவர் தந்தைக்கு வயது 61. அறுபதைக் கடந்த முதுமையிலும் தம் மகனுடைய வளர்ச்சியில் பேரார்வம் கொண்டு, அவருடைய நாடக வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலையிலும் துணைநின்று சம்பந்தனாரின் பின்னாளைய புகழார்ந்த வாழ்க்கைக்கு உரமானார்.

1895 ஆம் ஆண்டு வரையில் வாழ்ந்த விசயரங்கனாருக்குச் சுகுண விலாச சபையின் முதல் ஐந்தாண்டுக் கால வரலாற்றில் அதன் வளர்ச்சியில் கணிசமான பங்குண்டு. இளைஞர்களான சம்பந்தனாரும் அவருடைய நண்பர்களும் நாடகக் குழுவைத் தொடங்கிய பிறகு ஒத்திகைகள் பார்ப்பதற்குச் சரியான இடம் அமையாததால், சம்பந்தனார் தம் தந்தையின் உதவியை நாடினார். தம்முடைய மேற்பார்வையில் இயங்கி வந்த பள்ளி ஒன்றில் வாரம் இரு நாட்கள் மாலை நேரத்தில் ஒத்திகைகள் பார்த்துக் கொள்ள ஏற்பாடு செய்து கொடுத்தார் விசயரங்கனார்.[52]

தம்முடைய முதல் நாடகமான 'புஷ்பவல்லி'க்குப் பாடல்கள் எழுத வேண்டிய அவசியம் நேர்ந்தபோது, பாட்டு எழுதத் தெரியாதவரான சம்பந்தனார் அந்த இக்கட்டிலிருந்து விடுபட்ட அனுபவத்தைத் தம்முடைய 'நாடக மேடை நினைவுகள்' என்னும் நூலில் "கஷ்டம் நேரிடும்போதெல்லாம் என்னைக் கைகொடுத்துக் கரையேற்றிய என் இரண்டாம் தெய்வமாகிய என் தந்தையிடம் சென்று என் குறையைக் கூறினேன். அவர் உடனே என் உதவிக்கு வந்து நாடகங்களுக்கேற்ற பாட்டுகள் கட்ட வல்லமை வாய்ந்த தாயுமான சுவாமி என்பார் தனக்குத் தெரியுமென்று சொல்லி அவருக்கு ஒரு சீட்டு எழுதிச் சீக்கிரத்தில் வரவழைத்தார்" என்று விவரித்துள்ளார்.[53]

சம்பந்தனாரின் மூன்றாவது நாடகமாகிய 'லீலாவதி - சுலோசனா' நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்த அவருடைய தந்தையார், அந்நாடகத்தில் நடித்த நடிகர்களுக்கு தேநீர் விருந்து அளித்துப் பாராட்டினார்.[54] புகழ்பெற்று விளங்கிய அந்த மாபெரும் மனிதரின் விருந்தும் பாராட்டும் இளைஞர்களாகிய அந்த நடிகர்களை எந்த அளவிற்கு மகிழ்வித்திருக்கும் என்பதை எண்ணும்போது, அடுத்தடுத்து அரங்கேறிய நாடகங்களில் அவர்கள் எத்துணைச் சிறப்பாக நடித்திருப்பார்கள் என்பதை உணர முடிகிறது.

தம் மகனின் நாடகக் குழுவைத் தம்முடையது போலவே கருதினார் விசயரங்கனார். அக்குழுவினரின் ஒவ்வொரு செயலிலும் தம்மை விருப்பத்தோடு இணைத்துக்கொண்டார். அக்குழுவினரின் இரண்டாவது நாடகமாகிய 'சுந்தரி'யின் பகிரங்க ஒத்திகையின் போது (நாடகத்தை மேடையேற்றுவதற்கு முன் பலர் காண நடத்தும் ஒத்திகை) விசயரங்கனார் தாமே முன்னின்று ஒத்திகைக்கான ஏற்பாடுகளைச் செய்தார். தமக்கு வயது அறுபத்திரண்டு என்பதையும் மறந்து நாடக மேடையைத் தாமே அருகிலிருந்து சித்தம் செய்து கொடுத்தார். அதிக அலைச்சல் காய்ச்சலைத் தந்தது. மறுநாள் நடக்க இருந்த பகிரங்க ஒத்திகையைக் காண முடியாதவாறு உடல்நலம் கெட்டது அவரை வருத்தியது. மறுநாள் காலையில் காய்ச்சல் சிறிது குறைந்ததும் இரவு ஒத்திகைக்குத் தாமும் வருவதாக மகனிடம் கூறினார். இரவு நீண்ட நேரம் கண்விழித்து நாடகம் பார்த்தால் காய்ச்சல் மிகும் என்று கூறி, இரவு நாடகத்திற்கு அவர் வரவேண்டாம் என்று தாம் தடுத்துவிட்டதாகவும், அதையும் மீறி அவர் நாடகம் காண வந்து விடுவாரோ என்று அஞ்சி, அவருக்குத் தாங்கள் கொடுத்திருந்த டிக்கெட்டைத் தம் பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு மாலை ஒத்திகை நடக்கும் வீட்டிற்கு வேடம் போட்டுக் கொள்ளச் சென்றதாகவும் சம்பந்தனார் குறிப்பிட்டுள்ளார்.[55] மகனுடைய நிகழ்ச்சியில் தம்மால் முடிந்த வழிகளிலெல்லாம் உதவ விரும்பிய தந்தையும், தம் நாடகத்தைப் பார்ப்பதைவிடவும் தந்தையின் உடல்நலமே முதன்மையானது என்று கருதி, டிக்கட்டை ஒளித்து வைத்த மகனும் நம் கண்களுக்கு வித்தியாசமானவர்களாகக் காட்சி தருகின்றனர்; தந்தை மகன் என்ற நிலை மாறி நண்பர்களாகத் தோழமை உணர்வுடன் ஒருவரை ஒருவர் நேசிக்கும் அபூர்வமானவர்களாகத் தோன்றுகின்றனர்.

தம்முடைய சுகுண விலாச சபை எல்லோராலும் அறியப்பட்ட ஒன்றாகவும் பெருமை மிக்க நாடகக் குழுவாகவும் அமைய வேண்டும் என்று சம்பந்தனார் விரும்பினார். வழக்கம் போல் தந்தையின் உதவியை நாடினார். அந்நாளில் புகழ்பெற்று விளங்கிய சென்னை வாழ் பெரிய மனிதர்கள் பலரும் சுகுண விலாச சபையில் அங்கம் வகிக்க விசய

ரங்கனார் ஏற்பாடு செய்தார். சர் சவலை இராமசாமி முதலியார் தலைவராகவும், பூண்டி அரங்கநாத முதலியார் துணைத் தலைவராக வும் இருக்க இசைந்தனர். பாஸ்கர சேதுபதி ரூ. 300/- நன்கொடை யாக வழங்கினார். இன்னும் சி. வை தாமோதரம் பிள்ளை போன்ற அறிஞர் பலரும் நாடக ஒத்திகைகளிலும், நாடகங்களிலும் பார்வை யாளர்களாகக் கலந்துகொண்டு, நிறைகளைப் பாராட்டியும் குறை களைச் சுட்டி நெறிப்படுத்தியும் சுகுண விலாச சபையின் வளர்ச்சியில் பங்கேற்றனர். அந்நாளில் புகழின் உச்சியில் இருந்த இருவர் நாடகக் குழுவின் முக்கியப் பொறுப்புகளில் இருந்ததும், அறிஞர்களும் நீதிபதி களும் கல்வியாளர்களும் நாடகங்களைக் காண வந்தமையும் இளைஞர் களால் தொடங்கி நடத்தப்பட்ட அந்த நாடகக் குழுவின் வளர்ச்சிக்குப் பெருந்துணையாயின. இவையே, சுகுண விலாச சபை தமிழ் நாடக வரலாற்றில் தன் தடத்தை அழுந்தப் பதிக்க முதன்மைக் காரணமாக அமைந்தன. இதற்கெல்லாம் மூல காரணமாக விளங்கியவர் விசய ரங்கனாரே என்பது நினைவில் கொள்ளத்தக்க ஒன்றாகும். ''இவ் வாறாகச் சென்னையிலுள்ள தமிழ் அபிமானிகளாகிய பல கனவான் களுக்குச் சபையின் பெருமையைப் பரவச் செய்தார். இதன் மூலமாக சபையின் அங்கத்தினரும் அதிகமாயினர். ஆகவே சுகுண விலாச சபை, சிறு குழவியாயிருந்த போது அதை அன்புடன் ஆதரித்து வளர்த்தவர் களுக்குள் என் தந்தையை முக்கியமானவர் என்று கூறவேண்டும்''[56] என்னும் சம்பந்தனாரின் கூற்று மேற்கூறிய கருத்தை அரண் செய்வ தாகும்.

பொது வாழ்க்கையில் வெற்றி பெறுபவர்கள் தம்முடைய தனி வாழ்க்கையில் பெரும்பாலும் வெற்றி பெறுவதில்லை. பொதுப் பணி களில் தம்முடைய பெரும் பொழுதைக் கழிக்கும் அவர்களுக்குக் குடும்பத்திற்கென்று ஒதுக்க நேரம் அமைவதில்லை. இது பொதுவான நடைமுறை. இதற்கு மாறானதொரு போக்கை, செயற்பாட்டை விசயரங்கனாரின் வாழ்க்கையில் காண முடிகிறது. பொது வாழ்வில் மிக உயர்ந்த நிலையில் இருந்த அவர், குடும்ப வாழ்விலும் கவனம் செலுத்தித் தம் மக்களின் நல்வாழ்விற்குத் துணை நின்றார். தாம் 'தக்கார்' என்பதைத் தம் 'எச்ச'மாகிய சம்பந்தனார் மூலம் நிலை நிறுத்தி வரலாற்றில் இடம் பெற்றார்.

எட்டுத்திசையினும் முட்டும் புகழுடையோன், நடைபிறழான், கொடையொடு பிறந்தோன், கவிநயந் தெரிதலிற் குவிதரா உணர் வினன், மற்றை நற்குணமெலாம் பெற்ற தாயோன்[57] என்றெல்லாம் புகழத் தக்க வகையில் வாழ்ந்த விசயரங்கனாரின் பெரு வாழ்வு முழுமை யானது; முன்னோடியானது; வாழ்க்கைப் போராட்டத்தில் வெற்றியை விரும்புவோர் வழிகாட்டியாகக் கொள்ளத்தக்கது.

அடிக்குறிப்புகள்

1. டி. சதாசிவம், சென்னை மாகாணத்தில் பொதுமக்கள் கருத்து வளர்ச்சி, ப. 21.
2. H. SHARP, Selections from Educational Records - Part I (1781-1839), p. 109.
3. History of Higher Education in South India, Vol. II, University of Madras, Affiliated Institutions (1857-1957), p. 1.
4. Ibid.
5. சென்னை மாநிலத்தின் கல்வி வளர்ச்சியில் E. B. பவலின் பங்களிப்பு என்பது தனி ஆய்வுக்கு உரிய தலைப்பாகும்.
6. History of Higher Education in South India, Vol. II, p. 20.
7. ப. சம்பந்த முதலியார் என் சுய சரிதை, ப. 3.
8. என் சுய சரிதை, பக். 3-4.
9. History of Higher Education in South India, Vol. II, pp. 2-3.

9A. அப்பரிசு 'Madras High School Pachaiyappa's Vernacular Prize' என்ற பெயரில் வழங்கப்பட்டது.

10. விசயரங்கனார் 1848, 1851 ஆகிய ஆண்டுகளில் பெற்ற பரிசுகளை (நூல்கள்) இன்றும் அவருடைய சந்ததியார் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். கட்டுரையாளர் அந் நூல்களை 24-2-93 அன்று பார்க்க முடிந்தது. விசய ரங்கனாரின் மகனார் ப. சம்பந்தனாரின் பேரர் திரு. பாஸ் கரன் அவற்றைப் பார்வையிட உதவினார்.
11. என் சுய சரிதை, ப. 4.
12. மேலது.
13. மேலது. இவர் எழுதிய 'இங்கிலாந்து தேச சரித்திரம்' என்னும் நூல் 1885இல் வெளிவந்ததாக ஒரு குறிப்பு மா. சு. சம்பந்தன் எழுதிய 'அச்சும் பதிப்பும்' என்னுல் நூலில் (ப. 150) காணப்படுகிறது.
14. யான் கண்ட புலவர்கள், ப. 90.

